# எழுநா

இதழ் 27

ஒக்ரோபர்
2024



# எழுநா

## இதழ் 27


**பதிப்பாசிரியர்**
கணேசானந்தன் சசீவன்

**பொறுப்பாசிரியர்கள்**

| | |
|---|---|
| ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ் | – சஞ்சிகை |
| ஜனனி பாலசுந்தரம் | – வலைத்தளம் |
| விஜயதர்சினி தினேஸ் | – கற்கை வட்டம் |
| பவித்ரா இரமணீகரசர்மா | – குரல் வடிவம் |
| மதுஹரி சத்தியலோகநாதன் | – குரல் வடிவம் |

**வளவாளர்கள்**

| | |
|---|---|
| இ. பத்மநாப ஐயர் | – உசாத்துணை சேவை |
| கனகலிங்கம் சுகுமார் | – உசாத்துணை சேவை |
| தில்லைநாதன் கோபிநாத் | – நூல் வரிசை/ நூல் தயாரிப்பு |
| கதிர் சயந்தன் | – நூல் வரிசை/ நூல் தயாரிப்பு |
| சுவர்ணலதா செந்தில்குமார் | – மெய்ப்புத் திருத்தம் |
| தங்கராஜா பிரபாகரன் | – மெய்ப்புத் திருத்தம் |
| பாலசுப்ரமணியம் சிவகுமார் | – காணொலி/ விவரணப்படம் |
| சிறிதரன் சோமிதரன் | – காணொலி / விவரணப்படம் |
| மகேந்திரன் திருவரங்கன் | – மொழிபெயர்ப்பு |
| பரமசிவம் பவதாரணி | – செயல்பாட்டு மேலாண்மை |
| நிவேதிகா இராசன் | – செயல்பாட்டு மேலாண்மை |

**துறை சார் ஆலோசகர் குழு**

| | |
|---|---|
| ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன் | – மொழியும் இலக்கியமும் |
| கந்தையா ரமணிதரன் | – நீரியலும் நீர்ப்பாசனமும் |
| குமாரவடிவேல் குருபரன் | – சட்டமும் சட்ட முறைமையும் |
| நடராஜா சிறீஸ்கந்தராஜா | – சூழலும் உயிர்ப் பல்வகைமையும் |
| தர்சன் அம்பலவாணர் | – சமயமும் இறையியலும் |
| பால சிவகடாட்சம் | – சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும் |
| நாகமுத்து பிரதீபராஜா | – புவியியலும் திட்டமிடலும் |
| பரமு புஸ்பரட்ணம் | – வரலாறும் தொல்லியலும் |
| சனாதனன் தமோதரம்பிள்ளை | – கட்புல அரங்கேற்ற கலைகள் |
| சேரன் உருத்திரமூர்த்தி | – சமூகவியலும் மானிடவியலும் |
| முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன் | – பொருளியலும் நிதியியலும் |
| சபா ஜெயராசா | – கல்வியியலும் கற்றலும் |
| மரியோ அருள்தாஸ் | – அரசியலும் மெய்யியலும் |
| இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் | – கட்டடக்கலையும் வடிவமைப்பும் |
| கந்தையா பகீரதன் | – விவசாயமும் மீன்பிடியும் |

**நிதிப்பங்களிப்பாளர்கள்**
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே
சிவா சிவானந்தன்

**ஆதரவளிப்போர்**

| | |
|---|---|
| தமிழ் ஊடகத் திரட்டு | – ஆவணப்பட வரிசை |
| மானுடம் நிறுவனம் | – நூல் வரிசை |

**கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்**

| | |
|---|---|
| நடராஜா முரளிதரன் | – கனடா |

**அச்சுப்பதித்து விநியோகிப்போர்**

| | |
|---|---|
| நடராஜா முரளிதரன் | – நாளை வெளியீடு கனடா |


**அட்டைப்படம்**

'G is for Genocide' எனத் தலைப்பிடப்பட்ட இவ் ஓவியம் 'Danielle SeeWalker' எனும் ஓவியரால் வரையப்பட்டது. இவர் ஒரு 'அமெரிந்தியர்' (அமெரிக்கத் தொல்குடி) என்பது குறிப்பிடத்தக்கது.

மூலம் : southwestcontemporary.com

**FOLLOW**

எழுநா

https://ezhunaonline.com/
https://youtube.com/user/Ezhuna
https://www.facebook.com/Ezhunax/
https://twitter.com/Ezhuna
https://www.instagram.com/ezhunaa/
https://www.tiktok.com/@ezhuna
https://open.spotify.com/show/4Xn
https://tinyurl.com/ykj8ru3f
https://tinyurl.com/3zfkzxme
https://tinyurl.com/2p83m8zj
https://pca.st/swr6zomk
https://radiopublic.com/6rX3L4
https://tinyurl.com/bdeky92h
https://anchor.fm/ezhuna
https://www.clubhouse.com/club/ezhuna
https://www.magzter.com/publishers/


மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

தொடர்பு முகவரி :
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

## உள்ளே...


பெரும்படை என்னும் குலதெய்வம்
- தி. செல்வமனோகரன் 04

சம்பூர் அனல்மின் நிலையம்:
மக்கள் போராடிய பொழுதுகள்
- மீநிலங்கோ தெய்வேந்திரன் 13

இன அழிப்பிற்கெதிரான ஐ.நா
சாசனத்தினை முன்வைத்து 'தமிழினப்
படுகொலைகள்: 1956 2008' நூலின்
ஆவணப் பெறுமதியும் உள்ளடக்கமும்
- சிவராஜா ரூபன் 24

சமஷ்டிகளும் சமஷ்டி அரசியல் முறைகளும்
- ஆங்கில மூலம் : றொனால்ட்.எல். வாட்ஸ்
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம் 34

சமஷ்டி அரசியல் முறைமைகள் : ஓர் அறிமுகம்
- கந்தையா சண்முகலிங்கம் 41

வேலணை, சாட்டியில்
பெருங்கற்காலப் பண்பாடு - பரமு புஷ்பரட்ணம் 47

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில்
வலிகாமம் — சுண்டிக்குழி
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் 51

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் : ஒரு
வரலாற்றுக் குறிப்பு — பகுதி 2
- நடராஜா செல்வராஜா 58

அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள் : இலங்கை
முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின்
பரிணாமம் — பகுதி 11
- ஆங்கில மூலம் : டெனிஸ் மெக்கில்ரே
தமிழில் : ஜிஃப்ரி ஹாசன் 67

சாதிகள், இனத் தேசியங்கள், தேசங்கள்
இடையே சமத்துவமும் ஒப்பிலாத
பொதுவுடமைப் புத்துலகும் - நடேசன் இரவீந்திரன் 70

பிராமி எழுத்து வடிவமும்
தொடக்ககால எழுத்தறிவும்
- எம். எம். ஜெயசீலன் 76

அநுராதபுரத்தில் தமிழ் பௌத்த மன்னர்கள்
-கா.இந்திரபாலா 86

இயக்கச்சி முதல் நியூயோர்க் வரை:
அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாகும்
தெங்குப் பொருட்கள்
-ஆங்கில மூலம்: ஜெகன் அருளையா
தமிழில்: த. சிவதாசன் 91

கடந்த கால அபிவிருத்தித் திட்டங்களின்
பகைப்புலத்தில் 'திருகோணமலை கொழும்பு'
விரைவுப் பாதையும் பொருளாதார வலயமும்
-வை. ஜெயமுருகன் 99

மகா நாக மன்னன் பற்றிக் குறிப்பிடும் வேலோடும்
மலை நாகமலைக் கல்வெட்டு
-என். கே. எஸ். திருச்செல்வம் 107

நாகபர்வத மலை எனும் பம்பரகஸ்தலாவ
மலையில் நாகர் பற்றிய கல்வெட்டுகள்
-என். கே. எஸ். திருச்செல்வம் 115

இனப்படுகொலையை அங்கீகரித்தலின் அரசியல்
-அருட்தந்தை எழில் 126

காலனித்துவ உயரடுக்கு வர்க்கத்தின் (Elite)
உருவாக்கம் -பி. ஏ. காதர் 140

உள்ளிருந்து உணர்தலும் சமகால நெருக்கடிகளும்:
மட்டக்களப்பு மாவட்டத்தின் கூட்டுறவுக்
கால்நடைப் பண்ணையாளர்களின் அனுபவங்கள்
-வை. ஜெயமுருகன் 146

கண்ணகி வழிபாட்டின் பரவலாக்கம்
- ஜெகநாதன் அரங்கராஜ் 153

கறவை மாடுகளின் உற்பத்தித் திறனை
மேம்படுத்தல் : இலங்கையின் வடக்கு — கிழக்கு
மாகாணங்களை முன்வைத்து
- சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன் 162

வடக்கு மாகாணத்தில் வறட்சி : ஓர் அவதானிப்பு
- நாகமுத்து பிரதீபராஜா 168

இலங்கையில் தமிழ் கற்றல் கற்பித்தல் :
நடைமுறைகளும் சவால்களும்
- ஆனந்தமயில் நித்திலவர்ணன் 176

வணிகச் செயற்பாட்டில் விழுமியங்களின் வகிபாகம்
- கணபதிப்பிள்ளை ரூபன் 183

பின்காலனியச் சூழலில் ஈழத்துப்புலம் தனக்கான தனித்த அடையாளங்களை, அவற்றைப் பேணுதலுக்கான அக்கறையை கொண்டமைந்ததாக இல்லை. பொருளாதாரம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் 'மேனிலையாக்கம்' எனும் கருத்தாக்கத்தை நோக்கிய பயணத்தையே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் தன்னடையாளப் பேணுகை குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாகவே 'ஈழத்து நாட்டார் தெய்வங்கள்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமையப்பெறுகிறது. இதில் ஈழத்தில் மட்டும் சிறப்புற்றிருக்கும் தெய்வங்கள், ஈழத்தில் தனக்கான தனித்துவத்தைப் பெற்றிருக்கும் தெய்வங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தொடரானது தெய்வங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் வரலாறு, சமூகப் பெறுமானம், சடங்கு, சம்பிரதாயங்கள், தனித்துவம், இன்றைய நிலை, சமூகத்துக்கும் அதற்குமான இடைவினைகள் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. கள ஆய்வின் வழி நிகழ்த்தப்படும் இவ்வாய்வு விவரணம், வரலாறு எனும் ஆய்வு முறைகளின்படி எழுதப்படுகிறது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்களின் வழியும் நேர்காணல், உரையாடல், செய்திகள் என்பவற்றின் வழியும் பெறப்பட்டு சமூக விஞ்ஞானப் பார்வையினூடாக ஆக்கப்படுகின்றது.





# பெரும்படை என்னும் குலதெய்வம்

தி. செல்வமனோகரன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்த துறையின் முதுநிலை விரிவுரையாளராக தி. செல்வமனோகரன் திகழ்கிறார் . இந்திய மெய்யியல் கற்கை புலத்தில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளார். இந்துக்கற்கை புலம் சார்ந்து காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், இலங்கையில் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாயன்மார் பாடல்கள், தமிழில் மெய்யியல் எனும் நூல்களை எழுதியுள்ளார். பெறுதற்கரிதான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார். 'சொற்களால் அமையுலகு' என்னும் இவரது நூல் கலை, இலக்கியம் சார்ந்த விமர்சன நூலாகும்.

ஆதிகால மக்களின் நம்பிக்கைகளே சமயங்களாகப் பரிணமித்தன. மானுடர்களின் வாழ்வில் உருவான நம்பிக்கைகள் பல்வேறு நம்பிக்கைகளையும், கற்பனைகளையும், அச்சங்களையும் அவற்றினூடாகப் பல்வேறு ஐதிகக் கதைகளையும் புராணங்களையும் நீண்ட நெடுங்காலங்களுக்கு அளிக்கை செய்து வந்துள்ளன. அதன் வழி "ஓ! நம்பிக்கையே என்னை நம்பிக்கை உடையவனாக்கு" என இறைஞ்சுகின்ற நிலைக்கு மானுடரை உந்தித் தள்ளிற்று. அவை அகவியல், புறவியல் எனும் இரு தளங்களிலும் வாழ்வு முழுவதும் மானுடருடன் தொடர்ந்து பயணித்தன. அது இயற்கை வழிபாடு, முன்னோர் வழிபாடு, உயிரியம், மனா எனப் பல்வேறு கருத்தாக்கங்களை உருவாக்கியது.

குறித்த இனக்குழு தன்னை, தன்னினத்தைக் காத்த வீரனை, உயிரியை, இயற்கையை தன் தெய்வமாக - என்றென்றும் தம்மைக் காக்கும் தெய்வமாக நம்பி வழிபடத் தொடங்கியது. அதுவே குலதெய்வ வழிபாடாயிற்று. இது பரம்பரை, சாதி, நிலம் எனப் பல தளங்களில் கட்டமைக்கப்பட்டது. ஆரம்ப காலத் தமிழர்களின் திணைக்கடவுள்கள், பிற்காலச் சாதியக் கடவுள்கள் என்பன

இதற்குத் தக்க சான்றாகின்றன. குறித்த தெய்வம் ஆண்பாற் பெயரையோ, பெண்பாற் பெயரையோ கொண்டிருக்கும். திணை, பால், எண், இடம் கொண்டிராத பெயரையுடைய தெய்வம் அரிது. அவ்வாறான பெயரை உடைய தெய்வமே 'பெரும்படை' என்பதாகும். ஈழத்துப் புலத்தில் அதிகம் பேசப்படாத தெய்வங்களில் ஒன்றாக பெரும்படையும் காணப்படுகின்றது.

## பெரும்படை

இயற்கைநெறி வாழ்வில் தமக்காக, இனக்குழுவிற்காக, உயிர் நீத்த வீரர்களை, வீர வணக்கம் செய்யும் முறை காணப்பட்டது. இந்த வீர வணக்க முறையானது சடங்கு, நினைவுச் சின்னம் எனும் இரு அடிப்படைகளை உடையது. போரில் இறந்த வீரர்களை வணங்குதல் என்ற அடிப்படையில்:

> "காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
> சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலெண்
> றிரு மூன்று வகையிற் கல்லொடு புணரச்
> சொல்லப்பட்ட வெழுமூன்று துறைத்தே"

எனும் இலக்கணத்தைத் தொல்காப்பிய புறத்திணையியல் எடுத்துரைக்கின்றது. காட்சி - போரில் இறந்த வீரருக்கு, நடுதற்கு ஏற்ற கல்லைத் தெரிந்தெடுத்தல்; கால்கோள் - அக்கல்லைக் கொண்டு வருதலும் நாட்குறித்தலும்; நீர்ப்படை - அக்கல்லை நீராட்டுதல்; நடுதல் - உரிய இடத்தில் நடுதல்; பெரும்படை - கல்லில் வீரனது பீடு பொறித்தலும் மடை கொடுத்தலும்; வாழ்த்தல் - வணங்குதல் என்றாயிற்று.

இங்கு 'பெரும்படை' என்பது யாருக்காகக் கல் நடப்படுகின்றதோ அதில் அவரது பெருமைகளை எழுதலும் 'மடை' கொடுத்தலும் என விளக்கப்படுகின்றது. பெரும்படை என்பது பொதுவில் 'பெரியபடை' என்றே பொருள் கொள்ளப்படுகின்றது. பேரரசுகளின் படை பெரும்படை எனப்பட்டது. அது பெரியதொரு கூட்டத்தைக் குறிக்கும் சொல்லாகவே பல்வகைமையில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

தமிழகத்தில் பெரும்படை சாஸ்த்தா, 'ஸ்ரீ பெரும் படை சாஸ்தா' எனும் சொல் முறைகள் காணப்படுகின்றன. தூத்துக்குடி இருவப்புரத்தில் பூர்ணா, புக்ஷ்கலவுடன் பெரும்படை சாஸ்தாவின் கோவில் உள்ளது. இதேபோல தமிழகத்து சாயர்புரம், அருணாபேரி உள்ளிட்ட பல இடங்களில் பெரும்படை சாஸ்தா கோயில் காணப்படுகின்றன. சாஸ்தா 'ஐயனார்' ஆவார். தமிழகத்தில் தூத்துக்குடி இருவப்புர பெரும்படை சாஸ்தாவே ஆதிக்கோயில்; இராஜராஜசோழன் காலத்தில் 'வலங்கை மகா சேனை' என்ற பெரும்படை இருந்துள்ளது. அப்படை இவ்விருவப்புரத்தில் தங்கி இருந்த காலத்தில் தம்மோடு கொண்டு வந்த சாஸ்தாவை இவ்விடத்தில் பிரதிக்ஷடை செய்து வணங்கியுள்ளது. பெரும்படை வீரர்களால் வைத்து வழிபடப்பட்டது என்ற அடிப்படையில் இது 'பெரும்படை சாஸ்தா' என அழைக்கப்பட்டதாக அறியமுடிகிறது. இங்கே பெரும்படை எனும் ஒரு தெய்வம் தனித்து இல்லை. இவ்வாறான ஒரு கருத்தாடல் யாழ்ப்பாணத்து வேலணையிலும் உண்டு. வேலணைத் துறையூரில் இருக்கும் இலந்தைவனம் ஹரிஹர புத்திர ஐயனார் பெரும்படையோடு கந்தவனக் கடவை சென்று தங்கி வருவதான நம்பிக்கை காணப்படுகின்றது. அதனால் வேலணை கிழக்கு அரசபுரம் ஐயனார் 'பெரும்படை ஐயனார்' எனப்படுகின்றார். அதேவேளை 'பெரும்படை' தனித்தெய்வமாக ஈழத்தில் வழிபடப்படுகின்றது.

## ஈழத்துப் பெரும்படை தெய்வம்

ஈழத்தின் வடபுலத்தில் இரு மாவட்டங்களாகவும் தேர்தல் மாவட்டமாக ஒன்றாகவும் காணப்படுவது யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களாகும். தென்மராட்சிக்கும் கிளிநொச்சிக்குமான உறவு நீர், தரை எனும் இருவழிகளாலும் ஆனது. கோயிலாக்கண்டி, தனங்கிளப்பு, கச்சாய், கெற்பலி என்பன குடாநாட்டின் கடல் நீரேரியில் வடக்குத் தெற்குக் கரையோரக் கிராமங்கள். அக்கடல் நீரேரி பரந்தன் வரை நீள்கிறது. அது போலவே கேரதீவுப் பாதையில் இணைக்கப்பட்ட கோயிலாக்கண்டி,





**கறுக்காய்த்தீவு பெரும்படைக் கோயில்**

தனங்கிளப்பு, கேரதீவு, வெட்டக்காடு, பரமன்கிராய், ஞானிமடம், கறுக்காய்த்தீவு, ஆலங்கேணி, சாமிப்புலம், குஞ்சுப்பரந்தன் பழைய சுட்டதீவு, புதிய சுட்டதீவு எனும் கரையோரக் கிராமங்களில் பெரும்படை தனித்தெய்வமாக வழிபடப்படுகிறது. கேரதீவு, பரம்பராய் ஆகிய கிராமங்களில் ஐயனாரோடு இணைத்துத் தனித்தெய்வமாக வழிபடப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

எழுநாவில் வெளிவந்த 'சேவகர்' தெய்வம் பற்றிய கட்டுரையை வாசித்து விட்டு சாவகச்சேரியைச் சேர்ந்த மார்க்கண்டு அவர்கள் 'பெரும்படை' தெய்வம் பற்றி எமக்குக் கூறினார். அதன்வழி மாணவ நண்பர்கள் திரு S. தாரங்கன், செல்வி S. தாட்சாயினி ஆகியோரின் உதவியோடு கள ஆய்வில் ஈடுபட்டோம். யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சிக்கும் இடைப்பட்ட இக்கிராமங்களுக்குச் சென்று நேரடியாக ஆலயங்களைத் தரிசித்தபோது சில பொது அம்சங்களை அவதானிக்க முடிந்தது.

1. பெரும்படைத் தெய்வத்தின் இக்கோயில்கள் யாவும் கடற்கரையை மிக அண்மித்தே அமைந்துள்ளன.
2. இவை யாவும் கடலால் உட்கொள்ளப்பட்ட விவசாய - நெல் உற்பத்தி நிலங்கள்; வற்றுகடல்கள்.
3. இக்கோயில்களுள் சில பெருங்கோயிற் பண்பாட்டியலுடன் கட்டப்பட்டாலும் 'பூசாரி'களே பூசை செய்கின்றனர்.
4. பரம்பரை பரம்பரையாகப் பூசை செய்யப்படுகின்றது என்ற ஒற்றை வரியைத் தவிர வரலாறு எதுவும் அறியப்படாத கோயில்கள்.
5. முக்குவர் சமூகத்தவர்களின் குலதெய்வக் கோயில்களாகவே இவை காணப்படுகின்றன.
6. எந்தக் கோயிலிலும் காலங்காலமாக உயிர்ப்பலி, மட்சப் படையல் எதுவுமில்லை. இது சேவகர் வழிபாட்டை ஒத்துள்ளது.
7. பெரும்படைத் தெய்வம் உருவமற்றது; அரூப வழிபாடும் கல் வைத்து வழிபடும் முறையுமே பெருவழக்ககாக உள்ளது.

கோயிலாக்கண்டி, வெட்டுக்காடு, பரமன்கிராய், ஞானிமடம், கறுக்காய்த்தீவு, குஞ்சுப்பரந்தன் புதிய சுட்டதீவு, பழைய சுட்டதீவு, ஆலங்கேணி, கெற்பலி ஆகிய இடங்களில் ஒவ்வொரு கோயில்களும் ஞானிமடத்துக்கு அப்பால் நாகதேவன் துறையை அண்மித்து தெருவின் இருபுறமும் இருகோயில்கள் உள்ளன. அதே போல கச்சாயில் மணற்பிட்டி சடவத்தியில் ஒரு கோயிலும் கச்சாய் துறைமுகத்தில் இருந்து 2 Km படகுப் பயணத்தில் அமைந்துள்ள சாளம்பன்



**கச்சாய் கெற்பலி பெரும்படை வழிபடு ஸ்தலம்**

தீவில் ஒரு கோயிலும் உள்ளது. இவை தவிர தனங்கிளப்பில் இருந்த பெரும்படை 'அம்மன்' கோயிலாக மாறிவிட்டது. சங்குப்பிட்டி, பரமன்கிராய் எனுமிடங்களில் உள்ள ஐயனார் கோயில்களின் பரிவார தெய்வமாக பெரும்படை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வெட்டுக்காடு பெரும்படையும் பரமன்கிராய் ஐயனாரும்

பரமன்கிராய், வில்லடி மேற்கு ஐயனார் கோயில் பூசாரியான சதாசிவம் சிவகுருநாதன் பெரும்படை, ஐயனார் தெய்வங்களின் வருகைக்கான ஐதீகக் கதையை கீழ் வருமாறு கூறினார்:

"பேய்க்கப்பல் ஒன்று கடல் வழியாக இந்தப் பிராந்தியத்தை நோக்கி வந்தது. கௌதாரி முனையின் ஏழாத்துப்பிரிவில் மடை வைத்து தம்மைக் காக்குமாறு மக்கள் வேண்டினர். கொழும்புத்துறையிலிருந்து கடல் வாய்க்கால் வழி ஏழாத்துப் பிரிவுக்குப் பாதை இருந்தது. அப்போது எறியப்பட்ட இடம்புரிச்சங்கு, வலம்புரிச்சங்குகள் விழுந்த இடங்களே முறையே வில்லடி மேற்கு, வெட்டுக்காடு ஆகியனவாகும். தெங்குறுப்பிட்டி சுடலையில் உள்ள பாலைமரத்தில் அச்சங்கு தெரிவதாகக் கூறி பலர் அதனை எடுக்க கோடாரியுடன் சென்று பார்த்த போது அதனைக் காணவில்லை. இப்படி பலர் பல தடவை ஏமாந்துள்ளனர்."

மேற்படிக் கதையை வெட்டுக்காடு தெங்குறுப்பிட்டி பெரும்படை ஆலயப் பூசாரி கார்த்திகேசு பஞ்சாட்சரம் இவ்வாறு கூறினார்:

"கொள்ளை (நோய்)க் கப்பல் ஒன்று இப்பிராந்தியத்துக்கு வந்தது. அக்கொள்ளை நோயிலிருந்து தப்ப இரு சங்குகள் எறியப்பட்டன. ஒன்று தெங்குறுப்பிட்டியில் விழுந்து பெரும்படையாகவும் மற்றையது வில்லடியில் விழுந்து ஐயனாராகவும் நின்று அருள் பாலிக்கின்றன. அத்தெய்வங்களால் கொள்ளை நோய்க் கப்பல் உடைக்கப்பட்டது. அந்த இடம் இன்றும் 'கப்பல் உடைந்த வாய்க்கால்' எனப்படுகின்றது. கொள்ளிவாய்ப் பேய்கள் காலை இழுத்து இழுத்துச் சென்றதால்

அந்த வாய்க்கால் ஏற்பட்டது என்றும் கதை உண்டு.”


கோயிலாக்கண்டி பெரும்படை ஆலயம்

இவ்விருவரது கருத்துப்படியும் சங்கு விழுந்த இடங்களில் ஐயனாரும் (வலம்புரிச்சங்கு) பெரும்படை தெய்வமும் (இடம்புரிச் சங்கு) உருவாயின. தமிழகப்புலத்தில் சோழர் காலத்தில் சாதியை வலங்கை, இடங்கை எனப் பகுத்துரைத்துள்ளனர். அரசின் வலங்கை வருபவர், இடங்கை வருபவர் என இச்சாதிகள் சுட்டப்படுகின்றன. இச்சாதிகளை சார்ந்த வீரர்கள் வலங்கை வீரர், வலங்கைப்படை, இடங்கை வீரர், இடங்கைப் படை என அழைக்கப்பட்டனர்.

வலங்கைச் சாதியினருள் (வலம்புரிச்சங்கு) ஒருவரான வேளாளரினால் ஐயனாரும் இடங்கைச் சாதியினரான (இடம்புரிச்சங்கு) முக்குவரர்களால் பெரும்படைத் தெய்வமும் இன்று வரை ஆதரிக்கப்பட்டு வருவதையும், பெரும்படைத் தெய்வம் பற்றிய கதையாக பெரும்படைத் தெய்வ வழிபாட்டாளர்கள் இக் கதையையே சிறிது சிறிது வித்தியாசத்தில் கூறுவதையும் அவதானிக்க முடிந்தது. முக்குவர்களின் காவல் தெய்வமாக, குலதெய்வமாக பெரும்படை இன்றும் நின்று நிலைக்கின்றது.

ஐயனாருக்கும் பெரும்படைக்கும் இடையிலான வழிபாட்டு உறவு இவ்விரு கோயில்களிலும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. பண்டமெடுத்தல், முத்தரிசி பெறல், பவனி பாடல் என்பன ஒன்றாகவே நடைபெற்றுள்ளன. இவ்விரு இனக் குழுக்களும் இணைந்தே இக் கைங்கரியங்களை மேற்கொண்டுள்ளனர். ஐயனார் கோயிலில் கொடிமரம் நடுதல், பலியிடல் நடைபெற்றன. ஐயனார் கொடிமரம் சாய்த்தலின் பின் பெரும்படையில் பொங்கல் இடம்பெற்றுள்ளது. ஐயனாருக்கு பெரும்படைப் பூசாரியும் பெரும்படைக் கோயிலுக்கு ஐயனார் பூசகரும் சென்று இணைந்து பூசை செய்துள்ளமை சாதி கடந்த வரலாற்றுச் சம்பவங்களை ஆதாரப்படுத்துகின்றன. ஆயினும் இச்செயல்முறைகள் இன்று குறைவடைந்து வருகின்றன.

பவனி வரும் போது ‘21’ பாடல்கள் பாடப்பட்டதாகவும் அவ்வேடுகள் தொலைந்து விட்டதாகவும் ஐயனார் கோயில் பூசாரி தெரிவித்தார். இதையொத்த கதையையே யுத்தத்தால் ஏற்பட்ட பெயர்வுகளால் சுவடிகள் தொலைந்தன என கறுக்காய்தீவு பெரும்படைக் கலையாடி பொன்னம்பலம் மயில்வாகனமும் தெரிவித்தார். ஆயினும் ஐயனார் கோயில் பூசாரி தனது ஞாபகத்தில் இருந்த ஐயனார் பாடல்கள் பத்தை எழுதி வைத்துள்ளார். வெட்டுக்காடு பெரும்படை பூசாரி கா. பஞ்சாட்சரம் அப் பத்துப் பாடல்களோடு பெரும்படை பற்றிய நான்கு பாடல்களையும் இணைத்துப் பதிப்பித்துள்ளார். அப்பாடல்களில் “தர்மனே செங்கண்மால் தரு பெரும்படையே” என்றே ஈற்றடிகள் ஆண்பால் கொண்டவையாய் அமைந்துள்ளன. ஆனால் இன்று பெரும்படை ‘பெரும்படையம்மன்’ என்றே வழிபடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. கோயிலாக்கண்டியைச் சேர்ந்த விஜிகரன் தனது வீட்டுக்கருகில் இருந்த வயோதிப மாது ‘பெரும்படைக் கிழவா’ என்று பெருங்குரலில் தெய்வத்தை அழைத்து வணங்குவதாக தெரிவித்தார்.

## பெரும்படைத் தெய்வம் பற்றிய கதை

பெரும்படைத் தெய்வம் இரண்டு வகை உடையது. ஒன்று, வெற்றிப் பெரும்படை; மற்றயது, வீரப் பெரும்படை. இராமாயணத்தில் ‘இராவணரோடு இருந்தவள்’ என்று மக்கள் பேசியதால் சீதையை வனத்தில் விடுவித்தான் இராமன். இதனை “வண்ணாரின் மொழி கேட்டு, வனம் விடுத்த சீதை தனை” என நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பாடுவார். கர்ப்பமுற்றிருந்த சீதை வனத்தில் ‘லவன்’ எனும் ஆண்மகவைப் பெற்றிருக்கின்றாள். ஒருநாள் அக்குழந்தையை விசுவாமித்திர முனியின் பொறுப்பில் விட்டுவிட்டு நீரெடுக்கக் குளத்துக்குச் செல்கிறாள். செல்லும் வழியில் குரங்கு தன் மகவை நெஞ்சோடு அணைத்தபடி தான் செல்லுமிடமெங்கும் கொண்டு செல்வதைக் கண்டு, “இக்குரங்குக்கு இருக்கும் பாசம் தனக்கு லவன் மீது இல்லாமல் போய்விட்டதே” என எண்ணித் துயருற்று ஓடிப்போய் தன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு குளத்துக்குச் சென்றாள். இதனையறியாத விசுவாமித்திரர் குழந்தையைக் காணாது பதறி, செய்வதறியாது திகைத்து, பின் தேறி, தருப்பைப் புல் ஒன்றை எடுத்துத் தன் தவ வலிமையால் லவன் போல் ஒரு குழந்தையை உருவாக்கினார். இதையறிந்த சீதை மகிழ்வோடு அக்குழந்தைக்கு ‘குசன்’ எனப் பெயரிட்டு வளர்த்தாள் என்றும் கூறப்படுகின்றது. அதில் சீதையின் மகனான லவனே வெற்றிப் பெரும்படை; அம்மூர்த்தமே மூலஸ்தானத்தினுள் (சாளம்பன் தீவு, ஆலங்கேணி சாமிப்புலம்) இருக்கிறது. வெற்றிப் பெரும்படை பரிவார மூர்த்தியாக வெளியில் இருக்கிறது. வெற்றியீட்டியவன் தலைவனாகி அரசுக் கட்டிலில் ஏறுவதும் துணை நின்றவன் வீரனாகி காவற்கு நிற்பதும் மனிதகுல வரலாறு முழுவதும் இடம்பெறும் விடயம் தான்.

## வழிபாட்டு முறைகள்

பொதுவாகப் பெரும்படைக்கான பூசை வழிபாடு சனிக்கிழமைகளிலேயே நடைபெறுகின்றது. ஊர் வழக்கில் ‘சனியும் புதனும் சாத்திரத்திற்குரிய நாள்’ என்பர். ஆயினும் தத்தம் வசதிக்கேற்ப வெள்ளி, ஞாயிறு தினங்களிலும் விளக்கு வைப்பர். நித்தியா பூசையும் உண்டு. ஆனால் படகுப் பாதையை மட்டும் கொண்டுள்ள கச்சாய், சாளம்பன் தீவு பெரும்படைத் தெய்வத்துக்கு பௌர்ணமி நாளிலேயே பூசை இடம் பெற்று வருகிறது.

பெரும்பாலான கோயில்களில் பங்குனி உத்திரம், வைகாசிப் பொங்கல் என்பன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. அது ‘வேள்வி’ என அழைக்கப்படுகிறது. வெட்டுக்காடு, தெங்குறுப்பிட்டி பெரும்படை கோயிலிலும் ஐயனார் கோயிலிலும் இணைந்த வழிபாட்டு முறை உள்ளது. முன்னைய காலத்தில் பொங்கலுக்கு எட்டு நாட்களுக்கு முன்பு ‘நாள் காசு’ எடுத்தல் நிகழ்வு இடம்பெறும். ஐயனார்க்கு பெரும்படை கோயில் சார்ந்தவர்களும், பெரும்படைக்கு ஐயனார் கோயில் சார்ந்தவர்களும் நாள்காசு பெறுவர் என்றும் பின்பு சந்தையில் அவற்றைப் பரிமாற்றம் செய்து ‘வளந்துப்’ பொருட்களை வாங்குவர் என்றும் ஐயனார் கோயிலின் பூசாரி கூறினார். சமூக ஒற்றுமையைப் புலப்படுத்தும் இச்செயற்பாடு இன்று அருகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து இந்த ஆலயங்களுக்கான வாழைக்குலை முதலியன படகுவழி நாகதேவன் துறைக்கு வந்து பின் வண்டிலில் கொண்டு வந்ததை அறிய முடிகின்றது. அக்கால வணிக, போக்குவரத்து விடயங்கள் இதன் வழி ஆவணப்படுத்தப்படுகின்றன.

ஐயனாரில் திருக்கொண்டல் மரம் கொடிமரமாக நாட்டியபின் ஒவ்வொரு வீட்டிலும் பந்தலிடப்படும். இரு ஆலயப் பூசகர்களும் வேறுசிலரும் ‘பவனி படித்தபடி’ (ஆலயப்பாடல்கள்) வருவர். அதன் போது பறை, உடுக்கு, சங்கு, சல்லாரி போன்றவை இசைக்கப்படும். ஒவ்வொரு வீட்டாரும் அரிசி, பண்டம் இடுவர். இச்செயல்முறை ‘முத்தரசி’ தண்டல் எனப்படும். இத்தண்டல் பெரும்பாலான பெரும்படைக் கோயில்களில் நிகழ்ந்துள்ளன. இன்று இக்கூட்டு வழிபாட்டுமுறை அருகிவிட்டது. ஒரு முழு இரவு பவனி வந்தபின் காலையில் அன்னதானம்



**கச்சாய் சாளம்பன் தீவு பெரும்படை ஆலயம்**

வழங்கப்படும். இரவு பொங்கல், படையல் இடம்பெறும். பெரும்படைக்கான மடையில் பொங்கலில் பல்வேறு வகையான பலகாரங்கள் குவித்து வைக்கப்படும். வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் நிறைவாக வைக்கப்படும். பெரும்படைத் தெய்வத்துக்கு நீத்துப்பூசணிக்காய் வெட்டுதலே பலியிடலாகக் கருதப்படுகின்றது. மடை வைப்பும் பூசையும் நடைபெறும் போது கலையாடல் நடைபெறும்.

பெரும்படைத் தெய்வத்தோடு குறைந்தது பத்து வரையான வேறு தெய்வங்கள் காணப்படுகின்றன. அவற்றுக்குத் தனித்தனிப் பந்தல்கள் போடப்பட்டிருக்கும். பல்வேறு சாதிகளின் குலதெய்வங்களுக்கு அங்கு இடம் ஒதுக்கப்பட்டு இருப்பதும், மடைபரவி வணங்குவதும் ஏற்றத்தாழ்வற்ற சமூக ஒழுங்கை, தொழில்சார் பாகுபாட்டை மட்டும் காட்டுவதாக அமைகிறது.

ஐயனாரோடு இரு மனைவியர் (பூரண, புட்கல), கண்ணகி, நாக தம்பிரான், முருகன், பிள்ளையார், நாச்சிமார், முத்துவைரவர், வைரவர், முன்னோடி, குறிப்பன், மாரி, காத்தவராயன், கன்னிமார், முனியப்பர், விறுமர் போன்ற இன்னும் பல தெய்வங்களை பரிவாரங்களாகக் கொண்ட தெய்வமே பெரும்படை. இதனால் இவ்வாலய வழிபாடுகளின் போது பல தெய்வமாடிகள் தெய்வங்கள் ஏறிக் கலையாடுவர். குறி சொல்லுதலும் உண்டு. நோய்நீக்கம், துன்பநீக்கம் போன்றவற்றிக்காக - சுகவாழ்வுக்காக பக்தர்களுக்கு தெய்வமாடிகள் 'திருநீறு போட்டு' ஆசீர்வதிப்பார்.

வளந்து எடுத்தல், மடைபரவுதல் என்பதில் ஆலயத்திக்கு ஆலயம் வேறுபாடு உண்டு. உதாரணமாக கறுக்காய்த்தீவில் மார்கழி மாதம் வழந்தெடுத்தல் நிகழ்வு நடைபெற்றது. வளந்துப் பானையை கறுக்காய் தீவு மேற்கெல்லை பூவரச மரக்கொப்பில் கட்டி வைப்பர். கிழக்கெல்லை கந்தசாமி கோவில் பூவரசு மரத்தில் மற்றையதைக் கட்டி வைப்பார். அது மூடியால் மூடி நீர்புகா வண்ணம் கட்டப்பட்டிருக்கும். பின்பு பங்குனி மாதம் அதனை எடுத்துப் பொங்கிப் படைப்பர். கடல்கோள் அதிகம் வாய்ப்புள்ள அத்தீவில் உயரமான மரத்தில் வளந்துக்கான முத்தரசியைக் கட்டி வைத்தல் 'உணவுப் பஞ்சத்தில் இருந்து காக்கும்' நடவடிக்கையாகவும் இருந்திருக்கலாம். இதே போல கோயிலாக்கண்டியின் வளந்தெடுக்கும் முறையும் தனித்துவமானதாகும்.

பெரும்படை ஆலயங்களில் உள்ள எல்லாத் தெய்வங்களுக்கும் வழுந்துப் பானை வைக்கப்படும். நீண்ட வெள்ளைத் துணியின் மேல் அவை வைக்கப்பட்டு கற்பூரம் ஏற்றல் நடைபெறுகின்றது. பூசை செய்யப்பட்டு பொங்கல் அடுப்பு வைக்கப்பட்டு பொங்கல் நடைபெறும். இவ் விழாக்களுக்கான கொடி கட்டல் நடைபெற்ற காலங்களில் தெய்வங்கள் பண்டங்களுக்கு காவல் காக்கும் என்பதால் பெண்கள், சிறுவர்கள் மாலைப்பொழுதின் பின் ஆலயச் சூழலுக்குச்

செல்வதில்லை. தற்போது இந் நம்பிக்கைகள் குறைந்துவிட்டன.

பெரும்படைக்கு பலியிடல் இல்லை எனினும் காத்தவராயருக்கு சாராயப் படையலும் முனி, அண்ணமார், விறுமர் போன்ற தெய்வங்களுக்கு ஆலங்கேணி சாமிப்புல பெரும்படைக் கோயிலிற்குப் புறம்பாகத் தனிமண்டபம் அமைத்து (மறைவாக) பலியிடல் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. அக்கோயிலில் கார்த்திகை, தை மாதங்களில் கடல் நீரேரியில் மூன்று கிலோமீற்றர் சென்று மடைபரவுதல் நடைபெறுகின்றது. இது 'தண்ணீரில் பல காவல் மடைபரவுதல்' எனப்படுகின்றது. ஆயினும் "கன்னாவும் ஆடு தின்னாப்பாலையும் சிக்கி நிக்கும் இடத்தில் மடை பரவுக" எனக் கனவில் தெய்வம் கூறியதாகவும் தற்போது அவ்விடத்திலேயே மடையிடுவதாகவும் ஆலயத் தலைவர் பொன்னையா கந்தையா எமக்குரைத்தார். இத்தெய்வத்துக்கு காவடி எடுத்தல் முதலான நேர்த்திகளும் செய்யப்படுகின்றன. நீர்ச்சோறு வழங்கும் முறை பொருளாதார மற்றும் காலநிலை சார்ந்ததாக அமைந்துள்ளது.



சாளம்பன் தீவு வீரப் பெரும்படை

பெரும்படைக்கு மந்திரமோதி பூசை செய்யும் மரபும் சில கோயில்களில் உள்ளன. கோயிலாக்கண்டி கோயில் வரலாற்றில் தற்போது உள்ள கோயிலுக்கும், சமாதிக்கும் இடையில் இருந்த ஆலமரத்தினடியில் லிங்கத்தை ஒத்த கல்லிருந்தது. அதனை எடுத்து வழிபடுமாறு தெய்வம் உரைத்ததாகக் கூறப்படுகிறது. இது நடுகல்லாகவோ கந்துவாகவோ இருந்திருக்கலாம். நல்லதம்பி அவர்கள் அதனை எடுத்து ஆதரித்ததாகவும் அவரது கன்னிமார்த் தெய்வம் நாக்கில் கீறி மந்திரம் உபதேசித்ததாகவும் அதிலிருந்து மந்திர வழிபாடு நிகழ்ந்து வருவதாகவும் அவ்வாலயப் பூசகர் கனகரத்தினம் துரைநாதன் கூறினார். ஆயினும் அம்மந்திரத்தை எமக்குரைக்க மறுத்துவிட்டார்.

## அற்புதங்கள்

வெட்டுக்காடு பெரும்படைத் தெய்வம் தொடர்பான பேய்க்கப்பல் அல்லது கொள்ளை நோய்க் கப்பல் விரட்டல் கதை அற்புதமாக பல ஆலயங்களிலும் சொல்லப்படுகிறது. அது தவிர ஆலங்கேணி சாமிப்புலத்தில் மட்டும் நிகழ்ந்த வழிபாட்டால் அந்த ஊர் மட்டும் கடல் புகாது தப்பியதால், தற்போது கட்டுக்கரையிலிருந்து குடமுருட்டி வரை பொங்கல் நடைபெற்ற பின்பு இறுதியாக பெரும்படைப் பொங்கல் ஆனியில் நடைபெற்று வருகின்றது.

வெட்டுக்காட்டில் யுத்தகாலத்தில் இராணுவம் இரவு நேரத்தில் சென்ற வெளிச்சத்தைச் சுட்டதாகவும் அடுத்த நாள் சுட்ட இராணுவ வீரர் திடீரென மரணமடைந்ததாகவும் அதன் பின் அந்த முகாம் வீரர்கள் இன்றுவரை ஆலயத்தில் வழிபடுதலும் நேர்த்தி வைத்தலும் செய்வதாக ஆலயப் பூசாரி தெரிவித்தார். அதேபோல நிசாப்புயல் காலத்தில் கறுக்காய்த்தீவு பெரும்படைக்கு வைத்த நேர்த்தியால் உப்பு நீர் ஊருக்குள் புகவில்லை என்றும் அயல் ஊர் அனைத்தும் உப்புநீர்க் காடாயிற்று என்றும் பூசாரி கூறினார்.

கடற் தொழிலாளர் வருவாய் பெரும்படையின் (சாமிப்புலம்) அருளினால் நிகழ்வதாகவும், வைத்த மடையில் குறை இருந்தால் 'கஞ்சல் கசாளங்களே' அகப்படும் என்றும், குறை நீக்க மீள மடை

செய்யின் மீன்பிடி சிறக்கும் என்றும் ஆலயத் தலைவர் கூறினார். பொதுவில் "பெரும்படைத் தெய்வத்துக்கு மடை வைத்து அண்டாது" என்ற கருத்தும் சொல்லப்படுகின்றது.

## சில அவதானிப்புகள்

- முக்குகர் குலத்தெய்வமாக கடல் நீரேரியை அண்மித்து கடலோரத்தில் உள்ள இத்தெய்வ வழிபாடு, இராமனின் நண்பனான குகன் வம்சத்தவரால் இராமனின் பிள்ளைகளான லவ (வெற்றிப்பெரும்படை), குச (வீரப்பெரும்படை) ஆகியோர் வழிபடப்படுவதாக அமைகிறது.
- கொள்ளை நோய் நீக்கம், பகைவிரட்டல் எனும் வீரச் செயல்களோடு தொழில் விருத்திக்குமான வழிபாடாக உள்ளது.
- பிட்டி, இடுகயிறு என்பன முக்குகரின் அடையாளங்கள் என 'வலங்கை, இடங்கை சாதியர் வரலாறு' எனும் நூலில் கூறப்படுகின்றது. பெரும்படைக் கோயில்களும் தெங்குறுப்பிட்டி, கச்சாய், மணற்பிட்டி, சாணம்பன் தீவு எனும் பிட்டி போன்ற இடங்களில் இருப்பது குறிப்பிடத்தக்கது.
- நெய்தலும், மருதமும் இணைந்த வாழ்புலத்தின் வழிபாடாகவே இது அமைந்துள்ளது.
- குறிப்பாக கடல் கொண்ட வயல் நிலங்களை அண்மித்ததாக 'தப்புத்தண்ணிக்' கடலோரக் கோயில்களாக அமைந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.
- தமக்கேயான தனித்துவமான கதைகளையும் பரிவார அல்லது இணைத் தெய்வங்களையும் கொண்டவையாக இவ்வாலயங்கள் காணப்படுகின்றன.
- மரபு மணம் மாறாதவையாக பெரும்படைத் தெய்வ வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றன.
- பெரும்படைத் தெய்வம் உடனுறை பிள்ளையார் கோயிலாக சில கோயில்கள், (கச்சாய் மணற்பிட்டி சடவத்தி கோயில், ஆலங்கேணி சாமிப்புலக் கோயில்) மாறி வருகின்றன.
- இன்று பெரும்படை 'பெரும்படையம்மன்' என்றே வழிபடப்படுதல் பெரும்படையின் வரலாற்று உரையாடலின் தேய்வையும் மேனிலையாக்கத்தையும் காட்டுகின்றது.
- பல சாதிகளும் இணைந்ததான வழிபாட்டுமுறை சிதைந்து வருதலும் பௌதிகக் கட்டுமானமே முதன்மை பெறுதலும் இடம்பெற்று வருகின்றது.

## முடிவுரை

ஐயனாரின் பரிகாரத்தின் தலைவன் என்று பெரும்படை பற்றிக் கூறப்படுகிறது. எல்லா இடங்களிலும் 'வெற்றி' மூலவிடத்திலும், 'வீரம்' வெளிப்புறத்திலும் தெய்வமாக்கப்பட்டுள்ளது. வெற்றியை வீரமே தக்க வைப்பதாக இதனைக் கொள்ளலாம். அரூபக் கடவுளாக, பால் வேற்றுமை அற்ற தெய்வமாகக் காணப்பட்ட பெரும்படை இன்று 'அம்மன்' ஆக்கப்பட்டுள்ளது. வழிபாட்டு முறைகள் மாறி வருகின்றன. சாதிய ஒற்றுமை குறைவடைந்துவிட்டது. ஆயினும் பழமையான பூசாரி வழி வழிபாடு அவ்வண்ணமே காணப்படுகிறது. ஆகமமயப்படாத சுய வழிபாட்டு முறை சிறப்பாக இடம்பெறுகின்றது. ஈழத்தில் மட்டக்களப்பிலேயே முக்குவர்கள் அதிகம் இருப்பினும் அங்கோ அல்லது யாழ்ப்பாணத்தில் நவாலி, தொல்புரம், காரைநகர் உள்ளிட்ட வேறு இடங்களிலோ இத்தெய்வ வழிபாடு இல்லை. கடல் நீரேரியைச் சுற்றியே காணப்படும் 'நிலவியல்' தெய்வம் இது எனலாம். பெரும்படைக் கோயில்களில் படையாகப் பல தெய்வங்கள் சூழ இருப்பதும் பெரும்படை எனும் சொல் பால், திணை வேறுபாடு இல்லாத ஒன்றாக இருப்பதும் இதனை ஒரு கூட்டு வழிபாடாகக் கொள்ள வைக்கிறது. பல் தெய்வங்கள் ஒருங்கே ஓரிடத்தில் வழிபடப்படுகின்ற – பல சாதி மக்கள் ஒருங்கே திரள்கின்ற இடமாக இது இருப்பது ஒரு 'திரட்சி' வழிபாடாக இதனைக் கருத இடமளிக்கின்றது. யாழ்ப்பாணச் சாதியத்தை முக்குவர் நோக்கு நிலையில், தம்மை மூலத்தில் வைத்து, ஏனைய சாதிகளையும் தெய்வங்களையும் 'அடுக்குப்' பண்ணுகின்றதான முறையில் இக்கோயில்களின் அமைப்புமுறை இருப்பதாகவே எமக்கு எண்ணத் தோன்றுகின்றது.

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இன்று அனைவருமே அனுபவிக்கின்ற நிலையில் பசுமை நோக்கிய நகர்வு குறித்த விழிப்புணர்வும் அக்கறையும் பரந்துபட்டளவில் மக்களைச் சென்றடைந்துள்ளது. பசுமையின் பெயரால் வளச்சுரண்டல்கள், உரிமை மறுப்புகள், மோசடியான வர்த்தகம், போலியான திட்டங்கள் என அனைத்தும் அரங்கேறுகின்றன. குறிப்பாக மூன்றாமுலக நாடுகள் இதற்குப் பலியாகின்றன. இலங்கையும் இதற்கு விலக்கல்ல. இலங்கை உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக கருதப்படுகிறது. ஆனால் இலங்கையின் உயிர்ப்பல்வகைமை மிகப்பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் காலநிலை மாற்றத்தின் கொடும் விளைவுகளையும் இலங்கை சந்தித்துள்ளது. இவை குறிப்பாக விவசாயத் துறையை சீரழித்துள்ளது. உயரும் கடல்மட்டம் இலங்கைக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உருவெடுக்கும் வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய பின்புலத்தில் இலங்கைச் சூழலில் பசுமை எனும் பெயரால் நடைபெறுகின்ற விடயங்களைத் தத்துவார்த்த ரீதியிலும் வரலாற்று நோக்கிலும் சமகால நிகழ்வுகளுடனும் நோக்க இத்தொடர் விழைகிறது. பசுமையின் பெயரால் நடந்தேறுபவை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார மாற்றங்களையும் அதன் அரசியல் சிக்கல்களையும் சேர்த்தே 'பசுமை எனும் பேரபாயம்' எனும் இத்தொடர் கவனம் செலுத்துகிறது.




Image Source : groundviews.org

# சம்பூர் அனல்மின் நிலையம்: மக்கள் போராடிய பொழுதுகள்




மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.


### தொடக்கக் குறிப்புகள்

இலங்கையில் மக்களுக்கும் சூழலுக்கும் எதிராக முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிராக தொடர்ச்சியாக போராட்டங்கள் நடைபெற்று வந்துள்ளன. ஆனால் அவற்றில் வெற்றியடைந்த போராட்டங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. குறிப்பாக 1978 இல் நிறைவேற்றதிகாரமுள்ள ஜனாதிபதி முறையின் தோற்றமும் ஜனநாயக விழுமியங்களின் நலிவும்

*கருத்துரிமைக்குச் சவால் விடுத்தன. 1989-90 காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியின் கிளர்ச்சி அடக்கப்பட்ட விதம் இலங்கையெங்கும் கருத்துரிமைகள் குறித்த பாரிய அச்சத்தை விதைத்தது. உள்நாட்டுப் போரின் தீவிரத்தன்மை ஏற்படுத்திய நெருக்குவாரங்கள் இலங்கையை மென்மையான சர்வாதிகாரத்தை நோக்கி நகர்த்தின. இவை அனைத்தும் கருத்து வெளிப்பாடுகள், எதிர்ப்புப் போராட்டங்கள் என்பன குறித்த பார்வையை மாற்றின. அதேவேளை அரசுக்கெதிரான போராட்டங்கள் 'தேசத் துரோகச் செயல்கள்' என முத்திரை குத்தப்பட்டன.*

*இந்தப் பின்புலத்தில் மக்களின் முணுமுணுப்புகளுக்கும் மென்மையான எதிர்ப்புகளுக்கும் மத்தியில் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவை சூழலுக்கும் மக்களுக்கும் பாரிய சேதத்தை விளைவிக்கக் கூடியவையாக இருந்த போதும் அவை வீரியமான எதிர்ப்பைச் சந்திக்கவில்லை. இதற்கு சிறந்த உதாரணம் நுரைச்சோலை அனல் மின்நிலையமாகும். குறித்த திட்டத்திற்கு எதிராக மக்கள் குரல் எழுப்பினாலும் அவை ஒரு வீரியமான போராட்டமாக எழுச்சி பெறவில்லை. 2005 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தாலும் ஜப்பானின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட இந்த அனல் மின்நிலையமானது திட்டமிட்டபடி நடைமுறைக்கு வந்தது.*

*இதைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் பிரதேசத்தில் அனல் மின்நிலையமொன்றை இந்திய நிறுவனமொன்றின் ஊடாக உருவாக்கும் முயற்சி மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தால் நிறுத்தப்பட்டது. இலங்கையின் சுற்றுச்சூழல் வரலாற்றில் மிகவும் முக்கியமான ஒரு மைல்கல்லாக இன்றும் அப்போராட்டம் நோக்கப்படுகிறது. அப்போராட்டத்தின் கதை முக்கியமானது. அது மீண்டும் மீண்டும் சொல்லப்பட வேண்டியது. நம்பிக்கைகள் அற்ற காலத்தில் நம்பிக்கையையும் புத்துயிர்ப்பையும் தரும் கதை இது. இலங்கையின் சமூகங்களால் தங்கள் இன, மத, மொழி அடையாளங்களைக் கடந்து நாட்டையும் நாம் வாழும் சுற்றுச்சூழலையும் நமது இயற்கையையும் பாதுகாக்க இணைந்து போராட முடியும் என்பதைக் காட்டும் கதையிது.*

## சம்பூர்: போர் பெயர்த்த நிலம்

*2002 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதைத் தொடர்ந்து இரு தரப்புகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பேச்சுவார்த்தைகளில் காணப்படாத முன்னேற்றமும் 2005 இறுதிப் பகுதியில் புதிய அரசாங்கத்தின் வருகையும் நெருக்கடியான நிலையை உருவாக்கத் தொடங்கின. போர்நிறுத்த உடன்படிக்கை இருந்தபோதிலும், 2006 ஏப்ரலில் இருந்து இலங்கையின் பாதுகாப்பு நிலைமை வேகமாக மோசமடையத் தொடங்கின. புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் வடக்கு மற்றும் கிழக்கில் மீண்டும் வன்முறை மோதல்கள் எழுந்தன. 29 மே 2006 அன்று, தமிழீழத் தாய்நாடு மீட்புப் படை என்று தங்களை அழைத்துக் கொள்ளும் ஒரு குழு, திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூரை விட்டு முஸ்லிம்கள் வெளியேற வேண்டும் என்று ஒரு அறிவிப்பை வெளியிட்டது, இதன் விளைவாக ஜூலை 2006 முதல் வாரத்தில் பெரிய அளவில் இடம்பெயர்வு நிகழ்ந்தது.*

*இரண்டு வாரங்களின் பின்னர் திருகோணமலை மாவட்டத்தின் தெற்குப் பகுதிகளுக்கு நீர் வருவதை நிறுத்தும் நோக்குடன் மாவிலாற்றில் இருந்து பாயும் பாசனக் கால்வாயை புலிகள் மூடினர். கால்வாய் மற்றும் சம்பூர் பகுதியானது அப்போது புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. இதை மீண்டும் கைப்பற்றுவதற்காக இலங்கை ஆயுதப்படைகள் வான் மற்றும்*

தரைவழித் தாக்குதலைத் தொடங்கின. 2006 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதிக்குள் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். பெரும்பான்மையான முஸ்லிம் மற்றும் சிங்களக் குடும்பங்கள் வெளியேறி, கந்தளாயில் தங்கியிருந்தன. தமிழ்க் குடும்பங்கள் தெற்கே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான கோறளைப்பற்றுப் பகுதிக்கும் (வாகரை) மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்தன.

திருகோணமலையின் ஷெல் தாக்குதல்கள், மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு தெற்கே சீராக நகர்ந்தன. இடம்பெயர்வை எதிர்நோக்கும் குடும்பங்கள் மீண்டும் கோறளைப்பற்றில் உள்ள பொதுவான இடங்களில் தஞ்சம் புகுந்தனர் அல்லது மட்டக்களப்பின் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நுழைந்தனர். ஆகஸ்ட் 18 அன்று, மட்டக்களப்பில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 26,700 பேர் இடம்பெயர்ந்தவர்களாகப் பதிவு செய்யப்பட்டனர். இது நவம்பர் 2006 இறுதியில் 72,191 ஆக உயர்ந்தது. 4 செப்டம்பர் 2006 அன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சம்பூரைக் கைப்பற்றியதாக அறிவித்தார. இதைத் தொடர்ந்து தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் “சம்பூர் தற்போது பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளதால், பொதுமக்கள் அச்சமின்றி மீள்குடியேற முடியும்” என்று ஒரு அறிக்கை வெளியிட்டது.

எவ்வாறாயினும், அடுத்த மாதங்களில், சம்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காகவும், அப்பகுதியில் கண்ணிவெடி அகற்ற வேண்டியதன் அடிப்படையிலும் அப் பகுதிக்குத் திரும்ப அனுமதிக்கப்படவில்லை. 16 அக்டோபர் 2006 அன்று, சம்பூர் மற்றும் மூதூர் கிழக்கு மக்கள் இடம்பெயர்ந்த நிலையில், சம்பூர் உயர் பாதுகாப்பு வலயத்தை உருவாக்குவதற்கு முன்னர், ஜனாதிபதி இராஜபக்ஷ அவர்கள் 1976 இன் இலங்கை முதலீட்டு அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் திருகோணமலையில் ஒரு சிறப்பு பொருளாதார வலயத்தை நிறுவுவதற்கான வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டார். இது மூதூர் மற்றும் சம்பூர் பகுதிகளை உள்ளடக்கிய ஏறக்குறைய 675 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்டது. இதன்மூலம் இப்பகுதி நிலங்கள் நிலக் கையகப்படுத்தல் சட்டகத்தின் பிரகாரம் அபிவிருத்தித் தேவைகளுக்காகக் கையகப்படுத்தப்பட்டன.

இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தப் போகிறது என்றும், இந்தியாவின் உதவியுடன் சம்பூரில் 300 மெகாவாட் நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்படும் என்றும் சொல்லப்பட்டது. அரசாங்கப் பேச்சாளர், “பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு சில சமயங்களில் மக்கள் மீள்குடியேற்றம் தேவைப்படுகிறது. இதற்கு முன்னர் தென்னிலங்கையில் மகாவலி நீர்ப்பாசனத் திட்டத்தினால் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர் ஆனால் எவரும் அதனை எதிர்க்கவில்லை. இங்கும் அதையே எதிர்பார்க்கிறோம்” என்றார்.

இந்த நடவடிக்கையானது இனச் சுத்திகரிப்பு என்றும் தமிழ் மக்களை இந்தப் பகுதிகளில் இருந்து வெளியேற்றுவதன் மூலம் திருகோணமலை மாவட்டத்தின் சனத்தொகையை மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் குற்றச்சாட்டுகள் இருந்தபோதும், இடம்பெயர்ந்த பொதுமக்களிடையே தங்கள் சொந்தக் கிராமங்களில் மீள்குடியேறுதல், பொருளாதாரச் செழிப்பு குறித்த சில நம்பிக்கைகள் இருந்தன. எவ்வாறாயினும், இந்தப் பிரதேசங்களை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்திய வர்த்தமானி அறிவித்தலின் பின்பு இந்த நம்பிக்கைகள் வெளிப்படையாக சிதைக்கப்பட்டன.

ஜனாதிபதி இராஜபக்ஷவினால் மூதூர் கிழக்கு மற்றும் சம்பூரில் 1499/25 என்ற அதிவிசேட




Image Source : www.cebeu.lk

வர்த்தமானியின் கீழ் வெளியிடப்பட்ட அவசரகாலச் சட்டங்களின் கீழ் ஒரு உயர் பாதுகாப்பு வலயம் நிறுவப்பட்டது. இதற்குள் உள்வாங்கப்பட்ட மொத்தப் பரப்பளவு மூதூர் மற்றும் சம்பூரில் உள்ள 11 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியது. இதில் பொருளாதார வலயங்களின் ஒரு பகுதியாக அறிவிக்கப்பட்ட சில பகுதிகளும் அடங்கும். உயர் பாதுகாப்பு வலய வர்த்தமானியின்படி, அப்பகுதிக்குள் யாரும் அனுமதிக்கப்படுவதில்லை என்பதால், அந்தப் பகுதிக்குள் வாழ்ந்த 4,249 குடும்பங்கள் (மொத்தம் 15,648 நபர்கள்) பாதிக்கப்பட்டனர். இப்பகுதியில் உள்ள நிலத்தின் பெரும்பகுதி மிகவும் வளமானது. அது 88 நீர்த் தொட்டிகளைக் கொண்டுள்ளது. அவை விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யப் பயன்படுத்தப்படுகின்றன. கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களைக் கொண்டுள்ளன. கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் 19 பள்ளிகள், 18 இந்துக் கோவில்கள், ஒரு தேவாலயம் மற்றும் இரண்டு மருத்துவமனைகள் ஆகியன உள்ளன.

திருகோணமலை மாவட்டம் அரசாங்கத்தினால் அபிவிருத்திக்கான முக்கிய பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பல அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கிடைக்கக்கூடிய தகவல்களின் பற்றாக்குறை மூதூர் - சம்பூர் பகுதியில் இடம்பெயர்ந்தோருக்குத் ஊர் திரும்புதல் மற்றும் மீள்திருத்தம் செய்வதைச் சிக்கலாக்கியது. 'கிழக்கின் உதயம்' என்ற கிழக்கு மறுமலர்ச்சித் திட்டம், 2007 இல் வெளியிடப்பட்ட மூன்று ஆண்டு மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பொருளதார அபிவிருத்தி வலயம் ஆகியவை இப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இரண்டு வளர்ச்சித் திட்டங்களாகும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே சம்பூரில் அனல் மின்நிலையம் அமைக்கும் முயற்சி தொடங்கியது.

## சம்பூர் அனல் மின்நிலையம்

டிசம்பர் 2006 இல் இலங்கை மின்சார சபை திருகோணமலையின் சம்பூர் பகுதியில் அனல் மின்நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு இந்திய நிறுவனமான தேசிய அனல் மின் கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இத்திட்டத்தின் படி 500 MW அளவிலான ஆறு மின்நிலையங்களை உருவாக்கிடவும், உற்பத்தியாகும் மின்சாரத்தை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு வழிவகை மேற்கொள்ளவும் உடன்பாடு எட்டப்பட்டது. இந்தக் கூட்டு முயற்சித் திட்டத்திற்காக இந்தியா 200 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு கடன் வழங்கவும், திருகோணமலையில் இருந்து இந்தியாவின் தென் பிராந்தியத்திற்கு மின்சாரத்தை இணைப்பதற்கு 283 கி.மீ உயர் மின்னழுத்தக் கம்பிகள், கடற்கீழ் கேபிள் அமைப்புகளை உருவாக்கவும் உடன்பட்டது.

இதில் முக்கியமானது யாதெனில், இத்திட்டத்திற்கான முன்மொழிவை 2005 யூன் மாதமே இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனம் இலங்கை அரசாங்கத்திற்கு கையளித்தது. இக்காலப்பகுதியில் சம்பூர் முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியில் மின்நிலையம் அமைப்பதற்கு இலங்கை அரசாங்கத்திடம் முன்மொழிவை வழங்கியமையானது பல்வேறு வினாக்களை எழுப்புகிறது. நுரைச்சோலை அனல் மின்நிலையத்தை சீனாவுக்கு அளித்திருந்த நிலையில், இந்தியாவுக்கும் ஒரு அனல் மின்நிலையத்தை வழங்க இலங்கை அரசாங்கம் முடிவெடுத்தமையானது தற்செயலானதல்ல.

7 ஜூலை 2008 அன்று இலங்கை அரசாங்கம் ஒரு அறிவிப்பை வெளியிட்டது. அதன்படி நிலக்கரி மின்உற்பத்தி நிலையத்திற்கு தேவையான நிலத்தைக் கையகப்படுத்தும் செயல்முறையைத் தொடங்கியது. அறிவிப்பின்படி, அண்ணளவாக 1,717 ஏக்கர் நிலம் ஆய்வு செய்யப்பட்டு கையகப்படுத்தப்படும். எவ்வாறாயினும், இந்த நிலங்களை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்திற்கு பயன்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்பது மிகவும் வெளிப்படையாகத் தெரிந்தது (கீழே உள்ள வரைபடத்தைப் பார்க்கவும்). இது தொடர்பில் இடம்பெயர்ந்த மக்களுக்கான சிறிய தகவல்களே வழங்கப்பட்டன. அவர்களின் நிலம் கையகப்படுத்தப்படும், மாற்று இடங்களில் புதிய காணிகள் வழங்கப்படும் என்பவற்றைத் தவிர வேறெந்தத் தகல்களும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் இடம்பெயர்ந்த மக்கள், குறித்த நிலக்கரி மின்உற்பத்தித் திட்டம் குறித்து கவலை வெளியிடத் தொடங்கினர். இத்திட்டம் சம்பூரில் அமைக்கப்பட்டால் அது மொத்தத் திருகோணமலை மாவட்டத்திற்கே கேடானதாக அமையும் என்ற உண்மை மெதுவாக அப்பகுதி மக்களைச் சென்றடைந்தது. இதைத் தொடர்ந்து மக்கள் இத்திட்டத்திற்கு எதிராகப் போராடத் தொடங்கினார்கள். இதை அவதானித்த ஒரு தொகுதி இளைஞர்கள் இணைந்து 'பசுமைத் திருகோணமலை' என்ற அமைப்பை நிறுவி இத்திட்டத்திற்கெதிரான எதிர்ப்பை அமைப்புவயப்படுத்தினர்.

## பசுமைத் திருகோணமலை

நிலக்கரி மின்உற்பத்தியின் மூலம் ஏற்படும் சுகாதார சுற்றுச்சூழல் கேடுகளை இலங்கையருக்கு நுரைச்சோலை அனல் மின்நிலையம் மிகத் தெளிவாகக் காட்டியிருந்தது. இருந்தபோதும் இன்னொரு அனல் மின்நிலையத்தை நிறுவ இலங்கை அரசாங்கம் தயங்கவில்லை. போரினால் பாதிக்கப்பட்டு தங்கள் சொந்த இடங்களுக்கு மீளக் காத்திருந்த மக்களுக்கு அவர்களின் நிலங்கள் அனல் மின்நிலையத்துக்காகக் கையகப்படுத்தப்பட்டமை பாரிய இடியாக இறங்கியது. ஆனாலும் இம்மக்களின் போராட்டம் வெறுமனே சம்பூர் மக்களின் போராட்டமாகவே இருந்தது. இதை திருகோணமலைக்கு விரிவுபடுத்தும் பணியை பசுமைத் திருகோணமலை அமைப்பு முன்னெடுத்தது. இவ் அமைப்பு திருகோணமலை




Image Source : www.unocha.org

மக்களிடையே பாரிய விழிப்புணர்வை ஏற்படுத்தியதனூடு மக்கள் ஆதரவையும் வென்றெடுத்தது. இது இன, மத, மொழி கடந்து அனல் மின்நிலையத்துக்கு எதிரான மனநிலையைக் கட்டமைத்தது.

இப்போராட்டத்திற்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றிகளில் இது முதன்மையானது. குறிப்பாக திருகோணமலை போன்ற மூவின மக்களும் வாழும் பகுதியில் அனைத்துத் தரப்பினரினதும் ஆதரவைப் பெறுவது இலகுவானதல்ல.

அனல் மின்நிலையம் எத்தகைய சூழலியல் மற்றும் சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை சம்பூர் மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக நுரைச்சோலைக்கு ஒரு தொகுதி சம்பூர் மக்களைப் பசுமைத் திருகோணமலை அழைத்துச் சென்றது. சம்பூரைச் சேர்ந்த 36 பேர் இவ்வாறு களவிஜயம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அனல் மின்நிலையத்தின் பல்பரிமாணப் பாதிப்புகளை மிகவும் தெளிவாக விளங்கிக் கொள்ள இப்பயணம் பெரிதும் உதவியது. சம்பூரில் அனல் மின்நிலையம் ஒன்றை ஏன் அமைக்கக் கூடாது என்பது தொடர்பில் இவ்வமைப்பினர் திருகோணமலைக்கு வெளியேயும் விழிப்புணர்வுக் கூட்டங்களை ஒழுங்கு செய்தனர். இதனை தேசிய கவனம் பெற வைத்த பணியை பசுமைத் திருகோணமலை அமைப்பே செய்தது.

பசுமைத் திருகோணமலையினருக்கு ஆதரவாக கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு பல்வேறு கூட்டங்கள், போராட்டங்கள், பேரணிகள், துண்டுப்பிரசுர நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொண்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்த பல

அமைப்புகள் இந்த முயற்சிக்குத் துணை நின்றன. குறிப்பாக தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், தேசிய கலை இலக்கியப் பேரவை, சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம், திருகோணமலை மாவட்டப் பெண்கள் வலையமைப்பு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மூதூரிலும் தோப்பூரிலும் இந்த முயற்சிக்கு ஆதரவாக மூதூர் பசுமைக்குழுவும் உலமா சபையும் போராட்டங்களை ஒழுங்குபடுத்தியது. மூதூர் பிரதேசப் பெண்கள் வலையமைப்பு அனல் மின்நிலையத்துக்கு எதிரான கையெழுத்து இயக்கம் ஒன்றை நடாத்தி 607 பேரின் கையெழுத்துகளுடன் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தது.

இவ்வாறு பொதுமக்கள், அமைப்புகளின் ஆதரவு இருந்தபோதும் அரசியல் மட்டத்தில் இதற்கான ஆதரவு அவர்களுக்குக் கிடைக்கவில்லை. குறித்த விடயம் தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் மௌனம் சாதித்தன. தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் தலைவர்கள், பல தடவைகள் இந்திய விருப்பங்களுக்கு முரணாகச் செல்வது நல்லதல்ல என்று பசுமைத் திருகோணமலை அமைப்பினருக்கு அறிவுரையும் வழங்கினர். அரசியற் கட்சிகளில் இருந்த தனிநபர்களின் ஆதரவு இந்த முயற்சிக்குக் கிடைத்ததேயன்றி அரசியற் கட்சியாக எந்தவொரு பாராளுமன்றக் கட்சியினதும் ஆதரவு கிட்டவில்லை. மக்கள் விடுதலை முன்னணி மட்டும் கிழக்கின் மக்கள் குரல் என்ற அமைப்பை நிறுவி அதனூடாக ஆதரவு வழங்கியது.

சம்பூர் அனல் மின்நிலையத்திற்கு எதிரான போராட்டம் தேசிய கவனம் பெறத் தொடங்கியது முதல் அது முக்கிய பேசுபொருளானது. இலங்கையின் பல பாகங்களில் இருந்து இதற்கான ஆதரவுக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. நுரைச்சோலையில் செய்ததைப் போல மக்களின் கோரிக்கைகளை செவி சாய்க்காது சம்பூரில் அனல் மின்நிலையம் அமைப்பது சிரமம் என்பது இலங்கை அரசாங்கத்திற்குப் புரிந்தது. ஆனாலும் இந்தியத் தரப்பில் இருந்து இத்திட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்துமாறு அரசுக்கு அழுத்தங்கள் வழங்கப்படுவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

## சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு

சம்பூரில் அனல் மின்நிலையமொன்றை அமைப்பதில் சுற்றுச்சூழல் ரீதியாகச் சிக்கல்கள் இல்லை என்பதையே அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சொல்கிறது. தாக்க மதிப்பீட்டு காற்று மாசுபாடு பகுப்பாய்வு, உங்களிடம் போதுமான உயரமான புகைபோக்கி இருந்தால், சிக்கல்கள் மறைந்துவிடும் என்று கருதுகியது. இது முற்றிலும் தவறான அனுமானம். இந்தத் திட்டத்தால் வெளியேற்றப்படும் பெரும்பாலான மாசுகள், காற்றின் வடிவங்கள் மற்றும் நமது கடல் மண்டலத்தின் காரணமாக நாட்டிற்குள்ளேயே இறங்கும். இது மிகப் பாரிய விளைவுகளை நாடு முழுவதற்கும் ஏற்படுத்தும்.

இந்த அறிக்கையின் இன்னொரு முக்கிய பிரச்சினை, நிலக்கரி மின் உற்பத்தியின் முக்கிய மாசுபாடுகளை இந்த மதிப்பீட்டு அறிக்கை குறிப்பிடவில்லை. கனரக உலோகங்கள் மற்றும் பாதரசம் ஆகியவை நிலக்கரியின் முக்கிய மாசுபாடுகளாகும். இவை இவ்வறிக்கையில் சாத்தியமான சுற்றுச்சூழல் சவால்களாக கூட அடையாளம் காணப்படவில்லை. இது உலகளாவிய நடைமுறைகளுக்கு முரணானது. உண்மையில், சீனா உட்பட பெரும்பாலான நாடுகளில் பாதரச மாசுபாடு பெரிதும் கட்டுப்படுத்தப்படுகிறது. சம்பூர் மின்நிலைய வடிவமைப்பில் வெளியாகும் பாதரசத்தில் ஒரு பகுதி காற்றில் வெளியிடப்படும் (காலப்போக்கில் அது கடல் மற்றும் நிலத்தில் படியும்). மறுபகுதி நீரிலும், கடலிலும் வெளியிடப்படும்.

பாதரசம் மிகவும் தீங்கு விளைவிக்கும் நியூரோடாக்சின் ஆகும். இது வளரும் கருவைத் தாக்குகிறது. அத்துடன் மூளை, நுரையீரல்

மற்றும் கண் பார்வையைத் தாக்குகிறது. இது மெதுவாக கடல் இனங்களில் குவிந்து, பெரிய மீன் இனங்களுக்குச் சென்று, மனித உணவுச் சங்கிலியில் நுழைகிறது. எங்களின் மிகப் பெரிய மீன்வளத்தை பாதரசத்துடன் ஏன் விஷமாக்க விரும்புகிறோம் என்று கேள்வி எழுப்பப்பட வேண்டும். பாதரச உமிழ்வைக் குறைக்க மின் உற்பத்தி நிலையங்கள் எந்தத் தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த மறுப்பதும் அதிர்ச்சியளிக்கிறது.

மற்றொரு பிரச்சினை, நிலக்கரியில் இருக்கும் கன உலோகங்கள், பின்னர் சாம்பலில் உறைகின்றது. பறக்கும் சாம்பலின் ஒரு பகுதி, சுமார் 2%, காற்றில் வெளியிடப்படுவதோடு பெரும்பாலானவை உள்நாட்டில் தேங்கும். கன உலோகங்களால் ஏற்கனவே விவசாயிகளின் சிறுநீரக ஆரோக்கியம் பாதிக்கப்பட்டுள்ள நாட்டில் இது கவனத்தில் கொள்ளப்படவில்லை. நுரைச்சோலையில் இப் பிரச்சினை எவ்வாறான பொது சுகாதார நெருக்கடியை உருவாக்கியுள்ளது என்பதைத் தெரிந்த பிறகும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு இவ்விடயத்தைப் புறந்தள்ளியுள்ளது.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள காற்று மாசுபாடு தொடர்பில் விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட முனைவர் லரீஃப் ஜுபைர் தனது கட்டுரையில் காற்று மாசுபாடு தொடர்பான மாதிரிகள் உருவாக்கப்பட்ட விதம் தொடர்பில் சில முக்கிய விஷயங்களை எடுத்துரைத்துள்ளார். அடிப்படையான சில பிழைகளை அவர் முன்னிலைப்படுத்துகிறார். பல உள்ளூர்த் தரவுத் தொகுப்புகள் வடகிழக்குத் திசையைத் தெளிவாகக் காட்டும்போது, தென்கிழக்கில் இருந்து காற்று வருகிறது என்று கூறி, வடகிழக்குப் பருவமழைக் காற்றின் திசையை தவறாகக் காட்டுவது மிகவும் அதிர்ச்சியளிக்கிறது. முட்டாள்தனத்தால் யாரும் பருவ மழையை வடகிழக்கு பருவமழை என்று அழைக்கவில்லை.

காற்றுத் திசைக்குச் செங்குத்தாக அல்லது எதிர் திசையில் மாசுபடுத்திகள் பயணிப்பதைக் காட்டும் படங்கள், அறிக்கையிலிருந்து எழும் மற்றொரு சிக்கல் ஆகும். பள்ளி மாணவர்களால் கூட அடையாளம் காணக்கூடிய இத்தகைய



Image Source : archive.roar.media

பிழைகள் எவ்வாறு ஒப்புதல் பெற்றன என்பது ஒரு பொருத்தமான கேள்வி. இது, குறித்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டுச் செயல்முறையின் தீவிர நம்பகத்தன்மையைச் சந்தேகிக்கிறது.

ஜுபைர் எழுப்பிய மற்றொரு பிரச்சினை என்னவென்றால், மாசுபடுத்திகளின் சாத்தியமான தாக்கங்கள், குறிப்பாக வளிமண்டலத்தில் உள்ள துகள்கள் மற்றும் மேக ஒடுக்கம், மழைப்பொழிவு மற்றும் சூரிய கதிர்வீச்சு, குறிப்பாக கிழக்கில் ஏற்படும் பாதிப்பு

*ஆகியவற்றின் சாத்தியமான தாக்கங்கள் பற்றிய புரிதல் மற்றும் பகுப்பாய்வு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் இல்லை. வடகிழக்கு பருவமழையின் இத்தகைய இடையூறு (இலங்கையில் அதிக மழைப் பொழிவை வழங்குகிறது) நாடு முழுவதும் குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல் தாக்கங்களை உருவாக்கும். இவை எதுவும் குறித்த அறிக்கையில் விவாதிக்கப்படவில்லை.*

*அனல் மின்நிலையம் அமையவுள்ள பகுதியில் சமூகங்கள் அல்லது குடியேற்றங்கள் இல்லை என்றும் கைவிடப்பட்ட சில தொட்டிகள் மற்றும் கட்டிடங்கள் மட்டுமே உள்ளன என்றும் இவ்வறிக்கை குறிப்பிடுகிறது. இது உயர் பாதுகாப்பு வலயமாக இருந்ததால், இவ்வாய்வு செய்யப்பட்ட நேரத்தில் இது உண்மையாக இருந்தது. ஆனால் **2015** மார்ச் முதல் மக்கள் திரும்பிச் சென்று மீள்குடியேறியுள்ளனர். இரண்டு பள்ளிகள், பல வீடுகள், நிலக்கரிக் கிடங்குக்கு அடுத்ததாக ஒரு மருத்துவ மையம், சாம்பல் சேமிப்பு பகுதி, ஒரு தொட்டி ஆகியன உள்ளன. பழைய இந்து மயானத்தின் வழியாக நீர் வெளியேறும் பாதை கடந்து செல்கிறது. மற்றும் கொட்டியார விரிகுடா இப்போது இரண்டு செழிப்பான பெரிய மீன்பிடி வாடிகளையும் சில சிறிய அளவிலான மீன்பிடி நடவடிக்கைகளையும் கொண்டுள்ளது. தாக்க மதிப்பீட்டை மேற்கொண்ட குழுவால் நேர்காணல் செய்யப்பட்டதாகக் கூறப்படும் நபர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் அவர்கள் இல்லாத முகவரிகளில் இருந்து வந்ததாகத் தெரிகிறது என்று தாக்க மதிப்பீடு குறித்த ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.*

*குறித்த அனல் மின்நிலையம் இயங்குவதற்கு நீர் தேவை. இந்நிலையம் வருடம் முழுவதும் தொடர்ச்சியாக இயங்கினால், **365** நாட்களுக்கும் தொடர்ந்தால், திட்டத்திற்கான மொத்த நீர்த் தேவை ரந்தெனிகல நீர்த்தேக்கத்தின் மொத்த கொள்ளளவிற்குச் சமமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*அனல் மின்நிலையம் கொட்டியார விரிகுடாவில் இருந்து நாளொன்றுக்கு **2.2** பில்லியன் லிட்டர் தண்ணீரை வெளியேற்றுகிறது. அத்தகைய பாரிய நீர் வெளியேற்றத்தால் நுண்ணுயிரிகள், மீன் முட்டைகள் மற்றும் ஏனைய கடலுயிர்கள் பாதிக்கப்படும்.*

*சுடுநீரை மீண்டும் கடலுக்குள் வெளியேற்றுவது பற்றிய போதுமான பகுப்பாய்வை இவ்வறிக்கை வழங்கவில்லை. தாக்கமதிப்பீட்டு அறிக்கையின்படி, சம்பூர் மின் உற்பத்தி நிலையம் **2.2** பில்லியன் லிட்டர் தண்ணீரை அண்ணளவாக கடலில் வெளியேற்றுகிறது. முதலில், இது ஷெல் விரிகுடாவிற்கு (கிழக்கிலிருந்து கொட்டியார விரிகுடாவிற்கு) வெளியேற்றப்பட வேண்டும். இது ஒரு முக்கியமான பல்லுயிர் இருப்பிடம். இலங்கையில் ராட்சத மட்டிகளின் தாயகமாக இருக்கும் ஒரே இடமுமாகும். தேசிய நீர்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் (NARA) கூற்றுப்படி, இன்னும் பல இனங்களும் இப்பகுதியில் உள்ளன. ஆனால் அவை இன்னமும் மரபணு ரீதியாக அடையாளம் காணப்படவில்லை. தாக்க மதிப்பீடானது இவ்வாறு சுடுநீரை கடலில் வெளியேற்ற வழங்கும் ஒப்புதலின் போது, கடல் நீரை வெளியேற்றுவதை, முதலில் எதிர்பார்த்ததை விட, கிழக்குப் பெருங்கடலில் அதிக ஆழத்தில் செய்யப் பரிந்துரைத்தது.*

*சூடான நீர் வெளியேற்றத்தின் சில சவால்களுக்கு இது பதிலளிக்கும் அதே வேளையில், இது இன்னும் குறிப்பிடத்தக்க கேள்விகளையும் எழுப்புகிறது. முதலாவதாக, புதிய இடத்தின் பல்லுயிர்த்தன்மை என்ன, அது என்ன தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது ஆராயப்படவில்லை. இரண்டாவது, மிக முக்கியமான வெப்பச் சிதறல் பகுப்பாய்வு சரியாக மேற்கொள்ளப்படவில்லை.*

*இந்தச் சூடாக்கப்பட்ட நீர் மீண்டும் ஷெல் விரிகுடாவில் வெளியேற்றப்பட்டு, **156** வகையான பவளப் பாறைவாழ் மீன்களைக்*

கொண்ட 56 வகையான கடின பவளப்பாறைகள் உட்பட கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளில் அழிவை ஏற்படுத்துகிறது. சம்பூர் வெப்பமண்டல உலர் கலப்பு பசுமையான காடுகள் வெப்பமண்டல முட் படுக்கைகள், பாறைகள் சார்ந்த காடுகள், சதுப்பு நிலங்கள், குளங்கள், கைவிடப்பட்ட நெல் வயல்களை உள்ளடக்கிய இயற்கையான வாழ்விடங்களின் வளமான வரிசை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்த வாழ்விடங்களில் பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் உள்ளன. அவை சம்பூர் மக்களுக்கான சுற்றுச்சூழல் அமைப்புச் சேவைகளை வளப்படுத்துகின்றன. இப்பகுதியில் 272 விலங்கினங்கள் காணப்படுகின்றன. அவற்றில் 14 உள்ளூர் மற்றும் 2 அழியக்கூடிய தேசிய சிவப்புப் பட்டியலில் உள்ள விலங்குகளும் அடங்கும்.

இத்திட்டடமானது இறுதியில் கொட்டியார விரிகுடாவின் ஒட்டுமொத்த சூழலியலுக்கும் அருகில் உள்ள கடலுக்கும் ஆபத்தை விளைவிக்கும். நாட்டின் மிகவும் உயிரியல் ரீதியாக வளமான தளங்களில் ஒன்றின் ஒட்டுமொத்த சூழலியலையும் அழிக்கக்கூடிய திட்டத்திற்கு மத்திய சுற்றுசூழல் அதிகாரசபை எவ்வாறு ஒப்புதல் அளித்தது என்பது கேள்விக்குரியது.

வண்டல் போக்குவரத்து பகுப்பாய்விற்கு (Sedimentation Transportation Analysis), தாக்க மதிப்பீடானது நீரோட்டங்களின் 2 வார பகுப்பாய்வை மட்டுமே பயன்படுத்தியது. இது முற்றிலும் போதுமானதாக இல்லை. நீரோட்டங்கள் மற்றும் அடிமட்ட வண்டல் போக்குவரத்தை மதிப்பிடுவதற்கு ஆய்வு நேரம் போதுமானதாக இல்லை. பருவமழை காரணமாக நீரோட்டங்கள் மாறுகின்றன. மேலும் வளைகுடாவில் உள்ள அலைகள் மற்றும் உயர் அதிர்வெண் அலைகள் சுழற்சியில் மாறுபடும். எனவே இவற்றைப் புறந்தள்ளிய பகுப்பாய்வு போதுமானதோ ஏற்கத்தக்கதோ அல்ல.

அனல் மின்நிலையம் இயங்குவதற்கு நிலக்கரி அவசியம். அந் நிலக்கரி குறித்த மின்நிலையத்திற்கு அருகாமையில் இறக்கப்பட வேண்டும். ஆனால் நிலக்கரி இறக்கும் இறங்குதுறை குறித்த எந்தக் குறிப்பையும் தாக்க மதிப்பீடு தவிர்த்து, அது இந்தத் திட்டத்தின் ஒரு பகுதி அல்ல என்பதைக் குறிப்பிடுகிறது. இந்தப் புறக்கணிப்பு சரியல்ல. இறங்குதுறை இல்லாமல் திட்டம் முன்னேற முடியாது. கொட்டியார விரிகுடாவில் இறங்குதுறைக்காக பகுதி ஒன்றை அடையாளங் காண்பது சிக்கலானது. ஏனெனில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, மண் அரிப்பு தவிர்க்க முடியாத நிலையில் இறங்குதுறை ஒன்றை அமைக்க இயலாது. அவ்வாறு அமைத்தாலும் மழைக்காலத்தில் கப்பல்கள் நிறுத்தும் திறன் ஒரு பெரிய பிரச்சினை. மழைக்காலத்தில் இது சாத்தியமில்லை என்று கிராம மீனவர்கள் உறுதியாகக் கூறுவதாகவும் இதுவே தேசிய நீர்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் நிபுணர்களின் கருத்து என்றும் இது குறித்த பகுப்பாய்வு அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

## நிறைவுக் குறிப்புகள்

இவ்வளவு ஆபத்துகள் நிறைந்த ஒரு திட்டத்திற்கு எதிராக பசுமைத் திருகோணமலை அமைப்பினரோடு இணைந்து 'Environmental Foundation Limited' என்ற அமைப்பு உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றைத் தாக்கல் செய்தது. சுகாதார அடிப்படையில் நிலக்கரி பொருத்தமற்றது. நுரைச்சோலையில் ஏற்கனவே உணரப்பட்ட தாக்கங்களின் அடிப்படையில் இத்திட்டம் பாதகமானது. நிலக்கரியோடு ஒப்பிடுகையில் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவின் சிறந்த பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பொருத்தம், உத்தேச நிலக்கரி மின் நிலையத்தால் சுகாதாரத்தில் ஏற்படும் பாதகமான பாதிப்புகள், அதனால் ஏற்படும்



Image Source : www.tamilguardian.com

சுற்றுச்சூழல் அழிவு போன்றவை மனுவில் கவனம் செலுத்தப்பட்டன. அதேவேளை இத்திட்டத்திற்கு எதிரான பொதுக்கருத்து ஒன்று இலங்கையர்களிடத்தில் உருவாகியிருந்தன.

2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் 13 ஆம் திகதி, இந்த விடயம் உயர் நீதிமன்றில் கௌரவ பிரதம நீதியரசர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அரசாங்கமானது உத்தேச நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் சம்பூரில் ஆரம்பிக்கப்பட மாட்டாது என்பதை உறுதியளித்தது. இதையடுத்து வழக்கு முடித்து வைக்கப்பட்டது. இலங்கையின் சுற்றுச்சூழல் போராட்டங்களின் வரலாற்றில் குறித்த தீர்ப்பும் அரசாங்கத்தின் முடிவும் முக்கியமான ஒரு புள்ளி என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இத்திட்டம் நிறுத்தப்பட்டாலும் கூட இப்பகுதிகளில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை. இன்னும் இப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகவே உள்ளது. அதேவேளை அனல் மின்நிலையத் திட்டத்தைக் கொணர்ந்த இந்திய நிறுவனமான தேசிய அனல் மின் கூட்டுத்தாபனம், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அதே பகுதியில் 100 MW அளவிலான சூரிய மின்கல உற்பத்தியை மேற்கொள்வதற்காக இலங்கை மின்சார சபையுடன் ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. ஆனால் அதைத் தொடர்ந்து இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இத்திட்டத்தைக் கிடப்பில் போட்டது. இவ்வாண்டு யூலை மாதம் மீண்டும் இப்பகுதியில் சூரிய மின்கலங்களை நிறுவும் திட்டம் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிகமாக 2006 ஆம் ஆண்டு உடன்பட்டபடியே இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மின்சார இணைப்புகளை உருவாக்கும் முயற்சிகள் தொடங்கியுள்ளன.

இலங்கையில் உற்பத்தியாகும் மின்சாரம் யாருக்கானது என்ற வினாவை இங்கு எழுப்ப வேண்டும். இலங்கையின் வடக்கு - கிழக்கில் பல புதுப்பிக்கத்தக்க சக்தித் திட்டங்களை இந்தியா மேற்கொள்கிறது. இந்தப் பின்னணியிலேயே இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மின்சார இணைப்புத் திட்டங்களை நோக்க வேண்டும். எது எப்படியோ தங்கள் சொந்த நிலத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட சம்பூர் மக்கள் இன்னமும் அகதிகளாவே இருக்கிறார்கள். அவர்களது வாழிடத்தில் நிலக்கரிக்குப் பதில் சூரிய சக்தி.

ஈழம் சார்ந்தும் ஈழப்பிரச்சினை சார்ந்தும் ஆங்கிலத்திலும் தமிழல்லாத பிற மொழிகளிலும் பல்வேறு நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. 2009 இற்கு பின்னர் வெளியாகிய அபுனைவு நூல்களை அவற்றின் சமூக – அரசியல் முக்கியத்துவம் கருதி தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கோடு 'திக்குகள் எட்டும்' என்ற தொடர் வெளிவருகின்றது. இத்தொடரின் மூலம் தமிழ் சூழலுக்கு தமிழல்லாத பரப்பில் நடைபெறும் ஈழம் சார்ந்த வெளிப்பாடுகள் அறிமுகமாகும்.



# இன அழிப்பிற்கெதிரான ஐ.நா சாசனத்தினை முன்வைத்து 'தமிழினப் படுகொலைகள் : 1956 – 2008' நூலின் ஆவணப் பெறுமதியும் உள்ளடக்கமும்

சிவராஜா ரூபன்

சிவராஜா ரூபன் அவர்கள் 1993 ஆம் ஆண்டு சிறுவனாக இருக்கும்போது ஈழத்திலிருந்து நோர்வேக்குப் புலம்பெயர்ந்தார். தற்போது கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு, நாடகம் மற்றும் ஊடகம் ஆகிய தளங்களில் இவர் செயற்பட்டு வருவதுடன் அரசியல், சமூகம், கலை, இலக்கியம் சார்ந்தும் எழுதி வருகிறார். ஈழம், தமிழகம், மற்றும் புலம்பெயர் ஊடகங்கள், இதழ்களில் இவரது எழுத்துக்கள் தொடர்ந்து வெளிவருகின்றன.

'எதிர்ப்பரசியல்', 'அதிகார நலனும் அரசியல் நகர்வும்' (உலக அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு), 'எழுதிக் கடக்கின்ற தூரம்' (கவிதைத் தொகுப்பு), 'கலைப்பேச்சு' (திரை நூல் அரங்கு) என்பன இவரது படைப்புகளாகும்.

பௌத்த சிங்கள பேரினவாத அரச இயந்திரத்தின் தமிழர் மீதான திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை நேரடிச் சாட்சியங்களுடனும், நேர்த்தியான தரவுகளுடனும் ஆவணப்படுத்தி, பதிவு செய்த நூலாக 'தமிழினப் படுகொலைகள்: 1956 - 2008' ஆவணம் 2010 ஆம் ஆண்டு வெளிவந்தது. வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் மையம் (North East Secretariat On Human Rights - NESOHR) இந்நூலினை உருவாக்கியுள்ளது. தமிழகத்தில் 'மனித உரிமைகள் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு' தளங்களில் இயங்குகின்ற 'மனிதம்' எனும் அமைப்பு இந்நூலினை வெளியீடு செய்திருக்கின்றது.

ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் தனித்தனிப் பதிப்பாக இது உருவாக்கப்பட்டுள்ளமை பயனுள்ளது. இதன் ஆங்கிலப் பதிப்பு, அமெரிக்காவின் பழமை வாய்ந்ததும் புகழ்பெற்ற நூலகமுமான 'அமெரிக்க கொங்கிரஸ்' நூலகத்தில் (Library of Congress) வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்காதாகும் (http://lccn.loc.gov/20103185).

**தமிழகத்தில் 'மனித உரிமைகள் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு' தளங்களில் இயங்குகின்ற 'மனிதம்' எனும் அமைப்பு இந்நூலினை வெளியீடு செய்திருக்கின்றது.**

2009 இறுதிப் போரின் போதான இன அழிப்பு, அதன் பின்னரான சூழ்நிலைகளின் பின்னணியிலும் இந்நூலுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் உள்ளது. இனப்படுகொலை மட்டும் இன அழிப்பு அல்ல. இன அழிப்பு என்பது, ஒரு இனத்தை பகுதியாகவோ,

வேருடனோ அழித்தொழிக்கும் திட்டமிட்ட நோக்கம் கொண்டது. 1948 இல் இன அழிப்பிற்கு (Genocide) எதிரான சாசனம் ஐக்கிய நாடுகள் பேரவையினால் உருவாக்கப்பட்டது.

## இன அழிப்பிற்கெதிரான ஐ.நா சாசனம்

இன அழிப்பு நடவடிக்கையின் கூறுகளை ஐ.நா சாசனம் பின்வருமாறு வரையறை செய்கின்றது:

- ஒரு தேசிய இனத்தின் அல்லது குழுமத்தின் உறுப்பினர்களைக் கொல்வது.
- ஒரு இனத்திற்கு அல்லது குழுமத்திற்கு வலிந்தும் திட்டுமிட்டும் பாரிய உடல் - உள ரீதியான இன்னல்களை விளைவிப்பது.
- சொந்த வாழ்விடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றுவது.
- இனத்தின் மத்தியில் குழந்தைகள் பிறக்காத வகையில் (இன விருத்தியைத் தடுக்கும் வகையில்) கொடுமைகளைப் புரிதல்.
- பண்பாட்டு வாழ்வியலின் தனித்துவங்களை, அடையாளங்களை அழித்தல்.

இன அழிப்பு நடவடிக்கைகளாக கருதப்படுபவை எவை என்பதை எடுத்துரைக்கும் சட்ட அடிப்படையிலான விளக்கங்களாக மேற்கூறப்பட்டவை உள்ளன.

உலக வரலாற்றுப் பட்டறிவினூடு நோக்குகையில் அரசுகளும் அரசுகளால் இயக்கப்படுகின்ற சக்திகளுமே இன அழிப்பினை அரங்கேற்றியிருக்கின்றன, அரங்கேற்றுகின்றன. முதலாம் உலகப்போரின் போது நடந்தேறிய இனப் படுகொலைகளின் பாதிப்பே இன அழிப்பிற்கெதிரான அனைத்துலகச் சட்ட உருவாக்கத்திற்குரிய தூண்டுதலாக இருந்துள்ளது. போலந்து நாட்டைச் சேர்ந்த சட்டவாளர் Raphael Lemkin என்பவராலேயே இன அழிப்பிற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற சட்ட அலோசனை 1933 ஆம்




Image Source : telibrary.com

ஆண்டு முன்வைக்கப்பட்டது. இவர் யூத இனத்தைச் சேர்ந்தவர். ஆனபோதும், 2 ஆம் உலகப் போரிற்கு பிற்பட்ட காலத்திலேயே ஐக்கிய நாடுகள் அவையில் இன அழிப்பிற்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஹிட்லரின் நாசிப் படைகள், யூதர்களைத் தேடித் தேடி அழித்த கொடுமைகளின் பின்னரே இன அழிப்பிற்கு எதிரான சாசனம் சட்ட அமுலாக்கம் கண்டது.

## தண்டனை பெற்ற நாடுகள்

1990 களிலேயே முதன் முதலாக இன அழிப்பிற்கெதிரான சட்டமூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. Rwanda இல் நடந்தேறிய இன அழிப்புக்கு பொறுப்பானவர்கள் அனைத்துலக குற்றவியல்



Some content of original book added here

Massacres of Tamils
1956 - 2008

NESOHR
North East Secretariat On Human Rights
(www.nesohr.org)

Manitham Publishers
(www.manitham.net)

© Cover Design :
Nandha Kandasamy, Canada

Publisher Details:

Manitham Publishers
Manitham-Human Rights Organisation
274-GC, Avvai Shanmugam Salai,
Royapettah, Chennai – 600 014
Tamilnadu, India

Mobile : +91-9003027712 / +91-9443322543
Landline : +91-44-28133969
Fax : +91-44-28133968

Web : www.manitham.net
Email: manitham@gmail.com

First Edition in English – 2009

ISBN ---

Price (Excluding Postage) :

| | India Rs. | Europe (•) | All other countries (US $) |
|---|---|---|---|
| Soft-bound | 399 | 10 | 15 |
| Hard-bound | 499 | 15 | 20 |

© North East Secretariat On Human Rights (NESOHR)

All rights for Reprints or further Editions of the contents of this book is reserved except for reproduction in parts, for non-commercial purposes, without modification and with due acknowledgement to NESOHR.

**Image Source : issuu.com/manitham**

நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்பட்டனர். ஹிட்லரின் யூத இன அழிப்பிற்கு அடுத்ததாக, பாரிய இன அழிப்பாக 1994 ஆம் ஆண்டு நடந்தேறிய Rwanda இன அழிப்பு குறிப்பிடப்படுகின்றது. 100 நாட்களில் 800,000 வரையான மக்கள் அழித்தொழிக்கப்பட்டனர்.

கூற்டு (Hutu) இனவாதிகளால் றுற்சி (Tutis) இன மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட பாரிய இன அழிப்புக் கொடூரம் இது. ஐ.நா வின் அமைதிப்படைகள் 1993 ஆம் ஆண்டிலிருந்து Rwanda இல் நிலைகொண்டிருந்தன. ஐ.நா படைகளின் பிரசன்னம் இருந்த காலப் பகுதியிலேயே இன அழிப்பு நடந்தேறியது. பிரான்ஸ் நாடும் Rwanda இன அழிப்புக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உடந்தையாக இருந்ததாக பிந்திய காலப்பகுதியில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. பில் கிளின்ரன் தலைமையிலான அன்றைய அமெரிக்க அரசாங்கமும் பாராமுகமாய் இருந்தது.

கொசவோ, போஸ்னியா, குறுவாட்சியா, ஸ்லோவேனியா போன்ற முந்நாள் யூகொஸ்லாவியா குடியரசு நாடுகள் மீது நடத்தப்பட்ட இன அழிப்பு நடடிக்கைகளுக்காக சேர்பிய அரசுத் தலைவர் ஸ்லோவடான் மிலோசவிச் மீது இன அழிப்பு போர்க் குற்றம் சுமத்தப்பட்டு, 2001 ஆம் ஆண்டு அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டமை கவனிப்பிற்குரியது.

குர்தீஸ் மக்கள் மீதான சதாம் உசேனின் இன அழிப்பு, 1975 – 1979 காலப்பகுதியில் கம்போடியாவில் நடந்தேறிய இன அழிப்பு,

சூடானின் டார்பர் பிரதேசம், கிழக்கு கொங்கோ மற்றும் இன்றைய சமகாலத்தில் பலஸ்தீனம் என்பன இன அழிப்பினை எதிர்கொண்டுள்ள நாடுகளாகும். சூடானின் டார்பர் பிரதேச மக்கள் மீதான இன அழிப்பு மற்றும் போர்க் குற்றங்களுக்காக சூடானின் அரசுத் தலைவர் ஓமர் ஹசான் அல் பசிர் மீது அனைத்துலக குற்றவியல் நீதி மன்றம் (International Criminal Court) 2009 ஆம் ஆண்டு கைது ஆணை பிறப்பித்தது.

காசா மீதான இஸ்ரேலின் இன அழிப்புப் போர் நடவடிக்கைகளுக்கான எதிர்வினைகளாக சட்ட ரீதியானதும் அரசியல் ரீதியானதுமான இரண்டு முக்கிய நிகழ்வுகள் சர்வதேச மட்டத்தில் இந்த ஆண்டு (2024) நிகழ்ந்து வருகின்றன. ஒன்று, சர்வதேச நீதிமன்றத்தில் (IJC) 2024 ஜனவரி மாதம் தென் ஆபிரிக்கா இஸ்ரேல் மீது இன அழிப்பு, போர்க்குற்ற வழக்குத் தொடுத்தமையும் சர்வதேச நீதிமன்றம் அவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டமையும். இரண்டாவது, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) தலைமை வழக்கறிஞர் காரீம் கான் (Karim Khan) இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் Yoav Galant மற்றும் ஹமாஸ் இயக்கத்தின் மூன்று தலைவர்கள் மீது கைது ஆணை பிறப்பிக்கக் கோரி 2024 மே மாத இறுதியில் விண்ணப்பித்திருக்கின்றமையும். அதன் பொருள் கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதல்ல. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தலைமை வழக்கறிஞரின் இந்த விண்ணப்பத்தினை சர்வதேச நீதிமன்றத்தின் பிரத்தியேக ஆணைக்குழு விசாரணை மற்றும் பரிசீலனைக்கு உட்படுத்தி, மேற்சொன்ன நபர்கள் மீது கைது ஆணை பிறப்பிப்பதா இல்லையா என்ற தீர்மானத்தினை எடுக்கும் என்ற அளவிலேயே இந்நிகழ்வினைப் பார்க்கலாம். ஆனால் சர்வதேச நீதித்துறை சார்ந்த ஒரு அமைப்பு, அமெரிக்காவின் செல்லப்பிள்ளையும், சர்வதேசத் தீர்மானங்கள், அழுத்தங்கள் எதனையும் இதுவரை பல தசாப்தங்களாகப் பொருட்படுத்தாததுமான இஸ்ரேலின் உயர்மட்டத் தலைவர்கள் மீது கைது ஆணை பிறப்பிக்கக்கூடிய புறச்சூழல் எழுந்துள்ளது. இது போர்க் குற்றத்திற்கு எதிரான மிக முன்னுதாரணமான நகர்வு, மாற்றம் என்பதை மறுக்க முடியாது.

இராணுவ இயந்திர மேலாதிக்க அடக்குமுறைக்கு ஊடாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை முற்று முழுதாக நசுக்குவது பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் மூலோபாயமாக இருந்து வந்துள்ளது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைமைகள், இராணுவ அடக்குமுறையைக் கருவியாகக் கொண்ட மூலோபாயத்தையே கையாண்டன. 2009 இற்குப் பின்னர் போர் முடிவுக்கு வந்தபோதும், கட்டமைக்கப்பட்ட ரீதியில் தமிழர் தாயகம் முழுவதும் சிங்கள அரசினது மேலாதிக்கமும், இராணுவ ஆக்கிரமிப்பும், அரசியல் உரிமை மறுப்பும் தொடர்கின்றன.

## இன அழிப்பு - போர்க் குற்றம் - மனிதத்திற்கு எதிரான குற்றம்

ஐ.நா சாசனத்தில் இன அழிப்புக் குற்றங்களென எவை வரையறுக்கப்பட்டுள்ளனவோ - போர்க் குற்றங்களென எவை வரையறுக்கப்பட்டுள்ளனவோ - மனிதத்திற்கு எதிரான குற்றங்களென எவை வரையறுக்கப்பட்டுள்ளனவோ - இன அழிப்பின் கூறுகள் என எவை வரையறுக்கப்பட்டுள்ளனவோ அவை அனைத்தையும் சிறிலங்கா பேரினவாத அரச இயந்திரம் தமிழீழ மக்கள் மீது நிகழ்த்தியிருக்கின்றது.

தமிழர்களின் இருப்பைக் கேள்விக்கு உள்ளாக்குவதற்குரிய மூலோபாய திட்டங்களை வகுத்து, படிப்படியாக அவற்றை நடைமுறைப்படுத்தி வந்திருக்கின்றது. பாராளுமன்றப் பெரும்பான்மை மூலமாக தமிழரெதிர்ப்பு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சட்டங்களாக்கப்பட்டன. சட்டங்களின் துணையோடு இராணுவ இயந்திரம் தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்டு,



முள்ளிவாய்க்கால்

Image Source : www.tamilguardian.com

அடக்குமுறை படிப்படியாக கட்டவிழ்த்துவிடப்பட்டது.

**'வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம்'**

'வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம்' வடக்குக் கிழக்கில் நடந்தேறிய மனித உரிமை மீறல்களை உரிய தரவுகள், தகவல்கள், ஆதாரங்களுடன், நேரடிச் சாட்சியங்கள் மூலம் ஆவணப்படுத்தி உடனுக்குடன் அறிக்கையிடும் பணியினை முன்னெடுத்துவந்த அமைப்பாகும். 2004 ஆண்டு ஜுலை மாதம் இச் செயலகம் அமைக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்திலிருந்து, சிறிலங்கா பேரினவாத அரச படைகளினது தமிழ் மக்களுக்கெதிரான அரச பயங்கரவாத - இனப் படுகொலை நடவடிக்கைகளை ஆவணப்படுத்தி வெளியிட்டு வந்துள்ளது.

இந்நூலுக்குரிய தரவுகள், ஒளிப்படங்கள் என்பன வடக்கு - கிழக்கு புள்ளிவிபர மையத்திடமிருந்து பெறப்பட்டுள்ளன. 2009 இல் சிறிலங்கா அரசினால் நடாத்தப்பட்ட இன அழிப்பு வன்போரின் விளைவாக NESOHR இன் ஆவணங்கள் அனைத்தும் அழித்தொழிக்கப்பட்டன. ஆனபோதும் உருவாக்கப்பட்ட அறிக்கைகள் அவ்வப்போது உரிய முறையில் அதன் இணையத்தளத்தில் (www.nesohr.org) தரவேற்றப்பட்டமையால் அவை

**சிறிலங்கா அரசின் தமிழர்கள் மீதான இன அழிப்பின் பல்வேறு கூறுகள் வரலாற்றுப் பின்னணியோடு, உரிய ஆதாரங்களோடு, வரலாற்று நிகழ்வுகள் பற்றிய எடுத்துரைப்புகளோடு சொல்லப்பட்டிருக்கின்றன. மென்முறை தழுவிய அறப்போராட்டம் எவ்வாறான புறநிலையில் வன்முறை தழுவிய ஆயுதப் போராட்டமாக மாற்றப்பட்டது என்ற வரலாற்றுப் பின்னணி எடுத்துரைக்கப்படுள்ளது.**

பாதுகாக்கப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் உடனுக்குடன் இணையத்தளத்தில் ஏற்றப்படாது விடப்பட்டிருப்பின், முக்கிய ஆவணங்கள் இன்று வரலாற்றிலிருந்தே அழிக்கப்பட்டிருக்கும்.

### முள்ளிவாய்க்கால் : இன அழிப்பின் உச்சம்

2009 இல் சிறிலங்கா அரச படைகள், புதுமாத்தளனிலும் முள்ளிவாய்க்காலிலும் 5 மாதங்களில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்றழித்து, பாரிய இனப் படுகொலையை அரங்கேற்றின. வேதியல் ஆயுதங்கள் (Chemical Weapons), நச்சுக் குண்டுகள், கொத்தணிக் குண்டுகள் (Cluster bombs) என உலக நாடுகளால் தடைசெய்யப்பட்ட அனைத்து நாசகார ஆயுதங்களையும் பேரினவாத அரசு போரில் பயன்படுத்தியுள்ளது. மே 16, 17 ஆகிய இரு நாட்களிலும் நடாத்தப்பட்ட கடைசி நேர இனவெறித் தாக்குதல்களில் மட்டும் 40,000 உயிர்கள் பலியெடுக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் அவையை மேற்கோள் காட்டிய தகவல்கள் வெளிவந்தமை உலகறிந்ததே. அனைத்துலகப் போர் நெறிகளை மீறியதற்கான தடயங்களை, சாட்சியங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் அரசு மும்முரமாக ஈடுபட்டிருந்தது. ஆக்கிரமிப்பு வன்போர் முடிவடைந்து பல மாதங்கள் கடந்த பின்னர்கூட அனைத்துலகப் பிரதிநிதிகளோ, ஊடகங்களோ போர் நடைபெற்ற பகுதிகளுக்குள் அனுமதிக்கப்படவில்லை.

பிரித்தானியக் கொலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கைத் தீவு விடுபட்ட காலத்திலிருந்து தமிழர்களுக்கெதிரான சிங்கள மேலாதிக்கப் பிடி, படிப்படியாக இறுக்கமடைந்து வந்துள்ளது. தமிழ் மக்கள் மீதான பாரிய படுகொலைகள், நிலப்பறிப்பு, மொழியுரிமைப் பறிப்பு, அரசியல் உரிமை மறுப்பு, கல்வி - பண்பாட்டு அழிப்பு, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் என நீள்கிறது தமிழர் மீதான ஒடுக்குமுறை வரலாறு. இவற்றில் 2009 வரையான 60 ஆண்டு கால பின்கொலனித்துவ வரலாற்றில் எண்ணற்ற படுகொலைகளைத் திட்டமிட்ட முறையில் பேரினவாதம் நடாத்தியிருக்கின்றது.

நேரடிச் சாட்சியங்கள் - ஆதாரங்கள்

இந்நூலில் 1956 இல் இருந்து 2008 வரையான 52 ஆண்டு காலங்கள் சிறிலங்காவின் பௌத்த, சிங்கள, பெருந்தேசியவாத அரச இயந்திரத்தினால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இனப் படுகொலைகள் பற்றிய நேரடிச் சாட்சியங்கள் உட்பட்ட பல்வேறு ஆதாரங்களுடனான பதிவு முதன்மையாக இடம்பெற்றுள்ளது. கால வரிசையில் படுகொலைகள் கிரமமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பெயர் - வயது - சொந்த இடம் போன்ற விபரங்களோடு பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

அத்தோடு சிறிலங்கா அரசின் தமிழர்கள் மீதான இன அழிப்பின் பல்வேறு கூறுகள் வரலாற்றுப் பின்னணியோடு, உரிய ஆதாரங்களோடு,



Attack on satyagrahis



S.W.R.D. speaking about the Sinhala Only Act



Mob attacks in Colombo



The mob in action



Burning of Emroy



Chelvanayakam'ssatygraha

**தனிச் சிங்கள மொழி எதிர்ப்பின் போது இடம்பெற்ற சில நிகழ்வுகளின் தொகுப்பு**

Image source - www.ft.lk

வரலாற்று நிகழ்வுகள் பற்றிய எடுத்துரைப்புகளோடு சொல்லப்பட்டிருக்கின்றன. மென்முறை தழுவிய அறப்போராட்டம் எவ்வாறான புறநிலையில் வன்முறை தழுவிய ஆயுதப் போராட்டமாக மாற்றப்பட்டது என்ற வரலாற்றுப் பின்னணி எடுத்துரைக்கப்படுள்ளது.

நூலின் ஆரம்பத்தில், 1940 இல் அம்பாறை மாவட்டத்தில் அரச நிதியுதவியுடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் (State sponsored colonisation) நிறுவப்பட்டமை தொடர்பான குறிப்பு இடம்பெற்றுள்ளது. தென்னிலங்கையிலிருந்து (வெளி மாவட்டங்களிலிருந்து) சிங்கள மக்கள் எவ்வாறு தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்களில் குடியேற்றப்பட்டார்கள், சிறிலங்கா பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்புடன் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு எவ்வகையில் சிங்களக் குடியேற்றங்கள் விரிவுபடுத்தப்பட்டன போன்ற விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பாரம்பரிய நிலங்கள் எவ்வாறு திட்டமிட்ட முறையில் சூறையாடப்பட்டன என்ற வரலாறு நூலின் ஆரம்பப் பகுதியில் பதிவாகியுள்ளது.

கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்கள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் பெருமளவு விழுங்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருந்த அம்பாறை, திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பல பகுதிகளில் சிங்களவர்கள் பெரும்பான்மையாகியுள்ள நிலையும் ஏற்பட்டுள்ளது. இனப்படுகொலை பற்றிய பகுதி 'இங்கினியாகலை படுகொலையுடன்' தொடங்குகின்றது. இது 1956 ஜூன் 5 நடந்தேறிய படுகொலையாகும். அம்பாறையில் குடியேற்றப்பட்ட சிங்களக் காடையர்களால், இங்கினியாகல பிரதேசத்தில் கரும்புத் தொழிற்சாலையில் வேலை செய்த 150 வரையிலான தமிழ்த் தொழிலாளர்கள், கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டும், குற்றுயிராகத் துடித்தவர்கள் தீயிலிட்டு எரிக்கப்பட்டும் கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இதுவாகும்.

## சிங்களம் மட்டும்

இலங்கைத் தீவில் தங்கியிருந்த புகழ்பெற்ற ஆங்கில ஊடகவியலாளரான டாசி வித்தாச்சி அவர்கள் எழுதிய 'அவசர காலச் சட்டம் ஐம்பத்தெட்டு' என்ற நூலை ஆதாரமாகவும், அன்றைய காலப்பகுதியில் வெளிவந்த நாளேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடியொற்றியும் இங்கினியாகலைப் படுகொலை பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

'சிங்களம் மட்டும்' சட்டத்திற்கு எதிராக தமிழரசுக் கட்சி தலைமையில், அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்து நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வன்முறையைப் பிரயோகித்தமை, **1974** இல் யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைக் குழப்பும் சதியுடன் கட்டவிழ்த்துவிடப்பட்ட படுகொலை, **1977** இல் நாடு முழுவதும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் (திருகோணமலை, வவுனியா, பதுளை, இரத்தினபுரி), **1981** இல் தமிழ் மக்களின் கல்விச் சொத்தான யாழ் நூலக எரிப்பு, **1983** - கறுப்பு ஜூலை படுகொலைகள் என தமிழர் மீதான அழிப்பின் ஆரம்பம் முதல், அதன் தொடர்ச்சி எவ்வாறு சிறிலங்கா பேரினவாதிகளால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டதென்பதை இந்நூல் பதிவு செய்துள்ளது. இவை மட்டுமல்ல நிலப்பறிப்பையும் சிங்களக் குடியேற்றத்தையும் மூலநோக்காகக் கொண்டு, சிங்கள அரசினால் வழிநடத்தப்பட்ட படுகொலைகள் எண்ணிலடங்காதவை.

## நிறுவனமயப்படுத்தப்பட்ட அடக்குமுறை

தமிழர் தாயகக் கோட்பாட்டை (வடக்கும் கிழக்கும் இணைந்த தொடர்ச்சியுடைய நிலப்பரப்பைக் கொண்ட தமிழர் தாயகம்) உடைப்பதும், வடக்கு - கிழக்கு மக்கள் தம்மை ஒரு தேசமாக (Nation) அடையாளப்படுத்துவதை முறியடிப்பதுமே சிங்களத்தின் மூலோபாயம். நிர்வாகம் மற்றும் நில அமைவிடம் ஆகிய இருநிலைகளிலும் தமிழர் தாயகக் கோட்பாட்டை மழுங்கடிப்பதே இனவாதத்தின் இலக்கு!

பிரித்தானியர் இலங்கைத் தீவிலிருந்து வெளியேறிய (**1948** ஆம் ஆண்டு) தறுவாயிலிருந்தே, பௌத்த - சிங்கள இன மேலாதிக்கம், தமிழர் அழிப்பு என்ற பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு செயல் வடிவம் கொடுக்கத் தொடங்கியது. சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் மீதான அழிப்பினை மிக நுட்பமாகத் திட்டமிட்டு செயற்படுத்தி வந்துள்ளனர்.

**1949** இல் மலையகத் தமிழர் குடியுரிமைப் பறிப்பிலிருந்து இன்றைய முட்கம்பி வேலி வதைமுகாம்கள் வரை தொடர்கின்றது பௌத்த - சிங்கள இன மேலாதிக்கத்தின் தமிழின அழிப்பு. **1956** இல் 'சிங்களம் மட்டும்' (Sinhala Only) சட்டம் மூலம் தமிழ் மக்களின் மொழி உரிமை பறிக்கப்பட்டது. மொழியுரிமை பறிப்பு என்பது இனத்துவ அடையாளம், சமூக பண்பாட்டு வாழ்வியல் ஆகியவற்றின் தனித்துவத்தை இழக்கச் செய்யும் சூட்சும் கொண்டதாகும். அரச நிர்வாகங்களில் 'சிங்களம் மட்டும்' பயன்பாட்டினால், தமிழர்கள் தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிட்டது.

தொடர்ச்சியாக **1972** இல் கல்வித் தரப்படுத்தல் சட்டமாக்கப்பட்டது. சிங்கள மாணவர்களை விட தமிழ் மாணவர்கள் அதிக மதிப்பெண்களைப் பெற்றால் மட்டுமே பல்கலைக்கழக உள்நுழைவுக்கு தெரிவாக முடியுமென்ற பாரபட்ச நிபந்தனை கல்வித் தரப்படுத்தல் சட்டம் மூலம் கொண்டுவரப்பட்டது. தமிழ்ச் சமூகத்தின் கல்வி வளத்தினையும் மேம்பாட்டினையும் தடுப்பதற்குரிய மூலோபாயம் இதுவாகும்.

**1981** இல் நிகழ்ந்த யாழ் நூலக எரிப்பென்பது, தமிழ்க் கல்விச் சமூகத்தைச் சிதைக்கும் திட்டமிட்ட இன அழிப்பு நோக்கம் கொண்டது. தெற்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமென்று பெயர் பெற்ற, நூறாயிரம் வரையான அரிய பல்துறை நூல்களையும், தமிழர்சார் வரலாற்று ஆவணங்களையும் யாழ் நூலகம் கொண்டிருந்தது என்பது பலரும் அறிந்ததே.

ஒட்டுமொத்தமாக இவ்வாறான தமிழர் விரோதச் சட்டங்கள் மூலம், தமிழ் மக்கள் இன - மொழி

– அரசியல் – சமூக – பொருளாதார – கல்வி அடிப்படைகளில் பல முனைகளிலும், நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆட்சியதிகாரம், பாராளுமன்ற ஜனநாயகம், நீதித்துறை என்பன சிங்கள ஆட்சியாளர்களால் அரசியல் விழுமியங்களின் தார்மீக ஒழுக்க அடிப்படையில் கைக்கொள்ளப்படவில்லை. நாட்டின் அரசியல் யாப்பு தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாது உருவாக்கப்பட்டதாகும். சிங்களப் பேரினவாத, பௌத்த மதவாத அரச இயந்திரமாகவே அது இயக்கப்பட்டு வந்திருக்கின்றது.

## குடியேற்றம் : தாயகக் கோட்பாட்டை மறுதலிக்கும் மூலோபாயம்

தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்ட, வடக்கு – கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசங்களில் திட்டமிட்ட முறையில் சிங்களக் குடியேறறங்கள் ஏற்படுத்தப்பட்டன. இது மக்கள் தொகைச் சமநிலையை – மக்கள் தொகைப் பரம்பலை (Demographic Balance) குழப்பும் நோக்கம் கொண்டது. திட்டமிட்ட குடியேற்றங்களால் தென் தமிழீழம் பாரிய அளவு விழுங்கப்பட்டுள்ளது. இன அழிப்பினை இலக்காகக் கொண்ட அரசுகள் கையாளும் முதன்மை மூலோபாயங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வாறே பலஸ்தீன மக்களின் பாரம்பரிய நிலங்களை யூதக் குடியேற்றங்கள் மூலம் இஸ்ரேல் விழுங்கி வருகின்றது.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் 1940 களிலிருந்து சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்ட முறையில் நிறுவப்பட்டன. தாயகப் பிரதேசங்களை அபகரித்து சிங்களவர்களின் பரம்பலை அதிகரிப்பதன் மூலம், தமிழர்கள் சிறுபான்மையினர் என்ற கருத்துருவாக்கத்தை வேரூன்றச் செய்வதே பேரினவாத அரச இயந்திரத்தின் நோக்கம். தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்ட வடக்கும் கிழக்கும் இணைந்ததே தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்ற யதார்த்தத்தினை மறுதலித்து வடக்கினையும் கிழக்கினையும் துண்டாடும் சூழ்ச்சிக்கு திட்டமிட்ட குடியேற்றம் கருவியாய் கைக்கொள்ளப்பட்டது.

1983 ஆம் ஆண்டு ஜூலைப் படுகொலைகளை அடுத்து தொடர்ச்சியாக தமிழர் பிரதேசங்களில் – கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலும், வடக்கில் – மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலும் அடுத்தடுத்து எண்ணிலடங்காத படுகொலைகள் நடாத்தப்பட்டுள்ளன.

1985 இல் திருகோணமலையில் 'நிலாவெளிப் படுகொலைகள்', அதே ஆண்டு 'கந்தளாய்ப் படுகொலை', 1990 இல் 'திரியாய்ப் படுகொலை', 1987 இலும் 1991 இலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட மட்டக்களப்பு 'கொக்கட்டிச்சோலைப் படுகொலை', 1990 இல் கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலை, அதே ஆண்டு நடந்தேறிய 'வந்தாறுமூலைப் படுகொலை', 'சத்துருக்கொண்டான் படுகொலை', 1990 இல் அம்பாறையில் 'வீரமுனைப் படுகொலை' என கிழக்கு மாகாணத்தில் கோரமான பல படுகொலைகள் நடாத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இந்நூலில் விரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

## போர் நிறுத்த காலப் படுகொலைகள்

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட, போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருந்த காலகட்டங்களில் கூட சிறிலங்கா அரச படைகள் பொது மக்கள், தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் என பல ஆயிரக் கணக்கானவர்களைப் படுகொலை செய்தது. போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்த 2002 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு

*வரையான 5 ஆண்டுகளுக்குள் மாத்திரம் 4000 பேர் வரை கொல்லப்பட்டதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புள்ளிவிபரங்கள் தெரிவித்தன. போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருந்த காலத்தில் நடாத்தப்பட்ட படுகொலைகள் உரிய ஆதாரங்களுடன் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.*

*2006 ஆம் ஆண்டு கிழக்கில் பாரிய வன்போர் நடவடிக்கையைத் தொடங்கிய இலங்கைப் படையினரால் நடாத்தப்பட்ட படுகொலைகளிலிருந்து, வடக்குக்கு விரிவுபடுத்தப்பட்ட போரில் 2008 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை நடாத்தப்பட்ட முரசுமோட்டை விமானக் குண்டு வீச்சுப் படுகொலைகள் வரை இந்நூலில் ஆதாரங்களுடன் பதிவுக்குள்ளாகியுள்ளன.*

*2009 இல் இறுதிப் போரில் கட்டவிழ்த்து விடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் குறித்த விரிவான பதிவு இந்நூலில் உள்ளடக்கப்படவில்லை. எனவே இந்நூலினை சிங்கள, இனவாத அரச இயந்திரத்தினால் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட இன அழிப்பின் ஒரு முழுமையான பதிவாகக் கொள்ள வேண்டாமென வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் வாசகர்களை எச்சரித்துள்ளது.*

*இன அழிப்பு வன்போரினை நடாத்திய சிறிலங்கா அரசு, தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் பாரிய மனிதப் பேரவலங்களையும், சமூகச் சிதைவுகளையும், பிளவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. சொந்த நிலங்களில் மீளக் குடியேற வழியின்றி அல்லற்படுவோர், உடல் உறுப்புகளை இழந்தோர், வாழ்க்கைத் துணையை இழந்தோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர் என பெரும் மனித அவலங்களை எதிர் கொண்ட தமிழர் தாயகப் பிரதேச மக்கள் அடிப்படை மனித உரிமைகள், அரசியல் வாழ்வுரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்கின்றனர்.*

## வரலாற்றுத் திரிபுக்கும் மறைப்பிற்கும் உட்படாதிருக்க இந்நூலின் பங்களிப்பு

*முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின்னர், அனைத்துலக மட்டத்தில் சிறிலங்காவின் அரச படைகளின் போர் மீறல்கள், மனித உரிமை மீறல்கள் குறித்த கண்டனங்களும் விசாரணைகள் பற்றிய குரல்களும் ஓங்கியிருந்த காலட்டத்தில் இந்த நூல் வெளிவந்தது. 2009 ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரம் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டதிலிருந்து முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்கு வந்த காலம் வரையான சாட்சியங்கள் அற்ற இலங்கைப் படைகளின் இன அழிப்பு தொடர்பான பதிவுகள் இந்நூலில் இடம்பெறவில்லை. சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு, சிறிலங்காப் படைகளின் கண்மூடித்தனமான தாக்குதல்களால் 2008 இன் இறுதிப் பகுதியுடன் NESOHR இன் இயங்குநிலை முற்றிலும் முடக்கப்பட்டுவிட்டமை அதற்கான காரணங்களாகும். 2009 இல் நடந்த நிகழ்வுகளின் களத் தகவல்கள், அறிக்கைகளைத் தம்மாற் சேகரிக்க முடியவில்லை எனக் NESOHR குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், அந்தக் காலகட்டப் படுகொலைகள் சார்ந்த சில ஆதாரத் தொகுப்புகள், ஒளிப்படங்களை நூலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இனப்படுகொலைகள் வரலாற்றிலிருந்து அழிக்கப்படாமலும், காலப்போக்கில் திரிபுபடுத்தப்படாமலும், மறைக்கப்படாமலும் இருப்பதற்கு இந்நூல் பாரிய பங்களிப்பாக அமைந்துள்ளது. படுகொலைகளை மட்டும் ஆவணப்படுத்தும் ஒரு தொகுப்பாக அல்லாமல், சிங்களத்தின் தமிழர்சார் அழிப்பின் மூலங்களை அடையாளப்படுத்தி அரசியல் ரீதியில், வரலாற்று ரீதியில் புரிதலை ஏற்படுத்தும் வகையில் இதன் பதிவுகள் அமைந்துள்ளன.*

*அவ்வாறு நோக்குகையில், தமிழர்கள் மீதான படுகொலைகள் பற்றிய முழுமையான நூலாக இல்லாவிடினும் 2009 இற்கு முன்னான படுகொலைகளை கூடியளவு தகவல் ரீதியாகப் பதிவு செய்யும் நூலாக இதனைக் கருத முடியும்.*

கனடா, பெல்ஜியம், சோவியத் ஒன்றியம், சுவிற்சர்லாந்து, இந்தியா, ஸ்பானியா (SPAIN) ஆகிய ஆறு நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமைகளைப் பற்றி ஆழமான ஆய்வுகளாக இக்கட்டுரைத்தொடர் அமைகிறது. மேற்குறித்த நாடுகளின் அரசியல் வரலாறும், அரசியல் யாப்பு வரலாறும், போருக்கு பிந்திய இலங்கையின் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு வழிகாட்டியாக அமையும், அரசியல் பாடங்களை (POLITICAL LESSONS) கற்றுக்கொள்வதற்கு உதவுவனவாக 'சமஷ்டி அரசியல் முறைமைகள்' என்ற இத்தொடர் அமைகின்றது. இக்கட்டுரைத்தொடர் அரசியல் கோட்பாடுகள் (POLITICAL THEORIES) அரசியல் யாப்பு தத்துவங்கள் (CONSTITUTIONAL PRINCIPLES) என்பன சார்ந்த விடயங்களை குவிமையப்படுத்தும் உரையாடலை தொடக்கிவைப்பதாக அமைகிறது. தமிழ் சமூகவெளியில் (SOCIAL SPACE) சமஷ்டி முறைதொடர்பான ஆரோக்கியமான ஒரு விவாதம் இக்கட்டுரைத்தொடரின் பெறுபேறாக அமையும்.

*ஆங்கில மூலம் : றொனால்ட்.எல். வாட்ஸ்*



# சமஷ்டிகளும் சமஷ்டி அரசியல் முறைகளும்


கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.


சமஷ்டி அரசியல் முறைகளை ஒப்பீடு செய்தல்' (COMPARING FEDERAL SYSTEMS) என்னும் ஆய்வு நூலினை றொனால்ட் எல். வாட்ஸ் என்னும் அறிஞர் எழுதியுள்ளார். இந்நூலினைக் கனடாவின் 'Queen's University' வெளியிட்டது. இதன் முதற்பதிப்பு 1997 இலும் இரண்டாம் பதிப்பு 1999 ஆம் ஆண்டிலும் வெளியாயின. இந்நூலில் 6 முதல் 14 வரையுள்ள பக்கங்களில் 'சமஷ்டி குறித்த சொற்களின் வரைவிலக்கணங்களும் சமஷ்டித் தத்துவங்களும்' (DEFINITION OF TERMS AND PRINCIPLES OF FEDERALISM) என்னும் தலைப்பில் உள்ள பகுதியில் நூலாசிரியர் கூறியிருக்கும் கருத்துகளைத் தொகுத்துத் தமிழில் கூறும் முறையில் இத் தமிழ்க் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.




Image Source : www.amazon.com

றொனால்ட்.எல். வாட்ஸ் அவர்கள்,

**1. சமஷ்டி வாதம் (Federalism)**

**2. சமஷ்டி அரசியல் முறைகள் (Federal Political Systems)**

**3. சமஷ்டிகள் (Federations)**

என்னும் மூன்று சொற்கள், சொற்தொடர் என்பனவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடுகிறார். இவ் வேறுபாடுகளை விளங்கிக் கொள்வதற்கேற்ற வரைவிலக்கணங்களையும் அவர் தருகிறார். முதலாவதான 'சமஷ்டி வாதம்' என்ற சொல், சமஸ்டிகள், சமஷ்டி அரசியல் முறைகள் என்ற இரண்டில் இருந்தும் வேறுபட்ட கருத்துடையது. அது பின்னைய இரண்டினைப் போன்று ஒரு விவரணச் சொல் (Descriptive Term) அன்று; அதுவொரு நியமச்சொல் (Normative Term) என்று குறிப்பிடுகிறார்.

நியமச் சொல்லான சமஷ்டிவாதம் பின்வரும் நியமங்களை (Norms) அல்லது இலட்சியங்களை (Ideals) வெளிப்படுத்துகிறது.

1. ஐக்கியம் (Unity), பன்மைத்துவம் (Diversity) என்னும் இரண்டையும் ஒரே ஆட்சி முறைக்குள் பேணக்கூடிய நியமத் தத்துவத்தை (Normative Principle) இது உள்ளடக்கியது.
2. ஒரே அரசியல் கட்டமைப்புக்குள் பன்மைப் பண்பாடுகளை உடைய சமூகங்கள் பகிரப்பட்ட ஆட்சி (Shared Rule), பிராந்திய சுயாட்சி (Regional Self Rule) ஆகிய இரு இலக்குகளையும் அடையும் இலட்சியத்தை வெளிப்படுத்துவது.
3. அதிகாரம் பரவியிருத்தல் (Non Centralisation), ஒரே நாட்டிற்குள் ஒன்றாகச் சேர்ந்திருக்கும் வேணவா (Desire for Union) என்னும் இரு தேவைகளையும் பூர்த்தி செய்யும் இலக்கினை வெளிப்படுத்துவது.

தனிநபர் உரிமைகளையும், தனிநபர்கள் சார்ந்திருக்கும் சமுதாயத்தின் (Community) கூட்டுரிமைகளையும் (Collective Rights) உறுதி செய்தல் என்பதும் சமஷ்டி வாதத்தின் இலக்குகளில் அடங்குவது எனலாம்.

## சமஷ்டி அரசியல் முறைகள்

பகிரப்பட்ட ஆட்சி (Shared Rule), சுயாட்சி (Self Rule) அல்லது தன்னாட்சி (Autonomy) என்ற இலக்குகளை அடையக்கூடிய அரசியல் முறைகளை சமஷ்டி அரசியல் முறைகள் (Federal Political Systems) என றொனால்ட் எல். வாட்ஸ் வகைப்படுத்துகிறார். இச் சொற்றொடர் அரைகுறைச் சமஷ்டிகள் (Quasi Federations), 'சமஷ்டிகள்' (Federations) 'கொன்பெடரேஷன்கள்' (Confederations) எனப் பல்வகைப்பட்ட வகையினங்களை உள்ளடக்கியது. அரைகுறைச் சமஷ்டிகள், சமஷ்டிகள், கொன்பெடரேஷன்கள் என்பவற்றிற்கிடையே உள்ள பொதுத்தன்மை அவை ஒற்றையாட்சி முறையல்லாத தன்மையைப் பெற்றிருப்பது தான் (Non - Unitary Form) என்று குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடும் சமஷ்டி அரசியல் முறைகளை ஒரு 'தொடர்பம்' (Continuum) அல்லது வரிசைத் தொடரில் (Spectrum) நிரற்படுத்திக் காட்டலாம். றொனால்ட்.எல். வாட்ஸ் நூலின் 8 முதல் 13 வரையுள்ள பக்கங்களில் உள்ள தகவல்களை ஆதாரமாக்கிக் கொண்டு 'சமஷ்டி அரசியல் முறைகளின் தொடர் வரிசை' (The Spectrum of Federal Political Systems) என்னும் தலைப்பில் அட்டவணை ஒன்றைத் தந்துள்ளோம். இத்தொடர் வரிசை ஒற்றையாட்சி என்னும் எதிர்த் துருவத்தில் இருந்து மறு அந்தத்தில் உள்ள 'கொன்பெடரேஷன்' வரையான சமஷ்டி அரசியல் முறைகளையும், கொன்பெடரேஷனிற்கு அப்பால் உள்ள முறைகள் சிலவற்றையும் காட்டுரு வடிவில் விளக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது.

## சமஷ்டி அரசியல் முறைகளின் வரிசைத் தொடர்
## (The Spectrum of Federal Political Systems)




மேலே தரப்பட்ட வரிசைத் தொடரில் ஒரு அந்தத்தில் ஒற்றையாட்சி அரசும், வரிசைத் தொடரின் நடுப்பகுதியில் சமஷ்டிகள் என்னும் அரசியல் முறையும், இறுதி அந்தத்தில் கொன்பெடரேஷன், லீக் ஆகிய அரசியல் முறைகளும் அமைந்துள்ளன. அரசியல் மாணவர்கள் நன்கு அறிந்திருக்கும் சமஷ்டிகள் (Federations) என்னும் அரசியல் முறையை முதலில் விளக்கிக் கூறுவோம்.

### சமஷ்டிகள் (Federations)

றொனால்ட்.எல். வாட்ஸ் அவர்களின் 'COMPARING FEDERAL SYSTEMS' நூல் சமஷ்டி நாடுகளின் அட்டவணையைச் சுருக்கக் குறிப்புகளுடன் தந்துள்ளது. சமஷ்டிகளின் இயல்பை விளக்குவதற்கு உதவக்கூடிய உதாரணங்கள் அந்நூலில் உள்ள சுருக்கக் குறிப்புகளுடன் கீழே தரப்பட்டுள்ளன.

1. ஆர்ஜன்டீனா (22 மாநிலங்கள் + ஒரு தேசியப் பிராந்தியம் (National Territory) + ஒரு பெடரல் மாவட்டம் என்பவற்றை உள்ளடக்கியது)
2. அவுஸ்திரேலியா (6 அரசுகள் (States) + ஒரு தலைநகர் பிரதேசம் + 7 நிர்வகிக்கப்படும் பிரதேசங்கள்)
3. ஆஸ்திரியா (9 லான்டர்கள் (Lander))
4. பெல்ஜியம் (3 பிராந்தியங்கள் + 3 பண்பாட்டுச் சமுதாயங்கள் (Cultural Communities)
5. பிரேசில் (26 அரசுகள் + 1 பெடரல் தலைநகர் மாவட்டம்)
6. எதியோப்பியா ( 9 அரசுகள் + 1 மெட்ரோ பொலிற்றன் பகுதி)
7. மலேசியா (13 அரசுகள்)
8. மெக்சிக்கோ (31 அரசுகள் + 1 பெடரல் டிஸ்றிக்)
9. சுவிற்சர்லாந்து (26 கன்டன்கள்)
10. கொமொறோஸ் தீவுகள் (4 தீவுகள்)




சுவிற்சர்லாந்தின் கன்டன்கள்
Image Source : www.mappr.co

மேலே காட்டிய சமஷ்டி உதாரணங்களும், அவற்றின் கட்டமைப்பு (*Structure*) பற்றிய சுருக்கக் குறிப்புகளும் தோற்ற அளவிலேயே சமஷ்டிகளின் மிகப் பிரதானமான இயல்பொன்றைச் சுட்டிக் காட்டுகின்றன. சமஷ்டிகளில் மத்திய அரசு, மாநில அரசுகள் என இரு நிலைகளில் அரசு (*Two Levels of Government*) செயற்படுகிறது. மத்திய அரசும், மாநில அரசுகளும் அந்தஸ்தில் சமத்துவம் உடையன. மத்திய அரசுக்குக் கீழ்ப்பட்ட நிலையில் (*Subordi nate*) மாநில அரசுகள் இருப்பதில்லை. அவை சமத்துவ நிலையில் (*Coordinate*) உள்ளன. மாநிலங்கள், அரசுகள், லேண்டர்கள், கன்டன்கள் என சுயாட்சியுடைய அரசுகளைக் குறிக்க வெவ்வேறு பெயர்கள் உபயோகிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

மத்திய அரசு எதேச்சையாகவும் ஒரு தலைப்பட்சமாகவும் மாநில அரசு ஒன்றின் அந்தஸ்தைக் கீழிறக்கவோ, அல்லது அதன் அதிகாரங்களைப் பறித்துவிடவோ முடியாது. அரசியல் யாப்பினைத் திருத்தும் போது மாநில அரசுகளின் சம்மதமின்றி திருத்தங்கள் எதனையும் செய்ய முடியாது என்பன போன்ற அரசியல் யாப்புச் சட்டப் பாதுகாப்புகள் சமஷ்டிகளின் அரசியல் யாப்புகளில் குறிக்கப்பட்டிருக்கும்.

## சமஷ்டிகளின் அடிப்படைப் பண்புகள்

ஒற்றையாட்சி அரசை எவ்வாறு வரையறை செய்யலாம் என்பதற்கு இலகுவான பதில், நாம் அதனை சமஷ்டிகளிற்கு நேர் எதிரான அடிப்படைப் பண்புகளைக் கொண்டவை என வரையறை செய்வதேயாகும். ஒப்பீட்டு முறையிலான இவ்வரைவிலக்கணத்தில் மேலே குறிப்பிட்ட இரண்டு பண்புகளான,

அ)இரு நிலை அரசாங்கங்களைக் கொண்டிருத்தல்

ஆ)மாநில அரசுகளின் அந்தஸ்து அரசியல் யாப்பினால் பாதுகாக்கப்பட்டிருத்தல்

என்பன அடிப்படையானவை. இவற்றைவிட பின்வரும் முக்கிய சமஷ்டிப் பண்புகளும் ஒற்றையாட்சியில் இருந்து சமஷ்டிகளை வேறுபடுத்திக் காட்டுகின்றன.

1. இரண்டு நிலையில் உள்ள அரசாங்கங்களும் பிரஜைகளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்கின்றன (*Acting Directly*).

2. சட்ட ஆக்க அதிகாரமும், நிர்வாக அதிகாரமும் இரு நிலை அரசாங்கங்களிற்கும் தெளிவாக அரசியல் யாப்புச் சட்டப்படி வகுத்துரைக்கப்பட்டிருக்கும். இவ்வாறே வளங்களின் பங்கீடு பற்றியும் முறைசார் ஒழுங்குகள் (*Formal Arrangements*) சட்டப்படி விதிக்கப்பட்டிருக்கும். மாநில அரசாங்கங்களின் செயற்பாடுகளில் தன்னாட்சி அல்லது சுய ஆட்சி (*Self Rule*) என்னும் இயல்பு உண்மைத் தன்மையுடையதாக இருக்கும்.

3. சுயாட்சியை அனுபவிக்கும் மாநில அரசாங்கங்கள் மத்தியின் அரசாங்க அதிகாரத்திலும் பங்கேற்புச் செய்யும் பகிரப்பட்ட ஆட்சி (*Share Rule*) என்னும் பண்பும் சமஷ்டியின் முக்கிய இயல்பாகும். பெரும்பாலான சமஷ்டிகளில், மாநில அரசாங்கங்களின் கருத்துகள் மத்திய அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதற்காக, சமஷ்டியின் இரண்டாவது சபை (*Federal Second Chamber*) உருவாக்கப்பட்டுச் செயற்பாட்டில் இருக்கும்.

4. மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் பிணக்குகள் ஏற்படலாம். அவ்வாறான பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரமுடைய நடுவராக நீதிமன்றங்கள் செயற்படும். நடுத் தீர்ப்புக்கான நீதிமன்றத்தின் அதிகாரத்தோடு பொதுசன வாக்கெடுப்பு (*Referendum*) நடத்தப்படுதல் என்னும் ஏற்பாடும் இருக்கும்.

மேலே குறிப்பிட்டவை சமஷ்டிகளின் அடிப்படியான பொது இயல்புகளாகும். ஆயினும் சமஷ்டிகளிற்கிடையே வேறுபாடுகள்

உள்ளன. ஒப்பீட்டு ஆய்வுகளில் சமஷ்டிகளிடையிலான வேறுபாடுகள் முக்கிய கவனத்தைப் பெறுகின்றன. றொனால்ட்.எல். வாட்ஸ் அவர்களின் ‘COMPARING FEDERAL SYSTEMS’ நூலின் 6 ஆம் 7 ஆம் 8 ஆம் அத்தியாயங்கள் வேறுபாடுகளை ஒப்பீட்டு முறையில் பகுப்பாய்வு செய்வனவாக அமைந்துள்ளன.

## ‘கொன்பெடரேஷன்’

‘Confederation’ என்ற ஆங்கிலச் சொல்லை தமிழில் பல வகையாக மொழிபெயர்க்கலாம். ஆயினும் கருத்துக் குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக இக்கட்டுரையில் ‘கொன்பெடரேஷன்’ என்றே அழைப்போம். தனித்தனி அரசுகளாக முன்னர் இருந்து வந்த அரசுகள் சில பொதுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக பொது அரசு ஒன்றை உருவாக்கும் போது ‘கொன்பெடரேஷன்’ என்னும் அரசியல் முறை தோன்றும். பாதுகாப்பு, பொருளாதாரம் போன்றன அரசுகள் ஒன்றிணைவதற்கான பொதுத் தேவைகளாக இருக்கலாம். இணையும் அரசுகளை விடப் பொது அரசு பலம் குறைந்ததாக இருக்கும். சுவிற்சர்லாந்து 1291 முதல் 1847 வரையான காலத்தில் கொன்பெடரேஷன் ஆகவே விளங்கியது. ஐக்கிய அமெரிக்கா 1776 முதல் 1789 வரை ‘கொன்பெடரேஷன்’ ஆக இருந்தது. இவை சிறந்த வரலாற்று உதாரணங்கள். இன்று ஐரோப்பிய யூனியன் கொன்பெடரேஷன் என்ற நிலையில் இருந்து மெல்ல மெல்ல சமஷ்டியின் இயல்புகள் சிலவற்றைத் தழுவிக் கொள்கிறது. பொது அரசின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டனவாக இருக்கும். இதனால் கொன்பெடரேஷனில் இணைந்திருக்கும் அரசுகள் பலமுடையனவாக இருக்கும். வாக்காளர் என்ற முறையிலும், வரி செலுத்துபவர் என்ற முறையிலும் பொது அரசுடன் பிரஜைகளுக்கு நேரடித் தொடர்பு இருப்பதில்லை. அங்கத்துவ அரசுகள் தத்தம் பிரஜைகளுக்கும் பொது அரசுக்கும் இடையில் ஒரு தொடர்பாளர் போன்று செயற்படுகின்றன. எல்லா முக்கிய கொள்கைத் தீர்மானங்களும் அங்கத்துவ நாடுகளின் சம்மதத்துடனேயே செய்யப்படுகின்றன. அதனால் அரசுகளின் பலமும் சுதந்திரமும் வலுப்படுத்தப்படுகிறது. முரண்பாடு தோன்றும் போது ஒரு அரசு கொன்பெடரேஷனில் இருந்து விலகிக் கொள்ளலாம். அவ்வாறு விலகும் போது முன்னர் இணைந்த போது கையளித்த மட்டுப்படுத்தப்பட்ட இறைமையை (Sovereignty), முழுவதுமாகத் திரும்பப் பெற்றுக் கொண்டு குறித்த அரசு விலகிச் செல்கிறது என்பது முக்கியமானது. சமஷ்டிகளில் இருந்து வேறுபட்ட கொன்பெடரேஷன், சமஷ்டி அரசியல் முறைகளுள் ஒன்று என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

## லீக்

அரசியல் சுதந்திரம் உடைய நாடுகள், சில பொதுத் தேவைகளுக்காக ஒன்று கூடி ‘லீக்’ என்ற அமைப்பினை உருவாக்கிக் கொள்கின்றன. அராபிக் லீக், ஆசியான், பால்டிக் நாடுகளின் கூட்டமைப்பு, பொதுநலவாயம், நேட்டோ, நோர்டிக் கவுன்சில், சார்க் கூட்டமைப்பு என்பன வாட்ஸ் உதாரணம் காட்டும் லீக் அமைப்புகளாகும்.

‘லீக்’ என்பதில் இருந்து வேறுபட்ட கூட்டுச் செயல் அதிகார அமைப்புக்கள் (Joint Functional Authorities) என்ற ஒரு பிரிவையும் வார்ட்ஸ் குறிப்பிடுகிறார். இவை ஒரு குறிப்பிட்ட பணியை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்ட அமைப்புகளாகும். ‘சர்வதேச அணுசக்தி அதிகார சபை’ இவ்வகை அமைப்புக்கு உதாரணமாகும்.

## ஒற்றையாட்சிக்குள் சுயாட்சி

ஒற்றையாட்சி நாடுகள் பலவற்றில் சமஷ்டி முறையில் சுயாட்சி (Autonomy) என்ற இயல்புடைய சமஷ்டி அரசியல் முறைகள் செயற்பாட்டில் உள்ளன என்பதை வாட்ஸ் தம் நூலில் விளக்கிக் கூறியுள்ளார். சில நாடுகளில் இவை வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டுச் சிறப்பாக இயங்குகின்றன. பெடரசி, அசோசியேட்டற் அரசு, கொன்டோமினியம் போன்ற மாதிரிகள் சிலவற்றையும் வாட்ஸ் குறிப்பிடுகிறார்.

| இல | மாதிரி | உதாரணம் | விளக்கம் |
|---|---|---|---|
| 1 | ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு | ஐக்கிய இராச்சியம் | வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து என்பன சுயாட்சிப் பகுதிகளாக உள்ளன. |
| 2 | பெடரசி | பின்லாந்து | ஆலந்து தீவுகள் சுயாட்சியுடைய பெடரசியாக உள்ளது |
| 3 | அசோசியேட்டற் ஸ்டேற் (இணைப்பு அரசு என்று தமிழில் கூறலாம்) | இந்தியா | பூட்டான் இந்தியாவின் இணைப்பு அரசு. இது ஒரு வகைச் சமஷ்டி ஒழுங்குதான். |
| 4. | கொன்டோமினியம் | ஸ்பெயின் நாடும், பிரான்ஸ் நாடும் அன்டோரா என்ற நாட்டை தம் மேற்பார்வையில் வைத்திருந்தன. | அன்டோராவிற்குச் சுயாட்சி அதிகாரங்களும் இருந்தன. |

மேலே தரப்பட்ட அட்டவணையில் சமஷ்டி அரசியல்முறை மாதிரிகளுக்கு ஒவ்வோர் உதாரணம் தரப்பட்டு, விளக்கமும் கூறப்பட்டுள்ளது. இந் நான்கு மாதிரிகள் பற்றி அடுத்து விளக்கிக் கூறுவோம்.

## ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு

ஒற்றையாட்சி அரசு (Unitary State) முறைக்குள் சமஷ்டி முறையலான அதிகாரப் பகிர்வை அல்லது சுயாட்சியை (Autonomy) வழங்கும் அரசியல் முறை மாதிரிகள் உலகில் இருபதிற்கும் மேற்பட்டவை உள்ளன. நெதர்லாந்து, இத்தாலி, ஐக்கிய இராச்சியம் போன்ற ஐரோப்பிய நாடுகளும்; அன்டிகுவா, பார்படோஸ், சொலமன் தீவுகள், கொலம்பியா போன்ற மூன்றாம் உலக நாடுகளும் றொனால்ட்.எல். வாட்ஸ் அவர்களின் நூலில் உதாரணங்களாகக் காட்டப்பட்டுள்ளன. 1990 களில் காணப்பட்ட நடைமுறை உதாரணங்களையே இந்நூலில் வாட்ஸ் தருகிறார். ஐக்கிய இராச்சியத்தில் வேல்ஸ், ஸ்கொட்லாந்து ஆகிய இரு பகுதிகளும் சுயாட்சி நோக்கி முன்னேறுவதை அவர் குறிப்பிட்டுள்ளார். பெரிய வெள்ளி உடன்படிக்கையின் பின்னர் வட அயர்லாந்தில் அமைதி திரும்பியதோடு அதிகாரப் பரவலாக்கம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு பற்றி வாட்ஸ் பின்வருமாறு கூறுகிறார்: "இந்த அரசியல் அமைப்புகள் அடிப்படையில் ஒற்றையாட்சி அமைப்புக்களே. நாட்டின் அரசியல் அதிகாரம் மத்தியிலேயே இருக்கும். இருந்த போதும் அரசியல் யாப்பின் அங்கீகாரத்துடன் கூடிய உப அலகுகள் (Sub Units) மாநில, பிராந்திய மட்டங்களில் இருக்கும். அந்த உப அலகுகளுக்குச் சில விடயங்களில் சுதந்திரமாகச் செயற்படும் அதிகாரம் இருக்கும். இவற்றின் மூலம் பிராந்திய அல்லது உள்ளூராட்சி அலுவல்கள் செயற்படுத்தப்படும். இருப்பினும் அரசியல் யாப்பு மத்திய அரசுக்கே முழுமையான அதிகாரத்தை வழங்கியிருப்பதால் மத்திய அரசின் தயவில் இயங்கும் பலமற்ற அமைப்புக்களாகவே இவை உள்ளன.

## பெடரசி (Federacy)

வாட்ஸ் இது பற்றி கொடுக்கும் விளக்கம் வருமாறு :

சிறிய அலகு ஒன்று அல்லது சிறிய நாடு ஒன்றோ சிலவோ பெரியநாடு ஒன்றுடன் இணைக்கப்பட்டிருக்கும் நிலை பெடரசி எனப்படும். பெடரசி சுயாட்சி உடையதாக இருக்கும். அத்தோடு பெரிய நாட்டின் ஆட்சியில் அதன் பங்கு குறைவானதாக இருக்கும். பெடரசிக்குப் பல உதாரணங்களை வாட்ஸ் பட்டியலிட்டுள்ளார்.

1. ஆலந்து தீவுகள் (ALAND ISLANDS) - பின்லாந்து

2. அசோர்ஸ் தீவுகள் (AZORES) - போத்துக்கல்

3. FAROE ISLAND - டென்மார்க்

4. கிரின்லாந்து - டென்மார்க்

5. மான் தீவு (ISLE OF MAN) - ஐக்கிய இராச்சியம்

6. புவட்டோ றிக்கா - ஐக்கிய அமெரிக்கா

பெடரசியை ஒத்ததான அசோசியேட்டட் ஸ்டேற் (*Associated State*) அல்லது இணைப்பு அரசு என்பதற்கு உதாரணமாக பின்வருவன வாட்ஸ் அவர்களால் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. லெய்ச்ரென்ஸ்டின் (LIECHTENSTEIN) - சுவிற்சர்லாந்து

2. சன்மரினோ (SAN MARINO) - இத்தாலி

## கொன்டோமினியம் (Condominium)

கூட்டு உடைமையைக் கொன்டோமினியம் என்ற சொல் குறிப்பிடும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் ஒரு நாட்டைக் கூட்டாகத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதே ‘கொன்டோமினியம்’ எனப்படும். பிரான்ஸ் - ஸ்பெயின் ஆகிய இரு நாடுகளின் கூட்டு உடமையாக அன்டோரா செயற்பட்டு வந்ததை வாட்ஸ் உதாரணம் காட்டுகிறார்.



சார்க் நாடுகள்

Image Source : ias34.com

## சமஷ்டியும் பன்மைத்துவத்தை முகாமை செய்தலும்

சமஷ்டி அரசியல்முறை பன்மைத்துவச் சமூகங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய சிறந்த வழிமுறையாகக் காணப்படுகின்றது. உலகின் பெரும்பான்மையான நாடுகள் பன்மைப் பண்பாடுகளைக் கொண்டவையாகவும் மொழி, சமயம், பண்பாடு, இனம், பிராந்தியம் ஆகியவற்றால் வேறுபட்ட தேசிய இனங்களையும் சிறுபான்மைத் தேசியங்களையும் தமது ஆள்புலத்திற்குள் உள்ளடக்கியவையாகவும் காணப்படுகின்றன. நவீன உலகில் பன்மைத்துவம் ஒரு யதார்த்தம். அதை இல்லாது ஒழித்து ஒரு நாடு, ஒரு இனம், ஒரு மக்கள் என்ற கருத்தியல் மூலம் ஒருமைத் தன்மையைச் செயற்கையாக உருவாக்க முனைதல் பயனற்றது. பன்மைத்துவத்தை முகாமை செய்தலும் சிறுபான்மைத் தேசிய இனங்களிற்கு அரசியல் இறைமையை உறுதிப்படுத்துவதுமே நாடுகளின் முன்னேற்றத்திற்கான சிறந்த வழியாகும்.

சமஷ்டி நாடுகள் பன்மைத்துவத்தை முகாமை செய்வதில் வெற்றிகண்டுள்ளன. ஒற்றையாட்சி முறையினை உடைய நாடுகளிலும், சமஷ்டி முறையிலான அரசியல் முறைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

சமஷ்டிகளும், சமஷ்டி அரசியல் முறைகளும் என்னும் தலைப்பிலான இக்கட்டுரை பன்மைத்துவச் சமூகங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைந்துள்ள சமஷ்டி மாதிரிகள் பலவற்றை அறிமுகம் செய்வதாக உள்ளது.

## குறிப்பு

இக்கட்டுரையை எழுதுவதற்கு ஆதாரமாக அமைந்த றொனால்ட்.எல். வாட்ஸ் அவர்களின் ஆக்கங்கள்:


1. *WATTS.RONALD,L. COMPARING FEDERAL SYS TEMS, QUEEN'S UNIVERSITY, KINGSTON, ONTARIO, CANADA. 2nd ED. 1999*

2. சமஷ்டி அதிகாரப் பகிர்வு மாதிரிகள் (கட்டுரை). சமஷ்டி எண்ணக்கரு என்னும் நூல் (பக்கம் 1326). மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் சமஷ்டி ஆட்சி நாடுகளின் மன்றம் (வெளியீட்டாண்டு குறிப்பிடப்படவில்லை).

# சமஷ்டி அரசியல் முறைமைகள் :

## ஓர் அறிமுகம்

கந்தையா
சண்முகலிங்கம்

*(ஜனவரி, 2025 இல் 'சமஷ்டி அரசியல் முறைமைகள் : ஓர் அறிமுகம்' எனும் நூல் 'எழுநா' வெளியீடாக வரவுள்ளது. அந் நூலிற்கான முன்னுரை இங்கே தரப்படுகிறது.)*

இத்தொகுப்பில் 10 கட்டுரைகள் இடம்பெறுகின்றன. இக்கட்டுரைகள் 'எழுநா' இணைய இதழில் 2022 - 24 காலத்தில் தொடராக வெளியிடப்பட்டவை. அரசியல் யாப்புச் சட்டம், அரசியல் கோட்பாடு, உலகின் தேசிய இனங்களின் பிரச்சினைகள், முரண்பாடுகளை இணக்கமான முறையில் தீர்வு செய்தல் ஆகிய துறைகளின் புலமையாளர்களும், செயற்பாட்டாளர்களுமான அறிஞர்களால் இக்கட்டுரைகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டன. இவ் ஆங்கிலக் கட்டுரைகளின் கருத்துகளைத் தழுவி, இத் தமிழ்க் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

இக்கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதிய ஆசிரியர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளும், அவர்தம் புலமைத் துறைப் பங்களிப்புகள் பற்றிய குறிப்புகளும் இந்நூலின் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. கனடா, பெல்ஜியம், சுவிற்சர்லாந்து, இந்தியா ஆகிய நான்கு நாடுகள் சமஷ்டிமுறை செயற்பாட்டில் உள்ள நாடுகளாகும். இவற்றுள் பெல்ஜியம் முன்னர் ஒற்றையாட்சி நாடாகவிருந்து, பின்னர் சமஷ்டி முறையைத் தழுவி இன்று முன்னேற்றப் பாதையில் பயணிக்கின்றது. தேசிய இனங்களின் பிரச்சினைகளைத் தீர்வு செய்வதில் புதுமையான அரசியல் யாப்பு உபாயங்களைக் கையாண்டு, சமஷ்டி முறையைப் பரிசோதனை செய்து வரும் ஸ்பானியா தேசம் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு

> சுயாட்சி (Autonomy), பகிரப்பட்ட ஆட்சி (Shared Rule) என்ற இரண்டு தேவைகளை சமஷ்டி அரசியல் முறை பூர்த்தி செய்கின்றது எனக் கண்டோம். சமஷ்டி அரசியல் முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. சமஷ்டிகளிடையே காணப்படும் பொது இயல்புகள் என்னும் ஒற்றுமைகள் போன்றே அவற்றிடையே காணப்படும் வேற்றுமைகளும் முக்கியமானவை.



முன்னுதாரணமாக விளங்குகிறது. ஒற்றையாட்சி முறைக்கு இலக்கணமாகக் கூறப்பட்டு வந்த ஐக்கிய இராச்சியம், ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகிய மூன்று பகுதிகளின் மக்களும் பகிரப்பட்ட ஆட்சி (*Shared Rule*), சுயாட்சி (*Autonomy*) ஆகியவற்றின் பயன்களைப் பெறக்கூடிய வகையில் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. சோவியத் ரஷ்யாவும், யூகோசிலாவியாவும் சமஷ்டி முறைமை தோல்வியடைந்த நாடுகளுக்கு உதாரணங்களாகும். சமஷ்டி முறைமை தோல்வியடைந்த இவ்விரு உதாரணங்களில் இருந்து கற்றுக் கொள்ளக் கூடிய பாடங்கள் எவை என்பது சிந்தனைக்குரியது.

மேலே குறிப்பிட்ட கனடா, பெல்ஜியம், சுவிற்சர்லாந்து, இந்தியா, ஸ்பானியா, ஐக்கிய இராச்சியம், சோவியத் ரஷ்யா, யூகோசிலாவியா ஆகிய எட்டு நாடுகளின் அரசியல் யாப்பு வளர்ச்சி (*Constitutional Development*) வரலாற்றை விரிவாகவும், ஆழமாகவும் பகுப்பாய்வு செய்யும் ஒன்பது கட்டுரைகள் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. இறுதியான பத்தாவது அத்தியாயம் ‘பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களிற்குப் பொருத்தமான அரசியல் யாப்புகளை வரைதல் : பயனுள்ள சர்வதேச அனுபவங்கள் சில’ என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. இக்கட்டுரை பன்மைப் பண்பாடுகளைக் கொண்ட சமூகங்கள் எதிர்நோக்கும் தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கு, சமஷ்டி முறையிலான தீர்வு சாலவும் பொருத்தமானது என்பதைக் குறிப்பிடுவதோடு, பொருத்தமான அரசியல் யாப்புகளை வரைதல் பற்றி ஆராய்வதாகவும் உள்ளது.

## சமஷ்டி அரசியல் முறைமைகள் - சொற்தொடர் விளக்கம்

இந்நூலின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ‘சமஷ்டி அரசியல் முறைமைகள்’ (*Federal Political System*) என்ற சொற்றொடரின் பொருளைத் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் இந்நூலின் கட்டுரைகளை வாசிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் மிகவும் உதவியாகவிருக்கும் எனக் கருதுகிறோம். றொனால்ட்.எல். வாட்ஸ் என்னும் அறிஞர் இச்சொற்றொடரைப் பின்வருமாறு வரையறை செய்துள்ளார்.

“இது ஓர் விவரணக் கருத்துடைய சொற்றொடர். ஓர் அரசியல் முறைமை பற்றி இத்தொடர் விபரிக்கின்றது. ஒற்றை ஆட்சி முறையில் அரசியல் அதிகாரம் ஒரு இடத்தில் அதாவது மத்தியில் குவிந்திருக்கும். ஆனால் சமஷ்டி முறையில் அதிகாரம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் பரவி இருக்கும் என்று இத்தொடர் விபரிக்கின்றது. வெவ்வேறு சமஷ்டி அலகுகளில் செயற்படும் சுயாட்சி (*Self Rule*) பற்றியும், யாவற்றுக்கும் பொதுவான நிறுவன

அமைப்புகளில் செயற்படும் பகிரப்பட்ட ஆட்சி (Shared Rule) பற்றியும் இத்தொடர் எடுத்துக் கூறுகிறது." [1]

மேற்படி வரைவிலக்கணத்தில் கூறப்பட்டவற்றைத் தெளிவுபடுத்துதல் அவசியம்.

1. 'சமஷ்டி அரசியல் முறைமைகள்' என்னும் தொடர் விவரணக் கருத்துடையது (A Descriptive Term).
2. சமஷ்டி முறையில் அதிகாரம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இடங்களில் பரவி இருக்கும். அரச அதிகாரம் மத்தியிலும் (Centre), மாநிலங்கள் - சுயாட்சிப் பிரதேசங்கள் எனப் பல்வேறு இடங்களிலும் பரவி இருத்தல் (Distribution of State Power) சமஷ்டி முறையின் முக்கிய இயல்பு.
3. மாநிலங்கள், சுயாட்சிப் பிரதேசங்கள் ஆகியன சுயாட்சி (Autonomy) உடையனவாக இருக்கும்.
4. சமஷ்டி அலகுகளிற்கு மத்தியில் உள்ள அரச நிறுவனங்களான பாராளுமன்றம், மேற்சபை போன்ற நிறுவனங்களிலும் அதிகாரம் இருக்கும். இதனை பகிரப்பட்ட ஆட்சி (Shared Rule) என்ற சொல்லால் குறிப்பிடலாம்.

சமஷ்டி அரசியல் முறைகள் பலவகைப்பட்டவை. அவை யாவற்றுக்கும் பொதுவான அடிப்படை இயல்புகள் இவ்வரைவிலக்கணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## சமஷ்டி மாதிரிகள்

சுயாட்சி (Autonomy), பகிரப்பட்ட ஆட்சி (Shared Rule) என்ற இரண்டு தேவைகளை சமஷ்டி அரசியல் முறை பூர்த்தி செய்கின்றது எனக் கண்டோம். சமஷ்டி அரசியல் முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. சமஷ்டிகளிடையே காணப்படும் பொது இயல்புகள் என்னும் ஒற்றுமைகள் போன்றே அவற்றிடையே காணப்படும் வேற்றுமைகளும் முக்கியமானவை. கனடாவின் சமஷ்டி முறையின் தனித்துவத்தை நாம் கண்டறிவதற்கு, அது பிறநாடுகளின் சமஷ்டியில் இருந்து எவ்வகையில் வேறுபடுகிறது என்னும் வேறுபாட்டையும் அறிதல் வேண்டும். இவ்வாறே இந்நூலில் ஆராயப்பட்டுள்ள ஒவ்வொரு சமஷ்டியும் தனித்தனி மாதிரிகள் (Models) என்று கூறத்தக்க வகையில் அமைந்துள்ளன. ஆகையால் நாம் சுவிஸ் மாதிரி, பெல்ஜியம் மாதிரி, கனடா மாதிரி, இந்திய மாதிரி எனப் பல்வேறு சமஷ்டி மாதிரிகளைப் (Federal Models) பற்றிப் பேசுவதற்கும், விவாதிப்பதற்கும் நிறைய விடயங்கள் உள்ளன. இவ் விவாதங்கள் ஊடாக சமஷ்டி அரசியல் முறைகளின் அடிப்படையான அரசியல் யாப்புத் தத்துவங்களையும் (Constitutional Principles), அரசியல் கோட்பாடுகளையும் (Political Theories), உலகின் தேசிய இனங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றின் விடுதலைக்கும் வழி வகுக்கக் கூடிய வழிமுறைகளைக் கூறுவதான சமஷ்டித் தத்துவங்களையும் நாம் புரிந்து கொள்கிறோம்.

இந்நூலில் ஒற்றையாட்சி நாடான ஐக்கிய இராச்சியத்தினைப் பற்றிய கட்டுரை ஒன்றினையும் சேர்த்துள்ளோம். ஐக்கிய இராச்சியம் நாம் மேலே சுட்டிக்காட்டியது போன்று சமஷ்டி முறைத் தீர்வுகளை ஒற்றையாட்சி முறைக்குள் புகுத்தி அந்நாட்டின் தேசிய இனங்களின் பிரச்சினையைத் தீர்வு செய்கிறது. ஐக்கிய இராச்சியம் குறித்த கட்டுரையின் ஆசிரியர் ஜயம்பதி விக்கிரமரட்ண ஐக்கிய இராச்சியத்தின் அதிகாரப் பகிர்வு (Devolution) உபாயங்களை "The Devolution in the United Kingdom: Unitary in Theory, Otherwise in Practice" என அழகாகக் குறிப்பிட்டார். இதன் பொருள், "கோட்பாட்டு அளவில் ஒற்றையாட்சியாகத் தோற்றமளிக்கும் ஐக்கிய இராச்சியம் யதார்த்தத்திலும் நடைமுறையிலும் வேறாக, சமஷ்டி என்று கூறத்தக்க நிலைக்கு மாறுகிறது" என்பதாகும்.

## சமஷ்டி பற்றிய விரிவான வரையறைகள்

மேலே 'சமஷ்டி அரசியல் முறைகள் - சொற்றொடர் விளக்கம்' என்ற தலைப்பில் நாம் எடுத்துக் கூறிய சமஷ்டி பற்றிய வரைவிலக்கணம் அடிப்படையான (Basic) சமஷ்டிக் கூறுகளை மட்டுமே விளக்குகின்றது. ஆகையால் சமஷ்டி பற்றிய விரிவான வரைவிலக்கணம் ஒன்றையும் தருதல் அவசியம் எனக் கருதுகின்றோம். இவ்

**கனடா, பெல்ஜியம், சுவிற்சர்லாந்து, இந்தியா ஆகிய நான்கு நாடுகள் சமஷ்டிமுறை செயற்பாட்டில் உள்ள நாடுகளாகும். இவற்றுள் பெல்ஜியம் முன்னர் ஒற்றையாட்சி நாடாகவிருந்து, பின்னர் சமஷ்டி முறையைத் தழுவி இன்று முன்னேற்றப் பாதையில் பயணிக்கின்றது. தேசிய இனங்களின் பிரச்சினைகளைத் தீர்வு செய்வதில் புதுமையான அரசியல் யாப்பு உபாயங்களைக் கையாண்டு, சமஷ்டி முறையைப் பரிசோதனை செய்து வரும் ஸ்பானியா தேசம் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு முன்னுதாரணமாக விளங்குகிறது.**

*வரைவிலக்கணத்தை - றொனால்ட்.எல். வாட்ஸ் அவர்களின் நூலில் கூறியிருப்பவற்றைத் தழுவி பின்வருமாறு வகுத்துக் கொள்ள முடியும்.[2]*

**சமஷ்டியின் பொது இயல்புகள்:**

**1. இரு நிலைகளில் அரசாங்கம்:**

*சமஷ்டி முறையில் அரசாங்கம் இரு நிலைகளில் (Two Levels of Government) செயற்படும். மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்கள் என தெளிவான இரு நிலை அரசாங்கங்கள் செயல்முறையில் இருக்கும்.*

**2. பிரஜைகளுடன் நேரடித் தொடர்பு:**

*இருநிலை அரசாங்கங்களும் பிரஜைகளுடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருக்கும்.*

**3. அரச அதிகாரம்:**

*அரச அதிகாரம் (State Power) மத்தியிலும், மாநிலங்களிலும் பகிரப்பட்டிருக்கும். சட்ட ஆக்கம், நிர்வாகம், வரி விதிப்பு என்பன தொடர்பான அதிகாரங்கள் அரசியல் யாப்பின்படி பகிரப்பட்டிருக்கும். ஒவ்வொரு அரசுக்கும் உரிய அதிகார எல்லை வகுக்கப்பட்டு, வரையறுக்கப்பட்ட அதிகார எல்லைக்குள் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு இடமளிக்கப்படும்.*

**4. மத்திய நிறுவனங்களில் பிரதிநிதித்துவம்:**

*மத்திய நிறுவனங்களில் மாநிலங்களிற்கு பிரதிநிதித்துவம் (Representation) இருக்கும். சட்ட ஆக்கத்திற்குப் பொறுப்பான அவையின் ஓர் அங்கமான மேற்சபையில் (Second Chamber) சமஷ்டியின் அலகுகளிற்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும். இதன் மூலம் கொள்கை வகுக்கும் அதிகாரத்தினை மத்திய அரசு மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்கிறது.*

**5. அரசியல் யாப்பின் மேலாண்மை:**

*அரசியல் யாப்பு, யாவற்றுக்கும் மேலான சட்டமாக இருக்கும். அதனை ஒரு தலைப்பட்சமாகத் திருத்த முடியாது. மாநில அரசுகளின் கருத்துகளையும் கேட்டு அவற்றின் சம்மதத்துடன் தான் யாப்பினைத் திருத்தலாம். எல்லா மாநிலங்களினதும் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கும் மேற்சபையின் அங்கீகாரத்துடன்தான் அரசியல் யாப்புத் திருத்தம் செய்யப்படும்.*

**6. உயர் நீதிமன்றம் - பிணக்குகளிற்கு தீர்ப்புச் சொல்லும் நடுவர்:**

*சமஷ்டி நாடுகளில் உயர் நீதிமன்றம் சட்டமன்றத்திற்கோ, நிர்வாகத்திற்கோ கீழ்ப்பட்டதாக இருப்பதில்லை. அது இறையாண்மையுடைய சுதந்திரமான*

நிறுவனமாக அமைந்திருக்கும். சமஷ்டியின் உறுப்புகளான அரசுகளின் அதிகாரங்கள் தொடர்பான பிணக்குகளிற்கு தீர்ப்புச் சொல்லும் நடுவர் என்னும் வகிபாகத்தை உயர் நீதிமன்றம் பெற்றிருக்கும்.

### 7. அதிகாரங்களின் மேவுகை:

சமஷ்டிகளுக்கிடையிலே காணப்படும் பொது இயல்புகளை மேலே குறிப்பிட்டோம். சமஷ்டிகளுக்கிடையே உள்ள பொது இயல்புகளை மாதிரியாகக் கொண்டு தூய்மையான இலட்சிய மாதிரி (*Pure or Ideal Model*) ஒன்றை உருவாக்க முடியாது. அவ்வாறான தூய்மையான வடிவம் உலகின் எந்த நாட்டிலும் இருப்பதாகவும் கொள்ள முடியாது. சமஷ்டி முறைகளின் தோற்றம் ஒவ்வொரு தேசத்தினதும், வரலாற்றுச் சூழமைவுகளாலும், அவ்வத் தேசங்கள் எதிர் கொண்ட பிரச்சினைகளின் விசேட தன்மைகள் காரணமாகவும் தீர்மானிக்கப்படுபவை. இதனால் சமஷ்டிகள் பற்றிய ஒப்பீட்டாய்வில் அவற்றிற்கிடையிலான வேறுபாடுகளையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

சமஷ்டிகளுக்கிடையிலான வேறுபாடுகளில் முக்கியமானவை சில கீழே தரப்பட்டுள்ளன. [3]

1. சமஷ்டியின் உறுப்புகளாக உள்ள அரசுகள் எண்ணிக்கையில் சிலவாகவும் இருக்கலாம், பலவாகவும் இருக்கலாம்.
2. சமஷ்டியின் பரப்பளவு, சனத்தொகை என்பன வேறுபடலாம்.
3. அவற்றின் வளங்களும், பொருளாதார பலமும் வேறுபட்டதாக இருக்கலாம்.
4. சமஷ்டி நாடுகளின் இனக்குழுமங்கள் ஒன்றா அல்லது பலவா, அவை பிரதேச ரீதியாக எப்படிப் பரவியிருக்கின்றன? என்பதில் வேற்றுமைகள் இருக்கும்.
5. அரசின் பல மட்டங்களில் அதிகார மத்தியப்படுத்தல் (*Centralisation*) எவ்விதம் உள்ளது, அதிகாரம் பல்வேறு மட்டங்களிலும் பரவலாக்கப்பட்டுள்ளதா, நிறுவனங்கள்

சமஷ்டிகளுக்கிடையே உள்ள பொது இயல்புகளை மாதிரியாகக் கொண்டு தூய்மையான இலட்சிய மாதிரி (Pure or Ideal Model) ஒன்றை உருவாக்க முடியாது. அவ்வாறான தூய்மையான வடிவம் உலகின் எந்த நாட்டிலும் இருப்பதாகவும் கொள்ள முடியாது. சமஷ்டி முறைகளின் தோற்றம் ஒவ்வொரு தேசத்தினதும், வரலாற்றுச் சூழமைவுகளாலும், அவ்வத் தேசங்கள்  எதிர் கொண்ட பிரச்சினைகளின் விசேட தன்மைகள் காரணமாகவும் தீர்மானிக்கப்படுபவை.

சுயாதீனமாக உள்ளனவா, இல்லையா? என்ற விடயங்களில் வேறுபாடுகள் இருக்கும்.

6. அரசின் பல மட்டங்களில் வளப்பங்கீடு (*Distribution of Resources*) எவ்வாறு உள்ளது என்பதில் வேறுபாடுகள் இருக்கும்.
7. அரச அதிகாரம் சமஷ்டி அலகுகளில் பங்கிடப்பட்டிருப்பதில் சமத்துவம் உள்ளதா, அல்லது அசமத்துவம் (*Asymmetry*) உள்ளதா? என்பதைப் பொறுத்த வேறுபாடுகள்.
8. சமஷ்டி நிறுவன அமைப்புகளில் வேறுபாடுகள் இருக்கும். ஜனாதிபதி முறை உள்ளதா, அல்லது பாராளுமன்றமுறை உள்ளதா, அல்லது இரு வகைக்குள்ளும் அடங்காத கலப்பு முறை உள்ளதா?
9. மேற்சபையின் கட்டமைப்பு எத்தகையது? அதன் அதிகாரங்கள் எந்த வகையின என்பதைப் பொறுத்த வேறுபாடுகள்.
10. மாநில, மத்திய அரசுகளுக்கு இடையிலான கலந்தாலோசித்தல் (*Consultation*) எவ்விதம் நடைபெறுகிறது, ஒத்துழைப்பு (*Collaboration*) எவ்விதம் இடம்பெறுகிறது, அவற்றிற்கான நிறுவன ஒழுங்குகள் எவை? என்பன குறித்த வேறுபாடுகள்.
11. நீதித்துறையின் கட்டமைப்பு அதிகாரங்கள்

எப்படி உள்ளன, நீதி மீளாய்வுக்கு (Judicial Review) இடம் உள்ளதா? என்பதைப் பொறுத்த வேறுபாடுகள்.

### சமஷ்டிவாதம் சார்பாக

சமஷ்டிவாதம் சார்பாக (Indefence of Federalism) அறிஞர்கள் முன்வைக்கும் வாதங்கள் பின்வருவன: [4]

1. சமாதானத்தை நிறுவுதல், மக்களுக்குப் பாதுகாப்பை வழங்குதல், பொதுவான உயர் விழுமியங்களைக் கட்டமைத்தல், பன்மைத்துவ ஜனநாயகத்தை (Plural Democracy) வளர்த்தல் என்பனவற்றுக்கு உதவும் உயர் இலட்சியங்களை உடையது 'சமஷ்டிவாதம்'.

2. மனிதர்களிடையே நிலவும் வேற்றுமைகளை அல்லது பன்மைத்துவத்தை (Diversity) ஏற்றுப் போற்றுவதோடு அதனைப் பாதுகாக்கின்றது.

3. தேசிய மட்டத்தில் 'தோல்வி அடைபவர்களாக' (Losers at the National Level) இருந்து வரும் சிறுபான்மைத் தேசியங்களுக்குப் பிராந்திய மட்டத்தில் (Regional Level) 'வெற்றியாளர்கள்' ஆகும் வாய்ப்பை சமஷ்டி வழங்குகிறது.

4. சமஷ்டி முறைமை, அரசியல் பங்கேற்பை (Political Participation) அதிகரிக்கிறது. மக்களுக்கு நீதியையும், நிவாரணத்தையும் பெறுவதற்கான பல நுழைவழிகளை அது திறந்து விடுகிறது. மக்களுக்கான தெரிவுகள் (Choices) பலவற்றை வழங்குகிறது.

5. சமஷ்டிமுறை பல்வகையான புதிய பரிசோதனைகளுக்கு வாய்ப்பை வழங்குகிறது.

6. அரசாங்கத்தை மக்களுக்குக் கிட்டியதாகக் கொண்டு வருகிறது. மக்களின் தேவைகளுக்கு விரைந்து உதவக் கூடியதாக நிர்வாகத்தை ஆக்குகிறது.

நெருக்கடியிலுள்ள நாடுகளுக்கு பெரும்பாலான சந்தர்ப்பங்களில், சமஷ்டிவாதம் 'மிகக் குறைந்த தீமைகள் உடைய தெரிவு' (The Least Bad Option) எனலாம். இது வேறு எந்த மாற்று வழிகளையும் விடச் சிறந்த தெரிவாகும்.

இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகள் சமஷ்டிவாதத்தின் மீது நம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்ட அறிஞர் பெருமக்களால் எழுதப்பட்டவை. அவற்றை ஒரு சேரத்

**சமஷ்டி அரசியல் முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றன. சமஷ்டிகளிடையே காணப்படும் பொது இயல்புகள் என்னும் ஒற்றுமைகள் போன்றே அவற்றிடையே காணப்படும் வேற்றுமைகளும் முக்கியமானவை. கனடாவின் சமஷ்டி முறையின் தனித்துவத்தை நாம் கண்டறிவதற்கு, அது பிறநாடுகளின் சமஷ்டியில் இருந்து எவ்வகையில் வேறுபடுகிறது என்னும் வேறுபாட்டையும் அறிதல் வேண்டும்.**

தொகுத்துத் தமிழாக்கம் செய்து வழங்குவதில் நாம் மன நிறைவும் பெருமகிழ்வும் அடைகிறோம்.

### அடிக்குறிப்புகள்

1. WATTS.RONALD.L, COMPARING FEDERAL SYSTEMS, QUEEN UNIVERSITY (2008) MONTRE AL. 8 ஆம் பக்கத்தினைப் பார்க்க.
2. மேலது : 9 ஆம் பக்கத்தில் வாட்ஸ் சமஷ்டியின் பொது இயல்புகளை விபரித்துள்ளார்.
3. மேலது : 19 ஆம் பக்கத்தில் சமஷ்டிகளுக்கிடையிலான வேறுபாடுகள் விபரிக்கப்பட்டுள்ளன.
4. THE FEDERAL IDEA - READING MATERIALS PRESENTED BY THE CENTRE FOR POLICY ANALYSIS AND THE FORUM OF FEDERATIONS (பிரசுர ஆண்டு குறிப்பிடப்படவில்லை). இந்நூலின் 10 ஆவது பக்கத்தைப் பார்க்க.

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.



# வேலணை, சாட்டியில் பெருங்கற்காலப் பண்பாடு

பரமு புஷ்பரட்ணம்



அண்மைக்காலத்தில் வடஇலங்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள முக்கிய தொல்லியல் மையங்களில் தீவகத்தில் உள்ள சாட்டியும் ஒன்றாகும். இது யாழ்ப்பாண நகரத்தில் இருந்து ஆறு மைல் தொலைவில் வேலணைப் பிரதேசத்தில் உள்ள ஒரு கடற்கரைக் கிராமமாகும். இலங்கையின் வரலாற்றுப் பழைமை வாய்ந்த துறைமுகங்களைக் கொண்ட கிராமம் என்ற வகையில் சாட்டிக்குத் தனித்துவமான வரலாற்றுச் சிறப்புண்டு.

இதன் அமைவிடம் புவிச் சரிதவியல் அடிப்படையில் தமிழகத்திற்கு மிகக் கிட்டிய தூரத்தில் அமைந்திருப்பதால்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.

இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.

இவ்விடம் பண்டுதொட்டு தென்னிந்தியாவுடனும், தென்னிலங்கையுடனும் யாழ்ப்பாணக் குடாநாடு ஏற்படுத்திக் கொண்ட கடல்வழித் தொடர்பிற்குக் குறுக்கு நிலமாகவும், தமிழகப் பண்பாட்டை முதலில் உள்வாங்கிய தொடக்க வாயிலாகவும் திகழ்ந்ததெனக் கூறலாம். இவற்றை உறுதிப்படுத்தும் வகையில் இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும், ஐரோப்பியர் கால ஆவணங்களிலும் பல சான்றுகள் காணப்படுகின்றன. அத்துடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் இக்கிராமத்தில் பிற தேவைக்காக மண் அகழப்பட்ட போது எதிர்பாராமல் கிடைத்த தொல்லியற் சான்றுகளும், 1980 களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் மற்றும் பேராசிரியர் பொ. இரகுபதி ஆகியோர் இங்கு மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வில் சேகரித்த தொல்லியற் சின்னங்களும், தீவகம் பற்றி இலக்கியக் கலாநிதி வி. சிவசாமி எழுதிய நூலும் ஆய்வுக் கட்டுரைகளும் இவ்விடத்தின் பழைமையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

சாட்டிக் கிராமத்தில் பரவலாகக் காணப்படும் தொல்லியல் எச்சங்கள் இங்கு பண்டுதொட்டு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் இம்மக்கள் யார், எங்கிருந்து வந்தார்கள், எப்போது வந்தார்கள், இவர்களுக்கும் குடாநாட்டின் ஏனைய இடங்களில் வாழ்ந்த மக்களுக்கும் இடையிலான தொடர்பு என்ன? என்பன முக்கிய கேள்விகளாக உள்ளன. இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள நம்பகத் தன்மையுடைய தொல்லியற் சான்றுகளின் அடிப்படையில் இலங்கைக்குரிய பூர்வீகக் குடிகள் தென்னிந்தியாவின் தென்பகுதியிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் என்ற கருத்து பலமாக வலுப்பெற்று வருகின்றது.

1917 - 1918 காலப் பகுதிகளில் கந்தரோடையில் தொல்லியல் மேலாய்வில் ஈடுபட்ட போல்பீரிஸ் என்பவர் அநுராதபுரத்துக்கு அடுத்த புராதன நகராக கந்தரோடையை வர்ணித்தார். 1967 இல்

சாட்டிக் கிராமத்தில் பரவலாகக் காணப்படும் தொல்லியல் எச்சங்கள் இங்கு பண்டுதொட்டு மக்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஆயினும் இம்மக்கள் யார், எங்கிருந்து வந்தார்கள், எப்போது வந்தார்கள், இவர்களுக்கும் குடாநாட்டின் ஏனைய இடங்களில் வாழ்ந்த மக்களுக்கும் இடையிலான தொடர்பு என்ன? என்பன முக்கிய கேள்விகளாக உள்ளன.

பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் அகழ்வாய்வினரும், 1973 இல் விமலா பேக்லே என்பவரும் கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வினை ஆதாரமாகக் கொண்டு, தென்னிந்தியா அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள அரிக்கமேடு, ஆதிச்சநல்லூரை ஒத்த பண்பாட்டு மக்கள் கந்தரோடையில் வாழ்ந்தார்கள் என்ற கருத்தை முதன் முதலாக முன்வைத்தனர். 1980 இல் பேராசிரியர் பொ. இரகுபதி ஆனைக்கோட்டையில் கண்டுபிடித்த பெருங்கற்கால ஈமச்சின்னமும், 1989 - 1993 காலப்பகுதியில் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் பூநகரியில் கண்டுபிடித்த இப்பண்பாட்டுச் சின்னங்களும் குடாநாட்டின் தொடக்ககால மக்கள் தென் தமிழகத்தை ஒத்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிட மக்கள் என்பதை உறுதிப்படுத்தின. ஆயினும் இம் மூன்று இடங்களில் கிடைத்த ஆதாரங்களை வைத்து இதையொத்த குடியிருப்புகள் சமகாலத்தில் குடாநாட்டில் பரந்தளவில் இருந்ததெனக் கூறமுடியாதிருந்தது.

ஆனால் இலங்கையில் தமிழகப் பண்பாட்டை முதலில் உள்வாங்கிக் கொள்ளும் தொடக்க வாயிலாகவும், குறுக்கு நிலமாகவும் தீவகம் அமைந்திருப்பதால் அங்கு பண்டைய காலம் தொட்டு மக்கள் வாழ்ந்திருக்கலாம் என்ற ஐதீகம் நீண்ட காலமாக இருந்து வருகின்றது. யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொல்லியல்

அகழ்வாய்வில் இருந்து இப்பிரதேசத்தில் வாழ்ந்த தொடக்ககால மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிடர் என்பது உறுதியாகத் தெரியவந்துள்ளது. இலங்கையில் வாழ்ந்த இப்பண்பாட்டு மக்கள் பற்றி கலாநிதிப் பட்டத்திற்காக விரிவாக ஆய்வு செய்த பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் 'யாழ். மாவட்டத்தின் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளும், ஆதிக்குடிகளும்' என்ற கட்டுரையில் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கே தனித்துவமானதாகக் கருதப்படும் மெருகூட்டப்பட்ட கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள் காணப்படும் இடங்களில் ஒன்றாகச் சாட்டிக் கிராமத்தைக் குறிப்பிட்டுள்ளார். ஆனைக்கோட்டை, காரைநகர் ஆகிய இடங்களில் அகழ்வாய்வு மூலம் பெருங்கற்கால மக்களது எலும்புக் கூடுகளைக் கண்டுபிடித்த பேராசிரியர் பொ. இரகுபதி தனது தொல்லியல் மேலாய்வின் போது சாட்டிக் கிராமத்தில் இருந்து பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய புராதன கறுப்புச் - சிவப்பு நிற மட்பாண்டங்களைச் சேகரித்ததாக 'யாழ்ப்பாணத்தின் புராதன குடியேற்றங்கள்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொல்லியல் ஆய்வுக் குழுவினர் 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு மேற்கொண்ட அகழ்வாய்வின் போது கண்டுபிடித்த இப்பண்பாட்டிற்குரிய பலவகைப்பட்ட சான்றுகள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

இக்குடியிருப்புகள் பெரும்பாலும் கடற்கரையை அண்டிய மணற் பாங்கான இடங்களிலேயே முதலில் ஏற்பட்டிருந்ததனைக் காணமுடிகின்றது. இதற்கு அதிக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தாது அழிக்கக்கூடிய பற்றைக் காடுகள், இலகுவாக நீரைப் பெறக்கூடிய மணற்பாங்கான தன்மை என்பனவே காரணம் எனலாம். பொதுவாக வைரமான மண்ணுள்ள இடங்களில் நீரைப் பெறுவதற்கு வலுவான தொழில்நுட்பம் தேவை. ஆனால் அவ்வாறானதொரு தொழில்நுட்பம் அன்றைய காலத்தில் இலங்கையில் வளரவில்லை.

தென்னிலங்கையில் இயற்கையாகத் தோன்றிய ஆறுகள், குளங்கள், நீரைப் பெறுவதற்குச் சாதகமாக இருந்தமையால் அவ்விடங்களை அண்டிக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர். ஆனால் யாழ்ப்பாணத்தில் அந்த வாய்ப்புகள் இல்லை. இதனால் தான் தொழில்நுட்பத்துடன் இலகுவாக நீரைப் பெறக்கூடிய மணற்பாங்கான இடங்களில் அக்கால மக்கள் குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொண்டனர். மற்றும் இலகுவாக கடல் உணவைப் பெறக்கூடிய ஆழம் குறைந்த பரவைக்கடல், தரைவழிப் போக்குவரத்திற்கு சாதகமான தரைத்தோற்றம் என்பன இப்பிரதேசத்தில் குடியேற சாதகமான அம்சங்களாகக் காணப்பட்டன.

## ஈமச்சின்னங்களின் வடிவமைப்பு

வரலாற்று உதயகாலம் என்று அழைக்கப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டில் வாழ்ந்த திராவிட மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காகப் பெரிய கற்களைப் பயன்படுத்திப் பல்வேறு வடிவங்களில் சவ அடக்கங்களை வடிவமைத்தனர். இவை ஈமச்சின்னங்கள் என்று அழைக்கப்பட்டன. அந்தவகையில் ஈமச்சின்னங்களை ஈமத்தாழி, ஈமப்பேழை, தொப்பிக்கல், குத்துக்கல், கற்பதுக்கை, கல்வட்டம், கல்மேசை, குடைக்கல், நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் என அவற்றின் வடிவமைப்பைக் கொண்டு பலவாறு பிரிக்கலாம்.

சாட்டியில் யாழ். பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுக் குழுவினர் 2004 ஆம் ஆண்டில் மேற்கொண்ட தொல்லியல் அகழ்வாய்வின் போது அங்கு ஈமச்சின்னங்களை கண்டுபிடித்தனர். அகழ்வாய்வுக்கு உட்படுத்திய இடம் சாட்டிக் கிராமத்தின் மையப் பகுதியாகவும், வரலாற்றுப் பழைமைவாய்ந்த துறைமுகம் அமைந்த இடமாகவும் காணப்படுகிறது. இங்கு 10 மீற்றர் இடைவெளியில் 30 இற்கு மேற்பட்ட ஈமச் சின்னங்கள் இருந்ததற்கான சான்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 10 இடங்கள் அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அக்கால மக்களது பண்பாட்டு எச்சங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இவ் ஈமச் சின்னங்கள் காணப்பட்ட இடங்கள் கல்லும் மண்ணும் கலந்த நிலையில் மண் மேடுகளாகக் காணப்பட்டன. ஆனால் அவ்விடங்களை அகழ்ந்தபோது அவை ஏறத்தாழ 1 முதல் 2 அடி விட்டமும், ஏறத்தாழ 10 முதல் 12 அடி உயரமும் கொண்ட சிறிய கிணறு வடிவில் அமைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்த அம்சம் பெருங்கற்காலப் பண்பாட்டில் பின்பற்றப்பட்ட குழியடக்க ஈமச்சின்னங்களை நினைவுபடுத்துகிறது. இதன் அத்திவாரத்தின் ஒரு இடத்தில், குடை வடிவில் மிகப் பெரிய கல்லை வடிவமைத்து அதன் உட்பக்கத்தை வட்டமாகக் குடைந்து அதற்குள் இறந்தவர் உடலின் பாகங்கள் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. பொதுவாக இந்த வடிவில் அமைந்த பெருங்கற்கால ஈமச்சின்னம் குடைக்கல் எனத் தொல்லியலாளர்களால் அழைக்கப்படுகிறது.

இவ் ஈமச்சின்னங்களின் மேற்பகுதி பெரும்பாலும் மண் அகழ்வோரின் நடவடிக்கைகளால் சிதைவடைந்திருந்தாலும் கீழ்ப்பக்க மண் படையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புகளும் அவற்றுடன் இணைந்திருந்த பிற பொருட்களும் இவ்விடங்களில் எல்லாம் இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் பெருங்கற்கால மற்றும் வரலாற்றுத் தொடக்க கால ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டிருந்தன என்பதை உறுதிப்படுத்துகின்றன.

ஆயினும் இவ் ஈமச்சின்னங்கள் சிலவற்றின் மேலுள்ள கலாசார மண் படையில் பிற்பட்ட கால அரேபிய - சீன மட்பாண்டங்களும், ஒரு ஈமச் சின்னத்தில் கி.பி 13 - 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யாழ்ப்பாண அரசுக் கால சேது நாணயமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால் கீழ்ப் பகுதியில் உள்ள பெருங்கற்கால ஈமச்சின்னத்திற்கும் அதன் மேற்பகுதியில் உள்ள கிணற்று வடிவிலான கட்டிடப் பகுதிக்கும் உள்ள தொடர்பையிட்டு அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன.

பேராசிரியர் பொ. இரகுபதி இங்கு பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டிருந்த இடங்களுக்கு மேல் காலப்போக்கில் சிறிய கிணற்றுவடிவிலான கட்டடம் பிறதேவைக்காக அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறார். தமிழகத் தொல்லியல் அறிஞரான பேராசிரியர் சுப்பராயலு தமிழகத்தில் மேற்கொண்ட சில அகழ்வாய்வுகளை உதாரணம் காட்டி, சாட்டியில் கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் இப் பிராந்தியத்திற்கேயுரிய தனித்துவமான அம்சம் எனக் கூறுகிறார். ஆயினும் சிதைவடையாத நிலையில் உள்ள ஒரு ஈமச்சின்னத்தை சாட்டியில் கண்டுபிடித்து முழுமையாக அகழ்வு செய்யும் வரை இறுதியான முடிவுக்கு வருவது பொருத்தமாகத் தெரியவில்லை. ஆயினும் இங்கு வாழ்ந்த தொடக்ககால மக்கள் பெருங்கற்கால திராவிட மக்கள் என்பதை இதுவரை சாட்டியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன என்பதில் சந்தேகமில்லை.

**வரலாற்று உதயகாலம் என்று அழைக்கப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டில் வாழ்ந்த திராவிட மக்கள் இறந்தவர்களை அடக்கம் செய்வதற்காகப் பெரிய கற்களைப் பயன்படுத்திப் பல்வேறு வடிவங்களில் சவ அடக்கங்களை வடிவமைத்தனர். இவை ஈமச்சின்னங்கள் என்று அழைக்கப்பட்டன. அந்தவகையில் ஈமச்சின்னங்களை ஈமத்தாழி, ஈமப்பேழை, தொப்பிக்கல், குத்துக்கல், கற்பதுக்கை, கல்வட்டம், கல்மேசை, குடைக்கல், நீளக்கிடத்தி அடக்கம் செய்தல் என அவற்றின் வடிவமைப்பைக் கொண்டு பலவாறு பிரிக்கலாம்.**

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் ‘யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்’ என்ற இத்தொடர் அமையவுள்ளது.



# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில்

## வலிகாமம் – சுண்டிக்குழி

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

செ ன்ற கட்டுரையில் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றுத் தொடர்பாக நிலப்படத்தில் உள்ள விவரங்களைப் பற்றிப் பார்த்தோம். இனி யாழ்ப்பாண நகரத்தோடு எல்லையைப் பகிர்ந்துகொள்ளும் இன்னொரு கோவிற்பற்றான சுண்டிக்குழிக் கோவிற்பற்றைக் குறித்துப் பார்க்கலாம். இக் கோவிற்பற்றில் சுண்டிக்குழி, கரையூர், கொழும்புத்துறை, சிவியாதெரு, நளவபரவு, கடையகுடியிருப்பு என்னும் ஆறு துணைப் பிரிவுகள் இருந்ததாக நிலப்படம் காட்டுகிறது. (படம்1) இவற்றுள் கரையூர் தற்காலத்தில் குருநகர் எனவும், சிவியாதெரு இப்போது அரியாலை எனவும் அழைக்கப்படுகின்றன. நளவபரவு, கடையகுடியிருப்பு என்னும் இரண்டும் வேறு பதிவுகளில் காணப்படாத பிரிவுகள். நிலப்படம் காட்டும் சுண்டிக்குழிக் கோவிற்பற்றின் சிவியாதெருத் துணைப்பிரிவு முழுவதும் தற்போதைய நல்லூர் பிரதேசச் செயலர் பிரிவுக்குள்ளும் எஞ்சிய துணைப்பிரிவுகள் யாழ்ப்பாணப் பிரதேசச் செயலர் பிரிவுக்குள்ளும் அடங்குகின்றன. அதேவேளை, உள்ளூராட்சி நிர்வாக அமைப்பில் சிவியாதெருவின் கிழக்குப் பகுதி மட்டும் நல்லூர் பிரதேசசபையின் கீழும் ஏனைய பகுதிகள் யாழ்ப்பாண மாநகர சபையின் கீழும் வருகின்றன.

### எல்லைகள்

சுண்டிக்குழிக் கோவிற்பற்று, தெற்கிலும் வடக்கின் பெரும் பகுதியிலும் கடலேரியை

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.




**படம்-1: லெயுசிக்காமின் வலிகாமத்தைக் காட்டும் நிலப்படத்திலிருந்து சுண்டிக்குழிக் கோவிற்பற்று**

எல்லையாகக் கொண்டுள்ளது. வடக்கு எல்லையின் எஞ்சிய பகுதியில் நல்லூர், கோப்பாய் ஆகிய கோவிற்பற்றுகள் உள்ளன. மேற்கில் யாழ்ப்பாண நகரமும் நல்லூரும் காணப்படுகின்றன.

துணைப் பிரிவுகளான கரையூர், சுண்டிக்குழி, கொழும்புத்துறை என்பன தெற்கு எல்லையை அண்டிக் கடலேரி ஓரமாக மேற்கிலிருந்து கிழக்காக மேலே குறிப்பிட்ட வரிசை ஒழுங்கில் அமைந்துள்ளன. மிகச் சிறிய துணைப் பிரிவான கடையகுடியிருப்பும் தெற்குக் கரையோரமாகவே அமைந்துள்ளபோதும் ஏனைய மூன்று பக்கங்களிலும் இது கரையூர்ப் பிரிவால் சூழப்பட்டிருக்கிறது. மேலே குறிப்பிட்ட துணைப் பிரிவுகளுள் நளவபரவு மட்டுமே கடலேரியை எல்லையாகக் கொண்டிருக்கவில்லை. இது நல்லூர் எல்லையில் அமைந்துள்ளது. ஒப்பீட்டளவில் சிவியாதெரு மிகவும் பெரிய துணைப் பிரிவாகக் காணப்படுகிறது.

## குடியிருப்புகள்

மேலே குறிப்பிட்ட துணைப் பிரிவுகளின் பெரும்பாலான பெயர்கள் சாதிப் பெயர்களைத் தழுவியவையாகக் காணப்படுகின்றன. இது, மேற்படி பிரிவுகள் அல்லது அவற்றிலிருந்த முக்கிய குடியிருப்பு, குறித்த சாதியினருக்கு உரியதாக இருந்திருக்கும் என்பதைக் காட்டுகிறது. பிற்காலத்தில் நளவபரவு, கடையகுடியிருப்பு ஆகிய பிரிவுகளும் அவற்றின் பெயர்களும் பயன்பாட்டில் இல்லாமற் போய்விட்டன. சாதியைக் குறிக்கும் இடப்பெயர்களை மாற்ற வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் ஏனைய சாதி சார்ந்த பெயர்கள் மாற்றப்பட்டன. ‘கரையூர்’ என்பது அமைவிடம் சார்ந்த பெயரேயன்றி சாதிப் பெயர் அல்ல. ஆனாலும், அது சாதிப்பெயரைத் தழுவியதாகத் தோன்றுவதாற் போலும் அதற்கும் புதிய பெயர் வழங்கப்பட்டது. இக்குடியிருப்புப் போர்த்துக்கேயர் காலத்துக்கு முந்தியது.

*கேரோஸ் பாதிரியார் எழுதிய நூலில் இதற்குச் சான்றுகள் உள்ளன.*[1]

*சிவியாதெரு என்று அழைக்கப்பட்ட குடியிருப்பும் மிகவும் பழமையானது. நல்லூரைத் தலைநகராகக் கொண்டு தமிழ் மன்னர்கள் யாழ்ப்பாணத்தை ஆண்ட காலத்திலேயே இக்குடியிருப்பு இருந்துள்ளது. இப்பகுதியில் வாழ்ந்தவர்கள் அரச குடும்பத்தினருக்கும் பிற உயர்குடியினருக்கும் சேவை செய்ததால் தொடக்ககாலக் குடியிருப்பு நல்லூர் எல்லையை அண்டி இருந்திருக்கக்கூடும்.*

*கொழும்புத்துறையில் கடல்வழிப் போக்குவரத்துக்கான துறைமுகம் இருந்தது. குடாநாட்டிலிருந்து தலைநிலப் பகுதிகளுக்குச் செல்லும் பயணம் கொழும்புத்துறை ஊடாகவே இடம்பெற்றது. நல்லூர் மீது படையெடுத்த போர்த்துக்கேயர் கொழும்புத்துறையிலேயே தமது படைகளை இறக்கினர்.*[2] *போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலங்களிலும் இவ்விடத்தைத் தென்பகுதிக்குச் செல்வதற்கான துறையாக அதிகாரிகளும் மக்களும் பயன்படுத்தியுள்ளனர். இதனால், இங்கே கடல்வழிப் போக்குவரத்துச் சேவையை வழங்குபவர்கள் குடியிருந்திருப்பர். அதேவேளை, மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டவர்களும் இப்பகுதியில் குடியிருந்திருக்க வாய்ப்பு உண்டு.*

*நளவபரவு என்று குறிப்பிட்டுள்ள பிரிவு நளவர் சமூகத்தினர் பெரும்பான்மையாக வாழ்ந்த குடியிருப்பு எனக் கொள்வதில் தவறில்லை. இந்த நிலப்படத்துக்கு முன்னரோ பின்னரோ இந்தப் பெயர் வேறு பதிவுகளில் இருப்பதாகத் தெரியவில்லை. கோட்டையினதோ நகரத்தில் வாழ்ந்த ஒல்லாந்தக் குடும்பங்களினதோ தேவைக்காக இம்மக்கள் நகரத்துக்கு அண்மையில் புதிதாகக் குடியேற்றப்பட்டனரா என்பது ஆய்வுக்குரியது. எவ்வாறெனினும் இம்மக்கள் முந்நூறு ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதியில் வாழ்கின்றனர் என்பதற்கு இந்நிலப்படம் சான்றாக உள்ளது. நிலப்படத்தில் கடையகுடியிருப்பு எனக் குறித்துக் காட்டியிருக்கும் பகுதியில் இன்றும் அச்சமூகத்தினர் வாழ்ந்துவருகின்றனர். சுவாமி ஞானப்பிரகாசர் 1925 இல் எழுதிய நூலொன்றில், தேவாலயப் பதிவுகளைச் சான்று காட்டிக் குறித்த பிரிவினர் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றில் உள்ள கொட்டடியைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.*[3] *ஆனால், இந்த நிலப்படம், சுவாமி ஞானப்பிரகாசர் நூல் எழுதியதற்கு 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவர்கள் இப்பகுதியில் வாழ்ந்ததற்குச் சான்று தருகிறது.*

*நிலப்படத்தில் குறிப்பிடாத மேலும் சில குடியிருப்புகள் இப்பகுதியில் இருந்தன. குறிப்பாக, அரியாலை, பாசையூர் ஆகியவை இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன. அக்காலத்தில் இன்றைய கிழக்கு அரியாலையே அரியாலை எனப்பட்டது. போர்த்துக்கேயர் காலத்துப் பதிவுகளில் அரியாலையைச் சிவியாதெருவுக்குப் புறம்பான ஒரு ஊராகக் காட்டியுள்ளனர்.*[4] *இது மிகவும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட ஒரு குடியிருப்பு. நிலப்படத்தில் பாசையூர் குறிக்கப்படாவிட்டாலும் கரையோரமாக 'Paseoer Ratel' என்ற குறிப்பு உள்ளது. இது பாசையூர் துறையைக் குறிப்பதாக இருக்கலாம்.*

## வீதிகள்

*நிலப்படத்தின்படி, சுண்டிக்குழிக் கோவிற்பற்றிற் காணப்படும் முக்கிய வீதிகளுள் ஒன்று யாழ்ப்பாண நகரத்தையும் கொழும்புத்துறையையும் இணைக்கிறது. (படம் 2) இவ்வீதி, நகரத்தின் பிரதான வீதியின் கிழக்கு நோக்கிய நீட்சியாகக் காணப்படுகிறது. இது தற்காலத்திலும் அதிக மாற்றம் அடையவில்லை. இந்த வீதியில் இருக்கும் தேவாலயத்துக்கு அருகிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் இன்னொரு வீதி நல்லூரில் உள்ள இன்றைய முத்திரைச் சந்தைப் பகுதிவரை செல்வதையும் நிலப்படம் காட்டுகிறது. இந்த வீதியை நல்லூரையும் சுண்டிக்குழித் தேவாலயப் பகுதியையும் இணைப்பதற்காகப் போர்த்துக்கேயர் அமைத்திருக்கக்கூடும். இந்த வீதியுடன் துல்லியமாகப் பொருந்தக்கூடிய வீதி எதுவும் தற்காலத்தில் இல்லை. இன்றைய*




படம்-2: வையுசிக்காமின் நிலப்படத்தைத் தழுவி வரையப்பட்ட சுண்டிக்குழிக் கோவிற்பற்றின் படம்

பழைய பூங்கா வீதியின் கொழும்புத்துறை வீதிக்கு வடக்கேயுள்ள பகுதியும் கச்சேரி - நல்லூர் வீதியும் நிலப்படம் காட்டும் மேற்படி வீதிக்கு அண்மையில் உள்ளன. ஆனால் கச்சேரி - நல்லூர் வீதியின் நல்லூர் முனை நிலப்படம் காட்டும் இடத்துக்குக் கிழக்கே சற்றுத் தொலைவில் உள்ளது. நிலப்படத்தில் வீதி பிழையாக வரையப்பட்டதா அல்லது பிற்காலத்தில் வீதியின் தடம் மாற்றப்பட்டதா என்பது ஆய்வுக்கு உரியது. மேலே விவரித்த நல்லூர் - சுண்டிக்குழி இணைப்பு வீதியின் ஒரு புள்ளியிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் ஒரு வீதி கடலேரிக் கரையை அடைவதை நிலப்படம் காட்டுகிறது. இது இன்றைய கண்டி வீதித் தடத்தில் செல்வதாகவே தோன்றுகிறது. இந்த வீதியின் மேற்கூறிய தொடக்கப் புள்ளி தற்போதைய கண்டி வீதியைக் கச்சேரி - நல்லூர் வீதி சந்திக்கும் இடமாக இருக்கக்கூடும்.

பிற்காலத்தில் கண்டி வீதியை அகலமாக்கி மேம்படுத்தியபோது செங்கோணத் திருப்பங்களைத் தவிர்ப்பதற்காக இன்றைய பஸ்தியன் சந்தியிலிருந்து புதிய கச்சேரி வரையிலான வீதிப் பகுதி புதிதாக அமைக்கப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வீதிப் பகுதி நிலப்படத்தில் இல்லை. 1840 களை அண்டிய காலப் பகுதியில் இன்று அழிபாடடைந்து காணப்படும் பழைய கச்சேரிக் கட்டடத்தை முதன் முதலில் கட்டியபோது, இந்தப் பகுதியிலிருந்த வீதிகளின் தடங்களையும் பெருமளவுக்கு மாற்றியிருக்க வாய்ப்புகள் உண்டு. அருகிலிருந்த பழைய ஒல்லாந்தத் தேவாலயக் கட்டடம் முறையான வீதியமைப்புக்கு இடைஞ்சலாக இருந்ததால் அதை இடித்துவிட்டுச் சற்றுத் தள்ளிப் புதிய தேவாலயத்தைக் கட்டியதற்குச் சான்றுகள் உள்ளன.

## கட்டடங்களும் அமைப்புகளும்

சுண்டிக்குழிக் கோவிற்பற்றில் நிலப்படம் காட்டும் கட்டடங்களில் சுண்டிக்குழித் துணைப் பிரிவில் அமைந்துள்ள கோவிற்பற்றுத் தேவாலயம் முக்கியமானது. இது நல்லூரிலிருந்து தெற்கு நோக்கி வரும் வீதியும் யாழ்ப்பாண நகரிலிருந்து கொழும்புத்துறைக்குச் செல்லும் வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. போர்த்துக்கேயர் காலத்தில் சுண்டிக்குழியில் ஒரு தேவாலயம் இருந்துள்ளது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காகப் படையெடுத்து வந்த ஒல்லாந்தர் இத் தேவாலயத்தில் இரவைக் கழித்தது பற்றி போல்டேயஸ் பாதிரியார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.[5] இதையே ஒல்லாந்தர் கைப்பற்றித் தமது தேவைக்குப் பயன்படுத்தினர் என ஊகிக்கலாம். இந்தத் தேவாலயம் அலங்காரமானது என்றும் அவர் எழுதியுள்ளார்.[6] அந்நூலிலுள்ள சுண்டிக்குழித் தேவாலயத்தின் படமும் அதை நிரந்தரமான

கட்டடப் பொருட்களாலான அழகிய கட்டடமாகவே காட்டுகிறது.[7] (படம்3) இத்தேவாலயம் பல சமூகத்தைச் சார்ந்தவர்களும் வாழுகின்ற சுண்டிக்குழிக் கோவிற்பற்றின் ஒரே தேவாலயமாக இருந்தபோதும், இது சிவியார் சமூகத்துக்கு உரியது என போல்தேயஸ் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.[8] இதற்கான காரணம் தெரியவில்லை.

**சுண்டிக்குழிக் கோவிற்பற்றில் நிலப்படம் காட்டும் கட்டடங்களில் சுண்டிக்குழித் துணைப் பிரிவில் அமைந்துள்ள கோவிற்பற்றுத் தேவாலயம் முக்கியமானது. இது நல்லூரிலிருந்து தெற்கு நோக்கி வரும் வீதியும் யாழ்ப்பாண நகரிலிருந்து கொழும்புத்துறைக்குச் செல்லும் வீதியும் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது. போர்த்துக்கேயர் காலத்தில் சுண்டிக்குழியில் ஒரு தேவாலயம் இருந்துள்ளது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்காகப் படையெடுத்து வந்த ஒல்லாந்தர் இத் தேவாலயத்தில் இரவைக் கழித்தது பற்றி போல்டேயஸ் பாதிரியார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.**

கொழும்புத்துறைத் துறைமுகத்துக்கு அருகில் கரையோரமாக, கட்டடமொன்றைக் குறிக்கும் ஒரு குறியீடு காணப்படுகிறது. இது ஒரு தேவாலயக் கட்டடக் குறியீட்டின் அளவுக்குப் பெரிய குறியீடாக உள்ளதுடன் அமைப்பிலும் அதைப் போலவே உள்ளது. கட்டடத்தின் பெயர் குறிக்கப்படவில்லை. இது துறைமுகத்தோடு தொடர்புடைய ஒரு கட்டடமாக இருக்கலாம். பொருட்களைக் களஞ்சியப்படுத்தும் கட்டடமாக இருக்க வாய்ப்பு உள்ளது. இது படத்தில் உள்ளதுபோல் ஒரு பெரிய கட்டடமாக இருந்ததா என்பது தெரியவில்லை.

இன்றைய கண்டி வீதியின் தடத்தில் அமைந்த வீதி உப்பாற்றுக் கரையில் முடியும் இடத்தில் ஒரு சிறிய கட்டடமும் ஒரு மரமும் குறியீடாகக் காட்டப்பட்டுள்ளன. இது பொதுவாக அம்பலம் அல்லது மடத்தைக் குறிக்கும் குறியீடு என முன்னைய கட்டுரைகளில் பார்த்தோம். இவ்வாறான மடங்கள், வீதிகள் நீரேரிகளைக் கடக்கும் இடங்களில் இருப்பதை ஏற்கெனவே எடுத்துக்காட்டினோம். இங்குள்ள மடத்தை உப்பாற்றைக் கடந்து தென்மராட்சிக்குச் செல்லும் பயணிகளின் வசதிக்காக அமைத்திருக்கக்கூடும்.

## குளங்கள்

நிலப்படம் சுண்டிக்குழிக் கோவிற்பற்றில் 28 குளங்களைக் காட்டுகிறது. இவற்றுள் ஒன்றுக்குப் பெயர் இல்லை. இன்னொன்றுக்குப் பொதுப் பெயரை மட்டும் குறித்துள்ளனர். ஏனைய 26 குளங்களுக்கும் சிறப்புப் பெயர்கள் உள்ளன. இவற்றுள் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் இருப்பது பத்து மட்டுமே. இவை 1. பெயர் குறிப்பிடாத குளம், 2. தேவரிக் குளம், 3. கரையா குளம், 4. புங்கங்குளம், 5. வண்ணக்கன் குளம், 6. பிரப்பங் குளம், 7. நீர்நொச்சித் தாழ்வு, 8. மதிப்பன் குளம், 9. நெரிஞ்சிக் குளம், 10. வெட்டுக் குளம் என்பவை. தற்காலத்தில் இப்பகுதியில் உள்ள குளங்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம். அத்துடன், நிலப்படத்தில் காட்டியுள்ள சில குளங்கள் பிற்காலத்தில் மூடப்பட்டதற்கும் சான்றுகள் உள்ளன. எனவே நிலப்படத்தில் அக்காலத்திலிருந்த பல குளங்களைக் காட்டாமல் விட்டுள்ளனர் என்றே தோன்றுகிறது.

மேலுள்ள குளங்களுள் தேவரிக் குளம், பிரப்பங் குளம், நீர்நொச்சித் தாழ்வு என்பன இன்றும் உள்ளன. அவற்றுக்குத்




படம்-3: போல்டேயசின் நூலில் உள்ள சுண்டிக்குழித் தேவாலயத்தின் படம்

தற்காலத்திலும் அதே பெயர்களே வழக்கில் உள்ளன. பெயர் குறிப்பிடாத குளம் வண்ணார்பண்ணை, கரையூர் எல்லையில் உள்ளது. ஒப்பீட்டளவில் பெரிய குளமான இதைப் பல ஒல்லாந்தர்கால நிலப்படங்களில் காட்டியிருந்தாலும் எதிலும் இதன் பெயர் இல்லாதது வியப்புக்குரியது. பிரித்தானியர் காலத்தில் சப்பல் வீதியிலிருந்து முதலாம், இரண்டாம் குறுக்குத் தெருக்கள் வடக்கு நோக்கி நீட்டப்பட்டபோது மேற்படி குளம் குறுக்கே இருந்ததால் அது மூடப்பட்டிருக்கக்கூடும். நிலப்படத்தில் கரையா குளம் எனப் பெயர் தரப்பட்டுள்ள குளத்தைப் பிற்காலப் பதிவுகளில் காணப்படும் பட்டங்கட்டிக் குளத்துடன் அடையாளம் காணலாம். இக்குளம் திருக்குடும்பக் கன்னியர் மடத்துக்கு எதிர்ப் பக்கத்தில் இன்று தண்ணீர்த் தாங்கி உள்ள இடத்தில் இருந்தது. இதுவும் பிரித்தானியர் காலத்தில் மூடப்பட்டதற்குச் சான்றுகள் உள்ளன.[9] புங்கங்குளம் என்னும்

இடப்பெயரினூடாக இக்குளம் இருந்தது தெரிந்தாலும் அக்குளமும் இப்போது இல்லை. மேலுள்ள பட்டியலில் காணப்படும் ஏனைய குளங்களும் மூடப்பட்டிருக்கலாம் அல்லது பெயர் மாற்றம் பெற்றுத் தற்போதும் இருக்கக்கூடும். இது ஆய்வுக்குரியது.

யாழ் மாநகரசபைக்குள் அடங்காத அரியாலை கிழக்குப் பகுதியில் 1. மட்டி பிடித்த துரவு, 2. கூச்சே துரவு, 3. புளியடிக் குளம், 4. ஆலடிக் குளம், 5. குறிஞ்சாத் துரவு, 6. இத்தியடிக் குளம், 7. வெட்டுக் குளம், 8. ஆள்காட்டித் துரவு, 9. கிலிகிலிப்பைக் குளம், 10. கிராஞ்சிக் குளம், 11. புளியடிக் குளம், 12. இரணைக் குளம், 13. புல்லாண்டிக் குளம், 14. துரவு, 15. வெட்டுத் துரவு, 16. புளியங் குளம், 17. வெட்டுத் துரவு, 18. நரெயன் குளம் ஆகிய 18 குளங்களை நிலப்படம் காட்டுகிறது. மக்கள் தொகை அதிகமாக இருக்கக்கூடிய கோவிற் பற்றுகளிலேயே பல நீர்நிலைகள் வெறுமனே பொதுப் பெயரால் குறிக்கப்பட்டிருக்கும் ஒரு நிலையில், அதிகம் மக்கள் வாழாத அரியாலை கிழக்குப் பகுதியில் குறித்துள்ள எல்லா நீர்நிலைகளுக்குமே சிறப்புப் பெயர்கள் தரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், தற்காலத்தில் மேற்படி அரியாலை கிழக்குப் பகுதியில் 12 குளங்கள் மட்டுமே உள்ளன. இவை, 1. அம்மன் கோவில் குளம், 2. ஈச்சங்காட்டுக் குளம், 3. கூடைக் குளம், 4. குண்டுக் குளம், 5. சுடலையடிக் குளம், 6. காராமணக்குக் குளம், 7. வண்ணா குளம், 8. துரவடிப் பிள்ளையார் குளம், 9. முத்து விநாயகர் கட்டுக் குளம், 10. தாமரைக் குளம், 11. நரயன் வெளிக் குளம், 12. ஐயனார் கோவில் குளம் என்னும் பெயர்களில் பதியப்பட்டுள்ளன. மேலுள்ள இரண்டு பட்டியல்களையும் ஒப்பிடும்போது, பழைய பெயர்களும் புதிய பெயர்களும் பொருந்தி வராததைக் காணமுடிகிறது. அதேவேளை, தற்காலத்தில் எஞ்சியுள்ள குளங்களை நிலப்படத்திலுள்ள குளங்களுடன் அடையாளம் காண்பதும் இலகுவல்ல. ஓரளவு பெயர் ஒற்றுமையையும் அமைவிடத்தையும் கவனத்திற் கொள்ளும்போது, நிலப்படத்தில் நரெயன் குளம் (டச்சு மொழி எழுத்துகளில்: *Narean Coelam*) எனக் குறித்துள்ள குளமே தற்காலத்தில் நரயன் வெளிக்குளம் (ஆங்கில எழுத்துகளில்: *Narayan veli Kulam*) எனப் பெயர் பெற்றுள்ளதாகக் கருதலாம். தற்காலத்திலுள்ள 12 குளங்களுள் நான்கு குளங்கள் கோவில்களைத் தழுவிய பெயர்கள். இவை பிற்காலத்தில் அவற்றுக்கு அருகில் எழுந்த கோவில்களால் புதிய பெயர்களைப் பெற்றவை என்பது தெளிவு.

## குறிப்புகள்


1. *Fernao De Queyroz, The Temporal and Spiritual Conquest of Ceylon vol I, trans. S. G. Perera (New Delhi: Asian Educational Services, 1992), —.*
2. *Paulo Da Trinidade, Chapters on the Introduction of Christianity to Ceylon Taken from the Conques ta Spiritual Do Oriente of Friar Paulo Da Trini dade, trans. Edmund Peiris and Achilles Meersman (Colombo, 1972), 186.*
3. *S.Gnanaprakasar, XXV Years of Catholic Progress, (Jaffna: St. Joseph's Catholic Press, 1999), 116.*
4. *P. E. Pieris, The Kingdom of Jafanapatam 1645 (New Delhi: Asian Educational Services, 1995), 48.*
5. *Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959), 299.*
6. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 328.*
7. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 321.*
8. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", 328.*
9. *A. B. Fyers et all, "Report of the Commission appointed to inquire into the Outbreak of Cholera in the Northern Province," In Ceylon Sessional Papers 1877 (Colombo: Government Printer, 1877), 14.*

"யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் என்ற இத்தொடரானது, யாழ்ப்பாணத்தில் புராதன நூலக வரலாறு முதல் நவீன தனியார் நூலக வளர்ச்சி, பொது நூலக வளர்ச்சி, நூலகவியல் கல்வியின் அறிமுகம், நூலகத்துறையில் ஈழத்தமிழர்களின் முன்னோடி முயற்சிகளாக யாழ்ப்பாணத்தில் எழுந்த நூலகவியல்சார் நூல் வெளியீடுகள், நூலகவியல் துறைசார் சஞ்சிகைகளின் வெளியீடுகள், யாழ்ப்பாண கல்வியியல் வரலாற்றில் தடம் பதித்த நூலகங்களின் வரலாறு என்பவை உள்ளிட்ட விடயங்களை பற்றி பேசவிழைகின்றது.



பரமேஸ்வராக் கல்லூரிக் கட்டடம்

Image Source - tamil.adaderana.lk

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் ; ஒரு வரலாற்றுக் குறிப்பு

**பகுதி - 2**

*இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் 1974 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆறாம் நாள் திருநெல்வேலியில் அப்போதைய பிரதம மந்திரியாக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. அதற்கு முன்னரே 1974 இல் ஜூலை 10 ஆம் திகதி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் இயங்கத் தலைப்பட்டுவிட்டதை அதன் முதலாம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையின் கால எல்லைக் குறிப்பு தெரிவிக்கின்றது (இலங்கைப் பல்கலைக்கழகம் - யாழ்ப்பாண வளாகம் ஆண்டறிக்கை 1974.07.10 இலிருந்து 1975.12.31 வரையான காலப்பகுதியை உள்ளடக்கியுள்ளது).*




நடராஜா செல்வராஜா

நடராஜா செல்வராஜா, யாழ். இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நூலகராகவும், யாழ்ப்பாண, சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்.மாவட்ட நூலகப் பொறுப்பாளராகவும், இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகராகவும், இந்தோனேசியா, ஐக்கியநாடுகள் சபையின் கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகவும், ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளராகவும், கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலைய ஆய்வு நூலகப் பொறுப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகரும், நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகையின் தாபக ஆசிரியராகவும் செயற்பட்டார். ஊடகத்துறையிலும் பணியாற்றிவிட்டு, தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இவர், ரோயல் மெயில் தபால் நிறுவனத்தின் அந்நிய நாணயப்பிரிவில் அதிகாரியாக தற்போது பணியாற்றுகின்றார். இவர் நூலகவியல் பற்றி தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், நூலகவியல் பற்றியும் பல வெளியீடுகளை செய்துள்ளார்.

### இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம்

*சிக்கலும் முரண்பாடுகளும் நிறைந்திருந்ததொரு சூழலில், ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் யாழ்ப்பாண விஜயத்தை எதிர்த்து பாடசாலைகள், கடைகள் மூடப்பட்டு, யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழ் அரசியல்வாதிகளின் ஏற்பாட்டில் பகிஷ்கரிப்பு நடத்தப்பட்ட நிலையில் யாழ்ப்பாண வளாகம் அரச பாதுகாப்புப் படையினரின் பலத்த பாதுகாப்புடன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.*

*திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் தீவிரமடைந்திருந்த வேளையில் திடீரென்று அவசர அவசரமாக யாழ்ப்பாணத்தில் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகம் திறக்கப்பட்டமைக்கு, யாழ்ப்பாணத்தில் அரசின் விருப்பிற்கு எதிராக, 1974 ஜனவரி 3 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை நடந்தேறிய அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடும் மறைமுகமான காரணியாக அமைந்திருந்ததை அக்காலத்தில் வாழ்ந்திருந்த புத்திஜீவிகள் நன்கறிவர். யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டை நடாத்துவதற்கு தலைமை தாங்கி முன்நின்று உழைத்த பேராசிரியர் சு. வித்தியானந்தனையும் அவரது குழுவினரையும் புறந்தள்ளி, யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடாத்தப்படுவதை எதிர்த்து, கொழும்பில் அரசாங்கத்தின் ஆதரவுடன் அதனை நடத்தி முடிப்பதற்கு ஆதரவாக இருந்த இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் புத்திஜீவிகளுக்கு சன்மானம் வழங்கும் வகையில் யாழ்ப்பாண வளாகத்தின் உயர் பதவிகள் வழங்கப்பட்டமை, யாழ்ப்பாண வளாகத்தின் அவசரத் திறப்பு மறைமுகமாக வழிகோலியது.*

*அநியாயப் படுகொலைகளுடன் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நிறைவுற்று ஆறு மாதங்கள் கழிந்த நிலையில், இலங்கையின் கல்வி அமைச்சராகவிருந்த கலாநிதி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்முட் அவர்கள் 15.07.1974 அன்று இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகம் யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வரா கல்லூரியை உள்ளீர்த்து, அதனை பிரதான பல்கலைக்கழகக் கட்டிடமாகக் கொண்டு திறக்கப்படவிருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவித்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அப்போதைய துணைவேந்தர் எல்.எச். சுமணதாச அவர்கள் 19.07.1974 அன்று வித்தியாலங்கார வளாகத்தில் தமிழ் மற்றும் இந்து சமயத் துறையின் துறைத்தலைவராகப் பணியாற்றி வந்த கலாநிதி கா. கைலாசபதி அவர்களை 01.08.1974 முதல் யாழ்ப்பாண வளாகத்தின் முதலாவது தலைவராக நியமித்திருப்பதாக அறிவித்தார். மூன்றாண்டுகளின் பின்னர், யாழ்ப்பாண வளாகத்தின் இரண்டாவது தலைவராக கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன் தெரிவுசெய்யப்பட்டார். யாழ்ப்பாண வளாகம், 1979 ஜனவரி 1ஆம் நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமான வேளையில் கலாநிதி சு. வித்தியானந்தன் அதன் முதலாவது துணைவேந்தரானார்.*



சு.வித்தியானந்தன்
Image Source - ta.wikipedia.org

*இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தின் அவசர உருவாக்கத்தை அன்றைய*

**இலங்கையின் மற்ற மாநிலங்களில் எல்லாம் பல்கலைக்கழக வளாகங்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலங்களில், விரிவாக்கத்துக்கான வாய்ப்புகள் உள்ள, பல்கலைக்கழகத்துக்கேயுரிய தனித்துவமான நவீன கட்டிட வடிவமைப்புக்கான திட்டமிடல்களுடன் திறக்கப்பட்டு வந்த நிலையில், யாழ்ப்பாண வளாகம் விதிவிலக்காக, ஏற்கெனவே இயங்கு நிலையிலிருந்த யாழ்ப்பாணத்தின் மூன்று கல்வி நிறுவனங்களைச் சீர்குலைத்து, அவற்றில் பயின்றுவந்த பள்ளிச் சிறார்களின் இயல்பு வாழ்க்கையை அழித்து உருவாக்கப்பட்டிருந்தது.**

சில நேர்மையான சிங்கள புத்திஜீவிகள் 'அட்டுவ கடலா புட்டுவ ஹதுவா' என்ற சிங்களப் பழமொழியை பயன்படுத்தி, பிரதம அமைச்சர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவையும், அமைச்சர் செல்லையா குமாரசூரியர் உள்ளிட்ட அவரது குழுவினரையும் கிண்டலடித்திருந்தனர்.

'அட்டுவ' என்பது சிங்கள மொழியில் வீடுகளில் தானியங்கள் சேமித்து வைப்பதற்கு அமைக்கப்படும் மரப்பலகையிலான பரண்களைக் குறிக்கும் சொல்லாகும். இதனை தமிழில் 'அட்டாலை' அல்லது 'அட்டாளை' என்றும் சில ஊர்களில் குறிப்பிடுவதுண்டு. வீட்டில் பாவனையிலுள்ள ஒரு பரணை உடைத்து அதன் பயன்பாட்டைச் சீரழித்துவிட்டு, அந்த மரத்தைப் பயன்படுத்தி ஒரு கதிரையைச் செய்த மாதிரி, நன்றாக இயங்கி வந்தவையும் வரலாற்று முக்கியத்துவமானவையுமான யாழ்ப்பாணத்தின் மூன்று கல்வி நிறுவனங்களை உடைத்துத் தகர்த்து ஒரு பல்கலைக்கழக வளாகத்தை அமைத்தமையையே அவர்கள் இப் பழமொழியின் வாயிலாக மறைமுகமாகக் குறிப்பிட்டனர் என்பது தெளிவு.

இலங்கையின் மற்ற மாநிலங்களில் எல்லாம் பல்கலைக்கழக வளாகங்கள் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலங்களில், விரிவாக்கத்துக்கான வாய்ப்புகள் உள்ள, பல்கலைக்கழகத்துக்கேயுரிய தனித்துவமான நவீன கட்டிட வடிவமைப்புக்கான திட்டமிடல்களுடன் திறக்கப்பட்டு வந்த நிலையில், யாழ்ப்பாண வளாகம் விதிவிலக்காக, ஏற்கெனவே இயங்கு நிலையிலிருந்த யாழ்ப்பாணத்தின் மூன்று கல்வி நிறுவனங்களைச் சீர்குலைத்து, அவற்றில் பயின்றுவந்த பள்ளிச் சிறார்களின் இயல்பு வாழ்க்கையை அழித்து உருவாக்கப்பட்டிருந்தது. இதனை யாழ்ப்பாணத்துக் கல்விச் சமூகமும் எவ்வித எதிர்ப்புமின்றி கைகட்டி வேடிக்கை பார்த்திருந்தது.

1921 ஆம் ஆண்டில் சேர். பொன். இராமநாதன் அவர்களால் சைவப் பாடசாலையாக உருவாக்கப்பட்டு திருநெல்வேலியில் சுமார் முன்னூறு மாணவர்களுடன் சிறப்பாக இயங்கிவந்த பரமேஸ்வராக் கல்லூரியை ஆக்கிரமித்து, அங்கிருந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும், எவ்வித முன்னேற்பாடுமின்றி, விஸ்தீரணத்தில் மிகவும் சிறியதான திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயத்துக்கும் வேறு சில அயல் பாடசாலைகளுக்கும் அனுப்பிவைத்து, பரமேஸ்வராக் கல்லூரியை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக பெயர்சூட்டி, பல்கலைக்கழகத்துக்கான எவ்வித உட்கட்டுமான வசதிகளுமற்ற நிலையில் அவசர அவசரமாக இவ்வளாகம் உருவாக்கப்பட்டது.

வட்டுக்கோட்டையில் அமைந்திருந்த வெளிவாரிப் பட்டப்படிப்பு மையத்தையும், யாழ்ப்பாணக் கல்லூரி நூலகத்தையும் கபளீகரம் செய்து அங்கிருந்த அரிய பல நூல் சேகரிப்புகளையும் பல்கலைக்கழகத்துக்கான நூலகச் சேர்க்கையாக மாற்றி இலங்கையின் கல்வி வரலாற்றில் மாபெரும் குளறுபடியை அன்றைய அரசு மேற்கொண்டிருந்ததை தமிழ்க் கல்விச் சமூகம் எவ்வித எதிர்ப்புமின்றி மௌனமாக எதிர்கொண்டிருந்தது. இவ்வாறே கிழக்கிலும்,

*கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்தின் போது, அங்கு எவ்விதமான சிக்கலுமின்றி இயங்கிவந்த வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலய மாணவர்களை பிறிதொரு இடத்திற்கு மாற்றிவிட்டு அந்தக் கட்டிடத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தை நிறுவினர்.*

*யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச காணிகள் ஏராளம் தரிசாக இருந்த நிலையில் அங்கே பொருத்தமானதொரு புதிய கட்டடத்தை திட்டமிட்டு உருவாக்கும் மனநிலையில் சிறீமா அரசு இருக்கவில்லை. மாறாக அவசர அவசரமாக யாழ்ப்பாண மாவட்டத்தின் முதுசொங்களாக இருந்த திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி, திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம், யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய மூன்று முக்கிய கல்வி நிறுவனங்களின் அமைதியான நிர்வாகத்தைச் சீர்குலைத்து, ஒரு பல்கலைக்கழக வளாகத்தை சம்பிரதாயபூர்வமாக 1974 ஒக்டோபர் ஆறாம் திகதி கோலாகலமாகத் திறந்துவைத்தது.*

*திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி நூலகத்தில் இருந்த சேர். பொன் இராமநாதன், அவரது மருமகனார் சு. நடேசபிள்ளை ஆகியோரின் தனிப்பட்ட சேகரிப்புகள், யாழ்ப்பாணக் கல்லூரியின் நூற்றாண்டுப் பெருமைபெற்ற பட்டதாரிப் பயில்வுப் பிரிவு நூலகம் ஆகியன பலாத்காரமாக பல்கலைக்கழக வளாக நூலகத்துக்கான நூற்சேர்க்கைகளாக உள்வாங்கப்பட்டன.*

*ஆரம்பத்தில் விஞ்ஞான பீடம், மனிதப் பண்பியற் பீடம் ஆகிய இரு பீடங்களே யாழ்ப்பாண வளாகத்தில் காணப்பட்டன. பின்னாளில் 1975 இல் மனிதப் பண்பியற் பீடத்தின் கீழ் இயங்கும் வகையில், இணுவிலில் மருதனார்மடத்தில் இயங்கிவந்த இராமநாதன் நுண்கலைக் கல்லூரியும் உள்ளீர்த்துக் கொள்ளப்பட்டது. இந்து நாகரிகத்துறையின் தலைவராகவிருந்த பேராசிரியர் க. கைலாசநாதக் குருக்கள் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியின் தலைவராகவும் பணியாற்றினார்.*

*1978 இல் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகச் சட்டம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கிவந்த பல்வேறு வளாகங்களை தன்னாதிக்கம் உள்ள பல்கலைக்கழகங்களாக இயங்க வழியேற்படுத்தித் தந்தது. அதன் விளைவாக, யாழ்ப்பாண வளாகம், 1979 ஜனவரி 1 ஆம் நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாயிற்று. முதலாவது துணைவேந்தராக கலாநிதி சு. வித்தியானந்தன் நியமிக்கப்பட்டார். அவரது முயற்சியால் 07.08.1978 இல் மருத்துவபீடம் ஒன்றை கைதடியில் உருவாக்கும் பணிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தொடங்கப்பெற்றன. 8.10.1978 அன்று கல்வி உயர்கல்வி அமைச்சர் நிசங்க விஜேரத்தின அவர்கள் சம்பிரதாயபூர்வமாக இப்பணிகளை தொடக்கிவைத்தார். பின்னர் கொக்குவில், ஆடியபாதம் வீதியில் கட்டப்பட்ட மருத்துவ பீட வளாகத்திற்கு 1981 ஆம் ஆண்டில் இடமாற்றம் செய்யப்பட்டது. இதன் பயனாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இயங்கு நிலையிலான மருத்துவ பீடம் ஒன்றும் கிட்டிற்று. அங்கு பல்கலைக்கழகத்தின் நூலகப் பிரிவொன்றும் இயங்கியது. முதலாவது மருத்துவபீட மாணவர்கள் அணி 8.8.1979 இல் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். அவர்களுக்கான இறுதி MBBS பரீட்சை ஜுலை 1983 இல் நிறைவெய்தி முதலாவது வைத்தியர் அணி வெளியேறியது.*

*கொழும்பில் இயங்கிவந்த சுதேச மருத்துவத்தின் சித்த வைத்தியப் பிரிவு 1984 ஆம் ஆண்டு கைதடியில் இயங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வைத்தியபீட வளாகத்திற்கு கொண்டுவரப்பட்டது.*

### யாழ்ப்பாண வளாக நூலகம்

*1974-75 முதலாவது ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, 1974 ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாண வளாக உருவாக்கத்தின்போது, திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரி நூற்சேர்க்கைகளும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரயின் வெளிநிலைப் பட்டப்படிப்புகள் அலகுக்குச் சொந்தமான தேர்ந்த நூற்சேர்க்கைகளும்*



யாழ். பல்கலைக்கழக நூலகக் கட்டிடம்

Image Source - www.lib.jfn.ac.lk

ஒன்றுசேர்க்கப்பட்டு பல்கலைக்கழக நூலகத்திற்கான நூல்கள், சஞ்சிகைகள் உள்ளடங்கிய நூற்சேர்க்கையாகின. இவற்றின் எண்ணிக்கை 29,439 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வேளையில் தனியான, பொருத்தமான நூலகக் கட்டிடம் இல்லாமையால், பரமேஸ்வராக் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூடமும், பாடசாலை மாணவர் தங்குமிடமும் இணைக்கப்பட்டு தற்காலிக நூலகமாக மாற்றப்பட்டது. வளாகத்துக்கான விஞ்ஞானப் பிரிவு நூலகம் வட்டுக்கோட்டையிலேயே வைத்துப் பராமரிக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டுக்கான புதிய நூல் கொள்வனவுக்காக ரூபா 28,788.00 பெறப்பட்டிருந்தது. 1975 இல் மேலதிகமாக ரூபா 75,000.00 நூல் கொள்வனவுக்காகப் பெறப்பட்டிருந்தது. அவ்வாண்டு 12,434 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டும் கலாநிதி ஜேம்ஸ் தேவதாசன் இரத்தினம் அவர்களிடமிருந்து 5000 நூல்களும், யாழ்ப்பாணப் பேராயர் வண. கலாநிதி டீ. தியோகுப்பிள்ளை அவர்களினால் வழங்கப்பட்ட வண. ஞானப்பிரகாசர் அவர்களின் சேகரத்திலிருந்த 500 நூல்களும், வண. தனிநாயகம் அடிகளிடமிருந்து சஞ்சிகைகள் உள்ளிட்ட 1389 அரிய நூல்களும் ஆவணங்களும், சர்வதேச தூதராலயங்களிடமிருந்த மேலும் 500 நூல்களுமாக மொத்தம் 18,434 நூல்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்டும் உள்ளன. நூலகம் தொடங்கப்பெற்ற முதலாம் ஆண்டில் பல்கலைக்கழக நூலகம் 192 சஞ்சிகைகளுக்கு சந்தா செலுத்தியுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்ற முதலாம் ஆண்டில் யாழ்ப்பாண வளாகத்தில் மொத்தம் 515 அங்கத்தவர்கள் (மாணவர்கள், கல்விசார்,

கல்விசாரா வளாக ஊழியர்கள், ஆய்வு மாணவர்கள்) நூல் இரவல் பெறும் அங்கத்தவர்களாகப் பதிவுபெற்றுள்ளனர். ஆய்வு மாணவர்களிடம் மாத்திரம் ஓராண்டுக்கான அங்கத்துவ சந்தாவாக ரூபா 5.00 மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு நூல்கள் மாத்திரமன்றி பெறுமதிமிக்க புகைப்படங்களும் ஓவியங்களும் பொதுமக்களால் வழங்கப்பட்டன. கலைப்புலவர் நவரத்தினம் அவர்களின் அரிய சேகரிப்புகளில் ஒன்றான கலாநிதி ஆனந்தா கென்டிஷ் குமாரசுவாமி அவர்களின் ஓவியம் ஒன்றை "ஈழநாடு" பத்திரிகை அதிபரான கே.சி. தங்கராஜா அவர்கள் 10.10.1975 அன்று பல்கலைக்கழக நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.**

ஆரம்ப ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு வார நாட்களில் நூலகம் காலை 8:00 மணி முதல் மாலை 8:00 மணி வரை நூலகம் திறந்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. சனிக்கிழமைகளில் மாத்திரம் 8:00 மணிக்குத் திறந்து 3:00 மணி வரை நூலகம் பயன்பாட்டுக்கு விடப்பட்டுள்ளது.

1975 இல் இரண்டு முக்கியமான சேகரிப்புகளை நூலகம் உள்வாங்கியுள்ளது. 1972 ஒக்டோபர் 4 ஆம் திகதி மறைந்த இலங்கையின் பிரபல்யமான தொல்லியல் அறிஞரான செனரத் பரணவிதானையின் சேகரங்களில் அன்றைய காலகட்டப் பெறுமதியில் ரூபா 30,000 மதிப்புள்ள 2662 நூல்களும், யாழ்ப்பாண வைபவமாலை உள்ளிட்ட பல நூல்களைப் பதிப்பித்தவரும் இலங்கையின் புராதன சைவாலயங்கள் என்ற தலைப்பின் கீழ் ஈழத்தின் பிரபல சைவாலயங்களின் வரலாற்றை எமக்கு நூலுருவில் வழங்கியவருமான அமரர் குல. சபாநாதன் அவர்களின் அரிய வாழ்நாட் சேர்க்கைகளான ரூபா. 6000 பெறுமதியான 2137 நூல்களும் பல்கலைக்கழக நூலகத்துக்கென கொள்வனவு செய்து வழங்கப்பட்டன. தொல்லியல், மொழியியல், வரலாற்று ஆய்வாளர்களின் ஆய்வுத் தேவைகளுக்கு மிகுந்த பயன் தரும் மேற்படி நூல்களின் பெரும்பகுதி அவ்வாண்டில் பல்கலைக்கழக நூலக வளாகத்தினுள் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழகச் சுவடிக் காப்பகப் பிரிவுக்கு (Archives Section) அடிப்படைச் சேகரங்களாகப் பயன்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட பல அரிய நூல்களும் இந்தச் சுவடிக் காப்பகப் பிரிவிலும், தென்னாசிய சேகரப் பிரிவிலும் உசாத்துணை நூல்களாகப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் பேணிப் பாதுகாக்கும் பொருட்டு நூல்கள் மாத்திரமன்றி பெறுமதிமிக்க புகைப்படங்களும் ஓவியங்களும் பொதுமக்களால் வழங்கப்பட்டன. கலைப்புலவர் நவரத்தினம் அவர்களின் அரிய சேகரிப்புகளில் ஒன்றான கலாநிதி ஆனந்தா கென்டிஷ் குமாரசுவாமி அவர்களின் ஓவியம் ஒன்றை 'ஈழநாடு' பத்திரிகை அதிபரான கே.சி. தங்கராஜா அவர்கள் 10.10.1975 அன்று பல்கலைக்கழக நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தார். இவ்வோவியம் அப்போதைய 'தென்னாசிய அறை'யின் (South Asia Room) சுவரை அலங்கரித்திருந்தது. இதனைத் தொடர்ந்து 20.12.1975 அன்று சுவாமி ஞானப்பிரகாசரின் திருவுருவப்படமும் 'தென்னாசிய அறை'யில் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது.

எமது கட்டுரையின் கவனக்குவிப்பு, பல்கலைக்கழகத்தின் நூலக உருவாக்கமும் வளர்ச்சியுமே என்பதால், அந்த நூலகத்தின் உருவாக்கத்திற்கும் கட்டுமானத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாக அவ்வக் காலகட்டங்களில் பணியாற்றிய பிரதம நூலகர்களின் வாழ்வையும் பணிகளையும் அறிந்துகொள்வதன் வாயிலாகவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் படிமுறை வளர்ச்சி வரலாற்றை அறிந்துகொள்ள முடியும். அதற்கு




Image Source - free-apply.com

முன்னர் இலங்கைப் பல்கலைக்கழக நூலகத்தின் யாழ்ப்பாண வளாகத்தில் மிகவும் வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளுக்கு முகம்கொடுத்து, மிகக்குறைந்த ஆளணியுடன் அடிப்படை வசதிகள்கூட அற்ற நிலையில், ஒரு பல்கலைக்கழக நூலகத்தை திட்டமிட்டு வடிவமைத்து தீர்க்க தரிசனத்துடன் செயற்படுத்த முன்நின்று உழைத்த ஊழியர்களின் மனத்திடத்தையும் கௌரவத்துடன் நினைவுகூரவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது நூலகர் என்ற வகையிலும், இலங்கை நூலகச் சங்கத்தின் ஸ்தாபக முன்னோடி என்ற வகையிலும், அமரர் ஆர்.எஸ். தம்பையாவின் (றெஜினால்ட் செபரட்ணம் தம்பையா) பெயர் ஈழத்துத் தமிழ் நூலகவியல் வரலாற்றில் நிரந்தரமாகப் பதிவாகியுள்ளது. அவருடன் இணைந்து பணியாற்ற யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து தேர்வாகிய சிலரையும் இங்கே குறிப்பிடுவது அவசியமாகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தை அதன் அத்திவாரத்திலிருந்து திட்டமிட்டு வளர்த்தெடுப்பதில் ஆர்வத்துடன் செயற்பட்ட திரு. ஆ. சிவநேசச்செல்வன், செல்வி. கந்தையா, செல்வி. அழகரத்தினம், திரு. தனபாலசிங்கம் (சிங்கம்) ஆகிய நூலக ஊழியர்களின் பணி மிக முக்கியமானது. இவர்களுடன் பேராதனைப் பலகலைக்கழகத்திலிருந்து திரு. செல்வேந்திரன், பட்டியலாக்கப் பணிகளுக்காக திருமதி. சிவராஜா, திருமதி. பரமேஸ்வரன், திரு P.D.W. டீ சில்வா ஆகியோர் ஆரம்ப கட்டத்தில் நூலகப் பணியாளர்களாக உள்வாங்கப்பட்டனர். நவம்பர் **1975** இல் திரு. மக்கார்வி (Mr. Terence McGarvey) வட அயர்லாந்தின் பெல்பாஸ்ட் (Belfast) நகரிலிருந்து பிரித்தானியாவின் V.S.O. என்ற பிரபல்யமான கடல் கடந்த தொண்டர் சேவைகள் அமைப்பினால் (Volunteer Services Overseas) இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்திற்கு இரண்டு ஆண்டு சேவைத்திட்ட ஒப்பந்தத்தின் கீழ் தொண்டர் பணிக்காக அனுப்பி

வைக்கப்பட்டிருந்தார். அவரது பதவிக் காலத்தை பிரித்தானிய V.S.O. தொண்டர் அமைப்பு நீடித்திருந்த காரணத்தினால் அவர் 1979 ஜூன் வரை பல்கலைக்கழகத்தில் சேவையைத் தொடரும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். அவருக்கு பல்கலைக்கழக நூலகத்தின், உதவி நூலகர் என்ற பதவி நிலையில் பட்டியலாக்கப் பிரிவை வழிநடத்தும் பொறுப்பு வழங்கப்பட்டது. பின்னாளில் சிவனையா ஜீவன், திருமதி. ரோகிணி பரராஜசிங்கம் ஆகியோர் நூலக சேவையில் அமர்த்தப்பட்டனர்.

வட்டுக்கோட்டையில் எஞ்சியிருந்த பல்கலைக்கழகத்தின் நூற்சேர்க்கையினைப் பராமரித்து அங்கிருந்து இயங்கிய பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை மாணவர்களின் நூலகத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் பணிக்காக செல்வி. சிவஞானசுந்தரம் அவர்களும், பின்னர் திரு. என். சுப்பிரமணியம் அவர்களும் இளநிலை உதவி நூலகர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். வட்டுக்கோட்டையில் பல்கலைக்கழகப் பிரிவு இயங்கிய கட்டிடத் தொகுதி படிப்படியாக யாழ்ப்பாணக் கல்லூரியிடம் கையளிக்கப்பட்டது. டிசம்பர் 1978 இல் முழுமையாக யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்திலிருந்து வெளியேற வேண்டியேற்பட்டது. திருநெல்வேலியில் பல்கலைக்கழக வளாகத்திலேயே ஜூலை 1978 இல் முதலாம் கட்ட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்திருந்த இயற்கை விஞ்ஞானப் பிரிவுக் கட்டிடத்திற்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இயங்கிய பிரிவு மாற்றப்பட்டதுடன், வட்டுக்கோட்டையில் இயங்கிய நூலகப் பிரிவும் பிரதான நூலகத்திற்குள் உள்வாங்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தை ஆரம்பகட்டத்தில் வளர்த்தெடுப்பதில் மிகுந்த ஈடுபாட்டுடன் இயங்கிய முதல் மூன்று நூலகர்கள் பற்றிய குறிப்புகளின் வழியாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் வளர்ச்சியின் சில கூறுகளை நாம் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

### அமரர் ஆர்.எஸ். தம்பையா : யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் நூலகர்

அமரர் ஆர்.எஸ். தம்பையா அவர்கள் மலையகத் தலைநகர் கண்டியில் பிறந்தவர். நான்கு வயதிலேயே தன் அன்னையை இழந்தவர். அதன் பின் தந்தையாரின் ஊரான அச்சுவேலிக்குத் திரும்பி, அங்கே அவரது தமக்கையின் அரவணைப்பில் இறைபக்தியுள்ள கிறிஸ்தவக் குடும்பப் பின்னணியில் வளர்ந்து வந்தார். அவரது சகோதரி மேபல் தம்பையா, யாழ். வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபராக நீண்டகாலம் பணியாற்றி ஓய்வுபெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலைத்தேய வெஸ்லியன் மிசனரிமாரின் ஆதிக்கத்திலிருந்த அதிபர் பதவியை தனதாக்கிக்கொண்ட முதலாவது சுதேசிய அதிபராக மேபல் தம்பையா வரலாற்றில் மதிக்கப்படுகின்றார்.

நூலகர் ஆர்.எஸ். தம்பையா அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை சென். ஜோன்ஸ் கல்லூரியில் பெற்ற பின்னர் மெட்ராஸ் பிரஸிடென்சி கல்லூரியில் உயர்கல்வியைப் பெற்றுத் திரும்பினார். அதன் பின்னர் 1955 இல் புவியியல் ஆசிரியராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இணைந்து, சில காலத்தின் பின்னர் நூலகத்துறையின் பால் கொண்ட ஈடுபாடு காரணமாக, யாழ்ப்பாணக் கல்லூரியின் நூலகராகவும் பணியாற்றியுள்ளார். வட்டுக்கோட்டையில் அவர் பணியாற்றிய வேளையில் 1957 – 1958 காலகட்டத்தில் நூலகத்துறைக்கான தனது எம்.ஏ. பட்டத்தையும் ஐக்கிய அமெரிக்காவின் இல்லிநொய்ஸ் (Illinois) பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டார். 1958 இல் பட்டப் படிப்பிற்காக அமெரிக்காவில் தங்கியிருந்த வேளையில் 1958 இல் 'மதம்சார் அரங்கியல்" பாடத்துறையில் நியூ யோர்க்கிலுள்ள 'Union Theological Seminary in New York' என்ற கல்வி நிறுவனத்தில் பயின்று தேர்ச்சி பெற்றார். அரங்கியல் துறையின் பாற் கொண்ட இவரது ஈடுபாடு பின்னாளில் பல ஆங்கில தமிழ் நாடகங்களை இவர் இலங்கையில் மேடையேற்ற வழிவகுத்தது.

*1966 – 1968 காலகட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் ஓராண்டு விடுப்புப் பெற்று அமெரிக்காவுக்குச் சென்று அங்குள்ள கன்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் (Kansas University) புவியியல் பாடத்தை கற்பித்ததுடன், அப் பல்கலைக்கழகத்தின் தென் ஆசியப் பிரிவின் நூலகராகவும் சிறிதுகாலம் பணியாற்றியிருந்தார். அதுவே பின்னாளில் கல்லூரி நூலகராக இருந்த இவரது கவனத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை நோக்கித் திருப்பியிருந்தது.*

*யாழ்ப்பாணக் கல்லூரி வெளிநிலைப் பட்டப்படிப்புகள் அலகின் நூலக வளங்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திற்குள் உள்வாங்கப்பட்ட வேளை ஆர்.எஸ். தம்பையாவும் யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து நீங்கி, பல்கலைக்கழக நூலகர் பதவியை பெற்றுக்கொண்டார். ஆரம்ப காலத்தில், பரமேஸ்வராக் கல்லூரியில் தற்காலிகமாக ஒரு கட்டிடத்தில் மனிதப் பண்பியல் பீடத்திற்கான நூலகமும், வட்டுக்கோட்டையில் அறிவியல் பீட நூலகமும் ஆரம்பிக்கப்பட்டன. பல்கலைக்கழக கல்வித் தகுதி அடிப்படையில் அவருக்கு பதில் நூலகர் தரத்திலேயே பணியாற்ற முடிந்தது. அங்கு அவர் 1974 – 1981 காலகட்டத்தில் பணியாற்றி பல்கலைக்கழக நூலகமொன்றின் ஆரம்பகட்ட கட்டமைப்பினை கடின உழைப்பினை நல்கி, வெற்றிகரமாகச் செய்துமுடித்தார். இவரது காலத்திலேயே யாழ். பல்கலைக்கழக நூலகத்திற்கான நிரந்தர அமைவிடத்துக்கான கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. விஞ்ஞான பீடத்திற்கும் கலைப்பீடத்திற்கும் நடுவில் பார்வதி பரமேஸ்வரன் ஆலயத்திற்கு தென்மேற்கில் இராமநாதன் வீதியை நோக்கி அமைந்த இடத்தில் 1980 ஆம் ஆண்டில் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. நூலகர் தம்பையாவின் பணிக்காலத்தில் கட்டிடத்தை வளர்த்துச் செல்லும் முயற்சியில் மும்முரமான போராட்டத்தினை அவர் முன்னெடுத்தபோதிலும், சாணேற முழம் சறுக்கும் நிலையே அவரது கசப்பான அனுபவங்களாகின. அவர் பணியாற்றிய 1974 தொடக்கம் 1981 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஊர்ந்து சென்ற*

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தை ஆரம்பகட்டத்தில் வளர்த்தெடுப்பதில் மிகுந்த ஈடுபாட்டுடன் இயங்கிய முதல் மூன்று நூலகர்கள் பற்றிய குறிப்புகளின் வழியாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் வளர்ச்சியின் சில கூறுகளை நாம் உய்த்துணர்ந்து கொள்ளலாம்.**

*கட்டிட அமைப்புப் பணி 2000 ஆம் ஆண்டளவிலேயே 67,718 சதுர அடிகள் கொண்ட சதுர நிலப்பரப்பில் கட்டி முடிக்கப்பட்டது. அதற்கிடையில் பல்வேறு புதிய துறைகள் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்டதுடன் புதிய மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இவர்கள் அனைவருக்கும் வரையறுக்கப்பட்ட வளங்களுடனும், தற்காலிக கட்டிட வசதியுடனும் சேவைகளை வழங்க நிர்வாகம் நிர்ப்பந்தித்தமையால், நூலகருக்கும், ஆர்வத்துடனும், எதிர்பார்ப்புகளுடனும் இயங்கிய அவருடைய நூலகக் குழுவினருக்கும் அழுத்தங்கள் அதிகரித்த வண்ணமே இருந்தது. நைஜீரியாவில் வேலைவாய்ப்புப் பெற்றதும் 1981 இல் திரு. ஆர்.எஸ்.தம்பையா அவர்கள் தனது நூலகப் பொறுப்பாளர் பணியிலிருந்து விலகிக்கொண்டார். அவரைத் தொடர்ந்து அங்கு அர்ப்பணிப்புடன் ஆரம்பம் முதல் சேவையாற்றிய நூலக ஊழியர்களும் படிப்படியாக பல்கலைக்கழக நூலக சேவையிலிருந்து நீங்கி பிற துறைகளில் இணைந்துகொள்ள ஆரம்பித்தனர். சிலர் பல்கலைக்கழகத்திலிருந்தே விலகிச்சென்று பிற நிறுவனங்களில் நூலகத்துறையுடன் சம்பந்தப்படாத தொழில்வாய்ப்புகளை ஏற்றுக்கொண்டார்கள்.*

*நவீன நூலகக் கட்டிடத்தில் சேவையாற்றும் வாய்ப்பினை ஆர்.எஸ். தம்பையா அவர்கள் பெற்றிராத போதிலும், வரையறுக்கப்பட்ட நிதி, ஊழியர் வசதிகளுடன் ஒரு பல்கலைக்கழகத்திற்கான அறிவியல் சேர்க்கையை உள்ளடக்கிய ஆரம்பகட்ட அடிப்படைக் கட்டமைப்பினை வெற்றிகரமாக அவரே ஏற்படுத்தியிருந்தார் என்பதை மறுக்கவியலாது.*

*(தொடரும்)*

இலங்கை முஸ்லிம்கள் குறித்து பண்பாட்டு மானிடவியல் ரீதியான ஆய்வுகளை மானிடவியல் ஆய்வு மரபுகளைப் பின்பற்றி முறையான பரந்துபட்ட வகையில் மேற்கொண்டவர் பேராசிரியர் டெனிஸ் மெக்கில்ரே. அமெரிக்கரான டெனிஸ் மெக்கில்ரே கொலராடோ பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைப் பேராசிரியர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் குறித்த பரந்துபட்ட மானிடவியல் ஆய்வுகளை மேற்கொண்ட மேற்கத்தேயப் பேராசிரியர்களுள் மிக முக்கியமானவர் மெக்கில்ரே. குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பண்பாட்டு மானிடவியல் மரபுகள், தொன்மங்கள், பண்பாட்டுக் கூறுகள் குறித்த விரிந்த ஆய்வுகளை மேற்கொண்டு அதனை உலகப் பரப்புக்குக் கொண்டு சென்றவர் என்ற வகையில் இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, மானிடவியல் மரபுகள், தொன்மங்கள் பற்றிய அவரது சமூகவியல் நோக்கிலான ஆய்வுகள் மற்றும் கள ஆய்வுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் 'டெனிஸ் மெக்கில்ரே ஆய்வுகளில் தமிழரும் முஸ்லிம்களும் : பண்பாட்டு மானிடவியல் நோக்கு' எனும் தலைப்பில் வெவ்வேறு உப தலைப்புகளுடன் வெளிவரும்.

*ஆங்கில மூலம் : டெனிஸ் மெக்கில்ரே*

# அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள்: இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம்

**பகுதி -11**




ஜிஃப்ரி ஹாசன்

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 'போர்க்குணம் கொண்ட ஆடுகள்', 'அகாலத்தில் கரைந்த நிழல்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.

இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.


## மட்டக்களப்பு பிரதேசத்தில் இனக்குழப்பங்கள்

20 ஆம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னரும் கிழக்குக் கரையோரப் பகுதியில் இன உறவுகளைப் பாதித்த பல உள்ளூர் தமிழ் – சோனகக் கலவரங்கள் மற்றும் இடையூறுகள் ஆகியவற்றை பிரபலமான குறிப்புகள் விவரிக்கின்றன. உள்ளூர் தமிழ் – சோனக மோதல்களை நான் நேரடியாகக் காணவில்லை. என்றாலும், இதுபோன்ற மோதல்கள் பற்றிய வாய்வழிப் பதிவுகளை நான் சேகரித்தேன். இதற்கு உதாரணமான ஒரு சம்பவம் தேர்தலுக்குப் பிந்தைய பழிவாங்கல் ஆகும். வாக்களிப்பதாகக் கூறி பணமும், சாராயமும் பெற்றுக்கொண்ட பின், வாக்களிக்கத் தவறியமைக்காக எதிர்ச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மீதான தாக்குதல் இடம்பெற்றது. ஒரு தனிப்பட்ட ஆத்திர மூட்டலில் இருந்து இரண்டாவது வகை மோதல்கள் எழும். இது ஒட்டுமொத்த தமிழ் அல்லது சோனகச் சமூகத்திற்கும் பொதுவான அவமானமாகக் கருதப்பட்டது.

எடுத்துக்காட்டாக, 1960 களின் பிற்பகுதியில், குடிபோதையில் சோனக ஆண் ஒருவர், பொதுவெளியில் தனது முன்னேற்றத்தை நிராகரித்த ஒரு தமிழ்ப் பெண்ணின் சடை முடியை வெட்டியதாகக் கூறப்பட்டபோது, ஒரு அப்பாவிச் சோனகர் தன் பார்வையையும், காதையும் விரைவில் இழந்தார். ஒரு வாரத்திற்கு இனப் பதட்டமும் வீதித் தடைகளும் இருந்தன. ஓராண்டு அல்லது

அதற்குப் பிறகு, சோனக இளைஞர்கள் அக்கரைப்பற்றில், காந்தியத்தால் கவரப்பட்டு, சிரமதான சமூக சுய உதவித் திட்டத்தை ஏற்பாடு செய்தனர். அது சோனக விவசாயிகளுக்கு இனக் கலவரங்கள் நடந்தால் தங்கள் வயல்களுக்குச் செல்லும் போது பதுங்கியிருந்து தப்பித்து வர தோதான பாதையாக அமைந்தது.

மூன்றாவது வகை வன்முறையானது குடியிருப்புக் கட்டிடத் தளங்கள் உட்பட நிலத்திற்கான வளர்ந்து வரும் போட்டியுடன் தொடர்புடையது. கடந்த 150 ஆண்டுகளில், தமிழர்கள் கல்வி மற்றும் அரச தொழில்களில் ஈடுபாடு காட்டி வரும் அதேநேரம், சோனகர்கள் வெற்றிகரமாக தங்களின் விவசாய நிலம் மற்றும் வணிகங்களை விரிவுபடுத்துவதில் ஆர்வம் காட்டினர்.

வட இந்தியாவில் நிகழும் இந்து - முஸ்லிம் கலவரங்கள் குறித்த பதிவுகளின் அடிப்படையில், இலங்கையிலும் தமிழ் - சோனக மோதல்கள் மத ஆத்திர மூட்டல்களால் தூண்டப்படும் என்று நான் ஆரம்பத்தில் கருதினேன் (முஸ்லிம் பசுக்கொலை, பள்ளிவாசல்களுக்கு அருகில் இந்து ஊர்வலங்கள் போன்றவை). ஆனால், நான் பதிவு செய்த கிழக்குக் கரையோர தமிழ் - சோனக மோதல் தொடர்பான சம்பவங்களுக்கு 'மதப்' பிரச்சினைகள் காரணமில்லை. இந்த மோதல்களில் இது ஒரு குறைந்தபட்சக் காரணமாகக் கூட இருக்கவில்லை. 1989 இல் இந்திய அமைதி காக்கும் படை வெளியேறியதன் பின்னர், அக்கரைப்பற்றில் உள்ள பத்ரகாளி இந்து ஆலயத்தை (இலங்கை இராணுவத்தின் ஒப்புதலுடன்) அழித்தது போன்ற மதத் தலங்கள் குறிவைக்கப்பட்ட சம்பவத்தில், கோவில் அமைந்துள்ள சோனகக் குடியிருப்புச் சுற்றுப்புறத்தின் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கான விருப்பமே அடிப்படை நோக்கமாக இருப்பது போல் தெரிகிறது.

இத்தகைய நிகழ்வுகள், வரலாற்று நெடுகிலும் நடந்தது என்று கருதப்படுவதை விடவும் நவீனத்திற்கு முந்தைய தமிழ் - இந்து அரசியல் ஆதிக்கம், சாதியப் படிநிலைகள் மற்றும் நிலப்பிரபுத்துவ நில உடமை முறைகளில் இருந்து சோனக சமூகத்தின் படிப்படியான விடுதலையின் ஒரு பகுதியாக அவை புரிந்து கொள்ளப்பட வேண்டும் (McGilvray 1982c). தற்காலத்தில் சோனகர்கள் தமிழர்களிடமிருந்து பொருளாதாரச் செழிப்பு மற்றும் அரசியல் சுதந்திரத்தை அனுபவிக்கின்றனர். ஒரு நூற்றாண்டுக்கு முன்பு இது கற்பனையும் செய்து பார்க்க முடியாத ஒன்று. ஆயினும், தமிழ்ச் செல்வந்தர்கள், உயர்சாதித் தமிழர்கள் போன்றோர் தங்களின் பரம்பரை அந்தஸ்து, சலுகைகளின் இழப்பு அல்லது வளர்ந்து வரும் பொருத்தமின்மையை பிரதிபலித்த இந்தப் போக்கைக் குறித்து அறிந்திருந்தார்கள். பெரும்பாலான உயர்சாதித் தமிழர்கள் தங்களை இன்னும் தாழ்ந்தவர்களாகவே பார்க்கின்றனர் என்பதை சோனகர்கள் முழுமையாக அறிந்துகொண்டனர். இது இளைய மற்றும் தொழில்முறை நோக்குடைய சோனகர்களை தமிழர்களைச் சாராத முறையில் நவீன தொழில்களை நோக்கியும், தங்களுக்கான சுய - மரியாதையை நிலைநிறுத்துவதற்காகவும் பாடுபடத் தூண்டியது.

மிகச் சமீபத்தில், கிழக்குக் கரையோர தமிழ் - சோனக அரசியல் கூட்டணி உருவாகுவதைத் தடுக்க முயல்பவர்களால் வேண்டுமென்றே இனங்களுக்கிடையேயான வன்முறைகள் கோரமாகத் தூண்டப்பட்டன. அத்துடன் தமிழீழம், மற்றும் வடக்கு - கிழக்குப் பகுதியைக் குறித்த எதிர்காலப் பதட்டங்கள் காரணமாகவும் இரு சமூகங்களின் மக்களை இலக்கு வைத்து இனப்படுகொலைகள், மற்றும் பழிவாங்கும் செயற்பாடுகள் நடத்தப்பட்டன. இந் நிலைமைகளால், தமிழ் - முஸ்லிம் இன நல்லுறவு மோசமடையும் அளவுக்கு வெறுப்பும், சந்தேகமான சூழலும் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் தீங்கான சூழல் இன்னும் பல ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடும் (UTHR அறிக்கை 10, 1993).

தவறான புரிதலும், தவறான கணிப்பீடும் எவ்வளவு ஆழமாக இருந்தது என்பதற்கு 1990 ஆம் ஆண்டு புலிகளின் பேச்சாளர் வை. யோகி ஆற்றிய உரை ஓர் உதாரணமாக இருந்தது. அவர், சோனகர்கள் தங்களை தமிழர்கள் என்று சரியாக அடையாளப்படுத்தத் தவறியதற்காகக் கடிந்து

கொண்டதுடன், யாழ்ப்பாணம் மற்றும் மன்னாரிலிருந்து முஸ்லிம்கள் பெருமளவில் வெளியேற்றப்பட்டதை, அவர்கள் மேற்கொண்டதாகக் கூறப்படும் இனத் துரோகத்திற்கு வழங்கிய தண்டனை என்று நியாயப்படுத்தினார்.

துன்பியலாக, இது பொன்னம்பலம் இராமநாதனின் 1888 ஆம் ஆண்டைய 'இனவியல்' பற்றிய கருத்தாக்கத்தை நினைவுபடுத்தியது. ஆனால், இம்முறை கலஷ்னிகோவ் துப்பாக்கிகளின் முனையிலும், இன அழிப்பு என்ற கெடுரத் திட்டத்தின் பின்னணியிலும் இது இடம்பெற்றது.

## எதிர்காலத்துக்கான தெரிவுகள்

தமிழ் - முஸ்லிம் உறவுகளின் வீழ்ச்சி நிலை 1990 ஆம் ஆண்டில் உருவாகியது, ஆனால் அந்தக் கதையை அங்கு நிறுத்துவது மிகுந்த நம்பிக்கையில்லாதது என்று எனக்குத் தோன்றுகிறது. கலாசார உறுப்பினர் அடையாளம் எப்போதும் சூழ்நிலை அடிப்படையிலும், வரலாற்று அடிப்படையிலும் அமைக்கப்படுகிறது. தவிர, தற்போது இலங்கையில் புதிய வரலாறு உருவாகி வருகிறது என்பதையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

துணைக்கண்டத்தின் மூன்று அண்டைப் பகுதிகளிலும் உள்ள முஸ்லிம்கள் கடந்த நான்கு நூற்றாண்டுகளில் வேறுபட்ட பண்பாட்டு முறைமைகள், இன அடையாளங்கள் மற்றும் அரசியல் மூலோபாயங்களை உருவாக்கிய திறனை நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். அதாவது, கேரளத்தில் வன்முறையான ஜிஹாத், தமிழ்நாட்டில் இலக்கியம் மற்றும் ஆன்மீகக் கருத்தியல்கள், இலங்கையில் 'தமிழல்லாத' இன அரசியல் வழிமுறை.

பல்வேறு அவதானிகள், இக்காலத்தில் இலங்கையிலுள்ள முஸ்லிம்கள், அரசியல் மற்றும் கலாசாரக் காரணங்களால், தீவின் பல்வேறு பகுதிகளில், மாறுபட்ட உப பிராந்திய அடையாளங்களை உருவாக்கத் தொடங்கியுள்ளனர் என்று கருத்துரைக்கின்றனர்.

**தமிழ் முஸ்லிம் உறவுகளின் வீழ்ச்சி நிலை 1990 ஆம் ஆண்டில் உருவாகியது, ஆனால் அந்தக் கதையை அங்கு நிறுத்துவது மிகுந்த நம்பிக்கையில்லாதது என்று எனக்குத் தோன்றுகிறது. கலாசார உறுப்பினர் அடையாளம் எப்போதும் சூழ்நிலை அடிப்படையிலும், வரலாற்று அடிப்படையிலும் அமைக்கப்படுகிறது. தவிர, தற்போது இலங்கையில் புதிய வரலாறு உருவாகி வருகிறது என்பதையும் நாம் கருத்திற்கொள்ள வேண்டியுள்ளது.**

இதில் மொத்த முஸ்லிம் சனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர், விவசாயப் பகுதியான வடக்கு - கிழக்கில் அடர்த்தியாக உள்ளனர். மீதமுள்ள மூன்றில் இரண்டு பகுதியினர் தென் பகுதியில் சிங்களவர்களோடு கலந்து பரவலாக வாழ்கின்றனர் (அலி 1992 பி; இஸ்மாயில் 1995; சிவத்தம்பி 1987).

பிரித்தானியக் காலனித்துவ அரசாங்கமானது இலங்கையில் 19 ஆம், 20 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் சோனகருக்கும் தமிழர்களுக்கும் இடையில் ஒரு 'இன' வேறுபாட்டை தோற்றுவிப்பதற்கு தோதான அரசியல் வெகுமதிகளை வழங்கியது. இதனால் இலங்கையில் நவீன சமூக அரசியலில் போட்டித் துறைகள் உருவாக்கப்பட்டன. சுதந்திரத்துக்குப் பின், சிங்களப் பெரும்பான்மை அரசியலின் 'இனத் தேசியவாத இடைவினை' உருவானது. மேற்குக் கரையோர முஸ்லிம் உயர் குழாத்தினர், சிங்களச் சமூக அமைப்புடன் தனது நலன்களைப் பகிர்ந்து கொள்வதற்கான சாமர்த்தியமான ஏற்பாடுகளைச் செய்தனர். கடந்த இரு தசாப்தங்களில் நடந்த ஈழப்போர் காலப்பகுதியில் அரச படைகளாலும், தமிழ் ஆயுதக் குழுக்களாலும் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளால் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையிலான பிளவு ஆழமாகி உள்ளது.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம் மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக 'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற இத்தொடர் அமைகிறது.



# சாதிகள், இனத் தேசியங்கள், தேசங்கள் இடையே சமத்துவமும் ஒப்பிலாத பொதுவுடமைப் புத்துலகும்


நடேசன் இரவீந்திரன்


இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

புதிய சமூக சக்தியாக ஐரோப்பாவில் முதலாளி வர்க்கம் எழுச்சியடைந்து வந்த போது அரசையும் கல்வியையும் மதத்தினின்று பிரித்துச் சுதந்திரமாக இயங்க வழி கோலியதன் வாயிலாக ஆன்மிகத்தைத் தனிநபர் விவகாரமாக ஆக்கிக் கொண்டது. அதன் பேறாக விஞ்ஞான அறிவு எல்லைகள் தாண்டிப் புதிய தளங்களுக்குத் தொடர்ந்தும் விரிவாக்கம் அடையலாயிற்று. அதுவரை நிலப்பிரபுத்துவச் சமூக முறைமையில் அதியுச்சங்களைத் தொட்டு மேலும் முன்னேற இயலாமல் வீழ்ச்சியுறத் தொடங்கியிருந்தன இந்தியாவும் சீனாவும். தமது நாட்டுத் தொழிலாளர்களை ஒட்டச் சுரண்டியதுடன் இந்தியா, சீனா உள்ளிட்ட 'புதிய கண்டங்களையும்' காலனிய மயப்படுத்திய ஐரோப்பா அங்கெல்லாம் கொள்ளையடித்த மூலதனத்தையும் பயன்படுத்தி




Image Source - thamizhbooks.com

வளர்ந்தபோது தொழிற்புரட்சி வாயிலாக முழு உலகையும் புதிய சகாப்தத்துக்குள் வளர்த்தெடுத்தது. தொழிற்புரட்சி ஏற்படுத்தித் தந்த வாய்ப்புடன் முழுஉலகையும் வேகமாகத் தொடர்பாடித் தனது

ஏகாதிபத்தியம் வலுப்பட்டுவிட்ட இருபதாம் நூற்றாண்டு, ருஷ்யப் புரட்சியின் வாயிலாக உலகின் ஆறிலொரு பங்கு நிலப்பரப்பில் சோசலிசத்தைப் பாட்டாளி வர்க்கம் சாத்தியப்படுத்தியிருந்த காரணத்தால் மேலைத்தேசங்கள் தமது முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்கும் பொருட்டு மாற்றுச் சிந்தனைக்கு ஆட்படவேண்டி இருந்தது.

கட்டுக்குள் கையாளும் ஆற்றலைப் பெற்றிருந்தது மூலதனம்.

நிலப்பிரபுத்துவ வாழ்நிலையில் தத்தமது பண்ணைகளினுள் பெரும்பாலும் அனைத்துத் தேவைகளையும் பெற்றுவிட இயலுமாக இருந்த நிலை மூலதனத்தின் மேலாண்மையின் கீழ் சாத்தியமற்றுப் போனது; ஒவ்வொரு தேசமும் ஏனையவற்றுடன் கொண்டும் கொடுத்தும் ஊடாட வேண்டிய வாழ்வியல். தேச எல்லைகள் கடந்து முழு உலகையும் ஒரு குடைக்கீழ் கொணர்ந்திருந்தது மூலதனம். அதேவேளை, முன்னதாகவே மூலதன உற்பத்தி - பரவலாக்கம் என்பவற்றிலான வாய்ப்பைப் பெற்றிருந்த மேலைத்தேசம் தனக்கான மூலதனப் பெருக்கத்தின் பொருட்டு ஒடுக்கப்பட்ட காலனி நாடுகளை வறுகச் சுரண்டி வற்றடிப்பதில் குறியாக இருந்த காரணத்தால் தேசங்களிடையேயான சமவீனம் விரிவாக்கம் பெறுவதாக அமைந்தது.

இவ்வகையில் காலனிய நாடுகள் மீதான அபகரிப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டில் அதியுச்ச நிலை பெற்றிருந்தது. ‘21 ஆம் நூற்றாண்டில் மூலதனம்’ எனும் நூலில் தாமஸ் பிக்கெட்டி இந்த வரலாற்று வளர்ச்சிப் போக்கைத் தெளிவுற எடுத்துக் காட்டி உள்ளார். ஐரோப்பாவைப் பொறுத்த வரையில், “1750-1800 காலகட்டத்தில் வெளிநாட்டுச் சொத்துகள் முக்கியத்துவம் பெற்றன. 19 ஆம் நூற்றாண்டில் தான் பிரிட்டிஷ் மக்கள் உலகத்தின் இதர பகுதிகளில் முன்பு எப்பொழுதும் தெரியாத அளவு பணத்தினைக் கொண்டு மிக அதிக அளவு சொத்துகளைச் சேர்க்கத் தொடங்கினர்; இந்த அளவினை இன்றுவரை அவர்கள் விஞ்சவில்லை” என்பார் தாமஸ் பிக்கெட்டி (தாமஸ் பிக்கெட்டி, 2018. 21 ஆம் நூற்றாண்டில் மூலதனம், தமிழில்: பேரா.கு.வி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை.ப.156). இவ்வகையில் செழிப்படைந்த பிரித்தானியாவில் இருந்து 1850 ஆம் ஆண்டுக்கு சற்று முன்பின்னாக இந்தியாவில் பணியாற்ற வந்த காலனித்துவ அதிகாரிகளில் இருந்து 1840 ஆம் ஆண்டுகளிலும் அதற்கு முன்னரும் வந்தவர்களது ஆட்சிப் பண்பு குணாம்ச ரீதியில் வேறுபட்டிருந்தது பற்றி முந்திய இயல்களில் பார்த்து வந்துள்ளோம். 1757 இல் முதல் ஆட்சிப் பிரதேசம் இந்தியாவினுள் கிடைத்த போதிலும் நூற்றாண்டுக்குப் பின்னர் கடைசி மொகலாய மன்னர் 1857 ஆம் ஆண்டில் ஏற்பட்ட சிப்பாய் புரட்சிக்குத் தலைமை ஏற்க நிர்ப்பந்திக்கப்பட்டமையானது, முந்தியவர்கள் போலன்றி 19 ஆம் நூற்றாண்டின் நடுக்கூறில் வந்தவர்கள் மொகலாய மன்னரை ‘மேன்மைமிக்க அரசர்’ என்பதாக அல்லாமல் தாமே முற்றிலும் மேலாதிக்கமிக்க ஆட்சியுரிமை படைத்தோர் என்பதைத் தமது நடைமுறைகள் வாயிலாக வெளிப்படுத்தி இருந்த காரணத்தினாலேயே; உண்மையான காலனித்துவ ஒடுக்குமுறை 1857 ஆம் ஆண்டுக்குப் பின்னர் முழுமைப்பட்டதாயினும் பொருளியல் சுரண்டல் முன்னிருந்தே வேகம்பெற இடமிருந்தது.

அத்தகைய காலனித்துவச் சுரண்டல் குறித்த தாமஸ் பிக்கெட்டியின் மேல்வரும் சித்திரிப்பு மனங்கொள்ளத்தக்கவொன்று: “வெளிநாட்டுச் சொத்துகளின் இந்த மிகப்பெரிய நிகர நிலைமைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் கட்டமைப்பு ரீதியான வணிகப்பற்றாக்குறைகளை (Structural Trade Deficits) சமாளிப்பதற்கு பிரிட்டனையும் பிரான்ஸையும் அனுமதித்தன. 1880 இற்கும் 1914 இற்கும் இடையே இரண்டு நாடுகளும் அவற்றால் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களையும், சேவைகளையும் விட இதர நாடுகளில் இருந்து அதிக அளவு பொருட்களையும் சேவைகளையும் பெற்றன (இவற்றுடைய வணிகப் பற்றாக்குறைகள் சராசரியாக நாட்டு வருவாயின் 1 - 2




**சோவியத் யூனியன்**

Image Source - medium.com

விழுக்காட்டளவுக்கு இருந்தன). இது எந்தவிதப் பிரச்சினைகளையும் எழுப்பவில்லை. ஏனெனில், வெளிநாட்டுச் சொத்துகளிலிருந்து அவை பெற்ற வருவாய் நாட்டு வருவாயில் 5 விழுக்காட்டிற்கும் அதிகமாக இருந்தது. எனவே, அவற்றின் நிலுவைத் தொகையளிப்பு (*balance of payment*) வலுவான நேர்மறை நிலைமையில் (*positive*) இருந்தது. இது தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் தம்முடைய வெளிநாட்டு சொத்துகளை அதிகரித்துக் கொள்ள உதவியது. வேறு சொற்களில் கூற வேண்டுமெனில், காலனியாதிக்க நாடுகளின் நுகர்வை அதிகரிக்க இதர நாடுகள் உழைக்க வேண்டியிருந்தது. அது மட்டுமல்லாது மென்மேலும் அதிக அளவிற்குக் கடன்பட்டிருக்க வேண்டியிருந்தது. இது அதிர்ச்சியாகத் தோன்றலாம். எனினும், வியாபாரம் மூலம் பெற்ற லாபங்களையும் காலனியாதிக்க நாடுகளின் மூலம் ஒதுக்கப்பட்ட பணங்களையும் கொண்டு வெளிநாட்டில் சொத்துகளைக் குவிப்பதன் இலக்கு பின்னால் வணிகப்பற்றாக்குறைகளைச் சமாளிப்பதற்கு ஏற்ற நிலையில் நிச்சயமாக இருப்பதுதான். எப்பொழுதுமே தொடர்ந்து வணிக இலாபங்களைப் பெறுவதில் எந்தவித ஆர்வமும் இருக்காது. சொத்துகளைச் சொந்தமாக்கிக் கொள்வதன் நன்மை என்னவெனில், வேலை செய்யாமலேயே ஒருவர் தொடர்ந்து அதிகமாக நுகரவும் குவிக்கவும் அது உதவும். அல்லது, எப்படியாவது தானாகவே ஒருவர் உற்பத்தி செய்வதை விட அதிகமாக தொடர்ந்து நுகரவும் அது உதவும் என்பது தான். காலனியாதிக்க காலத்தில் பன்னாட்டளவில் இது உண்மையாகவும் இருந்தது" (தாமஸ் பிக்கெட்டி, மேலது . ப . 157).

## இரு வேறு உலகத்து இயற்கை

காலனித்துவச் சுரண்டலில் ஏகாதிபத்தியத் திணை மூலதன அபகரிப்பை அதீதமாகக் குவித்த போதிலும் தனது சொந்த நாட்டுத் தொழிலாளர்களைக் கொடூரமாகச் சுரண்டுவதை நிறுத்திக் கொண்டதில்லை. ஏகாதிபத்தியக் கட்டத்தை எட்டிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூறிலும் கூட மேற்கு ஐரோப்பியத் தேசங்களின் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வாயிலாகச் சோசலிசத்துக்கான மாற்றம் நடந்தேறும் என்ற நம்பிக்கை மார்க்சிய மூலவர்களான கார்ல் மார்க்சிடமும் ஏங்கெல்சிடமும் இருந்தது. இறுதி இரு தசாப்தங்களில் புரட்சியலை கிழக்கு நோக்கி நகர்ந்து முன்னதாக ருஷ்யாவில் சமூக மாற்றத்துக்கான தொழிலாளர்களது புரட்சி வெடிக்க வாய்ப்புள்ளமையை அவர்கள் கவனங்கொண்டார்கள். அவ்வாறு ஏற்படும் பட்சத்தில், அதன் உத்வேகம் மேற்கு ஐரோப்பியப் புரட்சியைத் தூண்டும் எனக் கருதினர்; அவர்கள் மட்டுமன்றி ருஷ்ய ஒக்டோபர் புரட்சிக்கு 1917 இல் தலைமை தாங்கிய லெனினும் கூட அந்தப் புரட்சியின் வீச்சுடன் மேற்கு ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கமும் எழுச்சியுற்று சோசலிச முன்னெடுப்புக்கான புரட்சியில் இறங்கும் வாய்ப்புள்ளது என்ற கருத்துடன் இருந்துள்ளார்!



ஐரோப்பிய காலனியவாதிகளும் சுதேசிகளும்
Image Source - medium.com

ஏகாதிபத்தியம் வலுப்பட்டுவிட்ட இருபதாம் நூற்றாண்டு, ருஷ்யப் புரட்சியின் வாயிலாக உலகின் ஆறிலொரு பங்கு நிலப்பரப்பில் சோசலிசத்தைப் பாட்டாளி வர்க்கம் சாத்தியப்படுத்தியிருந்த காரணத்தால் மேலைத்தேசங்கள் தமது முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்கும் பொருட்டு மாற்றுச் சிந்தனைக்கு ஆட்படவேண்டி இருந்தது. நேரடிக் காலனித்துவம் அற்றுப்போன போதிலும் ஏகாதிபத்திய அரசியல் முன்னெடுப்புடன் நவ காலனித்துவ முறைப் பிரகாரம் சமவீனமான வர்த்தகத்தை அவர்களால் மேற்கொள்ள இயலுமாக இருந்தது. அந்த வரலாற்று இயங்கு முறையை மாற்றிச் செயற்பட்ட பாங்கு ஏகாதிபத்தியச் சுரண்டலைப் பயன்படுத்தி மக்கள் நல அரசுகளை நடைமுறையாக்கித் தமது நாடுகளினுள் பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்படாத வகையிலான சமூக - பண்பாட்டு - அரசியல் முன்னெடுப்புகளை ஏகாதிபத்தியத் திணையால் மேற்கொள்ள இயலுமாயிற்று.

சோவியத் யூனியன் சமூக விடுதலை சார்ந்து உலக வரலாற்று இயங்கு முறையை மாற்றிச் செயற்பட்ட பாங்கு காரணமாகவே ஏகாதிபத்தியத் திணையும் அதன் சில நடைமுறைகளைத் தாம் பிரயோகிக்க முற்பட்டதன் பேறாக உருவாகிய மக்கள் நல அரசு எனும் மாற்று வடிவத்துக்குக்கு ஆட்பட வேண்டியிருந்தது. அந்தச் சோவியத் யூனியனை உருவாக்கியதில் ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்துடன்

ருஷ்யாவால் ஒடுக்கப்பட்டிருந்த தேசங்களும் கைகோர்த்திருந்தன; சோசலிச முன்னெடுப்பைக் கைவிட்டு சோவியத் யூனியன் தகர்ந்து போன போது ருஷ்யாவினின்றும் வேறு 15 தேசங்கள் பிரிந்து சென்றிருந்தன என்பது மிகுந்த கவனிப்புக்கு உரியது. 'சோவியத் ருஷ்யா' சாத்தியப்பட இயலாத வரலாற்று மாற்றம் ஏற்பட்டு (பாட்டாளி வர்க்கப் புரட்சி வாயிலாக மட்டும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தி விட இயலாமலாகி) ஒடுக்கப்பட்ட தேசங்களின் விடுதலைப் புரட்சியும் சோசலிச மாற்றியமைத்தலை முன்னெடுத்தாக வேண்டிய வகையில் வரலாற்றுச் செல்நெறியில் ஏற்பட்டிருந்த திருப்பம் 'சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம்' உருவாக வழிகோலி இருந்தது. வரலாற்று இயக்கு சக்தியில் ஏற்பட்டிருந்த இத்தகைய மாற்றப்போக்குப் (பாட்டாளி வர்க்கம் மட்டும் அன்றி விடுதலைத் தேசமும் சமூக மாற்ற இயக்கு விசை என்பது) போதிய அளவு கவனம் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மேற்கு ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கம் முன்னெடுக்கும் கம்யூன் அமைப்பாக்கம் வாயிலாக சமத்துவம் நோக்கிய பயணம் சாத்தியமில்லாமல் ஆகியிருந்தது. ஆசிய உற்பத்தி முறைக்குரிய புராதன கம்யூனிச சமூக முறையின் எச்சங்களைத் தாங்கி இருந்த சோவியத் அமைப்பாக்கத்தை ருஷ்ய மக்கள் கட்டமைத்ததன் ஊடாக முக்கால் நூற்றாண்டு முன்னெடுக்கப்பட்ட சோசலிச நடைமுறை வீழ்ச்சியடையக் காரணமாக அமைந்த அடிப்படை அம்சம் வர்க்கவாத அணுகுமுறையே என்பதும் கவனங்கொள்ளப்படாமல் உள்ளது. வர்க்க அரசியல் செல்நெறிக்கு மாற்றாகத் தெளிந்த வரலாற்று ஓட்டத்தை வெளிப்படுத்திய திணை அரசியலுக்கு உரியதான, பாரதி முன்னிறுத்திய கிருதயுக எழுச்சி வாயிலாகச் சமத்துவத்தை வடிவமைக்க இயலாமல் போனது ஏன்?

உழைக்கும் மக்கள் - அபகரிப்பால் செல்வம் திரட்டுவோர் எனவாகிய இருவேறு உலகத்து இயற்கை சர்வ வியாபகமானது. மேற்கில் வர்க்கப்

காலனித்துவச் சுரண்டலில் ஏகாதிபத்தியத் திணை மூலதன அபகரிப்பை அதீதமாகக் குவித்த போதிலும் தனது சொந்த நாட்டுத் தொழிலாளர்களைக் கொடூரமாகச் சுரண்டுவதை நிறுத்திக் கொண்டதில்லை. ஏகாதிபத்தியக் கட்டத்தை எட்டிய பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூறிலும் கூட மேற்கு ஐரோப்பியத் தேசங்களின் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வாயிலாகச் சோசலிசத்துக்கான மாற்றம் நடந்தேறும் என்ற நம்பிக்கை மார்க்சிய மூலவர்களான கார்ல் மார்க்சிடமும் ஏங்கெல்சிடமும் இருந்தது. இறுதி இரு தசாப்தங்களில் புரட்சியலை கிழக்கு நோக்கி நகர்ந்து முன்னதாக ருஷ்யாவில் சமூக மாற்றத்துக்கான தொழிலாளர்களது புரட்சி வெடிக்க வாய்ப்புள்ளமையை அவர்கள் கவனங்கொண்டார்கள்.

பிளவடைந்த சமூக முறைமை தனக்குரித்தான வர்க்கப் போராட்டங்கள் வாயிலாக வெவ்வேறு உற்பத்தி உறவுகளை உடையதான சமூக அமைப்புகளைச் சாத்தியமாக்கி வந்தது. ஆண்டான் - அடிமை உற்பத்தி உறவு தகர்க்கப்பட்டு நிலப்பிரபு - பண்ணயடிமை எனும் உற்பத்தி உறவு ஏற்பட்ட போது பழைய ஆண்டான் - அடிமை என்ற வர்க்கங்களும் இல்லாமல் ஆகின. பழையன முற்றாக அழிக்கப்பட்டுப் புதியன உருப்பெற்று வளர்ந்தன. முதலாளி - தொழிலாளி எனும் மூலதனத் தொடர்பான இன்றைய உற்பத்தி உறவு எழுச்சி பெற்ற பின்னர் நிலப்பிரபு - பண்ணையடிமை என்ற பழைய வர்க்கங்கள் முற்றாகவே அங்கு அற்றுப்போயிருந்தன.

திணை அரசியலுக்குரிய எமது வரலாற்றில் புதியன தோற்றம் பெறாமல் இல்லை; புதிய சமூக அமைப்புக்கான முழு வீச்சான மாற்றங்கள் சாத்தியப்படுவதன் உள்ளேயே பழையதன்

இருப்பும் ஆழமாகத் தக்க வைக்கப்பட்டவாறு தொடரும். நில அபகரிப்புக்குரிய ஆளும் சாதிகளும் ஒடுக்கப்பட்டு சுரண்டலுக்கு ஆட்பட்ட சூத்திர - தீண்டாமைக்கு ஆட்பட்ட சாதிகள் என்பனவும் இன்றுவரை நிலைத்துள்ளன. இருதரப்புக்கும் இடைப்பட்ட வைசியர் எனும் வர்ணப் பிரிவுக்குரிய வணிகச் சாதி அதிகாரம் பெற்ற அறநெறிக் காலத்தில் விவசாயப் பிரிவுக்குரிய வைதிக மதம் பின்னடைந்து பௌத்தம், சமணம் போன்ற மதங்கள் எழுச்சி பெற்றன. பக்திப் பேரியக்கத்தின் மூலமாக புதிய வடிவ மாற்றத்துடன் விவசாய அணியின் வைதிக மதம் எழுச்சி பெற்ற போது வணிகச் சாதிகள் அழிக்கப்படவில்லை; அதிகார இழப்புடன் தொடர்ந்தும் இருந்தன. இன்று மூலதன ஆதிக்கம் மேலெழத் தொடங்கும் போது மீளெழுச்சி கொள்ளத்தக்க வகையில் பௌத்த - சமண இருப்பு எமது பண்பாட்டுத் தளத்தில் தடம் பதித்தவாறிருந்தது.

மதப் பிணைப்பைத் தகர்க்க முனையும் மூலதன இயல்பு காரணமாக நாத்திகவாதம் தமிழர் பண்பாட்டில் முனைப்புறும் வாய்ப்பும் இருந்தது. விவசாய - வணிகத் திணைகள் இடையேயான மேலாதிக்க மோதலின் பண்பாட்டுத் தள வெளிப்பாடுகளாக மத மோதல்கள் அமைந்தன. விவசாயச் சாதிகளின் மேலாதிக்கம் பின்னடைந்து மூலதன மேலாதிக்கம் அரசியல் அரங்கில் சாத்தியப்பட்ட போதிலும் நிலப்பிரபுத்துவக் காலத்துக்குரிய ஆதிக்க சாதிகள் சமூக - பண்பாட்டுத்தள மேலாண்மையுடனேயே இன்றும் உள்ளன. உற்பத்தி உறவு சார்ந்த அடிப்படைகளை காணத் தவறி, ஆதிக்க சாதிகள் முன்னிறுத்தும் இந்து சமயத்தை அழித்துவிட்டால் சமூக நீதி கிட்டும் என்ற எடுகோளுடன் இயங்கும் போக்கு இன்று வலுப்பட்டுள்ளது. இதன் தாற்பரியங்கள் குறித்து இந்தத் தொடரின் நான்காம் பகுதியான இந்த “சாதிகள், இனத் தேசியங்கள், தேசங்கள் இடையே சமத்துவமும் ஒப்பிலாத பொதுவுடமைப் புத்துலகும்” என்ற தலைப்பின் கீழ் விவாதிப்போம்.

## புத்தம் புதிய பாதை

ஆயிரம் வருடங்களுக்கு மேலாக திணை அரசியலுக்குரிய எமது சமூகம் உலகின் முதல் நிலையில் நீடித்து வந்த போதிலும் இரண்டு நூற்றாண்டுகளாகத் தாழ்வுற்றுப் பின்னடைந்த வாழ்வியலில் உழன்றது. மூன்று நூற்றாண்டுகளாகக் கூர்மையான வர்க்கப் போராட்டங்கள் வாயிலாக புத்தம் புதிய வாழ்வியலைக் கட்டமைத்து வளர்ந்த மேலைத்தேசம் இன்று இறங்கு திசையடைந்து வருகிறது. ஆயினும், அந்த மேலைப் புலச் சிந்தனை முறை இன்றுவரை உலகின் மீது ஆளுமை செலுத்தும் மேலாண்மையைத் தக்கவைத்தவாறே தான் உள்ளது.

அரை நூற்றாண்டாக கீழைத்தேச சிந்தனை மயமாக்கல் பேசுபொருளாகி வந்துள்ளமையை அவதானிக்கலாம். ருஷ்ய - சீன மார்க்சியப் பிரயோகங்களை நிராகரித்தவாறு தென் அமெரிக்க மார்க்சியர்கள் 21 ஆம் நூற்றாண்டுக்கான சோசலிச முன்னெடுப்புப் பற்றிப் பேசி வருகின்றனர். ‘ஐரோப்பிய மையம்’, ‘கீழைத்திசை முகப்படல்’, ‘21 ஆம் நூற்றாண்டு சோசலிசம்’ என்பன குறித்த அக்கறைகள் மேலெழக் காரணங்கள் எவை? இத்தகைய மாற்றுச் சிந்தனைகளால் புதிய ஒளி பாய்ச்சப்பட்ட வெகுஜன எழுச்சிகள் மேற்கிளம்பும் உத்வேகத்தை ஏற்படுத்த இயலாது இருப்பது ஏன்?

இவற்றைப் பேசுபொருளாக்கும் இந்த நான்காம் பகுதி பின்வரும் நான்கு இயல்களைக் கொண்டிருக்கும்:

1. பாட்டாளி வர்க்க - ஒடுக்கப்பட்ட தேசங்களின் புரட்சிகள்.
2. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசும் விடுதலைத் தேசியமும்.
3. ஒக்டோபர் 21 எழுச்சி மார்க்கம்.
4. ஏகாதிபத்திய - பேரினவாதத் தகர்ப்பும் விடுதலைத் தேசிய மார்க்சிசமும்.

இவை நிறைவாக்கப்பட்ட பின்னர் ‘முடிவுரை: இனிச் சில விதிகள் செய்வோம்’ எனும் இறுதி இயல், இன்று அவசியப்படுகின்ற புத்தம் புதிய பாதை எவ்வாறு அமைக்கப்பட இயலும் என்பது குறித்த தேடலாக இருக்கும். தொடர்வோம்!

# பிராமி எழுத்து வடிவமும் தொடக்ககால எழுத்தறிவும்




எம். எம். ஜெயசீலன்

எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.


தமிழ்நாட்டினதும் இலங்கையினதும் எழுத்தறிவின் தொடக்கம் குறித்து ஆய்வாளர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை. இரு பிராந்தியங்களிலும் புழக்கத்தில் இருந்துள்ள காலத்தால் பழைய எழுத்தாகப் பிராமி கொள்ளப்படுகின்றது. இந்திய உபகண்டச் சூழலில் பெரும்பாலான மொழிகளின் வரிவடிவங்களுக்கான தாய் வடிவமாகப் பிராமி விளங்கியுள்ளது. தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளின் வரிவடிவங்கள் பிராமி எழுத்திலிருந்தே வளர்ச்சியடைந்துள்ளன.

பிராமி எழுத்துகள் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே முதன்முதல் வாசித்தறியப்பட்டன. ஜேம்ஸ் பிரின்ஸப் 1837 ஆம் ஆண்டு அசோகரின் பாறைக் கல்வெட்டுகளை வாசித்து வெளியிட்டார். அதனால் பிராமி கல்வெட்டுகளை வாசித்த முன்னோடியாக அவர் கருதப்படுகிறார். இருப்பினும் அவருக்கு முன்னரே பிராமி எழுத்துகளை வாசித்தறியும் முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. கிறிஸ்டியன் லாசன் கிரேக்க வரிவடிவத்தின் துணையுடன் பிராமி எழுத்துகளை வாசித்துள்ளார். “அவர் இந்தோ - கிரேக்க மன்னன் அகதோகலஸ் வெளியிட்ட இருவரி காசினைப் படித்துணர்ந்தார். மன்னன் பெயர் காசின் முன்பக்கத்தில் கிரேக்க வரிவடிவத்திலும் பின்புறத்தில் பிராமி வரிவடிவத்திலும் எழுதப்பட்டிருந்தது. பின்புறத்தில் பிராமி வடிவத்தில் எழுதப்பட்டிருந்ததைக் கிறிஸ்டியன் லாசன், அகதுக்ல ராஜா எனச் சரியாகப் படித்தார். அந்தவகையில் கிறிஸ்டியன் லாசன் அவர்களே பிராமி வரிவடிவத்தை முதன்முதல் படித்தவர் எனக்கூறவேண்டும்” (ராஜன், 2006: 105).



**2000 ஆண்டுகளுக்கு முன்னர் வடஇலங்கையில் இருந்த நாக நகர் பற்றிக் கூறும் பிராமிக் கல்வெட்டு**



அசோகர் தூணில் பிராமி எழுத்துகள்

Image Source - ta.wikipedia.org

அசோகர் பிராமிக் கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் அமைந்தவையாகும். சாபாஸ்கார்கி, மான்சாரா ஆகிய இடங்களில் உள்ள கல்வெட்டுகள் மட்டும் கரோஷ்டியில் எழுதப்பட்டுள்ளன. இவற்றுக்கு மாறாக தென்னிந்தியாவில் பிராமி வரிவடிவத்தைக் கொண்டு தமிழ்மொழியில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. அதனால் அவ்வெழுத்தைத் 'தமிழி' என அழைக்கின்றனர். ராபர்ட் சீவல் பிராமி எழுத்துகளினாலான மாங்குளம் குகைக் கல்வெட்டுகளை 1882 ஆம் ஆண்டு கண்டுபிடித்துள்ளார். அக்கல்வெட்டுகள் கண்டறியப்பட்டு நான்கு தசாப்தங்களின் பின்னரே அவை தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன என்பது கண்டறியப்பட்டது. கே.வி. சுப்பிரமணிய ஐயர் 1924 ஆம் ஆண்டு மாங்குளம் பிராமிக் கல்வெட்டுகளைத் தமிழ்ப் பிராமியாக வாசித்து தென்னிந்திய வரலாற்றுக்குப் புதுவெளிச்சம் பாய்ச்சினார். தென்னிந்தியாவில் கிடைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பிராமி கல்வெட்டுகளை விரிவான ஆய்வுக்குட்படுத்திய ஐராவதம் மகாதேவன் *'Early Tamil Epigraphy: from the Earliest times to the sixth Century C.E.* (2021)' என்ற நூலில் 96 தமிழ்ப் பிராமி - தமிழிக் கல்வெட்டுகளை முறைப்படி தொகுத்து ஆவணப்படுத்தியுள்ளார்.

இலங்கையில் பிராமி எழுத்தைக் கையாண்டு பிராகிருத மொழியில் எழுதியுள்ளனர். ஜேம்ஸ் பிரின்ஸப் அசோகர் பிராமிக் கல்வெட்டுகளைப் படித்த பின்பே இலங்கையில் பிராமிக் கல்வெட்டுகள் படிக்கப்பட்டன. ஏ.சி. புரோடை இலங்கையின் பிராமிக் கல்வெட்டுகளை வாசித்த முன்னோடியாவார். தோணிகல பாறையிலும் பரமகந்த குகையிலும் உள்ள பிராமிக் கல்வெட்டுகளை வாசித்த அவர், அவை பற்றிய குறிப்புகளை 1855 ஆம் ஆண்டு ஆசியவியல் வேத்தியல் கழகத்தின் இலங்கைக் கிளையின் பருவ இதழில் வெளியிட்டுள்ளார். அவரைத் தொடர்ந்து டி.டபிள்யூ. ராய்ஸ் டேவிட்ஸ், பி. கோல்ட்சுமித், ஹென்றி பார்க்கர் முதலான பலர் இலங்கைக் குகைக் கல்வெட்டுகளை வாசித்து வெளியிட்டுள்ளனர் (*Paranavitane*, 1970: *I*). இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுகளுள் அநேகமானவற்றைப் பரணவிதான '*Inscriptions of Ceylon* (1970), *Inscriptions of Ceylon Late Brahmi Inscription* (1983)' ஆகிய இரு தொகுதிகளில் வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் புழக்கத்திலிருந்துள்ள பண்டைய எழுத்தாகப் பிராமி ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அதன் தோற்றம், பரவல் குறித்து மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. பிராமி எழுத்துகளைப் பொதுவாக வட பிராமி - தென் பிராமி, அல்லது பிராகிருத பிராமி - தமிழ்ப் பிராமி என வகைப்படுத்துவர். ஐராவதம் மகாதேவன் மௌரியப் பிராமி, தென்னகப் பிராமி,

பட்டிப்புரோலு வரிவடிவம், சிங்களப் பிராமி என நான்காக வகைப்படுத்தி விளக்கியுள்ளார் (2021:213,214). எ.சுப்பராயலு தென்னிந்தியாவில் உள்ள பிராமி வகைகளை மட்டும் கருத்திற் கொண்டு, "ஆந்திர பிரதேசத்தில், குண்டூர் மாவட்டத்தில் உள்ள பட்டிப்புரோலு என்னும் புத்தமதம் சார்ந்த இடங்களிலிருந்து கிடைத்தவை, ஆந்திர பிரதேசம் மற்றும் கர்நாடகத்தின் பிற பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டவை, தமிழ்நாடு - கேரளத்தில் காணப்படுபவை என மூன்றாக வகைப்படுத்தி, முதல் இரண்டு வகைகளில் பிராகிருதமும் மூன்றாம் வகையில் தமிழ்மொழியும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்கிறார் (2018: 37)."

அசோகர் காலத்தில் பௌத்தத்தின்வழி இலங்கைக்குப் பிராமி அறிமுகமானது என்று கூறுபவர்களும் அசோகருக்கு முன்னரே இலங்கையில் பிராமி எழுத்துப் பயன்பாட்டிலிருந்தது என்று கூறுபவர்களும் இலங்கைக்குப் பிராமி வட இந்தியாவிலிருந்து வந்ததாகவே பெரிதும் கூறுகின்றனர். இலங்கையின் பிராமி கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் பௌத்தம் தொடர்புடையனவாக அமைந்துள்ளமை இதற்குப் பிரதான காரணமாக விளங்கியுள்ளது.

மேற்படி இருவரது வகைப்பாடும் பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் ஐராவதம் மகாதேவன் இலங்கைப் பிராமியைச் சிங்களப் பிராமி என வரையறுத்துள்ளமை பொருத்தமற்றது என்ற வாதத்தைப் ப. புஷ்பரட்ணம் (2004), கா. ராஜன் (2010) முதலானோர் முன்வைத்துள்ளனர். அவர்களின் மறுப்பு ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவே உள்ளது. இலங்கைப் பிராகிருதத்தைப் பிராகிருதத்தின் கிளை மொழியாகக் கொண்டு சிங்கள - பிராகிருதம் என அழைத்துள்ளார், ஐராவதம் மகாதேவன். இலங்கையில் பயன்பாட்டிலிருந்த பிராகிருதம் ஒரு கலப்புப் பிராகிருதமாக விளங்கியுள்ளமையாலும் சிங்கள மொழியின் வரலாறு பிந்திய காலத்திலேயே தொடங்குவதாலும் அவ்வரையறையை ஏற்றுக்கொள்வதில் சிக்கல்கள் உள்ளன.

பிராகிருத பிராமியா, தமிழ்ப் பிராமியா காலத்தால் பழைமையானது, தமிழ்ப் பிராமியிலிருந்து பிராகிருத பிராமி தோன்றியதா, பிராகிருத பிராமியிலிருந்து தமிழ்ப் பிராமி தோன்றியதா என்பன இன்னும் முடிவுறாத வாதங்களாகவே தொடர்கின்றன.

இலங்கையில் கிடைக்கப்பெற்றுள்ள பிராமிக் கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் பௌத்த மதம் சம்பந்தமான விடயங்களைப் பதிவு செய்வனவாக விளங்குவதால் அவை அசோகர் காலத்தில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டன என்ற கருத்தையே பலரும் தொடக்கத்தில் கொண்டிருந்தனர். இலங்கையின் பிராமிக் கல்வெட்டுகளை விரிவாக ஆராய்ந்த செனரத் பரணவிதான இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள பிராகிருதம் இந்திய பிராகிருதத்திலிருந்து வேறுபட்ட கூறுகளைக் கொண்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியதோடு அசோகருக்கு முன்னரேயே வணிகர்களால் இலங்கைக்குப் பிராமி எழுத்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்ற கருத்தையும் முன்வைத்துள்ளார் (1970: XXIII). அனுராதபுரத்தில் அகழாய்வுகளை மேற்கொண்ட கன்னிங்காம் (1999), சிரான் தெரணியகல (2000) முதலானவர்கள் அங்கு கிடைத்த பிராமி எழுத்துப் பொறிப்புகளைக் கதிரலைக் காலக்கணிப்புச் செய்து அதன் காலம் பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டு என்ற முடிவினை முன்வைத்துள்ளனர். அம்முடிவினை மறுக்கும் சிலர், இக்காலக் கணிப்பு பொருத்தமானது அல்ல என்கின்றனர். உதாரணத்திற்கு, பியதிஸ்ஸ சேனாநாயக்க அப்பொறிப்பின் எழுத்தமைதியைக் கொண்டு அது பொ.ஆ. முதலாம் நூற்றாண்டுக்குரியதாக இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளதோடு கதிரலைக் காலக் கணிப்பில் கிடைக்கப்பெறும் கூடிய பட்சம், குறைந்த பட்சம் என்ற கால




**Image Source - www.exoticindiaart.com**

எல்லையில் குறைந்த பட்சக் கால எல்லையையே கருத்தில் கொள்ள வேண்டும்; ஆனால், அனுராதபுர பிராமிப் பொறிப்பின் கால எல்லையில் கூடிய பட்சக் எல்லையே காலமாகக் கொள்ளப்பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார் (Senanayake, 2002: 3575). அதேவேளை, திஸ்ஸமஹாராம அகழாய்வில் கிடைத்த பிராமிப் பொறிப்புகளின் காலத்தால் முந்திய எல்லையாக பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டைக் கொண்டுள்ளனர். கல்கமுவ அந்தரவெவ பெருங்கற்காலப் பகுதியில் கிடைத்த பிராமிப் பொறிப்பு, பொஆ.மு. ஆறாம் நூற்றாண்டுக்குரியது எனக் கதிரலைக் காலக் கணிப்பு மூலம் கண்டறியப்பட்டுள்ளது (Mendis, 2020:130).

இலங்கையில் பிராமி எழுத்துகளின் காலம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கருத்துகள், தமிழ்நாட்டுப் பிராமி எழுத்துகளின் காலத்தை நிர்ணயிப்பதற்குக் குறிப்பாக, தமிழ்ப் பிராமி (தமிழி) அசோகனுக்கு முன்னரே வழக்கில் இருந்துள்ளது என்பதை நிரூபிப்பதற்குத் துணையாகக் கொள்ளப்பட்டுள்ளன. நடன காசிநாதன் (1994), சு. ராஜவேலு (2007), கா. ராஜன் (2018) முதலானோர் அசோகனுக்கு முன்பே பிராமி வழக்கில் இருந்துள்ளது என்பதை நிரூபிப்பதற்கு அக் காலக்கணிப்பையும் துணையாகக் கொண்டுள்ளனர்.

அசோகர் காலத்தில் பௌத்தத்தின்வழி இலங்கைக்குப் பிராமி அறிமுகமானது என்று கூறுபவர்களும் அசோகருக்கு முன்னரே இலங்கையில் பிராமி எழுத்துப் பயன்பாட்டிலிருந்தது என்று கூறுபவர்களும் இலங்கைக்குப் பிராமி வட இந்தியாவிலிருந்து வந்ததாகவே பெரிதும் கூறுகின்றனர். இலங்கையின் பிராமி கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் பௌத்தம் தொடர்புடையனவாக அமைந்துள்ளமை இதற்குப் பிரதான காரணமாக விளங்கியுள்ளது. இக்கருத்தை மறுக்கும் ப. புஷ்பரட்ணம், இலங்கைப் பிராமிக்கும் தமிழ்ப் பிராமிக்கும் இடையிலான தொடர்பை எழுத்தமைதி, சொற்றொடர்கள் முதலியவற்றின் துணையுடன் விரிவாக விளக்கி, 'வடபிராமிக்கு முன்பே இலங்கையில் தமிழ்ப் பிராமி அறிமுகமாகியுள்ளது' என்ற கருத்தை முன்வைத்துள்ளார். இம் முடிவுக்கு வலிமை சேர்க்கும் வகையில் பௌத்தத்துக்கு முன்னர் சமண சமயம் இலங்கையில் அறிமுகமாகியிருந்துள்ளது என்பதற்குப் பாளி இலக்கியங்களில் காணப்படும் சில சான்றுகளை எடுத்துக்காட்டியுள்ள அவர் பெரியகுளம், மிகிந்தலை, வெஸ்ஸகிரிய முதலான இடங்களில் உள்ள காலத்தால் பழைய பிராமி கல்வெட்டுகளில் தமிழ்ச் செல்வாக்கைக் காணமுடிகின்றது; இவை தமிழ் நாட்டிலிருந்து சமண மதத்தோடு அறிமுகமானவை என்ற அபயசிங்கவின் முடிவினையும் துணையாகக் கொண்டுள்ளார் (2003). அதேவேளை, பின்னர் இம்முடிவிலிருந்து மாறி பிராமி எழுத்தே இலங்கையில் தோன்றி இந்தியாவிற்குப் பரவலடைந்துள்ளது என்ற கருத்தையும் புஷ்பரட்ணம் முன்வைத்துள்ளார் (2004).

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குப் பிராமி சென்றிருக்கலாம் என்றொரு கருத்தைப் புஷ்பரட்ணத்துக்கு முன்னர் கே.வி. ரமேஸ் முன்வைத்துள்ளமையும் இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது (1990: 190).

இலங்கையிலிருந்து பிராமி இந்தியாவுக்குப் பரவலடைந்தது என்ற கருத்து முன்வைக்கப்பட்டாலும் அதை உறுதியாக நிறுவுவதற்குப் போதிய சான்றுகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. திஸ்ஸமஹாராமையில் விரிவான ஆய்வை மேற்கொண்ட ஹாரி போக் (2014), பிராமி எழுத்து இலங்கையில் தோன்றியது என்ற கருத்தை மறுத்துள்ளமை இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது. தன்னுடைய மறுப்பைப் பிரதானமாக இரண்டு காரணிகளின் அடிப்படையில் அவர் நிறுவியுள்ளார். முதலாவது, இலங்கையில் பிராமி எழுத்துத் தோன்றியிருந்தால் வடக்கே (இந்தியாவில்) வளர்ச்சியடைந்த பிராமியின் அடிப்படைக் கூறுகள் இலங்கைப் பிராமியில் காணப்பட வேண்டும். ஆனால், அகழாய்வில் கிடைத்த முடிவுகள் இதற்கு மாறாக இருக்கின்றன. இரண்டாவது, இலங்கைப் பிராமியின் எல்லா வேறுபாடுகளையும் அசோகன் பிராமியை அடிப்படையாகக் கொண்டே விளக்க வேண்டியுள்ளது. இவ்விரு காரணிகளும் இதுவரையிலான சான்றுகளின் அடிப்படையில் ஏற்கக்கூடியனவாகவே உள்ளன.

தமிழி அல்லது தமிழ்ப் பிராமி குறித்த ஆய்வுகளில் அவ்வெழுத்து முறை பிராகிருத பிராமியிலிருந்து தோன்றியுள்ளது, பிராகிருத பிராமிக்கு முன்னரே அது புழக்கத்தில் இருந்துள்ளது என்ற முரண்பட்ட முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஐராவதம் மகாதேவன் (2021), எ. சுப்பராயலு (2018) முதலானோர் பிராகிருத பிராமியிலிருந்து தமிழ்ப் பிராமி தோன்றியது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

தமிழ்ப் பிராமியின் காலத்தை பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டெனக் கூறும் ஐராவதம் மகாதேவன், பிராகிருத பிராமியிலிருந்தே அது தமிழ்மொழி அமைதிக்கு ஏற்ப வளர்ச்சியடைந்துள்ளது என்ற கருத்தை முன்வைத்துள்ளார் (2021). எ. சுப்பராயலுவின் கருத்தானது, “தமிழ்நாட்டில் பிராமி எழுத்து வடிவத்தை அறிமுகம் செய்ததற்கு, பிராகிருதம் பேசும் வணிகர்களே ஆரம்பத்தில் தூண்டுகோலாக இருந்துள்ளனர். மகதப் பகுதியில் மௌரியர் ஆட்சிக் காலத்தில் பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டின்



ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்ப் பிராமி, பெருங்கற்கால குறியீடுகள் கலந்த கல்வெட்டு
Image Source - ta.wikipedia.org

துவக்கத்தில், முழுமையான எழுத்து வடிவத்தை அடைந்ததன் பின்னர், இந்நிகழ்வு ஏற்பட்டிருக்க வேண்டும். மௌரியர் காலத்தில் தொலை தூர வணிகச் சுழற்சிகள் மிகத் தீவிரமாக இருந்தபடியால் இந்தியாவின் பெரும்பகுதி இவர்களுடைய கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. இந்த வளர்ச்சியின் விளைவே எழுத்தறிவு, வணிகர்கள் மூலம் பரவியது. பிராகிருத மொழி பேசும் வணிகர்களிடமிருந்து தமிழ்ப் பேசும் வணிகர்கள் முதலில் இவ் அறிவைப் பெற்றார்கள்” (2018: 42) என அமைந்துள்ளது.

நடன காசிநாதன் (1994), சு. இராஜவேலு (2007) முதலானோர் தமிழ்ப் பிராமி, பிராகிருத பிராமிக்கு முந்தியது, தமிழ்ப் பிராமியிலிருந்து பிராகிருத பிராமி தோன்றியது என்கின்றனர். ராஜவேலுவின் கருத்தானது, "தொன்மைத் தமிழ் (தமிழ் - பிராமி) எழுத்துகள் தமிழ்நாட்டில் வழக்கில் இருந்த பாறை மற்றும் பானைகளில் காணப்படும் கீறல் குறியீடுகளில் இருந்து தோற்றுவிக்கப்பட்டு, தமிழ் மக்களால் சீர்செய்யப்பட்டன; தமிழகத்திற்கு வந்த சமண முனிவர்களால் அவை கற்றுக்கொள்ளப்பட்டு, அவர்கள் மூலமாக இலங்கைக்கும் வட இந்தியாவுக்கும் கொண்டுசெல்லப்பட்டன; அங்கு பிராகிருதம் எனப்படும் பாகத வடமொழிக்கு ஏற்ப, மூலத் தமிழ் எழுத்துகளிலிருந்து வர்க்க எழுத்துகளும் பிற எழுத்துக்களும் தோற்றுவிக்கப்பட்டு, மௌரியப் பேரரசன் அசோகனால் பெரிதும் பயன்படுத்தப்பட்டன" என அமைந்துள்ளது (2007:66).

மேற்படி இருசாராரினதும் முடிவுகளிலிருந்து வேறுபடும் கா. ராஜன், இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள சான்றுகளிலிருந்து தமிழ்ப் பிராமியும் பிராகிருத பிராமியும் சமகாலத்தில் வழக்கில் இருந்துள்ளமையைக் கண்டுகொள்ள முடிகிறது என்பதை, "கொடு மணலில் காலத்தால் முந்திய பண்பாட்டுப் புதைவிலும் கூடத் தமிழ்ப் பிராமியோடு பிராகிருதத் தாக்கம் பெற்ற பானையோடுகளும் நமக்குக் கிடைக்கின்றன. எனவே, பொ.ஆ.மு. 6 ஆம் நூற்றாண்டு என்ற காலக்கணிப்பு இன்றைய நிலையில் பிராகிருத பிராமி மற்றும் தமிழ்ப் பிராமி ஆகிய இரு எழுத்து முறைகளுக்கும் பொருந்தும் (2018: 478)" எனக் குறிப்பிட்டுள்ளார். கீழடியில் கிடைக்கப்பட்ட பிராமிப் பொறிப்புகளின் காலமும் பொ.ஆ.மு. 6 ஆம் நூற்றாண்டு எனக் கண்டறியப்பட்டுள்ளமை நினைவிற்கொள்ளத்தக்கது.

இலங்கையின் பிராமிப் பொறிப்புகளை மேற்படி முடிவுகளுடன் பொருத்திப் பார்க்கும்போது கா. ராஜன் அவர்களின் கருத்து மேலும் வலிமை பெறுகிறது. தமிழ்நாட்டில் தமிழ்ப் பிராமி புழக்கத்தில் இருந்த சமகாலத்தில் இலங்கையில் பிராகிருதப் பிராமி வழக்கில் இருந்துள்ளது. தமிழ்ப் பிராமியுடன் பிராகிருத மொழிக் கலப்பு காணப்படுவதைப் போல இலங்கையின் பிராகிருத பிராமியில் தமிழ்ப் பிராமியின் கலப்பு காணப்படுகிறது. இவை, இருவகை பிராமியும் ஏக காலத்தில் பயன்பாட்டில் இருந்துள்ளன என்பதற்கு வலுவான சான்றுகளாக விளங்குகின்றன.

இலங்கையில் பிராமிப் பொறிப்புகள் பிராகிருத மொழியில் பொறிக்கப்பட்டிருந்தாலும் அவை முற்றிலும் அசோகர் பிராமியுடன் ஒத்தவையாக இல்லை என்பதும் அப்பிராமியில் தமிழ்ப் பிராமியின் தாக்கமும் இருக்கின்றன என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களாகும். செனரத் பரணவிதான இலங்கையின் பிராகிருதமும் பிராமியின் வரிவடிவமும் அசோகர் பிராமியிலிருந்தும் இந்தியப் பிராகிருதத்திலிருந்தும் வேறுபட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ளார். மிக முக்கியமாக அசோகர் பிராமியின் கூட்டெழுத்துகள் இலங்கைப் பிராமியில் இல்லை. இத்தகைய கருத்துகளை அடியொற்றியே ஐராவதம் மகாதேவன் தமிழகத்தில் கிடைத்த இலங்கைப் பிராமிப் பொறிப்புகளைக் கொண்டுள்ள பானையோடுகளைச் சிங்கள - பிராமி, சிங்கள - பிராகிருதம் என அழைத்துள்ளார். செனரத் பரணவிதான இலங்கைப் பிராமியும் பிராகிருதமும் வட இந்தியாவிலிருந்து வேறுபட்டுள்ளன எனக் கூறினாலும் அவற்றைத் தமிழ்ப் பிராமியுடன் இணைத்து ஆராயும் முயற்சியை மேற்கொள்ளவில்லை. அவர் தமிழ்ப் பிராமியாக வாசிக்கக்கூடிய இடங்களையே வட பிராமியாக வாசித்துள்ளமையைக் காணமுடிகிறது.

இலங்கையின் பிராமிப் பொறிப்புகளை ஆராய்ந்த பலரும் மட்கலன்கள், முத்திரைகள், நாணயங்கள், கல்வெட்டுகள் என யாவற்றிலும் தமிழ்ப் பிராமியின் தாக்கம் இருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் கிடைத்த அரிய

முத்திரையை கா. இந்திரபாலா, பொ. ரகுபதி, சி. பத்மநாதன், சி.க. சிற்றம்பலம், ப. புஷ்பரட்ணம், கா. ராஜன் முதலானோர் தமிழ்ப் பிராமியாகக் கொண்டு ‘கோவேதன் - கோவேத - கோவேதம்,’ என வாசித்துள்ளனர். எ. சுப்பராயலு மாத்திரமே அதனை ‘ரேவத’ எனப் பிராகிருதமாக வாசித்துள்ளார் (2010).

இலங்கைப் பிராமி கல்வெட்டுகளில் தமிழ்ப் பிராமியின் சிறப்பு எழுத்துகளான ‘ழ், ன், ற், ன்’ ஆகிய எழுத்துகள் இடம்பெற்றுள்ளன; தமிழ்ப் பெயர்களும் பிராகிருத மயப்படுத்தப்பட்ட தமிழ்ப் பெயர்களும் இடம்பெறுகின்றன. பருமக, மருமக, மருமான, வேள, வேள், பூதன், பூதி, பரத, ஈழ முதலான சொற்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன. இச்சொற்கள் பெரிதும் ஈற்று மெய் இல்லாமலிருக்கின்றன. பிராகிருத மொழியில் ஈற்றில் மெய் வருவதில்லை என்ற காரணத்தினால் தமிழ்ப் பெயர்களைப் பிராகிருத மயப்படுத்தி எழுதும்போது ஈற்று மெய் தவிர்க்கப்பட்டுள்ளது என்பர் (பத்மநாதன், 2006: 30).

திஸ்ஸமஹாராம, அனுராதபுரம், கந்தரோடை, பூநகரி, மண்ணித்தலை முதலான இடங்களில் கிடைத்த மட்கலங்களில் தமிழ்ப் பிராமிப் பொறிப்புகளும் இடம்பெற்றுள்ளன. திஸ்ஸமஹாராமவில் கிடைத்த பிராமிப் பொறிப்புகளை ஆராய்ந்த ஹாரி போக், தமிழ் வரிவடித்தின் தொடக்க நிலையை அவற்றில் காணக்கூடியதாக உள்ளதாகவும் தமிழ்ப் பெயர்கள் பல பிராகிருதமயப்படுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார் (2014: 50). அனுராதபுரத்தில் ‘வேள்பூதன்’ என்ற தமிழ்ப் பிராமிப் பொறிப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. அக்குறுகொடவில் கிடைத்த நாணயங்களில் உதிரன், தஸபிட்டன், மகாசாதஅன், கபதிகடப அன், திஸபுர தாட ணாக ராசந் முதலான தமிழ்ப் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இலங்கையின் பிராமி கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டுள்ளதால் அவற்றுக்கும் தமிழ்மொழிக்கும் தொடர்பில்லை எனக் கூறமுடியாது என்பதை மேற்படி சான்றுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. தமிழகத்தில் பிராமி எழுத்துகளும், பிராமி எழுத்துகளைக் கொண்டு தமிழ்மொழியில் எழுதுதலும் புழக்கத்திலிருந்த அதே சமகாலத்தில் இலங்கையில் தமிழ்ப் பிராமியும், தமிழ்மொழியும் பயன்பாட்டில் இருந்துள்ளன. இலங்கையில் தமிழ்மொழி பயில்வு, தமிழர் குடிப்பரம்பல், இலங்கையின் பண்பாட்டு உருவாக்கத்திலும் அவற்றின் வளர்ச்சியிலும் தமிழரின் பங்களிப்பு முதலானவற்றைப் புரிந்துகொள்வதற்கும் பண்டைய இலங்கையில் நிலவிய கூட்டுப் பண்பாட்டுக் கூறுகளை அறிந்துகொள்வதற்கும் இவை அடிப்படை ஆவணங்களாக விளங்குகின்றன.

பெருங்கற்காலக் குறியீடுகள் அல்லது பிராமி அல்லாத குறியீடுகள் பற்றிய ஆய்வுகள் தமிழ்நாட்டினதும் இலங்கையினதும் எழுத்தறிவின் தொடக்கம் குறித்த அறிதலில் புதிய வெளிச்சத்தினை ஏற்படுத்தி வருகின்றன. இந்தியாவில் கிடைக்கப்பெற்றுள்ள காலத்தால் முந்திய எழுத்தாகச் சிந்துவெளிக்கால ஓவிய எழுத்துகள் கருதப்படுகின்றன. சிந்துவெளி எழுத்துகளைத் திராவிட எழுத்துகளின் மூலமாக வாசிக்கின்ற முயற்சிகள் இடம்பெற்று வந்தாலும் இற்றைவரை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுமளவிற்கு அவை வாசிக்கப்படவில்லை. சிந்துவெளி எழுத்துக்குப் பிறகு பிராமி எழுத்துப் பரவலாகப் புழக்கத்தில் இருந்துள்ளது. சிந்துவெளி எழுத்துக்கும் பிராமி எழுத்துக்கும் இடைப்பட்ட காலத்திற்குரியனவாக ஏராளமான குறியீடுகள் கிடைக்கப்பட்டுள்ளன. அக்குறியீடுகள் பிராமி எழுத்துகளுக்கு முன்னோடியாக விளங்கியுள்ளன என்பதைப் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தியாவில் கிடைக்கப்பெற்றுள்ள குறியீடுகளின் தோற்றம், வளர்ச்சி, வடிவம், தொடர்பு ஆகியன குறித்துப் பலரும் ஆய்வு செய்துள்ளனர். இலங்கையில் கிடைக்கப்பெற்றுள்ள குறியீடுகள் பற்றி தெரணியகல (1972,1986), கா. இந்திரபாலா

*(1981), விமலா பேக்லி (1967, 1973), சுதர்சன் செனவிரத்ன (1992), ஆரிய லங்கமுவ (2009), பொ. ரகுபதி (1987), ப. புஷ்பரட்ணம் (1993), ஒஸ்மான் பொப்பேயாராய்ச்சி (2002), ஹாரி போக் (2014) எனப் பலர் குறிப்பிடத்தக்க ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவர்களுள் சிலர் இந்தியக் குறியீடுகளுடன் இலங்கைக் குறியீடுகளை ஒப்பிட்டு நோக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். கா. ராஜனும் ஒஸ்மான் பொப்பேயாராய்ச்சியும் இணைந்து கொடுமணலில் கிடைத்த குறியீடுகளையும் ரிதிகமவில் கிடைத்த குறியீடுகளையும் ஒப்பிட்டு ஆராய்ந்து, இரண்டுக்கும் இடையிலான ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர் (2002).*

*இலங்கையில் அனுராதபுரம், ஆனைக்கோட்டை, ரிதிகம, இப்பன்கட்டுவ, யாப்பகுவ, களனி, கந்தரோடை, பொம்பரிப்பு, மாந்தை முதலான பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள அகழாய்வுகளில் கிடைத்த மட்பாண்டங்களில் குறியீடுகள் காணப்படுகின்றன. குறியீடுகள் மட்டும் கொண்ட மட்பாண்டங்களும் பிராமி எழுத்துகளுடன் கூடிய மட்பாண்டங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன் பிராமி குகைக் கல்வெட்டுகளிலும் அத்தகைய குறியீடுகள் இடம்பெற்றுள்ளன. ஆனைக்கோட்டையில் கிடைத்த முத்திரையில் மூன்று பிராமி எழுத்துகளுக்கு இணையான வகையில் அவ்வெழுத்துகளின் மேலே மூன்று குறியீடுகள் இடம்பெறுகின்றன. அக்குறியீடுகளைப் பிராமி எழுத்துக்கு நிகரான குறியீடுகளாகக் கருதும் கா. இந்திரபாலா அவை சிந்துவெளி எழுத்துகளுக்கு இணையானவை என்றுள்ளார் (1981). ஆனைக்கோட்டை குறியீட்டுக்கு இணையான வகையில் எடக்கலில் கிடைத்த தமிழ் - பிராமிப் பொறிப்பொன்றின் இறுதியில் குறியீடுகள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் கொடுமணல், வல்லம், கரூர், சானூர் முதலான இடங்களில் அக்குறியீட்டை ஒத்த குறியீடுகள் கிடைக்கப்பட்டுள்ளன (ராஜன், 2018: 80).*

*இந்தியாவில் கிடைக்கப்பெற்றுள்ள குறியீடுகள் குறித்து ஆய்வு செய்தவர்களுள் சிலர் அக்குறியீடுகளைச் சிந்துவெளி எழுத்தின் தொடர்ச்சியாகக் காண முயற்சித்துள்ளனர். லால் (1962), ஐராவதம் மகாதேவன் (2021) போன்றோர் அக் கருதுகோளின் அடிப்படையில் முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இலங்கையில் கிடைக்கப்பட்டுள்ள குறியீடுகளையும் சிந்துவெளி எழுத்துகளினதும் ஹரப்பா குறியீடுகளினதும் தொடர்ச்சியாகக் கருதும் போக்கும் காணப்படுகின்றது. ஆரிய லங்கமுவ, பி. பிரியங்க முதலானோர் இலங்கையில் கிடைக்கப்பெற்றுள்ள குறியீடுகளை ஹரப்பா மற்றும் பிந்தைய ஹரப்பா கால முத்திரைகளில் இடம்பெறும் குறியீடுகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து, அவற்றின் தொடர்ச்சியாகவே இலங்கையின் குறியீடுகள் காணப்படுகின்றன என்ற முடிவுக்கு வந்துள்ளனர் (Mendis: 2020). அவ்வாறே பரணவிதானவும் (1970) இலங்கையில் கிடைக்கப்பெற்றுள்ள குறியீடுகள் சிந்துவெளி குறியீடுகளுடன் ஒத்துள்ளன என்ற கருத்தை முன்வைத்துள்ளார்.*

*சிரான் தெரணியகல (1972) அனுராதபுரத்தில் கிடைத்த குறியீடுகளைப் பட்டியற்படுத்தி, இந்தியக் குறியீடுகளுடன் ஒத்துப்போவதைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன் அவை பிராமி எழுத்துக்கு முன்னோடியாக அமையக்கூடியவை என்பதையும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் கிடைத்த குறியீடுகளை நுண்ணிய தளத்தில் ஆராய முயற்சி செய்துள்ள சுதர்சன் செனவிரத்ன பிராமிக் கல்வெட்டுகளில் இடம்பெறும் பருமக - பருமகன் (நிர்வாகப் பதவிப் பெயர்) குறித்த பதிவுகளில் காணப்படுகின்ற குறியீடுகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி, ஒப்பிட்டு ஆராய்ந்து, அக்குறியீடுகளுள் சில குலக்குறிகளாகவும் சில குடும்பக் குறிகளாகவும் இருக்கலாம் என்ற முடிவுக்கு வந்துள்ளார் (1992). அவரது மற்றுமொரு ஆய்வில் இப்பன்கட்டுவ, யாப்பகுவ முதலிய இடங்களில் கிடைத்துள்ள பிராமி அல்லாத குறியீடுகள், பொ.ஆ.மு. 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என்றுள்ளார் (1997).*

பியதிஸ்ஸ சேனாநாயக்க (2018) மாத்தளை வேரகொட விகாரையின் பிராமி கல்வெட்டுகளில் பிராமி அல்லாத குறியீடுகள் இடம்பெறுவதைச் சுட்டிக்காட்டியுள்ளதோடு பண்டைக் காலத்தில் இக்குறியீடுகள் தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்றும் அவற்றைச் சரியாகப் படித்துணர முடியாமையால் எந்தக் கருத்தையும் உறுதியாகக் கூறமுடியாதுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். விமலா பேக்லி (1967), பொ. ரகுபதி (1987), சி.க. சிற்றம்பலம் (1982), ப. புஷ்பரட்ணம் (1993, 2003) முதலானோர் இலங்கையின் வடக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் கிடைத்த குறியீடுகளை ஆவணப்படுத்தியுள்ளனர்.



சிந்துவெளியில் கண்டுபிடிக்கப்பட்ட முத்திரைகள்

Image Source - ta.wikipedia.org

இலங்கையில் கிடைத்துள்ள குறியீடுகளுள் அநேகமானவை தென்னிந்தியாவில் கிடைத்த குறியீடுகளுடன் ஒத்திருப்பதைக் காணமுடிகின்றது. குறியீடுகள் குறித்து மிக விரிவான ஆய்வை மேற்கொண்ட கா. ராஜன் “தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் இதுவரை கண்டெடுக்கப்பட்ட குறியீடுகளைச் சற்று மேலோட்டமாக ஒப்பாய்வு செய்ததில் அவை அனைத்தும் ஒரே வகையான குறியீடுகளாக இருப்பதை அறிய முடிகிறது; இது இவ்விரு நிலப்பரப்புக்கும் இடையில் பல்லாண்டு காலம் மிக நெருக்கமான பண்பாட்டு உறவு இருந்ததை நமக்கு உணர்த்துகிறது; இலங்கையில் பிராமி எழுத்தல்லாத அனைத்துக் குறியீடுகளையும் ஆய்வுக்கு உட்படுத்தியதில் அவை அனைத்தும் தென்னிந்தியாவின் இரும்புக் காலம் மற்றும் வரலாற்றுத் தொடக்ககால மட்கலன்களில் கிடைக்கும் வடிவங்களுக்கு இணையான வடிவங்களாக அடையாளங் காண முடிந்தது (2018: 81,82)” என்ற முடிவினைத் தந்துள்ளார்.

இதுவரை கிடைக்கப்பட்டுள்ள பிராமி அல்லாத குறியீடுகள், தொடக்ககாலப் பிராமி ஆவணங்கள் முதலியவற்றைக் கவனத்தில் கொள்ளும்போது தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் அவை ஏக காலத்தில் வழக்கில் இருந்துள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது. இவை தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இருந்துவரும் நெருக்கமான உறவினை வெளிப்படுத்தி நிற்பதோடு இரு பிராந்தியங்களின் எழுத்தறிவு ஒன்றோடொன்று நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருந்துள்ளமையைக் காட்டிநிற்கின்றன.

இந்தியாவினதும் இலங்கையினதும் பிராமி எழுத்துகளின் வடிவம், மொழி, எழுது முறையில் ஏற்பட்டுவந்துள்ள மாற்றம் முதலானவற்றை ஆராயுமிடத்து வட இந்தியா, தென்னிந்தியா, இலங்கை ஆகிய பிராந்தியங்களில் குறிப்பிட்ட காலப் பகுதியில் அவ்வெழுத்துகள் பரவலடைந்து புழக்கத்தில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. கிடைக்கின்ற சான்றுகள் எப்பிராந்தியத்தில் அவ்வெழுத்து முறை முதன்முதல் தோன்றியது என்பதைக் கண்டறிவதற்குப் போதுமானதாக இல்லை. அதனாலேயே பிராமி எழுத்துகளின் தோற்றம், அவற்றின் காலம், பரவல் முதலானவை குறித்து முரண்பட்ட கருத்துகள் நிலவுகின்றன.

முரண்பட்ட முடிவுகள் நிலவுவதற்கான பின்புலமும் உறுதியான முடிவினை எட்ட

*முடியாதளவுக்குச் சான்றுகளின் போதாமையும் நிலவினாலும் இந்திய உபகண்டச் சூழலில் எழுத்தறிவின் தொடக்கத்திலும் வளர்ச்சியிலும் வட இந்தியா, தென்னிந்தியா, இலங்கை ஆகிய பிராந்தியங்களின் பிணைப்பை மறுதலிக்க முடியாதுள்ளது. இனிவருங் காலங்களில் கிடைக்கின்ற நம்பகமான சான்றுகளைக் கொண்டே மேற்படி பிராந்தியங்களின் எழுத்தறிவின் தோற்ற மூலத்தைக் கண்டறியலாம்.*

## உசாத்துணை


1. Cunningham, R.A.E., Allchin, F.R. (et all) (1999) Passage to India – Anuradhapura and Early use of the Brahmi Script, Cambridge Archaeo logical journal, 6 (1).

2. Deraniyagala, S.U. & Abeyratne, M., (2000) "RadioCarbon chronology of Anuradhapura, Sri Lanka: A revised age estimate, European Association of South Asian Archaeology, Vol. II.

3. Falk, Harry., (2014) "Owner's Graffiti on Pottery From Tissamaharama, Zeitschrift fr Archologie Auereuropischer Kulturen, Vol.6.

4. Mahadevan, Iravatham, (2021) Early Tamil Epigraphy: from the earliest times to the sixth Century C.E. (3rd Edition), Central Institute of Classical Tamil, Chennai.

5. Mendis, Thusitha, (2020) "Study of the Brahmi Letter and Others Symbols recovered from Galgamuwa Andarawewa Megalithic Burial in Sri Lanka (in Sinhala), Samodhana – Vol.9., Rajarata University of Sri Lanka.

6. Paranavitane, S., (1970) Inscriptions of Ceylon, Colombo: Archaeological Survey of Ceylon.

7. Rajan, K., & Bopearachchi, Osmund., (2002) "Graffiti Marks of Kodumanal (India) Ridiyag ama (Sri Lanka), Man and Environment, Vol.27No.2.

8. Ramesh, K.V., (1990) "Indian and Sri Lankan Epigraphy: A Comparative Study, Ancient Ceylon Vol. I.

9. Senanayake, P., (2018) Sri Lankave Ahilekana Hetherima (in Sinhala), Pathukka: Sandesha publication.

10. (2002) "Sri Lankave peranima lekana yana Eevahe Aarambaya pilibandhava adhasak, (in Sinhala) Hinduwara paryesanaathma lekana sangiraya, Daya Amarasegara and Rohitha Dishanayaka (Ed.) Warakapola: Ariya Pirakashaya.

11. Seneviratne, Sudharshan, (1992) "PreState Chieftains and Servants of the State: A Case of Parumuga, Sri Lankan Journal of the Humanities, Vol.15 – No.1.

12. சுப்பராயலு, எ., (2010) "ஆனைக்கோட்டை முத்திரை எழுத்துப் பொறிப்பு – ஒரு மீள்பார்வை, ஆவணம் – 21, தமிழகத் தொல்லியல் கழகம்

13. (2018) "பிராமி எழுத்தும் தென் இந்தியாவின் மொழிகளும், "பெருங்கற்காலக் கல்லறைகளும் கீறல் குறியீடுகளும், சுருக்கமான தென்னிந்திய வரலாறு : பிரச்சினைகளும் விளக்கங்களும், நொபோரு கராஷிமா (ப.ஆ), ப. சண்முகம் (மொ.பெ), பொள்ளாச்சி: அருட்செல்வர் நா. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம்.

14. பத்மநாதன், சி., (2006) இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், கொழும்பு: இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

15. புஷ்பரட்ணம், ப., (2003) பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும், கொழும்புத் தமிழ்ச்சங்கம்.

16. .., (2004) தமிழ் எழுத்தின் தோற்றம் (ஈழத்தில் இருந்து தமிழகத்திற்கு), யாழ்ப்பாணம்: மாவட்டச் செயலகம்.

17. ராஜன், கா., (2006) கல்வெட்டியல், தஞ்சாவூர்: மனோ பதிப்பகம்

18. , (2018) தொன்மைத் தமிழ் எழுத்தியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

‘இலங்கையில் தமிழ் பௌத்தம்’ என்னும் இப் புதிய தொடரில் ஏறக்குறைய 12 வரையான ஆய்வுக் கட்டுரைகளை பிரசுரிக்கவுள்ளோம். இக்கட்டுரைகளில் சிலவற்றைத் தவிர பெரும்பாலானவை ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஆய்விதழ்களில் பிரசுரிக்கப்பட்டவை. ஆங்கிலக் கட்டுரைகள் மொழிபெயர்ப்பு, தழுவலாக்கம், சுருக்க அறிமுகமும் விமர்சனமும் என்ற மூவகையில் அமைவனவாக இருக்கும். சி. பத்மநாதன், ஆ. வேலுப்பிள்ளை, பீட்டர் ஷல்க், சிவா. தியாகராஜா, பரமு. புஷ்பரட்ணம், அகிலன் பாக்கியநாதன் ஆகியவர்களின் கட்டுரைகள் இலங்கையில் தமிழ் பௌத்தம் பற்றிய தமிழர் நோக்கு நிலையை விளக்குவனவாக அமையவுள்ளன. இலங்கையில் தமிழ் பௌத்தம் பற்றிய தமிழர் நோக்கு நிலை, இலங்கையின் கடந்த கால வரலாறு முழுவதும் மேலாதிக்கம் பெற்றுள்ள சிங்கள பௌத்த இனக் குழுமத்தின் முழுமையான உரிமையும் உடமையும் என்ற நோக்கிலான கருத்தியலுக்கு மாறுபட்டது என்று சுருக்கமாகக் கூறலாம். சுனில் ஆரியரட்ண, ஜி.வி.பி. சோமரத்தின, எலிசபெத் ஹறிஸ் ஆகிய மூன்று ஆய்வாளர்களின் கட்டுரைகளும் இத்தொடரில் இடம்பெறவுள்ளன. இம் மூவரது கட்டுரைகளும் சிங்கள பௌத்த நோக்கு நிலை  தமிழர் நோக்கு நிலை என்ற இரண்டையும் விமர்சன நோக்கில் புரிந்துகொள்ள உதவுவன.





# அநுராதபுரத்தில் தமிழ் பௌத்த மன்னர்கள்


கா.இந்திரபாலா

பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் மற்றும் நெடுங்கால தொல்லியல் அனுபவம் உடையவரும் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான வரலாற்று நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், THE EVOLUTION OF AN ETHNIC IDENTITY, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.


கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதலாம் நூற்றாண்டின் மூன்றாம் காலின் ஆரம்பத்திலிருந்து கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட ஐந்தாம் நூற்றாண்டின் இரண்டாம் கால் வரையுள்ள ஏறக்குறைய ஐந்து நூற்றாண்டு காலமாக இலங்கையிலே தமிழ் மன்னன் எவரும் ஆட்சி புரியவில்லை. எனினும் இக் காலப்பகுதியிலே தமிழ் மக்கள் முன்போலத் தொடர்புகளை ஏற்படுத்தி இந்நாட்டுக்கு வந்திருக்க வேண்டும். மன்னரைப் பற்றியும் பௌத்த சங்கத்தைப் பற்றியும் எழுதி வைத்த பழைய வரலாற்றாசிரியர்களுக்கு மக்கள் வரலாற்றிலே அக்கறை இருக்கவில்லை. இதனால் தமிழ் மக்களைப் பற்றி மட்டுமன்றிச் சிங்கள மக்களைப் பற்றியும் அதிக தகவல்களை எங்களுடைய இலக்கிய ஆதாரங்களிலிருந்து பெற முடியாதிருக்கின்றது.

## சொத்திசேனன்

ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து அநுராதபுரத்தின் அரச சபையிலே மீண்டும் தமிழருடைய செல்வாக்குப் பரவத் தொடங்கியது. கி.பி. 406 இல் உபதிஸ்ஸ மன்னன் அவனுடைய பட்டத்தரசியாலே கொல்லப்பட்டான். மன்னனுடைய தம்பியாகிய மஹாநாமவுடன் தொடர்பு கொண்டிருந்த அப்பட்டத்தரசி மன்னனைக் கொன்றபின் மஹாநாமனை மணமுடித்துக் கொண்டாள். மஹாநாமன் புதிய மன்னனாகப் பதவி பெற்றான்.

இவனுடைய அரச சபையிலே தமிழருடைய செல்வாக்குக் காணப்பட்டது என்று கொள்ளச் சான்றுண்டு. இறந்த மன்னனுடைய பட்டத்தரசியையே மஹாநாமன் தனது பட்டத்தரசியாகவும் கொண்டிருந்தாலும், அவன் ஒரு தமிழ்ப் பெண்ணையும் மணம் புரிந்திருந்தான். இப் பெண் தென்னிந்திய அரச குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவளா என்பது தெரியவில்லை. அவள் அரச வம்சம் ஒன்றைச் சேர்ந்தவளாக இருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு.

மஹாநாமனுக்குப் பின்பு மன்னனாகப் பதவிபெற்ற சொத்திசேனன் என்பவன் தமிழ் அரசிக்குப் பிறந்த புத்திரனாவன். பட்டத்தரசிக்குப் பிறவாதவனாக இருந்தது மட்டுமன்றி, ஒரு தமிழ்ப் பெண்ணுக்குப் பிறந்தவனாக இருந்தமை அரச பதவியைப் பெறுவதற்குச் சொத்திசேனனுக்குத் தடையாக இருக்கவில்லை. இது அக்காலத்திலே இன பேதக் கருத்துகள் வலுப்பெறாது இருந்தன என்பதற்கு மேலும் ஓர் எடுத்துக் காட்டாகும்.

அரச பதவியைப் பெற்றிருந்தாலும் அதிக காலத்துக்கு அவனால் ஆள முடியவில்லை. பட்டத்தரசிக்குப் பிறந்த இளவரசியாகிய ஸங்கா என்பவள் சத்திரக்காரனாக (குடை பிடிப்போனாக) கடமையாற்றிய தனது கணவனை மன்னனாக்குவதற்காக சொத்திசேனனைக் கொன்றாள். புதிதாகப் பதவிபெற்ற ஸங்காவின் கணவனும் அதே ஆண்டிலே இறக்க நேரிட்டது. அவனுக்குப் பின் அரச பதவிக்கு உரிமையில்லாத மித்திரஸேன என்பான் ஓர் ஆண்டு காலம் ஆட்சி நடத்தினான். இது கி.பி. 429 இல் நடந்தது.

## தமிழர் படையெடுப்பு

கி.பி. 428 இல் மஹாநாமன் இறந்ததை அடுத்து அநுராதபுரத்திலே அரசியற் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன என்பது தெளிவாகின்றது. இவ்வாறு அரசியற் குழப்பங்கள் காணப்பட்ட போது, கி.பி. 429 இல் தமிழ்நாட்டிலிருந்து பண்டு என்பான் தலைமையிலே ஒரு படையெடுப்பு நடைபெற்றது. ஏறத்தாழ ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின்பு மீண்டும் தமிழ்நாட்டிலிருந்து ஏற்பட்ட ஒரு படையெடுப்பு இதுவேயாகும். இப் படையெடுப்பை நடத்தியவனுடைய பெயர் பண்டு என்று சூளவம்ஸத்திலே கொடுக்கப்பட்டுள்ளது (சூளவம்ஸ என்பது மஹாவம்ஸ நூலின் இரண்டாம் பாகமாகும்).

சிங்கள, பாளி நூல்களிலே பண்டு என்னும் பெயர் பொதுவாகப் பாண்டியனைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கும் படை நடத்தியவன் ஒரு பாண்டியனாக இருந்தமையினால் அவனுக்குப் பண்டு என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது என எண்ணத் தோன்றுகிறது. ஆனால் சிங்கள வரலாற்றாதாரங்களாகிய பூஜாவலியிலும் ராஜாவலியிலும் இவன் சோழ நாட்டவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவன் பாண்டிய வம்சத்தவனாக இருந்திருந்தால் அவனுடைய படையெடுப்புக்கும் சொத்திசேனனுடைய கொலைக்கும் தொடர்பு உண்டு என ஊகிக்க இடமுண்டு.

தமிழ் அரசியாகிய சொத்திசேனனின் தாய் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவளாக இருந்திருக்கலாம். சொத்திசேனன் கொல்லப்பட்டதன் விளைவாக அவனுடைய தாயாரின் இனத்தவன் ஒருவன் இங்கு படையெடுப்பை நடத்தியிருக்கலாம். தமிழ்நாட்டிலே களப்பிரர்



Image Source - mapio.net

படையெடுப்பினாலே பாதிக்கப்பட்ட பாண்டியரே இவ்வாறு இலங்கைக்குப் படையெடுத்தனர் என்றும் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்குச் சான்றுகள் போதா.

## பெரும் பாரிதேவன்

பண்டு அல்லது பாண்டு மன்னன் ஐந்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்து இறக்க, அவனுடைய மகன் பெரும் பாரிதேவன் மன்னனாகி மூன்று ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான். இவனுடைய பெயர் பாரிந்த (பாரீந்திரன்?) எனச் சூளவம்ஸத்திலே கொடுக்கப்பட்டுள்ளது. சிங்களக் கல்வெட்டு ஒன்றிலே இப்பெயர் பரித தேவ (பாரி தேவன் அல்லது பாரிந்த தேவன்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னொரு கல்வெட்டிலே இவனுடைய தம்பி பெயர் 'இளம் பாரிதேவன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமையனின் பெயரும் பாரிதேவன் என்று இருப்பதால் தமையனை தமிழ் மரபின்படி பெரும் பாரிதேவன் எனலாம்.

பெரும் பாரிதேவன் பல வகையாலும் முக்கியத்துவம் பெற்ற ஒரு மன்னனாவான். இவனுக்கு முற்பட்ட இலங்கைத் தமிழ் மன்னர்களைப் பற்றி இலக்கிய ஆதாரங்களிலிருந்து மட்டுமே அறிகின்றோம். அவர்களுடைய கல்வெட்டுகள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் பெரும் பாரிதேவனுடைய கல்வெட்டொன்று நமக்குக் கிடைத்துள்ளது. ஆகவே, இதுவே இலங்கைத் தமிழ் மன்னர்களுடைய கல்வெட்டுகளுள் மிகப் பழையது. இவனுக்குப் பின்பு அடுத்தடுத்து ஆண்ட மூன்று தமிழ் மன்னர்களைக் குறிபிடுகின்ற கல்வெட்டுகளும் நமக்குக் கிடைத்துள்ளன. இக் கல்வெட்டுகள் அனைத்தும் சிங்கள மொழியில் உள்ளன. தமிழ்

மன்னர்களாக இருந்தும் இவர்களுடைய கல்வெட்டுகள் சிங்களத்திலே இருந்தமைக்குக் காரணம் சிங்கள மொழியே அரசாங்க மொழியாகவும் பெரும்பான்மையினர் மொழியாகவும் விளங்கியமை காரணமாகும்.

## இளம் பாரிதேவன்

பெரும் பாரிதேவனுடைய சகோதரனாகிய இளம் பாரிதேவன் (பாளியில் குத்த பாரிந்த, இளம் அல்லது சிறிய பாரிந்த) கி.பி. 437 தொடக்கம் 452 வரை பதினாறு வருடங்கள் ஆட்சி புரிந்தான். இவனுடைய காலத்திலே தாதுஸேன என்ற சிங்கள இளவரசன் தமிழ் மன்னர் ஆட்சியை எதிர்த்துப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தான். தாதுஸேனனுக்கு ஆதரவளித்தவர்களை இளம் பாரிதேவன் தண்டித்தான் என்றும் தாதுஸேனனுக்கும் இவனுக்கும் இடையிலே போர் நடைபெற்றது என்றும் சூளவம்ஸத்திலே கூறப்பட்டுள்ளது. இவனுடைய ஆட்சிக் காலத்திலே இவன் "அறச் செயல்களையும் தீய செயல்களையும் புரிந்திருந்தான்" எனச் சூளவம்ஸ ஆசிரியர் தீர்ப்பளித்துள்ளார்.

இளம் பாரிதேவன் இறந்த பின்பு திருதரன் (சூளவம்ஸத்திலே திரிதர எனவும், கல்வெட்டு ஒன்றிலே ஸிரிதர எனவும் குறிப்பிடப்பட்டுள்ள இவன் பெயர் ஸ்ரீதர என்ற பெயரின் திரிபாகும்) என்ற தமிழ் மன்னன் பதவியேற்றான். இவனுக்கும் இளம் பாரிதேவனுக்கும் இடையில் என்ன தொடர்பு இருந்தது என்பது தெரியவில்லை. இவன் பதவியேற்று இரண்டு மாதங்கள் சென்ற பின் தாதுசேன இவனுடன் போர் தொடுத்து இவனைக் கொன்றான்.

இவனுக்குப் பின் தாடியன் என்ற தமிழன் மூன்று ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான் என அறிகின்றோம். இவனுக்கும் திருதரனுக்கும் இடையில் இருந்த தொடர்பு சூளவம்ஸத்திலே கூறப்படாவிட்டாலும் திருதரனின் மகனே தாடியன் என்பதும் தாடியனுடைய முழுப்பெயர் மகாதாடியன் மகாநாகன் என்பதும் கல்வெட்டொன்றிலிருந்து நமக்குத் தெரிய வருகின்ற செய்திகளாம். தாடியன் மூன்று ஆண்டுகள் ஆண்ட பின்னர் அவனையும் தாதுஸேன போரில் கொன்றான் என அறிகின்றோம்.

எனினும் தாதுஸேனனால் அரச பதவியைக் கைப்பற்றிக்கொள்ள முடியவில்லை. தாடியனுக்குப் பின் பீடியன் என்ற இன்னொரு தமிழன் ஏழு மாதங்கள் ஆட்சிபுரிந்தான். இவனைக் கொன்ற பின்பே தாதுஸேன அரச பதவியைப் பெற்றான் என்று கூறப்பட்டுள்ளது. சூளவம்ஸத்திலே கூறப்பட்டுள்ளது போல திருதரன், தாடியன் ஆகியோரையும் தாதுஸேனனே கொன்றான் என்பது சந்தேகத்துக்குரிய விஷயமாகும்.

## தமிழ் மன்னர் சமயம்

கி.பி. 429 இற்கும் 455 இற்கும் இடைப்பட்ட காலமாகிய தமிழர் ஆட்சிக் காலத்திலே "பகைவனால் புத்த சாசானம் அழிக்கப்பட்டிருந்தது" என்பது சூளவம்ஸ ஆசிரியருடைய கூற்றாகும். ஆட்சிபுரிந்த மன்னர்கள் அந்நியர்களாகையால் அப்படி நடந்திருக்கலாம் என்று பொதுவாக ஏற்றிருப்போம். ஆனால் சூளவம்ஸ ஆசிரியருடைய கூற்று பிழையானதென்பதை நிரூபிக்கும் வகையிலே நமக்குக் கல்வெட்டுகளின் சான்று கிடைத்துள்ளது. இந்தச் சான்றின்படி, ஆட்சிபுரிந்த ஆறு மன்னர்களுள் மூவராவது பௌத்தத்தை ஆதரித்து இருந்தனர் என்றும் அவர்கள் பௌத்தராக இருந்திருக்க வேண்டும் என்றும் கொள்ள இடமுண்டு.

பெரும் பாரிதேவன் ஒரு பௌத்த விகாரைக்குத் தானங்கள் செய்திருந்தான் என்பதை அறிவிக்கின்ற ஒரு கல்வெட்டு நமக்குக் கிடைத்துள்ளது. இது பெருமளவிற்குச் சேதமடைந்திருப்பதால் இதிலே உள்ள பல விபரங்களை அறிய முடியாதுள்ளது. இளம் பாரிதேவன் ஒரு பௌத்தனாக விளங்கினான் என்பதை இன்னொரு கல்வெட்டு அறிவிக்கின்றது. இக் கல்வெட்டின்படி, இளம் பாரிதேவன் தாங்கியிருந்த விருது புத்ததாசன் என்ற விருதாகும். அவனுடைய பட்டத்தரசி ஒரு பௌத்த விகாரைக்குப் பல தானங்களை வழங்கியிருந்தாள் என்ற செய்தியை இக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. இவ்வாறே




தாடியன் என்பவனும் கதிர்காமத்திலே ஒரு பௌத்த விகாரைக்குச் சில தானங்களை வழங்கியிருந்தான்.

இப்படித் தானம் வழங்கிய மன்னர்கள் பௌத்தர்களாக இருந்திருக்க முடியும். இலங்கையின் மன்னர்கள் பௌத்தர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவிலே பெருமளவிற்கு வலுப்பெற்றிருந்த காரணத்தினாலேயே இங்கு ஆட்சி நடத்திய தமிழ் மன்னர்களும் பௌத்தர்களாக மதம் மாறியிருப்பர். இக் காரணத்துக்காகவேதான் 18 ஆம் நூற்றாண்டில் கண்டியை ஆண்ட நாயக்கர்களும் பௌத்தர்களாக மாறியிருந்தனர்.

### நிலப்பிரபுக்கள் ஆதரவு

பொதுவாக எந்த நாட்டிலும் அந்நியப் படையெடுப்பாளர்கள் ஆதிக்கம் பெறும்போது உள்ளூர்ச் சக்திகள் சில அவர்களுக்கு ஆதரவு நல்குவதுண்டு. இலங்கையிலே இதற்கு முன்பு ஆதிக்கம் பெற்ற தமிழ்ப் படையெடுப்பாளர்களுக்கு எத்தகைய சக்திகளுடைய ஆதரவு இருந்தது என்பதை அறியச் சான்றுகள் போதாது. சேனன், குத்திகன் ஆகியோருக்கு வர்த்தகர்களுடைய ஆதரவு இருந்திருக்கலாம். ஐந்தாம் நூற்றாண்டில் ஆதிக்கம் செலுத்திய தமிழ் மன்னர் அறுவருக்கு எத்தகைய சக்திகள் உதவி புரிந்திருந்தன என்பதை ஓரளவு அறிவதற்குச் சூளவம்ஸத்திலே சான்று கிடைத்துள்ளது.

கடைசித் தமிழ் மன்னனைக் கொன்று அரச பதவியைக் கைப்பற்றிய தாதுஸேனன் "தன்னையோ தூய தத்துவத்தையோ பௌத்தத்தைதோ பாதுகாக்காது தமிழருடன் கூடியிருந்த உயர் குலத்தவர் மீதும் குலக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் மீதும் ஆத்திரங்கொண்டு, அவர்களுடைய ஊர்களை அபகரித்து அவர்களுடைய ஊர்களுக்கிருந்த பாதுகாப்பையும் நீக்கினான்" எனச் சூளவம்ஸத்திலே கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து நிலப்பிரபுக்களுள் ஒரு பிரிவினருடைய ஆதரவைத் தமிழ் மன்னர் பெற்றிருந்தனர் என அறிய முடிகின்றது. தங்கள் நலன்களையும் சொத்துகளையும் பாதுகாப்பதற்காக உயர் குலத்தவர்கள் அவ்வாறு நடந்தனர் என்றே விளக்க வேண்டியுள்ளது.

*★இக் கட்டுரை 1969 ஜூலை 6 இல் வீரகேசரியில் வெளிவந்தது.*

நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே 'வளரும் வடக்கு' எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.

*தமிழில்: த. சிவதாசன்*

# இயக்கச்சி முதல் நியூயோர்க் வரை: அமெரிக்காவிற்கு ஏற்றுமதியாகும் தென்குப் பொருட்கள்






**ஜெகன் அருளையா**

இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம் பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக, இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களிலும் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.


ராஜ் ஜனனின் தந்தையார் முன்னொரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் வெற்றிகரமான ஆலை அதிபர். அலுமினியத் தொழிற்சாலை, ஆடைத் தொழிற்சாலை, தனியார் மருத்துவமனை, செய்திப் பத்திரிகை எனப் பல தொழில்களையும் நடாத்தியவர். அப்போது ஜனனுக்கு 11 வயது மட்டுமே. 1971 இல் நடைபெற்ற ஜே.வி.பி ஆயுதக் கலகம் சிறுவன்

*ஜனனின் அரும்பும் காலங்களைக் குழப்பிவிட்டது. கலகத்தின் விளைவாக குடும்பம் பிரிய நேரிட்டது. தாயும் சகோதரியும் கொழும்பில் மாட்டிக்கொள்ள தந்தையுடனும் இரண்டு சகோதரர்களுடனும் ஜனன் யாழ்ப்பாணத்தில் தஞ்சமடையவேண்டி நேர்ந்தது. தாயின் அரவணைப்பில்லாது தனித்துவிடப்பட்ட ஜனன் தந்தையின் அலுமினியத் தொழிற்சாலையில் வேலை கேட்கவேண்டி ஏற்பட்டது. முதலாளியின் மகனுக்குரிய முகாமைத்துவ வேலைக்குப் பதிலாக ஜனனுக்குக் கிடைத்தது ஒரு தும்புத்தடி. இரண்டு வாரங்கள் ஆலைத் தரையைத் துப்புரவாக்கிய பின்னர் ஜனனுக்கு 'ரீ போய்' (Tea boy) ஆகப் பதவி உயர்வு கிடைத்தது. பெரியதொரு சட்டியை அடுப்பில் வைத்து விறகு மூட்டி நீரைக் கொதிக்க வைப்பதுவே அவரது வேலை. எவ்வளவோ அழுது பார்த்தும் அப்பா இரங்கவே இல்லை.*

50 பணியாளர்களுக்கு தேநீர் தயாரிப்பதில் 'சிறப்பு பட்டம்' பெற்ற பின்னரே ஆலை இயந்திரங்களை இயக்குவதற்கான பணியுயர்வு ஜனனுக்குக் கிடைத்தது. இப்பருவத்திலேயே பொது மனிதர் மீதான பரிவு ஜனன் மனதில் துளிர்த்தது.

*50 பணியாளர்களுக்கு தேநீர் தயாரிப்பதில் 'சிறப்பு பட்டம்' பெற்ற பின்னரே ஆலை இயந்திரங்களை இயக்குவதற்கான பணியுயர்வு ஜனனுக்குக் கிடைத்தது. இப்பருவத்திலேயே பொது மனிதர் மீதான பரிவு ஜனன் மனதில் துளிர்த்தது. வேலை முடிந்ததும் பணியாளர் அனைவரும் ஆலைக் கிணற்றில் குளிக்கும்போது ஜனனும் அவர்களோடு இணைந்து கொள்வார். துடைப்பக் கட்டையோ அல்லது தேனீர் தயாரிப்போ ஜனனுக்கு அவர் தந்தை மீது வெறுப்பை ஏற்படுத்தவில்லை. மாறாக சக மனிதர் மீதான பரிவை உருவாக்கியமைக்காக அவர் இப்போதும் தனது தந்தைக்கு நன்றியாகவிருக்கிறார்.*

*யாழ்ப்பாணத்தின் முன்னணிக் கல்லூரிகளான மத்திய கல்லூரி மற்றும் செய்ன்ட். ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியை முடித்துக்கொண்டு 1977 இல் ஜனன் இந்தியாவிற்குச் சென்று அங்கு பல்கலைக்கழக புகுமுகக் கல்வியைத் தொடர்கிறார். மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி கிடைக்கும் தரங்களைப் பெற்றிருந்தாலும் தந்தை அதை அனுமதிக்காத காரணத்தால் பெங்களூர் பல்கலைக்கழகத்தில் விவசாயப் பட்டப்படிப்பைத் தொடங்குகிறார். ஜனனுக்கு 12 வயதாகவிருக்கும்போது தந்தையார் இயக்கச்சியில் 40 ஏக்கர் தென்னந்தோப்பு ஒன்றை வாங்கியமை ஜனன் இத்துறைக்குள் நுழைவதற்கு காரணமாக இருக்கலாம். ஆனையிறவுக்கு சற்று வடக்கே இருந்த இப்பண்ணையில் தந்தையுடன் ஜனன் சென்று பணியாற்றியது அவருக்கும் விவசாயத் துறையில் ஒரு விருப்பை ஏற்படுத்தியிருந்தது. நான்கு வருடங்களுக்குப் பிறகு பெங்களூரிலிருந்து இலங்கை திரும்பிய ஜனன் நோர்வேயைச் சேர்ந்த அரசு சார்பற்ற அமைப்புடன் இணைந்து விவசாய ஆராய்ச்சியில் இறங்கினார்.*

*இலங்கையில் சுதேச பாரம்பரிய விவசாய நடைமுறைகள் சேதனப் பண்புகளைத் தக்கவைத்துக் கொள்வதுடன் எப்படி மண்ணையும் வளமாக வைத்துக்கொள்ள முடிகிறது என்பது பற்றி நோர்வே நாட்டினர் ஆராய்ச்சிகளைச் செய்து வந்தனர். 1984 இல் ஒருநாள் நோர்வேக்காரர் ஒருவருடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அருகே வாகனமொன்றில் பயணித்துக் கொண்டிருந்தபோது மின் கம்பத்தில் ஒருவர் கட்டப்பட்டுச் சுடப்படுவதைப் பார்த்தார். 1983 ஆடிக் கலவரங்களை அனுபவித்துக் கடந்து வந்த ஒருவருக்கு, ஒருவர் பகிரங்கமாகக் கட்டிவைத்துச் சுடப்படுவது மிகவும் கொடுமையான அனுபவமாகப்பட்டது. இதைப் பார்த்த பின்னர் நோர்வேக்காரரும் இலங்கையைவிட்டு நிரந்தரமாக விலகிவிடத்*



ராஜ் ஜனன் மற்றும் ஜோன்
Image Source :  www.lankabusinessonline.com

தீர்மானித்தார்கள். ஆனாலும் அவர்கள் போவதற்கு முன் நோர்வேயினால் வழங்கப்படும் மதிப்பு மிக்க 'நோறாட்' புலமைப் பரிசில் ஒன்றை ஜனன் பெறுவதற்கு உதவி செய்துவிட்டுச் சென்றிருந்தார்கள்.

நோர்வேயில் ஒரு வருடம் தங்கி படிப்பை முடித்ததும் நோர்வே நாட்டின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ அமைப்பான நோறாட்டில் இணைந்து இஸ்ரேல், பாலஸ்தீனம், எகிப்து ஆகிய நாடுகளில் பணியாற்றினார். போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அனுபவம் ஜனன் இந்நாடுகளில் பணிகளை ஏற்றுக்கொள்வதற்கு ஓரளவு உதவியாகவிருந்தது. மிகவும் ஆபத்தான இப்பணிகளுக்கு இதர விண்ணப்பதாரர்கள் முன்வராமையும் ஜனனுக்கு வசதியாகவிருந்தது. ஆனாலும் 1988 இல் நடைபெற்ற பாலஸ்தீனிய மக்கள் எழுச்சியின்போது ஜனனை ஒரு பாலஸ்தீனியர் என நினைத்து இஸ்ரேலிய இராணுவத்தினர் தாக்கியமையும், இதன் காரணமாக அவர் மூன்று பற்களை இழந்தமையும் அப்பிரதேசத்தில் பணியாற்றுவதை அவர் மறுபரிசீலனை செய்யும் நிலைக்குத் தள்ளியது. இச்சம்பவத்தின் பின்னர், ஜனன் ஒரு இலங்கையர் என அறிந்ததும் இஸ்ரேலிய இராணுவத்தினர் அவரிடம் மன்னிப்புக் கேட்டதோடு அவரை அவரது ஒட்டலுக்கு கொண்டுசென்று காயங்களிலிருந்து ஆறுவதற்கு வசதிகளையும் செய்து கொடுத்திருந்தனர். மறுநாள் அவர்கள் மீண்டும் ஒட்டலுக்கு வந்து சுற்றுலாத் தலமான 'ஒலிவ் மலை' க்கு அழைத்துச் சென்று அவரைக் களிப்புற வைத்தமை வேறு கதை.

இதன் பிறகு ஜனன் 'நோறாட்' நிறுவனத்தை விட்டு விட்டு கனடாவிற்குப் புலம் பெயர்ந்தார். இங்கிருந்து அமெரிக்கா சென்ற அவர் சூழல் பாதுகாப்பு ஏஜென்சி (Environmental Protection Agency - EPA), ஆபத்தான கழிவுகள் ஆராய்ச்சி நிறுவனம் (Hazardous Waste Research Institute), இலிநோயிஸ் மாநில நீராய்வு (Illinois State Water Survey) மற்றும் நிலக் கண்காணிப்பு ஏஜென்சி (Land Monitoring Agency) உட்படப் பல சூழல் பாதுகாப்பு அமைப்புகளில் பணியாற்றியிருந்தார். GPS தொழில்நுட்பத்தைப் பாவித்து அமெரிக்காவின் விவசாயப் பண்ணைகளின் வரைபடங்களை உருவாக்கிக் கொடுத்தமை இவரது பணிகளில் முக்கியமான ஒன்றாகும். தற்போது எமது ஸ்மார்ட் ஃபோன்களில் குடிகொண்டிருக்கும் GPS தொழில்நுட்பம் 1980 / 90 களில் முதுகில் தொங்கும் பாரிய உறைகளில் அன்ரெனா எனப்படும் கம்பிகளை வெளியே தள்ளிக்கொண்டு நிற்கும் பாரமான கருவிகளாக இருந்தன. இக்காலத்தில் ஜனனின் நண்பர் ஒருவரின் வற்புறுத்தலின் பலனாக அவர் ஒரு தரவுத்தள நிர்வாகிக்கான (Database Administrator) கல்வியைக் கற்று வால்ஸ்ரீட்டில் பணிபுரியும் தொழில்நுட்பவாதிகளின் தரத்துக்கு தன்னை உயர்த்திக் கொண்டிருந்தார். அவரது நண்பர் தனது ஓய்வு வேளையின் 6 மாத காலத்தை ஜனனைப் புதிய துறைக்குப் பயிற்றுவிப்பதில் செலவிட்டிருந்தார்.

இப்பயிற்சியைத் தொடர்ந்து நியூயோர்க் வால்ட்ஸ்ரீட்டில் இருக்கும் பிரபலமான முதலீட்டு வங்கிகளில் ஒன்றான ஜே.பி மோர்கன் என்ற நிறுவனத்தில் 'டேற்றாபேஸ் அட்மினிஸ்ட்றேட்டர்' பதவிக்கு விண்ணப்பித்தார். "என்னைப் போல ஒரு முட்டாள், 6 மாத சுயகல்வி மூலம் ஜே.பி மோர்கனில் வேலை எடுக்க முடியுமாக இருந்தால் வேலையற்ற கொம்பியூட்டர் பட்டதாரிகளைப் பயிற்றுவித்து ஆலோசகர்கள் (Consultants) பதவிக்கு அனுப்பிவைக்கலாம்" என யோசித்தேன் என்கிறார் ஜனன். அத்தோடு அவர் நிற்கவில்லை. இலங்கையிலிருந்து வந்து வேலை தேடிக்கொண்டிருந்த சமத், பாலா, வால்டர் ஆகியோருடன் ஜனனும் அவரது தொழில் பங்காளி சஞ்சாயும், தொழில்நுட்ப ஆலோசகர்களைப் பயிற்றுவித்தும், பணிக்கெடுத்தும் வால்ஸ்ரீட் நிறுவனங்களுக்கு பணியாளர்களை வழங்க ஆரம்பித்தனர். இரண்டே வருடங்களில் அவர்களது நிறுவனம் 250 பணியாளர்களைக் கொண்டதாக வளர்ந்தது. 'இங்க்' என்ற சஞ்சிகையில் (Inc

*Magazine) அமெரிக்காவின் அதி வேகமாக வளரும் நிறுவனங்கள் என்ற பட்டியலில் ஜனனின் நிறுவனம் இரு தடவைகள் இடம்பெற்றிருந்தது. 2005 இல் ஜனனும் சஞ்சாயும் தமது நிறுவனத்தை பங்குச் சந்தையில் விற்றனர். 2007 இல் ஜனன் தனது பங்குகளையும் விற்றுவிட்டு வெளியேறிவிட்டார்.*

*2004 ஆழிப் பேரலையைத் தொடர்ந்து 2005 இல் ஜனன் யாழ்ப்பாணத்துக்கு வந்து சில மாதங்கள் 'SOS KinderDorf' (குழந்தைகளின் கிராமம்) என்னும் அமைப்புடன் இணைந்து வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதில் பணியாற்றினார். இங்கு அவர் அவரது தற்போதைய வியாபாரப் பங்காளியான மினெசோட்டா, அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் ராஸ்ராட் என்பவர்களைச் சந்திக்கிறார். ஒரு வெற்றிகரமான முதலீட்டு தொழில்முகவரான ஜோன் தொழில்நுட்ப நிறுவனங்களை உருவாக்குவதில் மிகவும் கெட்டிக்காரர். அத்தோடு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பணிபுரிய மிகவும் விருப்புக் கொண்டவர். நியூயோர்க்கில் ஜோன், தொழில்நுட்பவியலாளர் கலாநிதி பிரியன் குணதிலக மற்றும் ஜனன் ஆகியோர் இணைந்து சக்தி பாவனையை அளக்கக்கூடிய ஒரு தொழில்நுட்பக் கருவியொன்றை உருவாக்கினர். இதற்கான தொழில்நுட்பத்தை அவர்களே கண்டுபிடித்ததுடன் அதற்கான காப்புரிமையையும் பதிவு செய்தனர். "பாவனையாளர் ஒருவர் தனிப்பட்ட முறையில் எவ்வளவு மின்சாரத்தைப் பாவிக்கிறார் என்பதை அளந்து சொல்லும் கருவியைப் பாவிப்பதன் மூலம் மின்சார விரயத்தைத் தடுக்க முடியும்" என இவர்கள் நம்பினார்கள். துரதிர்ஷ்டவசமாக 2008 இல் ஏற்பட்ட பொருளாதாரச் சரிவினால் அடித்துச் செல்லப்பட்ட பல நிறுவனங்களில் ஒன்றாக ஜனனின் நிறுவனமும் சேர்ந்துகொண்டது. இருப்பினும் இக்கருவியின் கண்டுபிடிப்புக்கான காப்புரிமை இன்னமும் பாதுகாப்பாக இருக்கிறது. ஒருநாள் அவர்கள் மீண்டும் அதை உயிர்ப்பிக்கலாம். யார் கண்டது? இதன் பிறகு இயக்கச்சியில் தந்தையாரால் வாங்கப்பட்ட தென்னந்தோப்பில் ஏதாவது செய்ய முடியுமா என ஜனன் யோசித்தார். இத்தோப்பில் இருந்த 2,500 தென்னைகள், 150 மாமரங்கள், 60 முந்திரி மரங்கள், ஒரு பல்குள நீர்ப்பாசனத் திட்டம் ஆகியன போரினால் முற்றாக அழிக்கப்பட்டிருந்தன. இவற்றில் எஞ்சியிருந்தவை குண்டுகள் துளைத்த 170 மரங்களும், காடாகிப் போன நிலமும், அவற்றில் பரந்து கிடந்த வெடிக்காத குண்டுகளுமே. (இத்தனை குண்டுகள் துளைத்த மரங்களால் இப்போதும் எப்படி பழங்களைத் தர முடிகிறது என நான் ஆச்சரியப்பட்டதுண்டு). தனது மனைவி பிள்ளைகளுடன் நியூயோர்க்கில் வசித்துக்கொண்டே பணத்தையும் அறிவுறுத்தல்களையும் வழங்கி பண்ணைக்கு புத்துயிர் வழங்க ஜனன் முயற்சித்தார். வருடத்துக்கு ஒரு தடவை, இரண்டு வாரங்களுக்கு அவர் யாழ்ப்பாணம் வந்து பார்த்தும் அது எந்தவிதப் பலனையும் தரவில்லை. பண்ணையில் பெரிதாக எந்த மாற்றமும் நடைபெறவில்லை. இதனால் யாழ்ப்பாணத்தில் நீண்டகாலம் வதிவதற்கேற்ற தகுந்த வியாபார முயற்சியொன்றை ஆரம்பிக்க உத்தேசித்தார். இலங்கையில் இரண்டு பிரதேசங்கள் தென்னை வளர்ப்புக்குப் பேர் போனவை. தெங்கு முக்கோண வலயம் (Coconut Triangle Zone) என்பது ஒன்று. இது புத்தளம், குருநாகல், கொழும்பு ஆகிய நகரங்களை எல்லைகளாகக் கொண்டது. மற்றையது தெங்குப் பட்டி (Coconut Belt) எனப்படுவது. இது யாழ் குடாநாட்டில் ஆரம்பித்து A9 அருகாகச் சென்று இயக்கச்சி ஊடாக சாவகச்சேரியில் முடிவடைகிறது.*

*'தெங்கு முக்கோணத்தில்' தெங்கு வியாபாரம் பல்கிப் பெருகியிருந்த நிலையில், போர் 'தெங்குப் பட்டி' யையும் சேர்த்து யாழ் குடாநாட்டையே துவம்சம் செய்தது. இப்பேரழிவிலிருந்து மீண்டு தெங்குப் பயிர்ச்செய்கையை மீளவும் உச்சத்துக்குக் கொண்டுவர ஜனன் சந்தர்ப்பங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். தேங்காய்ப் பொச்சு,*

**‘தெங்கு முக்கோணத்தில்’ தெங்கு வியாபாரம் பல்கிப் பெருகியிருந்த நிலையில், போர் ‘தெங்குப் பட்டி’ யையும் சேர்த்து யாழ் குடாநாட்டையே துவம்சம் செய்தது. இப்பேரழிவிலிருந்து மீண்டு தெங்குப் பயிர்ச்செய்கையை மீளவும் உச்சத்துக்குக் கொண்டுவர ஜனன் சந்தர்ப்பங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். தேங்காய்ப் பொச்சு, நார்க்கழிவு போன்ற தெங்குப் பொருட்கள் துணைவந்தன. இலங்கை தெங்கு அபிவிருத்தி நிர்வாகம், குறிப்பாக யாழ் தெங்கு விவசாயச் சபை ஆகியவற்றின் உதவியுடன் ஜனன் ஒரு வியாபாரத்திற்கான திட்டத்தை உருவாக்கினார்.**

நார்க்கழிவு போன்ற தெங்குப் பொருட்கள் துணைவந்தன. இலங்கை தெங்கு அபிவிருத்தி நிர்வாகம், குறிப்பாக யாழ் தெங்கு விவசாயச் சபை ஆகியவற்றின் உதவியுடன் ஜனன் ஒரு வியாபாரத்திற்கான திட்டத்தை உருவாக்கினார். ஒரு பாரிய பண்ணையைத் தானே உருவாக்குவதை விடுத்து, வடக்கிலுள்ள சிறிய தெங்கு விவசாயிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் அமைவதாக அவரது திட்டம் இருந்தது. அப்போது யாழ்ப்பாணத்திலிருக்கும் தெங்கு விவசாயச் சபையின் கீழ், வடக்கில், 330 கூட்டுறவுச் சபைகள் இயங்கி வந்தன. இவற்றிடமிருந்து தேங்காய்ப் பொச்சுகளை வாங்குவதாக ஜனன் ஒப்பந்தம் செய்தார். விவசாயிகளுக்கு நேரடியாகப் பணத்தையும் அதேவேளை கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரிய தரகுப் பணத்தையும் கொடுத்து சகலரது உழைப்பிற்கும் ஊதியம் கொடுத்தார். தேங்காய் மட்டைகளிலிருந்து பொச்சுக்களைப் பிரிக்கும் வேலைகளை அயலிலுள்ள பெண்களுக்குக் கொடுத்தார். வியாபாரம் பெருக, ஜனன் மினெசோட்டாவிலுள்ள அவரது நண்பர் ஜோன் ரேஸ்ரெட்டின் உதவியை நாடினார். அமெரிக்காவிலுள்ள முதலீட்டாளர்களையும் யாழ்ப்பாணத்திலிருந்து ஜனனையும் தொலைபேசி மூலம் இணைத்து ஜனனின் வியாபார முயற்சிக்கான பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. இணக்கம் கண்ட முதலீட்டாளர்களை ஜனனும் ஜோனும் நியூயோர்க்கில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தொழிலை உடனடியாக ஆரம்பிப்பதற்கு பணமும் சந்தைகளும் தேவைப்பட்டன. இதன் விளைவாக உருவானதே ‘சக்தி ஆக்ரோ’ (Sakti Agro). கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள இலங்கை முதலீட்டுச் சபையின் உதவியுடனும் US$ 500,000 முதலீட்டுடனும் இலங்கையில் ஒரு நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மேலும் பாரிய அளவில் முதலீடு செய்யப்பட்டது. இருப்பினும் திட்டமிட்டபடி எதுவும் நடக்கவில்லை. வருத்தம் தரும் வகையில் பாடங்கள் படிக்கவேண்டி நேரிட்டது.

உதாரணத்திற்கு, ஆலைக்குத் தேவையான இயந்திரங்களை ‘சக்தி’ இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதாக முடிவெடுத்திருந்தது. ஆனால் இயந்திரங்கள் உரிய காலத்தில் வந்து சேராதது மட்டுமல்ல, வந்தவையும் அரையும் குறையுமாக இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இயந்திரங்களை வழங்கிய நிறுவனம் போதுமான ஆரம்பகால உதவிகளை வழங்கவில்லை. ஜனனும் அவர்களது பணியாளர்களும் ‘யூ ரியூப்’ காணொளிகளைப் பார்த்து தாமாகவே இயந்திரங்களைப் பழுதுபார்த்து இயக்க வேண்டியிருந்தது. இதே இயந்திரங்களை இலங்கையிலேயே வாங்கியிருக்க முடியும். ஆனால் இலங்கையில் இத்தொழிலில் ஈடுபடும் வெகு சில நிறுவனங்கள் ஜனனைத் தமது தொழில் எதிரியாகப் பார்த்ததனால் தமது ‘தொழில் இரகசியங்களைப்’ பகிர்ந்துகொள்ளத் தயங்கினார்கள். அதிர்ஷ்டவசமாக ‘சக்தி’யின்

முதலீட்டாளர்கள் பொறுமை காத்தனர்; தொழில் முற்றாகப் பலன் தருவதற்கு 11 மாதங்கள் தாமதம் ஏற்பட்டிருந்தும் அவர்கள் ஜனனைப் புறம் தள்ளவில்லை. 'சக்தியின்' பிரதானமான ஏற்றுமதிப் பொருள் தெங்கு மட்டையின் பொச்சிலிருந்து பெறப்படும் நார்த் தூளாகும். தேங்காய்ப் பொச்சில் மூன்றில் ஒரு மடங்கு நாராகவும் மீதி தூளாகவும் இருப்பது வழக்கம்.

வழக்கமான தும்புத் தடிகள், படுக்கை மெத்தைகள், விரிப்புகள் போன்றவை நார்களின் மூலம் தயாரிக்கப்படுபவை. இதன்போது எச்சமாக வரும் நார்க்கழிவு குப்பையில் வீசப்படுகிறது. இக்கழிவுகளை தூளாகவோ அல்லது சதுரக் கட்டிகளாகவோ ஆக்கி தொட்டித் தாவரங்களுக்கு மண்ணாகப் பாவிக்கலாம். தண்ணீரை உறிஞ்சி வைத்திருப்பதுடன், பசளைத் துணிக்கைகளையும் தேக்கி வைத்துக்கொண்டு தாவரங்களின் வேர்கள் கிளைவிட்டு வளர்வதற்கு உதவியாக இருப்பதனால் இந்நார்க் கழிவுகளுக்கு வெளிநாடுகளில் நல்ல மவுசு உண்டு. வட அமெரிக்காவிலிருந்து மீண்ட ஜனன் விவசாயக் கல்வியறிவை மட்டுமல்ல இலங்கை மற்றும் வடமாகாணம் பற்றிக் கொண்டிருந்த அறிவையும் சேர்த்து தன் தொழில் முயற்சிகளில் பயன்படுத்தினார். தொழில் நிறுவனங்களை உருவாக்குதல், முதலீட்டாளர்களைக் கண்டுபிடித்தல், நிறுவனங்களை வளர்த்தெடுத்தல், அவற்றை வெற்றிகரமாகச் சந்தைப்படுத்தல், தேவையானால் உரிய வேளையில் அவற்றை விற்று தனக்கும் தன்னை நம்பி வந்த முதலீட்டாளர்களுக்கும் இலாபம் சம்பாதித்துக் கொடுத்துவிட்டு வெளியேறுதல் போன்ற திறமைகளை அவர் அமெரிக்காவில் கற்றுக்கொண்டார். முதலீட்டு நிறுவனங்களுடனும் தனிப்பட்ட தனவந்தர்களுடனும் அவர் ஏற்படுத்திய



**குண்டுகள் துளைத்த தென்னை மரம்**
Image Source : www.lankabusinessonline.com

வலையமைப்பு யாழ்ப்பாணம் வரை வளர்ந்தது. கடலுணவுகள், விவசாயச் சாகுபடிகள் உட்பட்ட பல மூலப்பொருட்கள் செறிந்த பிரதேசமாக வடக்கு அமைந்திருப்பது மிகவும் சாதகமானது. இருப்பினும் அவற்றை அறுவடை செய்தவுடன் அப்படியே மூலப்பொருட்களாக ஏற்றுமதி செய்வதன் மூலம் வெகுசொற்பப் பணத்தையே விவசாயிகள் சம்பாதிக்கிறார்கள். இம்மூலப் பொருட்களை நுகர்வோருக்குத் தேவையான வகையில் மாற்றிப் பண்டங்களாக விநியோகித்தால் அதிக இலாபமீட்ட முடியும். கடற் சாதாழை மற்றும் தெங்குப் பொருட்கள் சில ரூபாய்களுக்கு ஒரு கிலோகிராமென விற்கப்படுகிறது; கடலுணவு அதன் சில்லறை




தெங்கு நாரும் துகளும்
Image Source : www.lankabusinessonline.com

**வழக்கமான தும்புத் தடிகள், படுக்கை மெத்தைகள், விரிப்புகள் போன்றவை நார்களின் மூலம் தயாரிக்கப்படுபவை. இதன்போது எச்சமாக வரும் நார்க்கழிவு குப்பையில் வீசப்படுகிறது. இக்கழிவுகளை தூளாகவோ அல்லது சதுரக் கட்டிகளாகவோ ஆக்கி தொட்டித் தாவரங்களுக்கு மண்ணாகப் பாவிக்கலாம். தண்ணீரை உறிஞ்சி வைத்திருப்பதுடன், பசளைத் துணிக்கைகளையும் தேக்கி வைத்துக்கொண்டு தாவரங்களின் வேர்கள் கிளைவிட்டு வளர்வதற்கு உதவியாக இருப்பதனால் இந்நார்க் கழிவுகளுக்கு வெளிநாடுகளில் நல்ல மவுசு உண்டு.**

விலையில் ஒரு சிறு பங்கிற்கே விற்கப்படுகிறது. இவற்றைப் பதனிட்டு சேமித்து வைக்கத்தக்க குளிரூட்டப்பட்ட வசதிகள் இல்லாமையால் பெரும்பாலான பழங்களும், மரக்கறிகளும் மிகக்குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. சேமிப்பு வசதிகள் அதிகமிருந்தால் விளைச்சல் அதிகமாக இருக்கும்போது மலிவு விலையில் அவற்றை விற்காது அவற்றைச் சேமித்து வைத்து விளைச்சல் குறைவான, தட்டுப்பாடான காலங்களில் அதிக விலைக்கு விற்றுப் பலன் பெற முடியும்.

வடக்கின் மக்கள் மிகவும் திறமையுடையவர்கள். போதுமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படாமையால் அவர்கள் தென்னிலங்கைக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ சென்றுவிடுகிறார்கள். அதை இன்னுமொரு கட்டுரையில் பார்ப்போம்.

வட மாகாணமோ அல்லது யாழ்ப்பாணமோ எப்படியான சந்தர்ப்பங்களை வழங்கக் காத்திருக்கிறது என அங்கலாய்க்கும் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கான எனது புத்திமதி இப்படித்தான் இருக்கும். முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப். கென்னெடி சொன்னதை இன்னுமொரு வடிவத்தில் சொன்னால் "யாழ்ப்பாணம் உங்களுக்கு எதைத் தர முடியும் எனக் கேட்பதை விட, யாழ்ப்பாணத்திற்கு உங்களால் என்ன செய்ய முடியும் எனக் கேளுங்கள்". சவால்களை எதிர்கொள்ளக் கூடியவர்களால் வடக்கு ஒரு அதிர்ச்சி வளர்ச்சிக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அதன் பிறகு தேவையானவர்களுக்கு போதுமான சந்தர்ப்பங்கள் கிடைக்கக்கூடியதாகவிருக்கும்.

★இக்கட்டுரை ஜனவரி 02, 2019 இல் வெளியான 'லங்கா பிஸினெஸ் ஒன்லைன்' பத்திரிகையில் வெளியானது.

# கடந்த கால அபிவிருத்தித் திட்டங்களின் பகைப்புலத்தில் ‘திருகோணமலை – கொழும்பு’ விரைவுப் பாதையும் பொருளாதார வலயமும்



வை. ஜெயமுருகன்

சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக ‘இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை’ என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் ‘M.A IN PEACE STUDY’ ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (ROTARY PEACE FELLOW) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

*1*

இலங்கைப் போரின் பின்னணியில், தமிழ்க் கிராமங்கள் காணாமல் போயின. சிங்களக் குடியேற்றங்கள் தமிழ்ப் பெயர்களை மாற்றின. தமிழருக்குச் சொந்தமான நிலங்கள் அபிவிருத்தி என்னும் பெயரில் பறிபோயின. நிலத்தை விட்டு விரட்டுவது என்பது ஒரு இனக்குழுவின் கலாசாரத் தளங்களை அழித்தல் ஆகும். இழைக்கப்பட்ட அட்டூழியங்களை சரியான முறையில் அடையாளப்படுத்தாமல், பாதிக்கப்பட்டவர்களிடமும் தப்பிப் பிழைத்தவர்களிடமும் மன்னிப்புக் கேட்காமல், கடந்த காலத் தவறுகளின் கள நிலையை உணராமல் அபிவிருத்தி, முன்னேற்றம் ஆகிய முன்னெடுப்புகளைச் செய்தல் கசப்பான கடந்த காலத்தின் தொடர்ச்சி எனவே கருதப்படும்.

இன அழிப்பு என்பது தேசிய குழுக்களின் அத்தியாவசிய அடித்தளங்களை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட பல்வேறு செயல்களின் ஒருங்கிணைந்த திட்டம் எனலாம். அத்தகைய திட்டம் அரசியல் மற்றும் சமூக நிறுவனங்கள், கலாசாரம், மொழி, தேசிய உணர்வுகள், மதம் மற்றும் தேசிய குழுக்களின் பொருளாதார இருப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு, சுதந்திரம், சுகாதாரம், கண்ணியம் போன்றவற்றை அழிக்கக் கூடியது. இனப் படுகொலையானது ஒரு தேசியக் குழுவிற்கும் அதன் உறுப்பினர்களுக்கும் எதிராக ஒரு அமைப்பாக இயக்கப்படுகிறது. தேசிய குழுக்களின் பொருளாதார இருப்பு என்பது அது வாழும் நிலத்தில் தங்கியுள்ளது. நிலம் ஒரு தீர்மானக் காரணி. நிலம் மீதான கட்டுப்பாடு மிகவும் முக்கியமானது. நிலம் இழந்தோர் தேசம் இல்லாதவர்கள் ஆவர். நிலத்தையும் நிலம் மீதான உரிமையையும் அகற்றுவதன் மூலம் ஒரு தேசத்தின் சிதைவை உருவாக்கலாம்.

*2*

திருகோணமலை மாவட்டத்தில் நில அபகரிப்பு, வளங்களைச் சுரண்டுதல், மாவட்டத்தின் பெரும்பான்மைச் சமூகத்தின் இனப் பரம்பலை அதிகரித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதன் மூலமும் நிலங்களைக் கையகப்படுத்துவதன் மூலமும் ‘பௌத்தமயமாக்கல்’ மேற்கொள்ளப்படுகிறது. தொல்பொருள் இடங்களைப் பாதுகாக்கும் போர்வையில் இது நடைபெறுகிறது. இதனால்

தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் நிலங்கள் பலவந்தமாக அரசால் அபகரிக்கப்படுகின்றன. திணைக்களங்கள் மற்றும் பௌத்த மத அமைப்புகள் அரச பாதுகாப்புப் படைகளின் முழுப் பாதுகாப்போடு, ஒரு கூட்டு முயற்சியாக அபிவிருத்தி என்னும் பெயரில் இதனை நிகழ்த்துகின்றன.

இதற்கு எதிராக இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் கிளர்ந்ததன் காரணமாக, 1957 இல் செய்து கொள்ளப்பட்ட பண்டா - செல்வா உடன்படிக்கையில் வலிந்து ஏற்படுத்தும் குடியேற்றங்களை நிறுத்துதல் என்னும் அம்சம் குறிப்பிடப்பட்டிருந்தது. அல்லை - கந்தளாய்க் குடியேற்றங்களை இனிமேல் மேற்கொள்வதில்லை என அரசு ஏற்றுக்கொண்டது. ஆனால் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கும் வகையில் அவ் ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டது. அதில் குறிப்பிட்ட தமிழ் பேசும் மக்களினால் முன்வைக்கப்பட்ட விருப்பங்களைப் புறக்கணித்து அரசு தனது விஸ்தரிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து செயற்படுத்தியது. 1965 இல் மேற்கொள்ளப்பட்ட டட்லி - செல்வா ஒப்பந்தத்திலும் கூட, குடியேற்றம் பற்றிய தமிழ் பேசும் மக்களின் விருப்பம் கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. நடைமுறைப்படுத்தப்படாத இந்த ஒப்பந்தமும் தமிழ் பேசும் மக்களை ஏமாற்றத்திற்கு உள்ளாக்கியது.

பண்டா - செல்வா ஒப்பந்தத்திற்கு 30 ஆண்டுகளின் பின்னால் செய்து கொள்ளப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கையின் போதும் தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் எனத் தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்த்தனர். இவ்வகையான நில அபகரிப்புகளில் இருந்து பாதுகாப்புக் கிட்டுமென்றே தமிழ் பேசும் மக்கள் நம்பினர். அதனாலேயே பல குறைபாடுகள் இருந்த போதும் இந்திய - இலங்கை ஒப்பந்தம் வரவேற்கப்பட்டது. ஆனால் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியான நிலையிலும் கூட, நில அபகரிப்பை மையப்படுத்தி, தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு எதிராக வெலி ஓயாத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயலில் அரசு இறங்கியது. முன்னைய ஒப்பந்தங்களுக்கு ஏற்பட்ட அதே நிலையே இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்கும் ஏற்பட்டது.

*3*

இலங்கையின் இன முரண்பாடுகளில் தேசிய அபிவிருத்தித் திட்டங்களின் பங்கு வலுவானது. மகாவலி அபிவிருத்தித் திட்டமும் (MDP) அவ்வாறாக அமைந்த மிகப்பெரிய பல்நோக்குத் தேசிய அபிவிருத்தித் திட்டமாகும். 1960 களில் தொடங்கப்பட்ட இது உலர் வலயங்களை விவசாயத் தொழில் மையமாக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. இந்தத் திட்டம் சர்வதேச ஆதரவுடன் பாரிய மூலதன உட்செலுத்தலைப் பெற்றது. இது உணவுப் பாதுகாப்பிற்கான ஒரு திட்டமாக இருந்த போதிலும், நாட்டின் சொந்தக் குடி மக்களையே உள்நாட்டில் இடம்பெயரச் செய்தது; பல நாடுகளில் அகதிகளாகவும் மாற்றியது. 2009 இல் முடிவடைந்த முப்பது வருட உள்நாட்டுப் போரைத் தூண்டியதில் மகாவலியின் பங்கு அளப்பரியது.

இன்று மகாவலித் திட்டத்தின் கீழ் வரும் வெலி ஓயாத் திட்டம் வடக்கையும் கிழக்கையும் துண்டாடும் நோக்கோடு மேற்கொள்ளப்படுகின்றது. ஒவ்வொரு முறை உடன்பாடு எட்டப்படும் போதும், குடியேற்றங்களை நிறுத்துவதற்கு இணங்கிய அரசு பின் தன்னிச்சையாக அவற்றை உருவாக்கி வந்தமை கண்கூடு. சுமார் 13,500 தமிழ் பேசும் குடும்பங்களை நிர்ப்பந்தமாக இடம்பெயர வைத்த வெலி ஓயாத் திட்டம், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் வாக்களிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் தாயகக் கோட்பாட்டினை இல்லாதொழிக்கும் வகையில், இன்றும் முனைப்புடன் அமுலில் உள்ளது.

மகாவலித் திட்டம் வடக்கு - கிழக்கின் நில இணைப்பை முறித்து, ஒரு தேசிய இனக்




**மகாவலி அபிவிருத்தித் திட்டம்**

**Image Source - www.researchgate.net**




**மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் L வலயம்**

**Image Source - sangam.org**

*குழுவுக்குரிய பாரம்பரிய வாழ்விட நில உரிமையை படிப்படியாக நீர்க்கச்செய்து, வாழ்விடத்துக்குரிய மக்களை சிதறப் பண்ணி, உள்ளூர்ப் பொருளாதார மையங்களை தனதாக்கி, வெற்றிகரமாகத் தனது நோக்கத்தை அடைந்துள்ளது எனக் கூறலாம். தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை விளிம்புநிலைக்குக் கொண்டுவந்து, தேசிய உரிமையை இல்லாமல் செய்ததில் மகாவலி திட்டம் முக்கிய பங்காற்றியது என்னும் கருத்தை ஆணித்தரமாக முன்வைக்க முடியும். ஒரு இனவாத அரசு உலக நாடுகளின் நிதியுடன் எவ்வாறு அபிவிருத்தித் திட்டம் மூலம் ஒரு தேசிய இனக்குழுவின் பாரம்பரிய வாழ்விட உரிமையை நீர்க்கச் செய்ய முடியும் என்பதற்கு மகாவலித் திட்டம் சிறந்த உதாரணமாகும்.*

***4***

*போரின் பின்பு, திருகோணமலையில் தொடரும் நில அபகரிப்பு உச்ச நிலையில் நடைபெறுகிறது. தற்போது, மாவட்டத்தில் 27 சதவீதமாக இருக்கும் சிங்கள மக்கள், மொத்த நிலப்பரப்பில் 36 சதவீதத்தை தம்வசம் வைத்துள்ளனர். தமிழ் பேசும் மக்கள் உச்ச விளிம்பு நிலைக்குச் செல்லும் நிலைக்கு வந்துள்ளனர்.*

*'The Oakland Institute' இம்மாதம் வெளியிட்ட அறிக்கை (Trincomalee Under Siege Land Grabs) தரும் புள்ளிவிபரங்கள் அதிர்ச்சி தருபவை:*

*"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை புவியியல் ரீதியாக இணைக்கும் திருகோணமலையின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு, கடந்த 10 வருடங்களில் மிக மோசமான நில அபகரிப்பைச் சந்தித்துள்ளது. அபிவிருத்தி மற்றும் பேணுகை (Conservation) ஆகிய திட்டங்களின் கீழும், பௌத்த விகாரைகளை விஸ்தரிப்பதற்காகவும், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவின் 50*

சதவீதத்திற்கும் மேலதிகமான நிலம் அபகரிக்கப்பட்டுள்ளது. 26 விகாரைகள் 3887 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ளன. பாரியளவில் வளம் நிறைந்த விவசாய மற்றும் கடற்கரை நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளதால், தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். தமது நிலங்களை மீளப் பெற்றுக்கொள்ளும் மக்களின் முயற்சிகள் இந்தப் பிரதேசத்தின் உச்ச இராணுவப் பிரசன்னம் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளன."

"கடந்த 10 வருடங்களில் குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவு மோசமான நில அபகரிப்பைச் சந்தித்துள்ளது. நீர்ப்பாசனத் திட்டங்கள், துறைமுக நவீனமயமாக்கல், வலு உற்பத்தி மற்றும் உல்லாசப் பயண மேம்படுத்தல் போன்ற 'அபிவிருத்திப்' போர்வையில் 'சிங்களமயமாக்கல்' நடைபெற்று வருகின்றது. தொல்லியல் திணைக்களம், வன இலாகா, மகாவலி அதிகாரசபை மற்றும் உல்லாச அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய பல்வேறு அரச நிறுவனங்கள் இந்தச் சிங்களமயமாக்கல் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டுள்ளன."




**மத்தும பண்டாரவால் பரிந்துரைக்கப்பட்ட நதிகளை அடிப்படையாகக் கொண்ட மாவட்டப் பிரிவுகள்**

**Image Source - www.lankaweb.com**

5

குச்சவெளிப் பிரதேசத்தில் நான்கு விகாரைகளை அமைக்க ஒரு வர்த்தமானி வெளிவந்தது. வர்த்தமானி அறிவிப்பில் (February - 2024) குறிப்பிட்ட 'தொல்பொருள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புனிதத் தலங்களின்' பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. புல்மோட்டையில், சாந்தி விகாரை - யான் ஓயா ரஜமஹா விகாரை - ஸ்ரீ சதர்ம யுக்திகா வன செனசுன (மடங்கள்); புடவைக்கட்டில், சாகர புர சமுத்திரகிரி வன செனசுன விகாரை ஆகியனவே அவையாகும். இராணுவப் படைகள் சூழ இருக்கும் போது இந்த விகாரைகளை புனிதத் தலங்களாகப் பிரகடனப்படுத்துவதும், பௌத்தமயமாக்கலை தீவிரமாக விரிவுபடுத்துவதும் உள்ளூர்ச் சமூகத்தை அச்சம் கொள்ள வைத்தது.

தமது நிலங்களை மீளப் பெற்றுக்கொள்ளும் மக்களின் முயற்சிகள் இந்தப் பிரதேசத்தின் உச்ச இராணுவப் பிரசன்னம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. கடந்த 15 ஆண்டுகளாகத் தொடர்ந்தும் இராணுவ ஆட்சியின் கீழ் இருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் விரிவடைந்து வருகின்றது. வடக்கு - கிழக்கு, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை அழிப்பதை இந்த நில அபகரிப்பு முன்னெடுப்புகள் இலக்காகக் கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகளை விஸ்தரிப்பதானது குடித்தொகைப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், கலாசார சின்னங்களை அழிப்பதற்கும் வழி ஏற்படுத்தி வருகிறது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு

மாகாணங்களில் இனத்துவ ஆதிக்கத்தை (ethno cratic dominance) நிலைநாட்டுவதற்காக இலங்கை அரசு அதன் இராணுவ மையங்களை அரசியல் மூலோபாயம் கருதிப் பயன்படுத்துவது கண்கூடு.

பேராதனைப் பல்கலைக்கழக புவியியற் துறைப் பேராசிரியர், சி.எம். மத்துமபண்டார அவர்கள், இலங்கையின் மாகாணங்களை மறுவரையறை செய்வதோடு, நமது காலத்தின் தேசிய தேவை, பிராந்திய அபிவிருத்தி மற்றும் தேசிய ஸ்திரத்தன்மைக்கான மாற்று அணுகுமுறை ஒன்றையும் முன்வைத்துள்ளார் (கீழுள்ள படம்). அவரால் முன்வைக்கப்பட்ட பரிந்துரை பொருளாதார அடிப்படையில் அவசியமானதாக இருக்கலாம். ஆனால் ஒரு பல்லினக் கலாசார நாட்டின் இனப் பரம்பலைப் பாதிக்கக் கூடியது என்பதே சரியானது.

6

## திருகோணமலை முதலீட்டு வலயமும் 'திருகோணமலை - கொழும்பு' விரைவுப் பாதையும்

"இலங்கையின் ஏற்றுமதியானது ஆடைகள், தேயிலை, இறப்பர் போன்றவற்றை நம்பியிருக்கிறது. குறைந்த மதிப்புள்ள பொருட்களின் ஏற்றுமதியில் கவனம் செலுத்துவது கட்டமைப்பு வர்த்தகப் பற்றாக்குறையை ஏற்படுத்துகிறது. இது பொருளாதாரத்தைப் பாதிக்கிறது. இறப்பரை ஒரு போட்டிப் பொருளாக நிலைநிறுத்த முடியும். தேயிலை மற்றும் ஆடைகள் குறைந்த ஊதிய நாடுகளிடமிருந்து சர்வதேச போட்டியை எதிர்கொள்கின்றன. எனவே, நாடு தனது வலுவான பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைக்க, அதன் பொருளாதாரத்தை உற்பத்தியைப் பல்வகைப்படுத்துதலில் முதலீடு செய்ய வேண்டும். திறந்த பொருளாதாரத்திற்கு மாறுவது உற்பத்தி மற்றும் தொழிற்துறை தேவையின் வளர்ச்சியை எளிதாக்கும். உற்பத்தி, தொழிற்துறைகளின் மதிப்புக் கூட்டப்பட்ட நடவடிக்கைகளின் வளர்ச்சி, மூலப்பொருட்களின் இறக்குமதி மற்றும் இறுதிப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்கும்".

மேற்குறித்த கருத்தின் அடிப்படையில், இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்த, திருகோணமலைத் துறைமுகத்தை மையமாகக் கொண்ட முதலீட்டு வலயம் மற்றும் அதன் நீட்சியான கொழும்பு - திருகோணமலை விரைவுப் பாதை ஆகிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆழமான நீரைக் கொண்ட பாதுகாக்கப்பட்ட இயற்கைத் துறைமுகம் அதற்கான பொருத்தமான இடமாக அமைகிறது. வங்காள விரிகுடாவை மையமாகக் கொண்டு எரிசக்தி மற்றும் உற்பத்தித் துறை நடவடிக்கைகளை மேற்கொள்ள தேர்ந்த இடமாகவும் இது இருக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

கொழும்பு - திருகோணமலை விரைவுப் பாதையானது ஆலோசகர்களால் முன்வைக்கப்பட்ட ஒரு கருத்தாகும். அவர்களது திட்ட அறிக்கை தான் அமுலாக்கப்படவுள்ளது. நெடுஞ்சாலை விரைவுப் பாதையின் முக்கிய முதுகெலும்புடன் 'FTZ / EPZ' வலையமைப்பை எளிதாக்குவதன் மூலம், திருகோணமலைத் துறைமுகம் உட்பட்ட கிழக்குக் கடற்கரையுடன், கொழும்பு துறைமுகம் உட்பட பிராந்தியங்கள் உள்வாங்கப்படவுள்ளன. பொருளாதார வளர்ச்சியை எளிதாக்க இத்திட்டம் முன்மொழியப்படுகிறது. கொழும்பு - திருகோணமலை விரைவுப் பாதை (CTEC) 9 மாவட்டங்களில் பரவியுள்ளது; 14.2 மில்லியன் மக்கள் தொகையை உள்ளடக்குகிறது. மொத்த மக்கள் தொகையில் சுமார் 70 சதவீதத்தினையும், நாட்டின் மொத்த தொழிற்துறை உற்பத்தியில் 91 சதவீதத்தினையும் இது உள்ளடக்குகிறது. இந்தப் விரைவுப் பாதை சுமார் 275 கி.மீ நீளம் உடையது. சராசரியாக 45 கி.மீ/மணி வேகத்தில், சுமார் 6 மணிநேரப் பயணத்தில் கொழும்பையும் திருகோணமலையையும் இணைக்கக் கூடியது.

7

## திருகோணமலை – சுற்றுலா, ஏற்றுமதி மற்றும் தளவாடங்களுக்கான மையம்

சிங்கப்பூரின் நகர திட்டமிடல் நிறுவனமான 'Surbana Jurong Consultants PVT Ltd' இனால் முன்வைக்கப்பட்ட திட்டத்தின் கீழ், திருகோணமலையை இலங்கையின் 'கிழக்கு நுழைவாயில்' ஆகவும், சுற்றுலா – ஏற்றுமதி மற்றும் தளவாடங்களுக்கான மையமாகவும் மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. திருகோணமலையின் தனித்துவத்தை தக்கவைத்து பொருளாதாரத்தை வலுப்படுத்துவதுடன், பிராந்தியத்தின் பல்லுயிரியலைப் பாதுகாப்பதற்கும், அதன் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், முதன்மைத் திட்டமிடல் கட்டமைப்பை வடிவமைக்கும் நான்கு தெளிவான இலக்குகளை முன்வைத்து இவ் அபிவிருத்தி நகர்வுகள் நடைபெறுகின்றன. நகர்ப்புற வளர்ச்சி தொடர்பான மூன்று முக்கிய அம்சங்களான நிலப் பயன்பாடு, போக்குவரத்து மற்றும் உட்கட்டமைப்பு ஆகியவற்றை தடையின்றி ஒருங்கிணைக்கும் ஒரு விரிவான திட்டமாக திருகோணமலை – சுற்றுலா, ஏற்றுமதி மற்றும் தளவாடங்களுக்கான மையம் விளங்கவுள்ளது.

இத் திட்ட அறிக்கை சுற்றுச்சூழல் உணர்திறன், திட்டமிடப்பட்ட பொருளாதார – குடியிருப்பு வசதிகள், பொழுதுபோக்குத் தேவைகள் ஆகிய விடயங்களுக்கான நிலப் பயன்பாடு குறித்த விபரங்களை உள்ளடக்கியுள்ளது. திட்டத்தின் படி, ஒரு சுத்தமான தொழிற்துறை சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதன் மூலம் திருகோணமலை 'கிழக்கின் ஏற்றுமதி மையமாக' மாறவிருக்கின்றது. கிழக்கு, வடமத்திய மற்றும் வடக்கு மாகாணங்களின் விவசாயம், மீன்வளர்ப்பு மற்றும் கனிம வளங்களின் மதிப்பை அதிகரித்து ஏற்றுமதி செய்ய திருகோணமலை – சுற்றுலா, ஏற்றுமதி மற்றும் தளவாடங்களுக்கான மையம் விளங்கவுள்ளது.

1970 களின் பிற்பகுதியில் இருந்து இந்தியா திருகோணமலைத் துறைமுகத்தை உற்று நோக்கி வருகிறது. சீனாவின் நிதியுதவியுடன் கூடிய உட்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் இலங்கையில் முதலீடுகள் அதிகரிப்பது போன்ற புவிசார் அரசியல் கவலைகளுக்கு மத்தியில், பல இந்தியத் திட்டங்கள் மெதுவான வேகத்தில் நகர்கின்றன. இந்தியாவின் தற்போதைய திட்டமிட்ட அணுகுமுறைகள் திருகோணமலைத் துறைமுகத்தை தனது மூலோபாயத் துறைமுகமாக மாற்றுவதில் பெரு வெற்றிபெற்று வருகிறது.

கடந்த ஆண்டு, திருகோணமலை மாவட்டத்தில் எரிசக்தி மையத்தை உருவாக்குவது குறித்து இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் கலந்துரையாடினர். முதலீடுகளை ஈர்க்கும் குறிக்கோளுடன் கனரக கைத்தொழில்களை மையமாகக் கொண்ட ஒரு பெரிய தளவாட மையத்தை உருவாக்கும் திட்டங்களை இலங்கை முன்னெடுத்து வருகிறது. பல சர்வதேச நிறுவனங்கள் இதற்கு ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளன. வெளிவந்த அறிக்கைகளின் படி திருகோணமலையின் கப்பல் துறையில் 600 ஏக்கர் முதலீட்டு வலயம் வரவுள்ளது. கடல், வான் மற்றும் புகையிரதப் பயணப் பாதைகளை இணைக்கும் கேந்திர நிலையமாக இது மாறவுள்ளது. சீனாவால் கட்டப்பட்ட துறைமுகத்திற்கு அருகிலுள்ள ஹம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தை அடுத்து இது முக்கியத்துவம் பெறவிருக்கிறது. 1.5 பில்லியன் டொலர்கள் வரையிலான முதலீட்டை ஈர்க்கும் நோக்கில், கனரக கைத்தொழில்களை இலக்காகக் கொண்டு மிகவும் கவர்ச்சிகரமான தளவாட மையத்தை நிறுவும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் அமுனுகம தெரிவித்துள்ளார்.

"கப்பல்துறை முதலீட்டு வலயத்துடன் துறைமுகத்தை இணைக்கும் வகையில் 600 ஏக்கரில் இது புதிய வலயமாக அபிவிருத்தி செய்யப்படுகிறது. ஒரு தளவாட மையமாக (Trincomalee Logistic Hub) அமைந்து கனரகத்




'Trincomalee Logistic Hub' திட்டத்தின் மாதிரிப் படம்

Image Source - www.news.lk

தொழில்களுக்கு வழிசமைக்கும் இது தொழிற் பூங்காவாக உருவாக்கப்படும். திருகோணமலையிலிருந்து கடல், வான் மற்றும் புகையிரதப் போக்குவரத்தை மேற்கொள்ளக்கூடிய மிகவும் கவர்ச்சிகரமான வலயமாக இது விளங்கும்."

இலங்கையின் கனிம வளம் மிகுந்த மாவட்டங்களில் திருகோணமலையும் ஒன்று. திருகோணமலையின் வடக்குப் பகுதியில் பெறுமதி வாய்ந்த கனிம மணற் படிவு உள்ளது. இக் கனிம வைப்புத் தொகையில் இல்மனைட் (Ilmenite), ரூட்டில் (Rutile) ஆகிய கனிமங்கள் உள்ளன. சிர்கோன் (Zircon), மோனாசைட் (Monazite), கார்னெட் (Garnet), சில்லிமனைட் (Sillimanite) உட்பட மேலும் சில கனரகக் கனிமங்கள் இங்கே உள்ளதாக இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தரவுகள் தெரிவிக்கின்றன.

திருகோணமலையை வர்த்தகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் தற்போது அரச திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருகோணமலைத் துறைமுகத்தின் நுழைவாயில் இரண்டு தலைப் பகுதிகளால் பாதுகாக்கப்படுகிறது. அதன் வடக்கு மற்றும் கிழக்கு விளிம்புகளில் ஒரு பரந்த நிலப்பரப்பு உள்ளது. இப் பகுதியில் சிறப்புப் பொருளாதார மண்டலம் (SEZ) அல்லது எரிசக்தி மையத்தை அமைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உண்டு. இதற்கன ஏற்கனவே சர்வதேச முதலீட்டாளர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இரண்டாம் உலகப் போரின்போது ஆங்கிலேயர்களால் கட்டப்பட்டு **1964** வரை அவர்களால் கட்டுப்படுத்தப்பட்ட துறைமுகப் பகுதியில் காணப்படும் எண்ணெய்க் குதங்களின் உரிமையைப் பகிர்ந்து கொள்ள இந்தியன் ஒயில் கார்ப்பரேஷன் (ஐஓசி) இலங்கையுடன் ஒப்பந்தம் செய்திருந்தமை இங்கே குறிப்பிடத்தக்கது.

*8*

இன முரண்பாடு போர்களை விதைத்தது. போர் முழு நாட்டின் பொருளாதாரத்தையும் நசுக்கிவிட்டது. இலங்கையில் ஒரு வலுவான, நிரந்தரமான பொருளாதாரக் கலாசாரத்தை முன்னெடுக்க வடக்கு - கிழக்கு அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது அவசியம். ஆனால் அது வடக்கு - கிழக்கு மக்களின் பொருளாதாரப் பாதுகாப்பை முன்வைத்து உருவாக்கப்பட வேண்டும். தேசிய நீரோட்டத்தில் வடக்கு - கிழக்கின் மக்களின் பங்களிப்பு கௌரவத்துடன் இணைக்கப்பட வேண்டியது அவசியம். எந்த முன்னெடுப்பும் தமிழர் பாரம்பரியப் பிரதேசங்களை ஒன்றிணைக்கும் வகையில் அமைந்து, வலுவான பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைக்க உதவவேண்டும். அபிவிருத்தி திட்டங்களில் அரசியல் மற்றும் கலாசார உணர்திறன்கள் உள்வாங்கப்பட வேண்டும்.

பொருளாதாரத்தை உற்பத்தி மற்றும் பல்வகைப்படுத்துதலில் முதலீடு செய்வது, திறந்த பொருளாதாரத்திற்கு மாறுவது, உற்பத்தி மற்றும் தொழிற்துறையின் வளர்ச்சியைத் திட்டமிடுவது என்பன உள்ளூர் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களின் அச்சங்களைப் போக்கும் வகையில் திட்டமிடப்பட வேண்டும். முதலீட்டு வலயங்கள் மற்றும் பொருளாதாரப் பாதைகள் வடக்கு - கிழக்கின் சமூக, பொருளாதார, கலாச்சார ஒன்றிணைவுக்கு ஊக்கம் தருவதாக அமைய வேண்டும். குறிப்பாக, திருகோணமலை மக்களின் முழுப் பங்களிப்புடன் இது நடைபெற வேண்டும். தவறும் பட்சத்தில், இவை இன அழிப்பின் வலுவான கருவியாகப் பயன்படுத்தப்பட வாய்ப்புகள் அதிகம்.

## உசாத்துணை


1. *ADB initiates for ColomboTrincomalee Economic Corridors, https://www.news.lk/economy/item/20077adbinitiatesforcolombotrincomaleeeconomiccorridors*

2. *Discrimination, Genocide, and Politicide, Gary Uzonyi and Victor Asal Political Research Quarterly Vol. 73, No. 2 (JUNE 2020), pp. 352365 (14 pages) , Published By: Sage Publications, Inc.*

3. *Genocide against the Tamil People State Aided Sinhala Colonization, https://www.ptsrilanka.org/wpcontent/uploads/2017/04/state_aided_sinhala_colonisation_en.pdf.*

4. *Lemkin, R. (2005). Axis Rule in Occupied Europe: Laws of Occupation, Analysis of Government, Proposals for Redress. (p. 79). New Jersey: The Lawbook Exchange, Ltd.*

5. *LESSONS LEARNED FROM COMMUNITIES DISPLACED BY THE MAHAWELI MULTIPURPOSE DEVELOPMENT PROJECT SRI LANKA, WERELLAGAMA D.R.I.B. Department of Civil Engineering, University of Peradeniya, Sri Lanka JEYAVIJITHAN V.2 MANATUNGA. J.3 and NAKAYAMA, M4 2Department of Civil Engineering, University of Peradeniya, Sri Lanka 3 Saitama University, Japan, 4Tokyo University of Agricultture & Technology,Japanhttps://v1.cepa.lk/content_images/publications/documents/752SWerellagamaLessons%20Learned%20From%20Communities%20Displaced%20By%20the%20Mahaweli%20Multipurpose%20Dev.pdf*

6. *National Port Master Plan: National Port Directions, Volume 1 Technical Assistance Consultant's Report Consultants' Reports | February 2020 https://www.adb.org/projects/documents/sri50184001tacr.*

7. *State Sponsored Sinhalese Colonization Of Tamils' Traditional Homeland, Kumarathasan Rasingam, 07/06/2022, https://countercurrents.org/2022/06/statesponsoredsinhalesecolonizationoftamilstraditionalhomeland/*

8. *Structural Genocide Continues in Sri Lanka, The Ilankai Tamil Sangam, USA, https://sangam.org/structuralgenocidecontinuesinsrilanka/*

9. *Sri Lanka to establish Trincomalee logistic hub; aims up to $1.5 bn investment,https://economynext.com/srilankatoestablishtrincomaleelogistichubaimsupto15bninvestment177663/*

10. *Tamils denounce 'Sinhalisation' of 'Mahaweli L Zone' in Mullaitivu, Tamil Guardian,https://www.tamilguardian.com/content/tamilsdenouncesinhalisationmahawelilzonemullaitivu*

11. *The Marginalised in Genocide Narratives, Giorgia Donà, ISBN 9780367728489 188 Pages Published December 18, 2020 by Routledge, https://www.routledge.com/TheMarginalisedinGenocide*

12. *Trincomalee Under Siege: Land Grabs Target the Tamil Homeland in Sri Lanka, September 12, 2024, https://www.oaklandinstitute.org/trincomaleeundersiegelandgrabstargettamilhomelandsrilanka Accessed on 13 September 2024*

13. *13. Weli Oya Outrage, EROS publications. 1987.*

‘இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் நாகர்’ எனும் இத்தொடர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை தொல்லியல் ரீதியாக நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களைக் கொண்ட ஆவணமாகும். நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் எனவும், ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை பிரதானமாக அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் எனவும், இங்கு கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றிருந்தது எனவும் பேராசிரியர் எஸ். பத்மநாதன் கூறியுள்ளார். இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு பொறிக்கப்பட்ட சுமார் 100 பிராமிக் கல்வெட்டுக்களில் நாக மன்னர்கள், நாக தலைவர்கள், நாக பிரதானிகள், நாக சுவாமிகள், நாக அதிகாரிகள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றுதயக் காலத்தில் நாக எனும் பெயர் கொண்ட மன்னர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் பலர் தமிழ்ச் சமூகத்தோடு தொடர்புடையவர்கள். இவர்கள் பற்றிய வரலாறு மற்றும் வழிபாட்டுப் பாரம்பரியம் ஆகியவை பிராமிக் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு இத்தொடரில் ஆராயப்படுகின்றன.

# மகா நாகமன்னன் பற்றிக் குறிப்பிடும் வேலோடும் மலை – நாகமலைக் கல்வெட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் பல மலைத் தொடர்கள் அமைந்துள்ளன. இவற்றில் பல உயரமான மலைக் குன்றுகளும், தட்டையான மலைப் பாறைகளும் காணப்படுகின்றன. இங்கு காணப்படும் தட்டையான மலைப் பாறைகளில் ஒன்று வேலோடும் மலை எனவும், அதன் அருகில் உள்ள மலை நாகமலை எனவும் அழைக்கப்படுகிறது.

மட்டக்களப்பில் இருந்து கொழும்புக்குச் செல்லும் வீதியில் உள்ள வந்தாறுமூலைக்கும், சித்தாண்டிக்கும் இடையில் மாவடிவேம்பு என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கிருந்து தென்மேற்குப் பக்கமாகச் செல்லும் வீதி சந்தனமடு ஆறு வரை செல்கிறது. இப்பகுதியில் மிகப்பெரிய பசுமையான வயல் நிலங்கள் காணப்படுகின்றன. இங்கிருந்து மேற்குப் பக்கத்தில் சுமார் 3 கி.மீ தூரத்தில் உள்ள சந்தனமடு ஆறு வரை இவ்வயல் நிலங்கள் உள்ளன. இவ்வயல் நிலப்பகுதி தெற்குப் பக்கத்தில் மகாஓயா வீதியில் உள்ள இலுப்படிச்சேனை வரை சுமார் 11 கி.மீ தூரம் வரை காணப்படும் மிகப்பெரிய வயல் களனியாகும். சுமார் 36 சதுர கி.மீ பரப்பளவில் இப் பகுதியில் நெல் பயிர் செய்யப்படுகிறது.

சந்தனமடு ஆற்றைக் கடந்து அக்கரைக்குச் செல்லும் துறை அமைந்துள்ளது. இதுவே முறாக்கமடுத் துறையாகும். ஆனால் பொதுவாக மக்கள் இத்துறையை சந்தனமடு



● என். கே. எஸ். திருச்செல்வம்

கடந்த 25 வருடங்களாக இலங்கைத் தமிழர் வரலாறு, தமிழர் வழிபாட்டுப் பாரம்பரியம், பிராமிக் கல்வெட்டுகள், இந்து சமயம் என்பன தொடர்பாக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் வரலாற்றுத்துறையில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தனது எழுத்துப்பணிக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவர் இதுவரை பல உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கருத்தரங்குகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் 18 நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் ‘தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள்’, ‘புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்’, ‘இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்’, ‘யார் இந்த இராவணன்’, ‘பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரை’, ‘பண்டைய தமிழ் நூல்களில் சிவன்’, ‘கன்னியா: பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்’, ‘தமிழரின் குமரி நாடு உண்மையா? கற்பனையா?’ போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவர் தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றில் இதுவரை 295 ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.



**நாக மலையின் தோற்றம்**

ஆற்றுத்துறை என அழைக்கின்றனர். ஆனால் சந்தனமடு ஆற்றுத்துறை இங்கிருந்து வடக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. ஆற்றைக் கடந்தவுடன் வேரம் திடல், இலுக்குப் பொத்தானை ஆகிய கிராமங்கள் ஊடாகச் செல்லும்போது அடர்ந்த காடு காணப்படுகிறது. காட்டுக்குள் சிறிது தூரம் சென்றதும் ஒரு மலையடிவாரத்தைக் காணலாம். இங்கு சுமார் 60 அடி உயரமான தட்டையான பரந்த இரண்டு மலைகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு மலையின் உச்சியில் முருகன் கோயில் அமைந்துள்ளது. அதுவே வேலோடும் மலை என அழைக்கப்படுகிறது.

## வேலோடும் மலையின் பண்டைய பெயர்கள்

இம்மலை பண்டைய காலத்தில் வேடர் ஓடிய மலை, வேரோடிய மலை, வேரோடும் மலை, தேரோடும் மலை என பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டதாகவும், இப்பெயர்களின் திரிபே பின்பு வேலோடும் மலை என ஆனதாகவும் இப்பகுதியில் உள்ள முதியவர்கள் கூறுகின்றனர். இப்பெயர்கள் உருவானதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன.

பண்டைய காலம் முதல் வேடர்கள் இம்மலையில் நடமாடித் திரிவதால் ‘வேடர் ஓடிய மலை’ என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. இம்மலையில் பல இடங்களில் பாரிய வெடிப்புகள் காணப்படுகின்றன. இது மலைப் பகுதியில் வளர்ந்திருந்த விருட்சங்களின் வேர்கள் ஓடியதால் ஏற்பட்டது எனக் கூறப்படுகிறது. இதனால் இம்மலை ‘வேரோடிய மலை’ எனப் பெயர் பெற்றதாகவும் கூறுகின்றனர். இம்மலையில் இருந்த பண்டைய கோயிலின் தேர் மலை மீது ஓடியதாகவும், அதனால் இது ‘தேரோடும் மலை’ எனப் பெயர் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

## வேடர் முருகனை வழிபட்ட கோயில் வனம்

மிகப்பண்டைய காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்து வந்த வேடர்கள் இம்மலையில் முருகனின் வேலை வைத்து வழிபடப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. பண்டைய காலம் முதல் வேடர்கள் வாழ்ந்து வந்த பின்தென்னைக்



வேலோடும் மலையில் முருகன் கோயில்



முருகன் கோயிலின் இன்னுமோர் தோற்றம்



சந்தனமடு ஆற்றில் உள்ள முறாக்கமடுத் துறை

காட்டுப் பகுதியின் கிழக்குப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பகுதி விளங்கியது. இங்கு வேடர்கள் பெருமளவில் வசித்து வந்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வேலோடும் மலை, படர்கல் மலை, கரடியனாறு மலை உட்பட இம் மலைகளுக்கு அருகில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஓமுனகல, ஹேனனேகல, நுவரகல, கொக்காகல போன்ற மலைத் தொடர்களிலும் வேடர்கள் வாழ்ந்து வந்தனர்.

ஓமுனகல, ஹேனனேகல, நுவரகல, கொக்காகல ஆகிய மலைகளில் வேடர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் பல உள்ளன. இவர்கள் தமது குல தெய்வமான முருகனுக்கு மலை உச்சியில், அல்லது பெரிய விருட்சத்தின் கீழ் முருகனின் வேலை நட்டு, அதற்கு படையல் இட்டு, பூஜை செய்து, குறிஞ்சி வெறியாட்டம் ஆடி முருகனை வணங்கி வந்தனர். இதனால் இப்பிரதேசம் ‘கோவில வனமே’ எனப்பெயர் பெற்று பெற்றிருந்தது. இது தமிழில் ‘கோயில் வனம்’ எனும் பொருள் கொண்டதாகும். வேலோடும் மலையிலும் பண்டைய கால வேடர் முருகனை வணங்கி வந்ததாக ஆய்வுகள் மேற்கொண்டபோது தெரியவந்தது.

### வேலோடும் மலையில் பண்டைய கோயிலின் சிதைவுகள்

வேலோடும் மலை உச்சியில் முருகன் கோயில் அமைந்துள்ள இடத்திற்கு முன்பக்கம் ஓர் கட்டிடத்தின் சிதைவுகள் காணப்படுகின்றன. சுமார் 20 இற்கும் மேற்பட்ட கற்தூண்களின் துண்டுகளும், 30 இற்கும் மேற்பட்ட தூண் தாங்கிக் குழிக்கற்களும் பரவிக் காணப்படுகின்றன.

கோயிலின் இடதுபக்க மலைச் சரிவில் ஒரு கட்டிடம் இருந்தமைக்கான அடையாளங்கள் தெரிகின்றன. இங்கு 10 இற்கும் மேற்பட்ட குழிக்கற்கள் காணப்படுகின்றன. இவை மலை மீது இருந்த பண்டைய ஆலயத்தின் பகுதிகளாகும்.



நாகமலையில் சிதறிக் காணப்படும் செங்கற்கள்



நாகமலையில் காணப்படும் கற்சுனை



நாக மலையில் காணப்படும் வழிபாட்டுத் தலத்தில் நாகரின் குழிக்கற்கள்



நாக மன்னன் பற்றிக் குறிப்பிடும் பிற்கால பிராமிக் கல்வெட்டு

சித்தாண்டி முருகன் கோயிலுக்கும் வேலோடும் மலைக்கும் பண்டைய காலம் முதல் ஒரு தொடர்பு இருந்து வருவதாகவும், சித்தாண்டி கோயிலின் திருவிழா நடைபெறும் காலங்களில் வேலோடும் மலையில் இருந்து ஒரு ஒளி தோன்றி மறைவதாகவும் முதியவர்கள் கூறுகின்றனர். வேலோடும் மலையில் வட கிழக்கில் 7 கி.மீ தூரத்தில் சித்தாண்டி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வேலோடும் மலைப்பகுதியில் நாகர்

வேலோடும் மலைப் பகுதியில் பண்டைய காலத்தில் வேடர் மட்டுமல்லாது நாகரும் வாழ்ந்துள்ளமை ஆய்வுகள் மூலம் தெரிகிறது. இம்மலையில் நாக வழிபாடு நிலவியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. நாக வழிபாடு செய்த நாக மன்னன் ஒருவன் பற்றிய பிராமிக் கல்வெட்டு ஒன்று வேலோடும் மலையின் அருகில் உள்ள நாக மலையில் காணப்படுகிறது.

இம்மலையின் உச்சிப் பகுதியில் செம்மஞ்சள் நிறத்தில் மண் மேடும், ஒரு புற்றும், குட்டையான மரங்கள் சிலவும் காணப்படுகின்றன. மண் மேடு வட்ட வடிவமாகக் காணப்பட்டது. இங்கு பழமை வாய்ந்த செங்கட்டிகள் ஆயிரக்கணக்கில் சிதறிக் கிடந்தன. இது ஒரு தூபியின் சிதைவுகளாகத் தெரிகின்றன. மண் மேட்டின் நடுப்பகுதியில் மூன்று இடங்களில் 5 முதல் 10 அடி ஆழம் வரையில் குழிகள் தோண்டப்பட்டிருந்தன. புதையல் திருடர்கள் தமது கைவரிசையை இங்கே காட்டியுள்ளனர்.

தூபியின் சிதைவுகள் உள்ள மலையின் தென்பகுதியில் ஓர் கட்டிடம் இருந்தமைக்கான ஆதாரங்களாக நாகரின் குழிக்கற்கள் சிலவும், கற்தூண்கள் சிலவும் காணப்பட்டன. இவ்விடத்தில் ஓர் சிறிய கற்சுனையும், அதன் கீழ்ப் பகுதியில் சாந்து அரைக்கப் பயன்படுத்தப்பட்ட குழிகள் இரண்டும் காணப்பட்டன. மலை அடிவாரத்தில் எண் கோண வடிவுடைய நீர்த்தடாகம் ஒன்றின் சிதைவுகளும் காணப்படுகின்றன.

இம்மலையின் தென்மேற்கு அடிவாரத்தில் உள்ள பாறையில் ஓர் முக்கியச் சின்னம் காணப்படுகிறது. அது பண்டைய பிராமி எழுத்துகளில் எழுதப்பட்ட கல்வெட்டாகும். இக்கல்வெட்டு இரண்டு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் மேல் வரியில் 18 எழுத்துகளும், கீழ் வரியில் 13 எழுத்துகளும் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வெழுத்துகளை ஆராய்ந்த போது இவை பிற்கால பிராமி எழுத்துகளாகத் தெரிந்தன. பெரிய எழுத்துகளில் ஆழமாக, தெளிவாக பின்வருமாறு கல்வெட்டு பொறிக்கப்பட்டிருந்தது.

*"மஹநக ரஜஹ தக பகனக விஹரஹி*
*கிரிகஹோதஹி அலி சகய தினே"*

"கிரிக்காகோத்த எனும் ஊரில் உள்ள கால்வாய் அல்லது நீரோடை மகாநாக மன்னனால் தக்கபகன எனும் விகாரைக்காக சங்கத்தாருக்கு வழங்கப்பட்டது." என கல்வெட்டில் உள்ள செய்தி கூறுகிறது. இக் கல்வெட்டைப் பொறித்த நாக மன்னனின் பெயர் மற்றும் காலம் போன்றவை குறிப்பிடப்படவில்லை. கல்வெட்டில் உள்ள எழுத்துகளின் வடிவத்தை வைத்துப் பார்க்கும் போது இது பிற்கால பிராமி எழுத்து வடிவமாகத் தெரிகிறது. அதாவது பொ.ஆ. 1 ஆம், 2 ஆம், 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும்.

## கிழக்கிலங்கையை ஆட்சி செய்த நாக மன்னர்கள்

மட்டக்களப்பு மான்மியத்தின் படி கிழக்கிலங்கையை கலிங்க மன்னர்களும், நாக மன்னர்களும் ஆட்சி செய்துள்ளமை தெரிய வருகிறது. இவர்களில் மூவர் நாக மன்னர்கள் ஆவர். இவர்கள் மண்டுநாகன், கொட்டாயன், கொட்டியன் என மான்மியம் கூறுகிறது. இம்மூவரில் கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலத்துடன் இரண்டு நாக மன்னர்களின் காலம் ஒத்துப் போகிறது. இவர்கள் சிற்றரசர்களாக இருக்க வேண்டும். இவர்களில் கொட்டாயன் எனும் நாக மன்னன் திருகோணமலையில் இருந்து ஆட்சி செய்துள்ளான். இவனது காலம் பொ.ஆ. 8 ஆம் நூற்றாண்டு ஆகும். அடுத்த



No. 30

கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட பிரதி

மன்னனான கொட்டியன் என்பவன் கொட்டியாபுரத்தில் இருந்து ஆட்சி செய்துள்ளான். இவனின் காலம் பொ.ஆ. 238 ஆகும். இந்த இருவரில் ஒருவர் காலத்தில் இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

### இலங்கையை ஆட்சி செய்த நாக மன்னர்கள்

கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட இக் காலகட்டத்தில் இரண்டு நாக மன்னர்கள் இலங்கையை ஆட்சி செய்துள்ளனர். துட்டகாமினியின் தம்பியான சத்தாதீசனின் மகன்மார்களில் ஒருவன் நாக வழிபாடு செய்தவன். இவன் பெயர் கல்லாட்ட நாகன். இவனின் காலம் பொ.ஆ.மு. 109 - 103 ஆகும். சத்தாதீசனின் இன்னுமோர் மகன் வலகம்பா. இவனின் மகன் சோர நாகன். இவனும் நாக வழிபாடு செய்தவன். இவனின் காலம் பொ.ஆ.மு. 63 - 51 ஆகும். இவர்கள் இருவரும் பொ.ஆ.மு. 1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள்.

பொ.ஆ 1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாக மன்னர்கள் இருவர் உள்ளனர். ஒருவன் கல்லாட்ட நாகனின் மகனான மகாசூலிகனின் மகனான குட்டைக் கண்ணதீசனின் மகனாவான். இவனும் நாகவழிபாடு செய்தவன். இவனின் பெயர் மகாதாத்திய மகாநாகன். இவனின் காலம் பொ.ஆ. 7 - 19 ஆகும். அடுத்தவன் இலம்பகர்ண வம்சாவழியில் வந்த ஈழநாகன். இவனது காலம் பொ. ஆ. 33 - 43 வரையாகும். இந்த இருவரில் ஒருவர் காலத்தில் கூட இக் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டிருக்கலாம்.

### தமிழ் மொழி பேசிய நாகர்

அந்த வகையில் 1900 ஆண்டுகளுக்கு முன்பு பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டில் மட்டக்களப்பு பகுதியில் நாக மன்னர்களின் ஆட்சி நிலவியுள்ளது என்பது தெரிய வருகிறது. நாகர்கள் தமிழர் என பேராசிரியர் பத்மநாதன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். "இலங்கையில் பரவிய ஆதி இரும்பு கால மக்கள் தமிழ் மொழி பேசியவர்கள் என்பதும், நாகர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெளிவாகி உள்ளது" என அவர் எழுதியுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. இவர்கள் வேலோடும் மலையின் அருகில் உள்ள மலையில் நாக வழிபாடு செய்துள்ளனர். அதன் பின்பு இங்கு ஒரு பௌத்த தூபியை அமைத்து அதற்கு இம்மலையில் இருந்து ஊற்றெடுத்து ஓடும் ஒரு நீரோடையைத் தானமாக வழங்கியுள்ளனர்.

எனவே வேலோடும் மலைப்பகுதியில் பண்டைய காலத்தில் வேடர் வேல் வழிபாடும், தமிழராகிய நாகர் நாக வழிபாடும் செய்துள்ளனர் என்பது உறுதியாகிறது.

# நாகபர்வத மலை எனும் பம்பரகஸ்தலாவ மலையில் நாகர் பற்றிய கல்வெட்டுகள்



நாகபர்வத மலையின் தோற்றம்

அம்பாறை மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் உள்ள உகந்தை மலையின் தென்மேற்கு பக்கத்தில் சுமார் 8 கிலோமீட்டர் தூரத்தில் நாகபர்வத மலை அமைந்துள்ளது. இலங்கையில் இரண்டு பெரிய வன விலங்குகள் சரணாலயங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று தீவின் வடமேற்கில் உள்ள வில்பத்து எனும் வனமாகும். அடுத்தது தென்கிழக்கில் உள்ள யால எனும் வனமாகும். யால வனத்தின் கிழக்குப் பகுதி குமண என அழைக்கப்படுகிறது. இப்பகுதியில் உள்ள அடர்ந்த காட்டின் மத்தியில் நாகபர்வத மலை அமைந்துள்ளது.

நாகபர்வத மலைக்குச் செல்வதற்கு சீரான பாதைகள் எதுவும் கிடையாது. உகந்தையில் இருந்து குமண பறவைகள் சரணாலய நுழைவாயில் ஊடாக தெற்கு நோக்கிச் செல்லும் கிறவல் பாதையில் 4 கி.மீ தூரத்தில் உள்ள இராட்சத கல் அடுப்பைக் கடந்து, மேலும் 2 கி.மீ தூரம் வரை சென்றதும் காணப்படும் கிரிகள களப்புச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கிப் பிரிந்து செல்லும் ஒரு சீரற்ற, கரடுமுரடான பாதை வழியாக மேலும் 14 கி.மீ தூரம் பயணம் செய்தால் நாகபர்வத மலையை அடையலாம். இம்மலைப் பகுதிக்குச் செல்லும்போது அடர்ந்த காட்டின் மத்தியில்



நாகபர்வத மலையும், முட்டை வடிவில் உள்ள மலைக் குன்றும்



நாகபர்வத மலையின் அண்மித்த தோற்றம்



**இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டின் பிரதி**

ஓடும் சிற்றாறுகளைக் கடந்தே செல்ல வேண்டும். அதுவும் குறிப்பிட்ட சில காலங்களில் மட்டுமே இப்பகுதிக்குச் செல்ல முடியும்.

### நாகத்தின் தலை போன்ற அமைப்புடன் காணும் நாகபர்வத மலை

நாகபர்வத மலை மிகவும் வித்தியாசமான முறையில் காணப்படுகிறது. ஓர் இராட்சத நாக பாம்பு படமெடுத்த வண்ணம் இருப்பது போன்ற வடிவத்தில் இம்மலை அமைந்துள்ளது. இம்மலை உச்சியில் இருந்து பார்க்கும் போது கிழக்கில் உகந்தமலைக் கோயிலும், வடக்கில் குடும்பி மலையும், இவைகளுக்கு இடையில் சலவைக் களப்பும், அதை அடுத்து வங்கக் கடலும் அழகிய காட்சிகளாகத் தெரியும். இங்கு மேலும் சில சிறிய மலைக் குன்றுகளும் அமைந்துள்ளன. முட்டை வடிவில் ஒரு மலைக் குன்றும் இங்கு காணப்படுகிறது.

இம்மலைப் பகுதியில் பம்பர என்றழைக்கப்படும் பெரிய குளவிகள் அதிகளவில் மரங்களில் காணப்படுவதால் தற்போது இப்பகுதி பம்பரகஸ்தலாவ என அழைக்கப்படுகிறது. இங்குள்ள பிராமிக் கல்வெட்டு ஒன்றில் இதன் பெயர் 'நாக பவத்த' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாக பவத்த என்பது நாக பர்வதம் எனும் சொல்லின் சுருக்கமாகும். இதன் காரணமாகவே இம்மலை நாகபர்வத மலை என பண்டைய காலத்தில் பெயர் பெற்று விளங்கியது.

நாகபர்வத மலைப்பகுதி ஜன சஞ்சாரமே இல்லாத அடர்ந்த காட்டுப் பகுதியாகும். இங்கு மலைகளும், பாறைகளும் நிறைந்து காணப்படுகின்றன. இம்மலைகளிலும், பாறைகளிலும் இயற்கையாகவே அமைந்துள்ள நூற்றுக்கணக்கான கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் கற்புருவங்கள் வெட்டப்பட்டு, அவற்றின் கீழே கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கற்குகைகள் கரடிகள் வாழும் உறைவிடங்களாக விளங்குகின்றன. மனித நடமாட்டம் இல்லாத இக்குகைகள் கரடிகள் மற்றும் சிறுத்தைகள் வாழ்வதற்கு உகந்த இடங்களாகக் காணப்படுகின்றன. இக் குகைகளுக்குச் செல்லும்போது மிகவும் அவதானமாகச் செல்ல வேண்டியுள்ளது.

### நாகபர்வத மலையில் இராவணன் பற்றிய கல்வெட்டு

நாகபர்வத மலைப்பகுதி இராவணனின் உப இராஜதானிகளில் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். இராவண இராச்சியத்தின் உப நகராக உகந்தை, குடும்பிமலை ஆகிய இடங்கள் அமைந்திருந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. மட்டக்களப்பு மான்மியமும் இவ்விரு இடங்களுக்கும் இராவணனுக்கும் உள்ள தொடர்புகள் பற்றி விபரிக்கிறது. இதன்படி இவ்விரு இடங்களுக்கு மிகவும் அருகில் உள்ள நாகபர்வத மலையும் இராவணனுடன் நெருங்கிய தொடர்புடைய இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

நாகபர்வத மலையில் காணப்படும் பிராமிக் கல்வெட்டொன்றில் இராவணன் தொடர்பான செய்தி பொறிக்கப்பட்டுள்ளமையை

இக்கூற்றுக்கு ஆதாரமாகக் குறிப்பிடலாம். இக்கல்வெட்டில் "பெருமகன் இராவணனின் மகள் சொஹிலியின் குகை" என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளதாக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பேராசிரியர் எஸ். பரணவிதான அவர்களால் **1970** ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட *'Inscription of Ceylon - Vol.1 - Early Brahmi Inscriptions'* எனும் கல்வெட்டுகளின் தொகுப்பு நூலில் **515** ஆவது கல்வெட்டாக இது பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நூலில் இக்கல்வெட்டு "பருமக வணிஜ திசஹ லேனே சகச" - *"Parumaka vanijha Tisaha lene sagasa"* எனவும், ஆங்கில மொழிபெயர்ப்பில் *"The cave of the chief Tissa, the merchant [is given] to the Sangha"* எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு உட்பட **16** கல்வெட்டுகளின் விபரங்கள் பிழையாக இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கலாநிதி சூரிய குணசேகர தான் எழுதிய சேத்திகாசிக்க ராவண எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். "ராவண ஜித சோஹிலி" (இராவணனின் மகள் சோஹிலி) என கல்வெட்டில் உள்ளதாகவும், அதை மாற்றி "வணிஜ திசஹ" (வணிகன் தீசன்) என பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே விடயத்தை கலாநிதி மிரிண்டோ ஒபேசேகர, ஜயரத்ன பதிர ஆரச்சி, தனேஷ் கொடிப்பிலி ஆரச்சி, கே.டி.எஸ். சுதுசிங்க ஆகிய அறிஞர்களும் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். இக்கல்வெட்டு மூலம் இராவணன் நாகபர்வத மலையுடன் தொடர்புபட்டிருந்தமை தெளிவாகத் தெரிகிறது. மேலும் கொழும்பு நகரின் அருகில் உள்ள பன்னிபிட்டிய என்னுமிடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ தெவ்ரம் விகாரை வளாகத்தில் உள்ள 'ஸ்ரீ ராவண மந்திரய' எனும் பெயரில் அழைக்கப்பட்டு வரும் இராவணன் கோயிலின் முன்பாக இக்கல்வெட்டின் பிரதி ஒன்று நிறுவப்பட்டு, அதில் "பருமக ராவண ஜிதி சோஹிலி லேனே சகச" என எழுதப்பட்டுள்ளமை இங்கே சிறப்பாக உற்று நோக்கத்தக்கது.

## இராவணனின் மகள் வாழ்ந்த குகை

இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட இக்கல்வெட்டில் இராவணனின் மகள் 'சோஹிலி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் இராவணனின் ஆட்சி நிலவியமையும், அவனது பரம்பரையினர் வாழ்ந்திருந்தமையும் உறுதியாகிறது.

இராமாயணம் என்பது ஓர் காவியம் எனவும், கற்பனைக் கதை எனவும், இதற்கு சரித்திரப் பின்னணி கிடையாது எனவும், இதன் கதாபாத்திரங்கள் கவிஞர்களினால் படைக்கப்பட்டவை என்பதும் பலரின் கருத்தாக உள்ளது. ஆனால் இராமாயணத்தின் முக்கிய கதாபாத்திரங்களான இராவணன், இந்திரஜித், விபீஷனன், கும்பகர்ணன், குபேரன், கைகேசி, விஸ்ரவசு, புலஸ்தியர் ஆகியோரின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகள் பல இலங்கை முழுவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இராவணன் இலங்கை வேந்தன் என்பதும், இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இராவணனின் நெருங்கிய உறவினர்கள் பற்றிய விடயங்கள் உண்மையானவை என்பதும் உறுதியாகிறது.

பிராமிக் கல்வெட்டுகளின் காலத்திற்கும் இராவணனின் காலத்திற்கும் குறைந்தபட்சம் **1500** ஆண்டுகால வேறுபாடு உள்ளது. இராவணன் மற்றும் அவனது நெருங்கிய உறவினர்கள் பயன்படுத்திய கற்குகைகளை இராவணன் இறந்த பின்பு அவனது பரம்பரையினர் அல்லது அரசப் பிரதானிகள், அல்லது விசுவாசிகள் பேணிப் பாதுகாத்து வந்திருக்க வேண்டும். அல்லது இக்குகைகளில் இராவணன் மற்றும் அவனது நெருங்கிய உறவினர்களை தெய்வங்களாகப் போற்றி பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வந்திருக்க வேண்டும். அல்லது இராவணன் மற்றும் அவனது நெருங்கிய உறவினர்களின் பெயர்களை அவனின் பரம்பரையினர், அரச பிரதானிகள், விசுவாசிகள் போன்றோர் தங்களுக்கு சூடிக் கொண்டிருக்க வேண்டும்.



அடர்ந்த காட்டின் மத்தியில் நாகபர்வத மலைப்பகுதி

இப்படியான மூன்று தரப்பினரின் பரம்பரையினர் இராவணன் மற்றும் அவனது நெருங்கிய உறவினர்கள் பயன்படுத்திய கற்குகைகளில், கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட காலத்தில் இவர்களின் பெயர்களை எழுதியிருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஓர் குகையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டே நாகபர்வத மலையில் காணப்படுகிறது.

### கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களின் ஆட்சி நிலவிய இடம்

பொ.ஆ.மு 3 ஆம், 4 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் கதிர்காம பாண்டிய சத்திரியர்களின் இளைய சகோதரனாகிய மகாநாகனின் ஆட்சி அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பரந்திருந்தது. இக் காலப் பகுதியின் பின்பு பௌத்த மதம் இங்கு அறிமுகமாகியிருந்த போதும் கதிர்காமத்தை ஆட்சி செய்த இந்துக்களாகிய கதிர்காம சத்திரியர்களின் பரம்பரையில் சிலர் நாக வழிபாட்டைப் பேணி வந்துள்ளனர். கதிர்காமம், திஸ்ஸமகராமை ஆகிய பகுதிகளில் நாகவழிபாடு தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தமை பற்றி தொலமியின் குறிப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு கிறிஸ்துவுக்கு பிற்பட்ட காலத்தில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளும் இதை உறுதிப்படுத்துகின்றன. எனவே இக் காலப்பகுதியில் நாக வணக்கத்தைப் பேணி வந்த கதிர்காம பாண்டிய சத்திரிய மன்னர்களால் நாகபர்வத மலைப் பகுதியிலும் நாகவழிபாடு பேணப்பட்டிருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. யால வனப்பகுதியில் உள்ள கொட்டதாமுஹெல மலை, போவத்தகல மலை ஆகிய இடங்களில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகள் இப்பகுதியில் இவர்களின் ஆட்சியை உறுதி செய்கின்றன.

### உன்னரசுகிரி இராஜதானியின் முக்கிய பகுதி

அம்பாறை மாவட்டத்தில் புராதன காலத்தில் அமைந்திருந்த உன்னரசுகிரி இராஜதானி பற்றி மட்டக்களப்பு மான்மியத்தில்



மலைக்குன்றுகள் நிறைந்த நாகபர்வத மலைப்பகுதி



நாகபர்வத மலைப்பகுதியின் இன்னுமோர் தோற்றம்

குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் தலைநகரம் சன்னாசி மலையே என வி.சி. கந்தையாவும், குடும்பிமலையே என சி. கணபதிப்பிள்ளையும் குறிப்பிட்டுள்ளனர். ஆய்வாளர்களின் குறிப்புக்களின்படி பானமைக்கும், மாணிக்க கங்கைக்கும் இடையிலுள்ள ஓர் மலையே உன்னரசுகிரி இராஜதானி எனத் தெரிய வருகிறது பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டு முதல் 3 ஆம் நூற்றாண்டு வரை இவ்வாட்சிப் பிரிவு இப்பகுதியில் இருந்துள்ளது.

பானமைக்கும், மாணிக்க கங்கைக்கும் இடையில் மொத்தமாக 18 மலைகள் புராதன வரலாற்றுடன் தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. இவற்றில் ஓர் இராஜதானிக்குரிய புராதன இடிபாடுகளையும், அதிகமான கல்வெட்டாதாரங்களையும் கொண்ட 5 மலைகள் உள்ளன. ஒன்று குடும்பி மலை ஏனையவை நாகபர்வத மலை, போவத்தகல மலை, கொட்ட தாமுஹெல மலை, சித்துள்பவ்வ எனும் சித்தர் மலை ஆகியவையாகும். இவற்றில் குடும்பிமலை பற்றி சி. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். அதேவேளை நாகபர்வத மலை, போவத்தகல மலை, கொட்ட தாமுஹெல மலை, சித்தர் மலை ஆகிய மலைகளுடன் உன்னரசுகிரி இராஜதானிக்கு இருக்கும் தொடர்பை யாரும் குறிப்பிடவில்லை. ஓர் இராஜதானிக்குரிய அமைப்புடன் காணப்படும் நாகபர்வத மலை, உன்னரசுகிரி ஆட்சிப் பிரிவின் ஓர் முக்கிய பகுதியாக விளங்கியிருக்க வேண்டும் என்பது மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

### பண்டைய நாகர் குடியிருப்பு

நாகபர்வத மலைப் பகுதியில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் அடர்ந்த காட்டின் நடுவில் புராதன கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. மலை மீதும், அடிவாரத்திலும், மலையைச் சுற்றிய பகுதிகளிலும் இவை காணப்படுகின்றன. கற்தூண்களும், புராதன செங்கற்களும் ஆங்காங்கே தெரிகின்றன. மலை அடிவாரத்திலிருந்து உச்சிக்கு செல்வதற்கான இரண்டு பக்கங்களில் கற்படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இவை இடையிடையே மறைந்தும், சிதைந்தும் உள்ளன. மலையடிவாரத்தில் கற்தூண்களை மட்டும் கொண்ட கட்டிட அத்திவாரங்கள் சிலவும் காணப்படுகின்றன. இவற்றிடையே லிங்கக் கல்லைப் பொருத்தக் கூடிய வட்டமான குழியுடன் வட்ட வடிவில் ஆவுடையார் போன்ற கற்கள் சிலவும் காணப்படுகின்றன. இவை இங்கு காணப்பட்ட லிங்க வழிபாட்டுச் சின்னங்களின் சிதைவுகளாக இருக்கலாம்.

இப்பகுதியில் மலையாறு எனும் சிற்றாறு ஒன்றுக்கு குறுக்கே கட்டப்பட்ட புராதன அணைக்கட்டின் சிதைவுகளும் காணப்படுகின்றன. இவை யாவும் பண்டைய காலத்தில் இங்கு செல்வாக்குப் பெற்றிருந்த நாகர் குடியிருப்பின் அடையாளங்களாகும்.

### நாகபர்வத மலையின் குகைகளும் இடிபாடுகளும்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இப்பகுதியில் வாழ்ந்த ஆதிக் குடிகளான நாகர்களால் இங்கு நாகவழிபாட்டுத் தலம் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டிருக்க வேண்டும். நாக மலையிலிருந்து சுமார் 500 யார் தூரத்தில் அமைந்துள்ள சிறிய பாறைத் தொடரின் மத்தியில் வடக்குத் தெற்காக ஒரு குகை அமைந்துள்ளது. சுமார் 225 அடி சுற்றளவைக் கொண்ட இக்குகையில் ஆதிகால மக்கள் வாழ்ந்தமைக்கான தடயங்கள் காணப்படுகின்றன. இவர்கள் வரைந்த ஓவியங்கள் சிலவும் இங்கு காணப்படுகின்றன. குகையின் மூன்று பக்கங்களிலும் சுவர்கள் இருந்ததற்கான அடையாளங்கள் உள்ளன. செங்கட்டிகளைக் கொண்டு இச்சுவர்கள் அமைக்கப்பட்டிருந்தன. சுவர்களின் பின்னால் செங்கற்களைக் கொண்டு அன்னப் பறவை சிற்பங்கள் அழகாக அமைக்கப்பட்டுள்ளன. குகையின் முன்பக்கம் சுமார் 15 அடி

அகலமும், 50 அடி நீளமும் கொண்ட மண்டபம் ஒன்றிருந்ததற்கான அடித்தளமும் காணப்படுகின்றது.

கற்தூண்கள் சிலவும், வாசற் படிக்கல்லும் இம்மண்டபத்தில் உள்ளன. மண்டபத்தின் வடக்குப் புறத்தில் தாழ்வாரம் இருந்ததற்கான அடையாளமும் உள்ளது. கிழக்கு நோக்கிய வாசலையுடைய இக்குகை மண்டபமே புராதன நாக வழிபாட்டுத் தலமாக இருந்திருக்க வேண்டும் என நம்பப்படுகிறது. கிழக்கு நோக்கிய பிரதான வாசலும், மண்டபத்தின் வடக்கில் தாழ்வாரத்தின் பக்கம் இன்னுமொரு வாசலும் அமைக்கப்பட்டுள்ளது.

### பெருந்தொகையான பிராமிக் கல்வெட்டுகள்

அம்பாறை மாவட்டத்தில் அதிகப்படியான பிராமிக் கல்வெட்டுகளை உடைய இடம் ரஜகல எனும் இராச மலையாகும். இங்கு 48 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு அடுத்தபடியாக அதிக பிராமிக் கல்வெட்டுகளைக் கொண்ட இடமாக நாகபர்வத மலை காணப்படுகிறது. இங்கு மொத்தமாக 38 பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் 21 கல்வெட்டுக்கள் 1970 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டன. மிகுதி 17 கல்வெட்டுகள் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டவையாகும்.

நாகபர்வத மலை பற்றியும், இங்குள்ள பிராமிக் கல்வெட்டுகள் பற்றியும் முதன் முதலாக சி. டபிள்யூ. நிக்கலஸ் எனும் ஆங்கிலேய அறிஞர் ஆராய்ந்து குறிப்புகளை வெளியிட்டார். 1963 ஆம் ஆண்டு ரோயல் ஆசியக் கழக அறிக்கையில் இவை தொடர்பான விபரங்கள் வெளிவந்தன. பொ.ஆ.மு 2 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ரோகண இராச்சியத்தை ஆட்சி செய்து வந்த கோதாபயன் என்பவனால் இங்கு நாகபப்பத்த விகாரை அமைக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இங்குள்ள பெரிய கற்குகையில் 26 அடி நீளமான படுத்த நிலையில் உள்ள புத்தர் சிலை

அம்பாறை மாவட்டத்தில் அதிகப்படியான பிராமிக் கல்வெட்டுகளை உடைய இடம் ரஜகல எனும் இராச மலையாகும். இங்கு 48 கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு அடுத்தபடியாக அதிக பிராமிக் கல் வெட்டுகளைக் கொண்ட இடமாக நாகபர்வத மலை காணப்படுகிறது. இங்கு மொத்தமாக 38 பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் 21 கல்வெட்டுக்கள் 1970 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டன. மிகுதி 17 கல்வெட்டுகள் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டவையாகும்.

ஒன்று காணப்படுகிறது. புதையல் பிரியர்களால் இதன் தலை உடைக்கப்பட்டு, வயிற்றுப்பகுதி சிதைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

### சிவன், நாகர் பற்றிய கல்வெட்டுகள்

இங்கு காணப்படும் கல்வெட்டுகளில் நாகர் பற்றிய 3 கல்வெட்டுகளும், சிவன் பற்றிய 3 கல்வெட்டுகளும், சுதர்சன எனும் சொல் பொறிக்கப்பட்ட 3 கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இவற்றைத் தவிர தமிழ் பிராமிக்கே உரிய 'பருமகன்' எனும் சொல் பொறிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுகள் நாகபர்வத மலையில் காணப்படுகின்றன. அத்துடன் இராவணனின் பெயர் பொறிக்கப்பட்ட ஓர் கல்வெட்டும் இங்கே உள்ளது. இக்கல்வெட்டுகளில் பெரும்பாலானவை இங்குள்ள 200 அடி நீளமான ஓர் மலைக்குகையில் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகளில் பெரும்பாலானவை பொ.ஆ.மு. 3 ஆம், 2 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டவையாகும்.



**ஆவுடையார் போன்ற கற்கள்**

இவற்றில் சில பொ.ஆ. 7 ஆம் நூற்றாண்டுக்குரியவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. பெருமகன் எனும் பட்டத்தையுடைய நாகர் தலைவன் இங்குள்ள குகைகளுக்குச் சொந்தக்காரனாக இருந்தமையும் சில கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகிறது.

இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 'சுதர்சன' என்பது மகா விஷ்ணுவின் சக்கரத்தின் பெயராகும். இலங்கையில் சுதர்சன சக்கரத்தை மூலமூர்த்தியாகக் கொண்ட இரு கோயில்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் ஒன்று யாழ். மாவட்டத்தில் உள்ள வல்லிபுரம் என்னுமிடத்தில் உள்ளது. இரண்டாவது ஆலயம் களுத்துறை மாவட்டத்தில் உள்ள பாணந்துறையில் அமைந்திருந்தது. இவை போன்ற சுதர்சனச் சக்கர வழிபாடு நாகமலையிலும் நிலவியிருக்க வேண்டும் என்பது இக்கல்வெட்டுகள் மூலம் தெரிகிறது.

### நாகர் குலம் பற்றிக் கூறும் கல்வெட்டு

இங்கு காணப்படும் நாகர் பற்றிய மூன்று கல்வெட்டுகளில் ஒன்றிலே தான் 'நாகபர்வதம்' எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகள் மூலம் பம்பரகஸ்தலாவ மலைப்பகுதியில் நாக வழிபாடு, சிவ வழிபாடு மற்றும் விஷ்ணுவின் சுதர்சனச் சக்கர வழிபாடு போன்றவை காணப்பட்டுள்ளன என்பதை உறுதியாகக் கூறலாம்.

இங்கு பொறிக்கப்பட்டுள்ள நாகர் பற்றிய மூன்று கல்வெட்டுகளில் முதலாவது கல்வெட்டு நாகரின் குலம் பற்றிக் கூறுகிறது. இதன்




நாக குலம் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பிரதி




கிராமத் தலைவன் நாகன் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பிரதி




கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள கற்குகைகளின் தோற்றம்






**தலை உடைக்கப்பட்டு, வயிற்றுப்பகுதி சிதைக்கப்பட்டுள்ள புத்தரின் புராதன சிலை**

விபரங்கள் பின்வருமாறு:

"பருமக படகரக நாக குலஹக கோதி மதஹக லேனே"

இது தமிழில் "அரச சமையல் கூடத்தின் தலைமை அதிகாரியான பெரு மகன் நாகனின் குலத்தவரினதும், கோதி மாதாவினதும் குகை" எனப் பொருள்படும். ஆங்கிலத்தில் இதன் பொருள், "*The cave of the family of the chief Naga, the Superintendent [of the] royal kitchen, and of Goti mata*" என்பதாகும்.

இக்கல்வெட்டு நாகரைப் பற்றிய மிக முக்கியமான குறிப்பாகும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள குலம் எனும் பதத்தை பேராசிரியர் பரணவிதான குடும்பம் என குறிப்பிட்டுள்ளார். இதனால் இது நாக வம்சத்தைக் குறிப்பதற்குப் பதிலாக நாக வழிபாட்டைத் தமது குல வழிபாடாகக் கொண்டிருந்த குடும்பத்தையே குறிப்பிடுகிறது என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன்படி நாகபர்வத மலைப்பகுதியில் நாக வழிபாடு நிலவியமை உறுதியாகிறது.

## கிராமத் தலைவன் நாகன் பற்றிய கல்வெட்டு

நாகர் பற்றிய இரண்டாவது கல்வெட்டில் பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன:

"கமிக நாக புத யச தேரச லேனே சுதசன [சட்டு] திச சகச தினே"

இதன் பொருள், "கிராமத் தலைவன் நாகனின் மகனான யச எனும் தேரரின் சுதஸ்சன எனும் பெயருடைய கற்குகை நாலா திசைகளிலும் இருந்து வரும் சங்கத்தாருக்கு வழங்கப்பட்டது" என்பதாகும். ஆங்கில மொழியில் இது "*The cave [named] Sudassana, of the elder Yasa, son of the village councillor Naga, is given to the sangha, of the four quarters*" எனப் பொருள்படுகிறது.

## நாகபர்வத மலை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

இங்கு காணப்படும் நாகர் பற்றிய மூன்றாவது கல்வெட்டு இப்பகுதியில் முக்கிய கல்வெட்டாகும். இக்கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு:

"படத மிதென மபிட நாக பவத செனசனே"

இதன் பொருள், "மரியாதைக்குரிய மித்தவினால் நாக பர்வதத்தில் கட்டப்பட்ட குடியிருப்பு" என்பதாகும். ஆங்கிலத்தில் இது "*The residence at Nagapabbata, caused to be built by the Venerable Mitta*" எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இங்குள்ள மலையின் பெயர் நாகபர்வதம் என்பது இக்கல்வெட்டின் மூலமே எமக்குத் தெரியவருகிறது.

ஈழத்தமிழினம் இறுதிக்கட்டப் போரில் முன்னெப்போதும் இல்லாத, எதிர்பாராத பேரவலத்தைச் சந்தித்திருந்தது. பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து ஆரம்பித்த தமிழ் இன அழிப்பு பொறிமுறை 2009 இல் முள்ளிவாய்க்காலில் உச்ச நிலையடைந்தது; தமிழ் இன அழிப்பு ஒரு வரலாற்று அரசியல் நிகழ்முறைமையாக பரிணாமமடைந்தது (POLITICO – HISTORICAL PRO CESS). இதன் பின்னணியில், பின்முள்ளிவாய்க்கால் அரசியல் வரலாற்றுக் காலத்தில் இன அழிப்பு கற்கைநெறி தொடர்பில் தமிழில் படைப்புகள் கிடைப்பது தேவையாகின்றது. அந்த வகையில், இன அழிப்பு புலமையில் தமிழில் ஆய்வு விவாதப் பரப்பை ஏற்படுத்துவதன் மூலம், ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கையில் 'இன அழிப்புத் திறனாய்வுச் சொல்லாடல்: ஓர் பன்முக கற்கைநெறி அணுகுமுறை' எனும் இத் தொடர் ஐ.நா வின் இன அழிப்பு குற்றத்தைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சாசனத்தையும் அதனோடு தொடர்புடைய ஏனைய சொல்லாடல்களையும், மூன்றாம் உலக திறனாய்வு விளக்கவுரைக் கண்ணாடியூடாக அணுக முனைகின்றது. இது ஆதிக்க கதையாடல்களுக்கு சவால் விடும் அதே நேரத்தில், பேரரசுக் கட்டமைப்பு அரசியல், தனது ஆதிக்க நலன்களுக்காக என்ன விலையையும் கொடுக்கத் தயாராய் இருக்கின்றது என்பதையும் வெளிக்காட்டும் என்பது திண்ணம்.

# இனப்படுகொலையை அங்கீகரித்தலின் அரசியல்




● அருட்தந்தை எழில்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுயாதீன ஆய்வாளரான அருட்தந்தை எழில் அவர்கள், தன்னுடைய முதுகலைமாணிப் பட்டப்படிப்பை லண்டன் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் நிறைவு செய்துள்ளார்.

இவர், தமிழின விடுதலை சார்ந்த அநுபவங்களை உள்ளடக்கிய 'உள்மை' என்ற கவிதைத் தொகுப்பை 2006 ஆம் ஆண்டிலும், 2009 இற்குப் பின்னரான தமிழ்த் தேசிய வெளி, தமிழ்த் தேசிய அரசியற் கருத்தியல் சார்ந்த பத்திகளின் தொகுப்பை 'பின்முள்ளிவாய்க்கால்' என்ற பெயரில் 2023 ஆம் ஆண்டிலும் வெளியிட்டுள்ளார்.


## முன்னுரை

1990 களில் மேற்குலகச் சிந்தனைப் பரப்பில் அங்கீகரித்தலின் அரசியல் பற்றிய சிந்தனையின் மீள்வாசிப்பை அறிமுகப்படுத்துகின்ற செல்நெறியை ரெய்லர் (1992), ஹோனரத் (1992), (f) பிறசேர் (1995 - 1997) போன்றோர் முன்னெடுத்திருந்தனர். இவர்களின் கருத்தியல் கட்டமைப்பு ரீதியான பங்களிப்பு மறுக்கப்பட முடியாதது. பின் - காலனித்துவ அரசியல் வரலாற்று வெளியில் சிறு குழுமங்கள், இனங்கள் தாராளவாத சனநாயக பண்பாட்டு நாகரிக முறைமைக்குள் உள்ளீர்க்கப்பட்டு தமது தனித்துவ அடையாளங்களை இழந்து போயின. சனநாயக அரசியல் கட்டமைப்பு மக்களை ஒருமைக்குள் (homogenization) உள்ளீர்த்து, அகவயப்படுத்திக் கொள்ளவே செய்தது. ஒருமைக்குள் உள்வாங்கும் வேலைத்திட்டம் (நிகழ் முறைமையை) தேச - அரச அடையாளப்படுத்தலுக்குள்ளான பொறிமுறையினூடு அறிமுகப்படுத்தப்பட்டது. உதாரணமாக சிறிலங்கன் என்ற ஒரு நாட்டினுடைய அடையாளத்திற்குள் விரும்பியோ விரும்பாமலோ உள்வாங்கப்பட்டது என்பது வரலாறு.



Image Source : www.virakesari.lk

காலனித்துவம் தன்னுடைய மேற்குலக அறிவுக்கட்டமைப்பிற்கு உட்பட்டு உருவாக்கிய அரசியல் முறைமைக்குள் மக்கள் உள்வாங்கப்பட்டார்கள். காலனித்துவ அறிவுக் கட்டமைப்பு காலனித்துவ அரசியல் நலன்களுக்கும் புவிசார் நலன்களுக்கும் அப்பாற்பட்டு மக்கள் நலன்களை கொண்டது என்று சிந்திப்பது அபத்தம். தேச - அரச அடையாளத்திற்குள் / அடையாளத்தோடு தனிநபர்கள் தங்கள் அடையாளத்தை அடையாளப்படுத்த ஊக்குவிக்கப்பட்டார்கள். [1] தேச - அரச உருவாக்கக் கட்டமைப்புகளுடன் அடையாள அரசியல் மிக உத்வேகம் பெற்று வளர்ந்தது என்று சொன்னால் மிகையாகாது. ஒரு நாட்டின் பிரசை எனக் கணிக்கப்படுபவர் அல்லது கணிக்கப்படும் தனிநபர் எப்போதுமே தேச - அரசை மையப்படுத்தியே தனது அடையாளத்தை கட்டமைப்பதை அவதானிக்கலாம். இந்த ஒப்பந்தம் பரஸ்பர நலனடிப்படையில் சனநாயக முறைமையில் தங்களை வளர்ந்த நாடுகள் என்று கருதிக் கொள்ளும் அரசியல் வெளியில் சாத்தியமானதா, இல்லையா என்பது விவாதத்திற்குரியது. இவ்வாறான கருத்தியல்கள் எல்லாமே 'நவீனத்துவம்' என்ற நாகரிகத்திற்குள், (மேற்குலக) பண்பாட்டில் மேம்பட்ட நிலையாக நோக்கப்பட்டது. அதற்கேற்ப கல்விமுறைக்கூடு வெவ்வேறு கருத்தியல்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வாழ்வியல் முறைமைகள் மாற்றமடைய நிர்ப்பந்திக்கப்பட்டது. காலனித்துவம் அறிமுகப்படுத்தியவை மேம்பட்ட நிலையில் உள்ளவாறும், பூர்வீக மக்களின் அறிவியல் முறைமைகள் பின்தங்கிய அல்லது பிற்போக்கானதாகவும் கட்டமைக்கப்பட்டது. பூர்வீக மக்களின் அறிவியல் முறைமைகள் தர்க்க

ரீதியற்றது, விஞ்ஞான ஆய்வறிவு அற்றது, குருட்டு நம்பிக்கை கொண்டது என பூர்வீக / சுதேச அறிவியல் முறைகள் அகற்றப்பட்டது. காலனித்துவம் ஆங்கில மொழியை ஒரு அறிவாகவே அறிமுகப்படுத்தியது. ஆங்கில மொழிமுறைக் கூடாகக் கல்வி பயின்றோரும், காலனித்துவ நாடுகளில் பட்டம் பெற்றோரும் மேட்டுக் குடியினராக சமூகத்தில் கட்டமைக்கப்பட்டார்கள். காலனித்துவ வெளியில் செல்வாக்குள்ளவர்களாக அங்கீகரிக்கப்பட்டார்கள். காலனித்துவம் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி யாரை அங்கீகரிப்பது என முடிவு செய்தது.

அங்கீகரித்தல் செயற்பாட்டை அறிவுசார் தெரிவு என மட்டுமே எடுத்துக் கொள்ள முடியாது. அதனை அதிகாரத்தை நடைமுறை செய்யும் அல்லது வெளிப்படுத்தும் செயன்முறையாகவே பார்க்க வேண்டிய தேவையுள்ளது. இந்த அங்கீகரிக்கும் செயன்முறை ஒன்றுக்கொன்று எதிரான ஏற்றத்தாழ்வு இருமைகளை சமூகத்தில் கட்டமைத்துக் கொண்டிருக்கும். உதாரணமாக, 'உயர்ந்தவர் - தாழ்ந்தவர்', 'நாங்கள் - அவர்கள்', 'நண்பர்கள் - எதிரிகள்' போன்றவற்றைக் குறிப்பிடலாம். அங்கீகரித்தலின் அரசியலை இங்கு அடையாள அரசியல் வில்லைக்கூடாக அணுகுவதைத் தவிர்த்து, உரிமை, நீதி, (இங்கு நீதி பற்றிக் குறிப்பிடும் போது அதை பங்கிடுகின்ற - *distributive justice* - தொனியில் குறிப்பிடவில்லை என்பதையும் பதிவிட விரும்புகின்றேன்), அறம் சார்ந்த கற்கை நெறிகளுக்கூடாக அணுகுவது ஈழத்தமிழர் விடுதலைப் போராட்ட அரசியற் செயற்பாட்டிற்கு வலுச் சேர்க்கும். அதே நேரத்தில் இவ் ஆய்வு அணுகுமுறை பன்மைப் பண்பாட்டை அகவயப்படுத்துவதன் மூலம் சனநாயகப் பொறிமுறையை வலுப்படுத்துதல் போன்ற நவதாராளவாத போக்கையும் முற்றாகத் தவிர்த்திருக்கிறது. அவ்வாறான அணுகுமுறை ஒற்றையாட்சி சனநாயகப் பொறிமுறையை வலுப்படுத்தும்.

அடிப்படையில் இக்கட்டுரை தமிழ்த்தேசிய அரசியல் வரையறைக்குட்பட்ட அணுகுமுறையைக் கையாள்கின்றது.

## அங்கீகரிக்கும் அரசியலில் பின்காலனித்துவ அணுகுமுறை

திபேஷ் சக்கரவர்த்தி தன்னுடைய 'வரலாறும் அங்கீகரித்தலின் அரசியலும்'[2] என்ற கட்டுரையில் 'வரலாற்று வடு' (*Historical wound*) எனும் பதத்தை அறிமுகப்படுத்துகிறார். சார்லஸ் ரெய்லரின் கோட்பாடான "அங்கீகரிக்க மறுப்பது அல்லது தவறுவது நன்மதிப்பைக் குறைப்பது மட்டுமல்ல; அது ஆழமான வடுக்களையும் ஏற்படுத்தக்கூடும். குறிப்பாக சுயம் சார்ந்த வெறுப்பைக் கொடுக்கலாம் (*Misrecognition shows not just a lack of due respect. It can inflict a grievous wound saddling its victims with a crippling selfhatred*).[3]" என்பதிலிருந்து தான் 'வரலாற்று வடுவை' கட்டமைத்ததாக திபேஷ் சக்கரவர்த்தி குறிப்பிடுகின்றார். வரலாற்று வடுவை பேச முயலுவதே அதிலிருந்து மீளுவதற்கான பாதையில் பயணிப்பதாகும் என்கின்றார்.[4] வரலாற்று வடு, வரலாற்று உண்மையிலிருந்து உருவாகின்றது. அவுஸ்திரேலியாவில் தொன்முது மக்களுடைய (*aboriginals*) பிள்ளைகள் அவர்களுடைய பெற்றோரிடமிருந்து வலுக்கட்டாயமாக காலனித்துவ அரசாங்கத்தால் அல்லது கிறிஸ்தவ மறையாளர்களால் பிரிக்கப்பட்டதை அதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். அவர்கள் 'களவாடப்பட்ட தலைமுறை' (*stolen generation*) என அழைக்கப்படுகின்றனர். 'களவாடப்பட்ட தலைமுறை' என்பது வரலாற்று உண்மை.[5] தொடர்ந்து திபேஷ் கூறுகையில் இறுதியாக வரலாற்று வடுவின் அரசியலானது அனுபவத்தை முன்னிலைப்படுத்தி இறந்த காலத்தை அணுகும் வரலாற்று ஆய்வின் போதனா முறைமைக்கு சவாலாக அமைகின்றது என குறிப்பிடுகின்றார்[6] (*Finally, the politics of 'historical wounds' often pose a challenge to the discipline of history by seemingly privileging experien*

**ஈழத்தமிழர் அரசியலை அரசியல் நீக்கம் செய்கின்ற அரசியல் வேலைத்திட்டம் பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. தனித்தனி இராச்சியங்களாக இருந்த அரச அலகுகளை ஒன்றுபடுத்தியதிலிருந்து இச்செயற்பாடு ஆரம்பிக்கின்றது. தீவின் இனங்களின் புள்ளிவிபர மதிப்பீட்டின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்ட இன விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை, இன அடையாள சமூகங்களை நிறம் சார்ந்த (racial) கண்ணாடியூடாக பார்க்கின்ற ஒரு அரசியல் பொறிமுறையை உருவாக்கியமை ஆகியன அதன் பின்னரான செயற்பாடுகளாக அமைந்தன.**

*tial access to the past*). வரலாற்று வடுவினை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு கவித்துவ 'மொழிமூலம்' மிகவும் துல்லியமானதாக உள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார். இதனை பேராசிரியர் காஞ்ச இளையா உடனான துணைமை நிலை கற்கைத் திறனாய்வு (*subaltern studies*) ஆய்வில் ஏற்பட்ட அனுபவத்தைக் கொண்டு விளக்குகின்றார். தலித் பேராசிரியரான காஞ்ச இளையா, வரலாற்றுப் பிரதிநிதித்துவத்தின் உள்ளீட்டை வரலாற்று ஆய்வு முறைமைகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டி மறுக்கக்கூடிய அபாயத்தைக் காரணமாகக் குறிப்பிட்டு, தலித்துகளின் நிகழ்கால சமூக விழிநிலையில் வினைத்திறன்மிக்க மாற்றம் ஏற்பட வேண்டுமாயின், தலித் பகுஜன்களின் வரலாற்றை மேற்குலக வரலாற்று முறைமைகளுக்கூடான ஆய்வுகள் மூலம் பிரதிநிதித்துவப்படுத்துவது நிராகரிக்கப்பட வேண்டும் என்கிறார். இதனால் அவர் தனது சுய அனுபவத்தைக் கொண்டே வரலாற்றை அணுகுவதைக் காண முடியும்.[7] சுய அனுபவங்களூடு வரலாற்றுக் கற்கை நெறியை ஆய்வு செய்தல் வரலாற்றுக் கற்கை நெறியில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. காரணம் வரலாற்று கற்கை நெறியில் இறந்த காலத்தை ஆய்வு செய்வதற்கு உணர்வுகளால் பாதிக்கப்படாத 'வரலாற்றுப் புறமுறை' (*Historical Objectivity*) பேணப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. சுய அனுபவங்களூடு வரலாற்றை அணுகும் போது சுய அனுபவத்திற்கும், வரலாற்று ஆய்வுப் பரப்பு விடயத்திற்குமான தொலைவு சிதைந்து போகின்றது. அண்மைய காலங்களில் இந்த 'வரலாற்றுப் புறநிலை' தொடர்பான விவாதங்கள் தொடர்ந்த வண்ணமிருக்கின்றன. இந்த வரலாற்றுப் புறநிலையைத் தக்க வைக்கின்ற நிகழ்தகவு வரலாற்றில் நினைவுத் திறத்தின் வகிபங்கை கேள்விக்குட்படுத்துகின்றது.[8]

இதற்கு மாற்றுவழியாக தனித்த, கூட்டு அனுபவங்களூடாக இறந்த காலத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற செல்நெறி உருவானதை அவதானிக்கலாம். இவ்வாறான செல்நெறி, இனக்குழுக்கள் தங்களுக்கென தனித்த அருங்காட்சியகங்களை உருவாக்கி தனித்த - கூட்டு அனுபவங்களுக்கூடாக வரலாற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மரபு, ஆவணப்படங்களிலும் புதினங்களிலும் ஏனையவற்றிலும் செல்வாக்குச் செலுத்துவதை அவதானிக்கலாம். ஓவியர் ஆசை இராசையா 'ஜாம் போத்தல் விளக்கு' பற்றிய ஓவியத்தில் இதை துல்லியமாகப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். தன்னுடைய மகள் ஜாம் போத்தல் விளக்கில் கல்வி கற்பதனை வரலாற்றுக் கற்பிதமாக மாற்றியது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் ஓவியம் வரலாற்று முறைமைகளைத் தாண்டி மிகத் துல்லியமாக ஓவிய நுகர்வோரை சுய அனுபவத்திற்கூடாக தனிப்பட்ட உணர்வுகளுடன் ஊடாட்டத்தை ஆரம்பிக்கக் கூடிய திறமையைத் தன்னகத்தே

கொண்டுள்ளதை மறுக்க முடியாது.

சிங்கள தேசம் சிங்கள - பௌத்த இன அடையாளத்தினூடு அங்கீகரிக்கப்படுவதை பிரித்தானிய காலனித்துவம் கையில் எடுத்துக் கொண்ட கருவியாக 'வரலாற்று புறநிலை' அமைந்திருந்தது. அது அநுராதபுரத்தை மையமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்ட நவீன இனத்துவ சிறிலங்காவின், வரலாற்றியலிலும், தொல்லியல் அகழ்வு ஆராய்ச்சியிலும், இன வகைமைப்படுத்தலிலும், சனநாயக தேர்தல் பிரதிநிதித்துவப்படுத்தலிலும் பிரதிபலித்தது. சிறிலங்கா அனுபவத்தைக் கொண்டு நோக்குகின்ற போது தேசிய - அரசு பிரதிநிதித்துவப்படுத்தலிலும் வரலாற்று புறநிலையை தக்க வைத்தலிலும் அறத்திற்கும் நீதிக்கும் இடமே இல்லாது போனது தெரிய வருகிறது. 2009 இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட சூழலில் இறுதிப் போரையும், இறுதிப் போரின் சாட்சியங்களையும் ஆய்வு செய்ய வந்தவர்கள் இந்த வரலாற்றுப் புறநிலையை தக்கவைப்பதற்காக, சாட்சியங்களின் அனுபவ விபரிப்பில், காலக் கணிப்பு முறையில், இடங்களை விபரிப்பதில், வழுக்கள் இருப்பதைக் குறிப்பிட்டு, அக்கதையாடல்களின் உள்ளீட்டு உண்மைத் தன்மையை கேள்விக்கு உட்படுத்தியிருந்தார்கள்.

(f)பிறேசர் குறிப்பிடுகின்ற "தவறான அங்கீகரிப்பினால் அல்லது தவற விடப்படுகின்ற அங்கீகரிப்பினால் (misrecognition) ஏற்படுகின்ற பண்பாட்டுக் குறியீட்டு அநீதிகள்; சமூக பிரதிநிதித்துவ விளக்கவுரை, கருத்துப் பரிமாற்றத்தில் வேரூன்றியவை."[9] அவர் தவறான அங்கீகாரத்திற்கு உதாரணமாக பண்பாட்டு ஆதிக்கத்தைக் குறிப்பிடுகின்றார். ஐரிஸ் மேரியன் யங் விளக்கும் போது, அடிப்படையில் இரண்டு விதமான அநீதியை குறிப்பிடுகின்றார்; அவை, அடக்கு முறை (oppression), ஆதிக்கம் (domination) என்பனவாகும். ஐரிஸ் ஐந்து விதமான அடக்கு முறைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். அவையாவன: சுரண்டல் (exploitation), ஓரங்கட்டப்படுதல் (marginalisation), அதிகாரமின்மை (powerlessness), பண்பாட்டு ஏகாதிபத்தியம் (cultural imperialism), வன்முறை (violence). ஐரிஸ் அடக்குமுறையை கட்டமைப்புக் கருத்தமைவாகக் (oppression as structural) குறிப்பிடுகின்றார்.[10] இவ்விரு கோட்பாட்டாளர்களுக்குமிடையில் 'தவறான அங்கீகாரம்' தொடர்பில் உருவாகின்ற விவாதப் பரப்பை குறிப்பிடுவது இக்கட்டுரையின் நோக்கன்று. ஆனால் இருவரும் அங்கீகரித்தலின் அரசியலின் காரணத்தில் ஒன்றுபடுகிறார்கள். "வேறுபாட்டிற்கான கோரிக்கை அநீதியான சமூக ஏற்றத் தாழ்வுகள் பற்றிய அக்கறையிலிருந்து எழுகின்றது."[11]

யார்? யாரை? அங்கீகரிப்பது என்கின்ற கேள்வி எழுகின்றது. 'அங்கீகாரம், அதிகாரம், காலனித்துவம்' என்கின்ற கட்டுரையில் கட்டுரையாளர் ஒரு சம்பவம் ஊடாக அங்கீகரித்தலை அறிமுகம் செய்கின்றார். 2016 ஐக்கிய அமெரிக்கத் (வட அமெரிக்கா) தேர்தலில் பூர்வீக (இந்திய) அமெரிக்கர்கள் வாக்களிப்பதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள். வட அமெரிக்க இறைமை தங்களது பூர்வீக நிலங்களை நிராகரித்ததைத் தெரிவித்து, பூர்வீக இந்திய வட அமெரிக்கர்கள் தங்களை வட அமெரிக்கப் பிரசைகளாக ஏற்றுக் கொள்வதையும் மறுத்திருந்தார்கள். தங்களை காலனித்துவத்திற்கு உட்படுத்தியவர்கள், தங்களை ஒரு சனநாயக பொறிமுறையினூடு அங்கீகரிப்பதை முற்போக்கான அரசியல் விருப்பாக அவர்கள் நோக்கவில்லை.[12] பூர்விக / சுதேச சமூகத்திலிருந்து எழும் திறனாய்வாளர்கள், (f)பிரான்ஸ் (f)பனனின் கருத்தியல் பங்களிப்பிலிருந்து அங்கீகரித்தலின் அரசியல் விவாதத்தை தொடங்குகின்றனர். அதன் இரு பிரதான பங்களிப்பாளர்களாக க்ளன் க்ளாகாட் (Glen Coulthard), ஒத்ரா சிம்சன் (Audra Simsan) ஆகியோர் காணப்படுகின்றனர். அவர்கள் இருவருடைய முன்வைப்புகளும் ஏற்கனவே இவ் விவாதப் பரப்பில் இருந்த அங்கீகரித்தல் ஆய்வுப் பரப்பின் அற ஒழுக்கத்தன்மையை சிக்கலுக்குட்படுத்தியது.

க்ளோகாட் அவருடைய நூலான '*Red Skin White Masks : Rejecting the Colonial Politics of Recognition*' இல் எவ்வாறு அங்கீகரித்தலின் அவசியம் காலனித்துவ அதிகார நலன்களைப் பேணுவதற்காகப் பயன்படுத்தப்பட்டது என விளக்குகின்றார். நூலாசிரியர் குறிப்பிடுகையில்; "பனனின் வாதப்படி (காலனித்துவ) ஆதிக்க யதார்த்த சூழமைவில், அங்கீகாரத்தின் விதிமுறைகள் காலனித்துவவாதிகளால், அவர்களுடைய நலன்களுக்காக மட்டுமே தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக காலனித்துவத்திற்கு உட்பட்ட மக்கள் தாமாகவே எசமான் - அடிமைக் கட்டமைப்பை உளப்பாங்கு ரீதியாக உருவாக்கிக் கொள்கின்றார்கள (தமிழில் சொல்வதானால்; கொத்தடிமை மனநிலை). எதற்காகவெனில் பொருளாதார, அரசியல் கட்டமைப்புகளை தக்கவைப்பதற்காக."[13] "காலனித்துவத்திற்கு உட்பட்ட மக்கள் எவ்வாறு காலனித்துவத்தால் கட்டமைக்கப்பட்ட நிறவெறி அங்கீகரிக்கும் கட்டமைப்புகளை தன்னகத்தே (தனித்து/ கூட்டாக) அகவயப்படுத்தும் நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள்"[14] என்பதை பனன் சுட்டிக் காட்டுகின்றார். ஐரோப்பியக் காலனித்துவம், காலனித்துவத்திற்கு உட்பட்ட மக்களை நாகரீகமடையாதவர்களாக, தாழ்வானவர்களாக படைபல வெற்றி கொள்ளல் செயற்பாடு மூலமாக கட்டமைத்து, அதையே காலனித்துவத்திற்கு உட்பட்ட மக்கள் மீது திணித்தது மட்டுமல்லாது, அதை அகவயப்படுத்தி சாதாரணமயப்படுத்தியது. இவ்வாறான காலனித்துவ அதிகார இயங்குநிலை அகத்திலும், புறத்திலுமிருந்து கட்டவிழ்க்கப்பட வேண்டும். இதற்கு மாற்றீடாக பனன் இன்னொரு கருத்தியலை அறிமுகம் செய்கின்றார்;[15] கூட்டான சுய அங்கீகரிப்பு (*collective selfrecognition*). இச் செயற்பாடு காலனித்துவத்திற்கு உட்பட்ட மக்கள் தங்களை சுய விழிநிலையில் இருந்து கொண்டு காலனித்துவ வாதிகளில் தங்கியிராமல் மேற்கொள்ளும் செயற்பாடு[16] என வர்ணிக்கின்றார்.




Image Source : www.amazon.com

பிறேசர் உடைய முன்வைப்புத் தொடர்பில் வோல்கர் கெய்ன்ஸ் (*Volker Heins*) விபரிக்கின்ற விமர்சனத் திறனாய்வு அவதானிக்கப்பட வேண்டியது. மேற்குலக கோட்பாட்டாளர்கள் ஐரோப்பிய மையச் சிந்தனையிலிருந்து தங்களது முன்வைப்புகளை ஆரம்பிக்கின்றனர்; குறிப்பாக ஐரோப்பிய தேச - அரசு என்பதே ஆரம்பப் புள்ளியாக அமைகின்றது.

ஒரு தேச - அரசிற்குள் உருவாகும் பண்பாட்டுப் போராட்டங்கள் அந்த தேச - அரசின் ஒருமைத் தன்மையை (*homogeneity*), அரசியல் இனக் குழுக்களின் சக இருப்பைப் பாதிப்பதில்லை

என்பது ஹொனத்தினுடைய ஊகமாக / அனுமானமாக இருக்கிறது. ஆனால் ஐரோப்பிய மையத்தைத் தவிர்த்துள்ள 'மூன்றாம் உலகத்தில்' (Third World) அரசியல் யதார்த்தம் அவ்வாறில்லை. "வெவ்வேறு பண்பாட்டு, இனக்குழுமங்கள் வாழுகின்ற நவீன நாடுகளில் ஒரு தேச - அரச கோட்பாட்டை சிக்கலுக்குட்படுத்துகின்ற கிளர்ச்சிகள், போராட்டங்கள் எழுகின்றன."[17]

ஏனெனில் 90 களில் வெளிவந்த அங்கீகரித்தல் தொடர்பான ஆய்வுகள் தாராளவாத சட்டகத்திற்குள்ளிருந்தே அங்கீகரித்தலை நோக்கியிருந்தன.[18] அவ்வாறான நோக்குநிலை சிக்கலுக்குரியது என்பதை அனிபல் குயிஞ்ஞானோ (Anibal Quijano) தனது 'காலனித்துவ அதிகாரம், ஐரோப்பிய மையவாதமும் இலத்தீன் அமெரிக்காவும்' என்ற கட்டுரையில் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.[19] அதில் காலனித்துவம் உருவாக்கிய ஏதேச்சதிகார முறைமை, அத்தோடு தொடர்புடைய ஐரோப்பிய மைய அறிவு உருவாக்கம், முதலாளித்துவம் போன்றவற்றிற்கிடையிலான தொடர்பு இவையெல்லாம் எவ்வாறு பேரரசுக் கட்டமைப்பிலிருந்தும் காலனித்துவத்திலிருந்தும் அதிகாரத்தை உருவாக்கி தற்போதுள்ள சனநாயக, பொருளாதாரக் கற்கைநெறிக் கட்டமைப்புகளுக்கூடாக அதிகார பலத்தை தக்கவைக்க முயற்சிக்கின்றது போன்ற விடயங்களை ஆய்வுக்குட்படுத்துகின்றார். ஆசியாவில் பின்காலனித்துவ சிந்தனைப் பள்ளிக் கருத்தியல்கள் முனைப்புப் பெற, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் காலனித்துவ நீக்க சிந்தனைப் பள்ளிக் கருத்தியல்கள் வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

தற்போதுள்ள உலக ஒழுங்கு, பேரரசுக் கட்டமைப்பை, ஒரு துருவ, இரு துருவ, பல் துருவ வில்லைகளுக்கூடாக பார்க்க விரும்புகிறது. இத் துருவ ஒழுங்குகள் அரசியல் கட்டமைப்பே ஆயினும், சர்வதேச அதிகார மையத்தை ஆய்வுக்குட்படுத்துவதற்கு இவ்வாறான பிரிப்பு முறைகள் உதவி செய்யும். அதனடிப்படையிலேயே யார், யாரை அங்கீகரித்தலிற்கு உட்படுத்துகின்றார்கள் என்பதை உற்று நோக்க வேண்டியிருக்கும். தற்போதுள்ள ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்பில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை மறுப்பதிற்கில்லை. என்றாலும், ஒரு சில அலகுகள் ஏனையவற்றை விடவும் முன்னுரிமை பெறுவதை அவதானிக்கலாம். அவற்றுள் ஒன்றாகவே புவிசார் அரசியலின் திறனாய்வுப் பரப்பு நோக்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட சட்டகத்திற்குள் இருந்து கொண்டே 'தமிழ் இன அழிப்பு அங்கீகரித்தல்' அரசியலை உற்று நோக்குவது ஈழத்தமிழர் விடுதலைப் போராட்ட தொடர் செயன்முறைக்கு உதவி செய்யும் எனக் கருதுகின்றேன்.

## இனப்படுகொலையை அங்கீகரித்தலின் அரசியல்

பலஸ்தீன இன அழிப்பு தொடர்பில் தென்னாபிரிக்கா சர்வதேச நீதிமன்றில் இஸ்ரேலுக்கு எதிரான குற்றச்சாட்டை முன்வைத்திருந்தது. அந்தக் குற்றச்சாட்டின் நம்பகத் தன்மையை சர்வதேச நீதிமன்று ஏற்றுக் கொண்டுள்ளமை வரலாற்றுத் திருப்பம் என்றே கொள்ள வேண்டியிருக்கும். ஏனென்றால் இனப் படுகொலைக்குரிய குற்றத் தன்மையை வடஅமெரிக்கா, பலஸ்தீனம் தொடர்பில், தொடர்ந்து நிராகரித்து வருகின்றமை பொது வெளி அறிவுக்குட்பட்டது.

'பெயரிடுதலின் அரசியல்: இனப்படுகொலை, சிவில், யுத்தம், கிளர்ச்சி' (The Politics of Naming: Genocide, Civil War, Insurgency)[20] என்கின்ற கட்டுரையில், இனப்படுகொலை எனப் பெயரிடுவதற்கு பின்னாலுள்ள அரசியலை மஃமுட் மம்தானி (Mahmood Mamdani) ஈராக்கையும் (Iraq) டாவூரையும் (Darfur) உதாரணங்களாகக் கொண்டு விளக்குகின்றார்.

இரண்டு இடங்களிலும் இடம்பெற்ற பேரவலத்திற்குரிய ஒற்றுமைகள் அதிகமாகவிருப்பினும், இரண்டுமே வெவ்வேறு மொழி நடையினால் பெயரிடப்பட்டன. ஈராக்கில் நடந்தது 'கிளர்ச்சி (insurgency), கிளர்ச்சியை அடக்குதல் (counter - insurgency)' என்ற சொல்லாடலாலும் டாவூரில் நடந்தது இனப்படுகொலை என்ற சொல்லாடலாலும் அழைக்கப்பட்டது.

ஊடகவியலாளர் ஒருவர் கட்டுரையாளரிடம் பகிர்ந்தது: முள்ளிவாய்க்காலில் உச்சம் தொட்ட இன அழிப்பு நினைவு நாள் வருடந்தோறும் மே 18 இல் முள்ளிவாய்க்காலில் ஒருங்கிணைக்கப்படுகின்றது. இவ் ஆண்டு, 15 ஆம் ஆண்டு நினைவு மட்டுமல்ல, சர்வதேச மன்னிப்புச் சபையின் பொதுச் செயலர் வந்திருந்தபடியால் சர்வதேச ஊடகவியலாளர்கள் நினைவேந்தலாகவும் அமைந்திருந்தது. அவர்களில் ஒருவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார். "இன அழிப்பு' என்ற கோசங்களை தாங்கிய பதாதைகளுக்கு முன்னுரிமை கொடுத்தோ அல்லது அதைப் பின்னணியில் கொண்டோ எந்தப் புகைப்படமும் எடுக்கலாகாது."

தமிழ் இன அழிப்பை பெயரிடுதல், சர்வதேச நிறுவனங்களால் எவ்வாறு கட்டமைக்கப்படுகின்றது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணமாகும்.

## ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தை அரசியல் நீக்கம் செய்தல்

ஈழத்தமிழர் அரசியலை அரசியல் நீக்கம் செய்கின்ற அரசியல் வேலைத்திட்டம் பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. தனித்தனி இராச்சியங்களாக இருந்த அரச அலகுகளை ஒன்றுபடுத்தியதிலிருந்து இச்செயற்பாடு ஆரம்பிக்கின்றது. தீவின் இனங்களின் புள்ளிவிபர மதிப்பீட்டின் அடிப்படையில் அறிமுகப்படுத்தப்பட்ட இன விகிதாசார பிரதிநிதித்துவ முறைமை, இன அடையாள சமூகங்களை நிறம் சார்ந்த (racial) கண்ணாடியூடாக பார்க்கின்ற ஒரு அரசியல் பொறிமுறையை உருவாக்கியமை ஆகியன அதன் பின்னரான செயற்பாடுகளாக அமைந்தன. இவ்வாறான அடையாளப்படுத்துகின்ற செயன்முறை 'றோயல் ஏசியாட்டிக் சொசைற்றி' ஊடாக முன்னெடுக்கப்பட்டது. சிங்கள - பௌத்தர்கள் ஆரிய இன வழி வந்தவர்கள்; ஆரிய வம்சா வழியினர் என்ற இன மேலாண்மைக் கருத்தியலை ஆசியாட்டிக் றோயல் சொசைற்றி தமது ஆய்வுக் கட்டுரைகள் மூலம் கட்டமைத்தது.[21] அடுத்த நகர்வாக, மகாவம்சத்தை மையப்படுத்திய புனித நகராக புதிய அனுராதபுரத்தை, தொல்லியல், வரலாற்றியல், ஆய்வுகளுக்கூடாக உருவாக்கியது.[22] மேற்கூறப்பட்டவைகள் புராதன தொல்லியல் தன்மையைக் கொடுத்தது மட்டுமல்லாது சிங்களவர்கள் ஈழத் தமிழர்களை விட மேம்பட்டவர்கள் என்ற ஏற்றத்தாழ்வு இருமைக் கட்டமைப்பை உருவாக்கியதோடு, சிங்கள இனத்திற்கு கூட்டு - தன்னம்பிக்கையையும் (collective self - confidence), சுய தனித்துவத்தையும், அதீத தன்னுணர்வு விழிநிலையையும் வழங்கியது. பிரித்தானிய காலனித்துவ அல்லது ஐரோப்பிய காலனித்துவ சரிவிற்குப் பின்னர் ஏக துருவ பேரரசுக் கட்டமைப்பு வட அமெரிக்காவை மையமாகக் கொண்டிருந்து. இது இரண்டாம் உலகப் போரின் பின்னர் முனைப்புப் பெற்றதையும் அவதானிக்க வேண்டும்.

மம்தானி தன்னுடைய கட்டுரையில் 'அரசியல் நீக்கம்' செய்தல் என்ற கருத்தியலுக்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுத்திருப்பதைக் காணலாம். விடுதலை அரசியல் பரப்பில் கூட்டு அரசியல் மயப்படுத்தல் மிக அவசியமானது. கூட்டு அரசியல் மயப்படுத்தலில் தான் விடுதலை அரசியல் தொடர்பான கருத்தியல் தெளிவுகள்

‘ஈழத்தமிழ் இன அழிப்பு’ குற்றத்தில் நேரடிக் குற்றவாளியாக சிறிலங்கா அரசு இனங்காணப்பட்டுள்ளது. அவ்வாறு இனங்காணப்பட்டுள்ள சூழலில் இன அழிப்பு புரிவதற்கான ‘உள்நோக்கம்’ தெளிவுபடுத்தப்பட வேண்டும். இந்த இன அழிப்பு புரிவதற்கான உள்நோக்கம், ஒரு இனத்தை மட்டுமே இலக்காகக் கொண்டிருந்தது என்பதை ஐயமின்றி எண்பிக்க வேண்டும். குறிப்பிட்ட உள்நோக்கம் (special intent/dolus specialis) நிரூபிக்கப்பட வேண்டும்.

நலனும், அரசியல் வேணவாவும், தாயகம் பற்றிய தெளிவும், இனக்குழுமத் தனித்துவமும், இன்னும் பிறவும் வெளிக்கொணரப்பட்டது. இவை பற்றிய போதியளவு தெளிவுரைகள் அரசியல் பொதுப்பரப்பில் உள்ளதால் இக்கட்டுரை அதை ஆய்வுக்கு உட்படுத்துவதைத் தவிர்க்கிறது.

ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் அரசியல் முதிர்ச்சி, மெய்நடப்பு அரசை கட்டியெழுப்பியதன் மூலம் சர்வேதேச கவனத்தை ஈர்த்தது என்பதை மறுக்க முடியாது. இவ்வாறான பாரிய வளர்ச்சி (ஏனைய தேசிய விடுதலைப் போராட்டங்கள் கண்டிராத), ஏகாதிபத்திய கட்டமைப்பிற்கு சவாலாக இருந்ததை ஏற்கனவே வந்த ஒரு சில அறிக்கைகள் மட்டும் ஆவணப்படுத்தியுள்ளன. ஏகாதிபத்திய கட்டமைப்பு அலகு தனது ஏற்படுவதற்குரிய சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படுகின்றன. ஒரு விடுதலைப் போராட்டத்தினைப் பெயரிடுவதற்கு அதனை கோட்பாட்டு ரீதியாக வலுவூட்ட வேண்டிய தேவை இருப்பதை மறக்க முடியாது. இது ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு மட்டுமல்ல எல்லா தேசிய/ இனக்குழும விடுதலைப் போராட்டங்களுக்கும் பொதுவானது. ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திற்குரிய கோட்பாட்டு மைய விளக்கவுரை அன்ரன் பாலசிங்கத்தின் ‘சோசலிசத் தமிழீழத்தை நோக்கி’ என்ற தமிழ்க் கைநூலில் (ஆங்கிலத்தில் : *‘Our Theoretical Guide to the National Question’*[23]) வெளிவந்திருந்தது. இந்தக் கோட்பாட்டு வரையறையே ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திற்குரிய பாதையையும், இலக்கையையும் தீர்மானித்தது. தமிழர் விடுதலைப் போராட்டத்தை, ‘தேசிய விடுதலைப் போராட்டமாகவே’ ஈழத்தமிழர்கள் அங்கீகரித்திருந்தனர், ஏற்றுக் கொண்டிருந்தனர். ‘தேசியம்’ என்ற சொல்லாடலுக்கூடாக, கூட்டு ஈழத் தமிழர்



மஃமுட் மம்தானி
Image Source : en.wikipedia.org

பேரரசுக் கட்டமைப்பு வேலைத்திட்டத்தை உப ஒப்பந்தம் ஊடாக (subcontract) பிராந்திய உபபேரரசுக் கட்டமைப்பிடம் ஒப்படைப்பது, அரசியல் வரலாற்றில் புதிய நடைமுறை அல்ல. இதற்காக ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்பு நலன் கொண்ட 'மனநிலை' உள்ள அரசியல் கட்டமைப்புகள், கோட்பாடுகள், வேலைத்திட்டங்கள் தெரிவுக்கு உட்படுத்தப்படுகின்றன.

ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தினை அரசியல் நீக்கம் செய்கின்ற அரசியல் வேலைத்திட்டம் பன்முகப் பரிமாணங்களைக் கொண்டிருந்தாலும், அவற்றை இரு பெரிய பிரிவினுள் அடக்குவது, ஆய்வுக்குட்படுத்த இலகுவாயிருக்கும். ஒன்று; ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு வெளியே சர்வதேச அரசியல் தளத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம், இரண்டாவது; அகத்தில் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திற்குள் உருவாக்கப்பட்ட வேலைத்திட்டம். இவையிரண்டுமே முக்கியமான காரணிகளாயிருந்தாலும், புறக்காரணியை/களை ஆய்வுக்குட்படுத்துவது, புறக்காரணிகள் எவ்வாறு ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பரிமாணமாகிய ஆயுத விடுதலைப் போராட்டத்தை மௌனிக்கச் செய்தது என்பதை கோடிட்டுக் காட்ட உதவும். மீண்டும் இவ்வாறான சிந்தனைச் செல்நெறி புவிசார் அரசியலை மையமாகக் கொண்டு, 2009 இற்குப் பின்னர் பொதுவெளிக்குள் விவாதிக்கப்படுவது அவதானிப்பிற்கு உட்படுத்தப்பட வேண்டும்.

மிக அண்மைய அரசியல் வரலாற்றிலிருந்து ஆரம்பித்தால், வட அமெரிக்காவின் பயங்கரவாதத்தின் மீதான போரின் தாக்கம் கனதியான செல்வாக்கைச் செலுத்தியது. இதனடிப்படையில் 2002 சமாதானப் பேச்சுவார்த்தை முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னணியும் நோக்கப்பட வேண்டும். இது தொடர்பில் அன்ரன் பாலசிங்கம் எழுதிய கட்டுரையும், பேச்சு வார்த்தையில் பங்குபற்றிய அவதானிகளாக இருந்தவர்கள் எழுதிய அரசியல் கட்டுரைகளும் மிக முக்கியமானது. இங்கு அடிக்கோடிட்டுக் காட்டப்பட வேண்டிய கருத்தாக கட்டுரையாளர்கள் கொள்வது, தமிழ் இன அழிப்பில் வட அமெரிக்க, மேற்குலக உடந்தைத்தன்மை. ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் அற ஒழுக்கத்தையும், சட்ட முறைமை நிலையையும் (legitimacy) சிதறடித்தல் விடுதலைப் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமாகத் தடை செய்த வடஅமெரிக்காவின், அதன் நட்பு நாடுகளின் அரசியல் வேலைத்திட்டமாக இருந்தது, இருப்பது. இங்கு குறிப்பிடப்படும் சட்ட முறைமை நிலைமை மக்களிடமிருந்து கிடைத்த ஆணைக்கூடாகவும் விடுதலைப் போராட்ட முதிர்ச்சியூடாக போராடிப் பெற்றுக் கொண்ட இறைமைக்கூடாகவும் பெற்றுக் கொண்டதாகும். பேச்சு வார்த்தை மேடையிலிருந்தும், ரோக்கியோ நிதிதருநர்கள் மாநாட்டிலிருந்தும் விடுதலைப் புலிகளை நீக்கியிருந்த அரசியல் செயற்பாடு; வட அமெரிக்கா, அதன் நட்பு நாடுகளின் அரசியல் நலன் கருதி நடந்தது மட்டுமல்லாமல், ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டம் பெற்றுக் கொண்ட இறைமையையும் சிக்கலுக்குட்படுத்தியது.

உள்ளக முரண்பாடுகளை அரசியலாக்கி அதனூடாக ஆயுதப் போராட்டத்தை மௌனிக்கச் செய்வதற்கான காரணத்தை பிறிதொரு ஆய்வில் கண்டறிய முடியும்.

சிறிலங்கா அரசை ஒரு கருவியாக இயக்கிய வடஅமெரிக்கா, மேற்குலக, மேலும் அதன் நட்பு நாடுகள் 'பயங்கரவாத ஒழிப்பை' இடையீட்டிற்கான அல்லது தலையீடு செய்வதற்கான ஒரு போர் உத்தியாகக் கையாண்டன. இடையீட்டு / தலையீட்டு அரசியலில் எப்போதுமே ஒரு சாராரை 'அரக்கர்களாக/தீயதாக' கட்டமைக்க வேண்டிய தேவைப்பாடு உருவாக்கப்படும் போது, இச்சொல்லாடல் இருமை எதிர்ப்பைக் கட்டமைக்கும். அவ்வாறெனில் அரக்கர்/தீயது

எதிர் நல்லது/ சிவிலியன்/ அப்பாவிகள் என்ற இருமை உருவாக்கப்படும். அப்பாவிகள் அல்லது *innocense* என்ற கட்டமைப்பு ஒரு குழுவை அரசியல் அற்ற (*apolitical*) குழுவாகச் சித்தரிக்கிறது. அரக்கர் எதிர் நல்லவர் இயங்கு நிலைக்கு வரும் போது அரக்கர்களிடமிருந்து/ தீயதிடமிருந்து நல்வர்கள்/ அப்பாவிகள்/சிவிலியன்கள் காப்பற்றப்பட வேண்டிய தேவை உருவாக்கப்படுகின்றது. இந்தத் தேவை 'காப்பாற்றுதல்' என்ற போர்வையில் தீயதிடமிருந்து தாக்குதலைத் தடுப்பதற்கான முன் முயற்சியில் தலையீடு தேவையாகின்றது. இந்தத் தலையீடு நேரடியாகவோ, மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படுகின்றது. நல்லவர்களை/ சிவிலியன்களை பாதுகாப்பதற்காக தலையீடு செய்பவர்கள் மீட்பர்களாக வருணிக்கப்பட்டு அவர்களுக்கான அனுமதி வழங்கப்படுகிறது. பயங்கரவாத ஒழிப்பில், சிறிலங்கா அரசிற்கு தனது மக்களை காப்பாற்றுவதற்கான பொறுப்பு வலியுறுத்தப்பட்டு, இன அழிப்புக் (*genocide*) குற்றத்திற்குள் வரக்கூடிய அரச பொறுப்பு (*state responsibility*) இல்லாமல் செய்யப்படுகிறது.



இனவழிப்பு காட்சியகம் - ஆர்மீனியா
Image Source : www.genocide-museum.am

## இன அழிப்பில் அரச பொறுப்பு

'ஈழத்தமிழ் இன அழிப்பு' குற்றத்தில் நேரடிக் குற்றவாளியாக சிறிலங்கா அரசு இனங்காணப்பட்டுள்ளது. அவ்வாறு இனங்காணப்பட்டுள்ள சூழலில் இன அழிப்பு புரிவதற்கான 'உள்நோக்கம்' தெளிவுபடுத்தப்பட வேண்டும். இந்த இன அழிப்பு புரிவதற்கான உள்நோக்கம், ஒரு இனத்தை மட்டுமே இலக்காகக் கொண்டிருந்தது என்பதை ஐயமின்றி எண்பிக்க வேண்டும். குறிப்பிட்ட உள்நோக்கம் (*special intent/dolus specialis*) நிரூபிக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட, குறிப்பிட்ட/விசேட உள்நோக்கத்தில் இலக்கு/நோக்கம் பற்றிய பொறுப்பு (*objective responsibility*) அவதானிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இது அரசு தனது அரச அலகுகளுக்கூடாக இன அழிப்புத் தொடர்பில் புரியும் குற்றங்கள் தொடர்பிலானது.[24]

மிக அண்மைய பட்டறிவின் படி, ஒரு அரசு இன அழிப்பு குற்றத்தை அரங்கேற்றியதற்காக சர்வதேச நீதிமன்றில் (ICJ) முன்னிறுத்தப்பட்டால், சர்வதேச விதிகளுக்கமைய, இன அழிப்பு சாசனத்தின் (1948) சரத்து II இற்கு அமைய பின்வரும் குற்றங்கள் குறிப்பிட்ட / விசேட உள்நோக்கோடு அரங்கேற்றப்பட்டது நிரூபிக்கப்பட்டால், அது இன அழிப்புக் குற்றமாகக் கருதப்படும்.

ஒரு தேசம், இனம், நிறம் அல்லது சமயம் சார்ந்த குழுமத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் அழிக்கும் உள்நோக்கத்துடன் பின்வரும் குற்றங்கள் புரிந்தது நிரூபிக்கப்பட்டால், அது இன அழிப்புக் குற்றமாகக் கருதப்படும்.

அ) அக்குழுவைச் சார்ந்தவர்களைக் கொலை செய்தல்,

ஆ) அக்குழுவைச் சார்ந்தவர்களுக்கு

கடுமையான உடல், உள தீங்கிழைத்தல்,

இ) முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ உடல் ரீதியான அழிவை, அக்குழுவிற்கு இழைக்கும் வகையில் திட்டமிட்டு ஒரு வாழ்க்கை முறையை அக்குழுவின் மீது திணித்தல்,

ஈ) அக்குழுவிற்குள் பிறப்பைத் தடுக்கும் உள்நோக்குடன் திட்டங்களைத் திணித்தல்,

உ) அக்குழுவைச் சார்ந்த குழந்தைகளை வேறொரு குழுவுக்கு வலிந்து மாற்றுதல்,

மேற்கூறப்பட்டவற்றோடு பின்வரும் குற்றங்கள் புரியப்பட்டிருந்தாலும், அரசு தனது கடமையிலிருந்து தவறியதற்காக இன அழிப்பு குற்றவாளியாக இனங்காணப்படலாம்.

அ) அரசு தனது இன அழிப்பைத் தடுக்கும் பொறுப்பிலிருந்து தோல்வியுற்றிருந்தால்,

ஆ) இன அழிப்பு குற்றம் புரிவதற்கான முயற்சி, சதி மூலம் அல்லது நேரடியான பகிரங்கமான தூண்டுதல் மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பொறுப்பு அரசிடம் உள்ள போது,

இ) அரசு இன அழிப்புக் குற்றத்தை புரிவதற்கு உடந்தையாக உள்ள போது.

அரச சார்பற்றவர்கள் இன அழிப்பு தொடர்பான குற்ற முயற்சிகள் புரிகின்ற போது (*state responsibility for acts of nonstate actors*) அதனைத் தடுப்பதில் அரசுக்கு பொறுப்பிருக்கின்றது. இது தொடர்பான விவாதத்தை கூர்ந்து நோக்குவது சிறந்தது. இதை விட இன அழிப்புத் திட்டம் சார்பாக அரச ஈடுபாடு நிரூபிக்கப்பட்டால் அதுவும் அரசை இன அழிப்பு குற்றப் பொறுப்புக் கூற வழிவகுக்கும்.[25]

இன அழிப்பைத் தடுப்பதற்கான பொறுப்பும் கடமையும் ஒரு அரசிற்கு உள்ளது. இந்த இன அழிப்பு தடுப்பு முயற்சிகள் போர் நடைபெறும் காலத்திலும், போர் அல்லாத காலத்திலும் நடைபெறலாம். இன அழிப்புச் செயற்பாடுகளை கூர்ந்து அவதானித்து தடுப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இன அழிப்பைத் தடுக்கின்ற கடமையிலிருந்து தவறுவது, பொறுப்புக்கூறலில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் நேர் மறையான, எதிர் மறையான ஆய்வு அவதானிப்புகள் தொடர்கின்றன என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது.

இதை விடவும் மூன்றாவது மக்கள் தீர்ப்பாயம் வட அமெரிக்க, ஐக்கிய இராச்சிய, ஐரோப்பிய ஒன்றியத்தின் அல்லது ஒன்றிய நாடுகளின் தமிழ் இன அழிப்பில் உடந்தைத் தன்மையை வெளிக்கொணர்ந்திருக்கிறது.

மம்தானி டாவூர், கொங்கோ, றுவாண்டா ஆகிய நாடுகளைக் கொண்டு ஆய்வு செய்தார். இன அழிப்பின் விசேட உள்நோக்கம் நிரூபிக்கப்படா நிலையிலும் டாவூரில் நடைபெற்று வந்ததை இன அழிப்பாக முதலில் வட அமெரிக்காவே அறிவித்திருந்தது. அதற்கான அரசியலை மம்தானி விளக்குகின்றார். அதே நேரத்தில் றுவாண்டா இன அழிப்பில் வட அமெரிக்காவின் பங்களிப்பையும் அவர் பதிவு செய்கின்றார்.

‘இன அழிப்பு அங்கீகாரம்’ எதனடிப்படையில் நடைபெறுகின்றது என மம்தானி தனது வார்த்தைகளில் கூறுகின்றார்:

“நமக்குள் ஒரு அறம்சார் திசைகாட்டி உண்டு. அதன் ஊசி மனிதப் பேரவலத்தால் மட்டும் இயங்குவதல்ல, மனிதத் தீமையாலும் இயக்கப்படுகின்றது. இது தான் இன அழிப்பை சிறப்பானதாக்குகின்றது. இறப்புகளின் எண்ணிக்கை மட்டுமல்ல அவற்றின் பின்னணியில் உள்ள அரசாங்கக் கொள்கைகளும்.”

மேலும் இன அழிப்பை பெயரிடுவதன் பின்னணி அரசியல் பற்றி குறிப்பிடுகையில்,

“இன அழிப்பு என்பது உங்கள் மோசமான எதிரி மீது ஒட்டிக்கொள்ளப் பயன்படும் ஒரு

அடையாளச் சீட்டாக மாறி விட்டது; இது நோபல் பரிசின் எதிர்மறையான மாற்று வடிவம். நட்பு வட்டங்களுக்கு தண்டனை விலக்களிப்பை உறுதி செய்வதற்கும், எதிரியை இழிவுபடுத்தவும் பயன்படும் சொல்லாடல் ஆயுதமாக இன அழிப்பு மாறிவிட்டது."[26] என்கிறார்.

## உசாத்துணை


1. BalatonChrimes, Samantha, and Victoria Stead. 'Recognition, Power and Coloniality'. Postcolonial Studies 20, no. 1 (2 January 2017): 1-17. https://doi.org/10.1080/13688790.2017.1355875.

2. Balsingham, Anton. 'Our Theoretical Guide to the National Question'. Accessed 28 August 2024. https://antonbalasingham.com/archives/856.

3. Celik, Simona. 'State Responsibility for Genocide: ICJ Ruling in Bosnia and Herzegovina's Genocide Case'. SSRN Scholarly Paper. Rochester, NY, 11 July 2014. https://doi.org/10.2139/ssrn.4196127.

4. Chakrabarty, Dipesh. 'History and the Politics of Recognition'. In Manifestos for History Edited by Sue Morgan, Keith Jenkins, and Alun Munslow. Routledge, 2007.

5. Coulthard, Glen Sean. Red Skin, White Masks: Rejecting the Colonial Politics of Recognition. Minneapolis: Univ Of Minnesota Press, 2014.

6. Heins, Volker. 'Three Meanings of Equality: The "Arab Problem" in Israel'. Res Publica 18, no. 1 (1 February 2012): 79-91. https://doi.org/10.1007/s1115801291871.

7. Jeganathan, Pradeep. 'Authorizing History, Ordering Land: The Conquest of Anuradhapura'. In Unmaking the Nation: The Politics of Identity & History in Modern Sri Lanka, Edited by Pradeep Jeganathan and Qadri Ismail. South Focus Press, 2009.

8. Kiss, Elizabeth. 'Democracy and the Politics of Recognition'. In Democracy's Edges, edited by Casiano HackerCordón and Ian Shapiro, 193-209. Contemporary Political Theory. Cambridge: Cambridge University Press, 1999. https://doi.org/10.1017/CBO9780511586361.012.

9. Lindemann, Thomas, and Erik Ringmar. International Politics of Recognition. 1st edition. Boulder, CO: Routledge, 2011.

10. Mamdani, Mahmood. 'The Politics of Naming: Genocide, Civil War, Insurgency'. London Review of Books, 8 March 2007. https://www.lrb.co.uk/thepaper/v29/n05/mahmoodmamdani/thepoliticsofnaminggenocidecivilwarinsurgency.

11. Marisa Angell. 'Understanding the Aryan Theory'. In Culture and Politics of Identity in Sri Lanka Edited by Mithran Tiruchelvam and Dattathreya C. S. International Centre for Ethnic Studies, Colombo, 1998.

12. Quijano, Aníbal. 'Coloniality of Power and Eurocentrism in Latin America'. International Sociology 15, no. 2 (June 2000): 215-32. https://doi.org/10.1177/0268580900015002005.

13. Smith, Robin M. 'State Responsibility and Genocidal Intent: A Three Test Approach'. The Australian Year Book of International Law Online 34, no. 1 (1 January 2017): 87-125. https://doi.org/10.1163/26660229034019000000008.

14. Young, Iris Marion. 'Five Faces of Oppression'. In Geographic Thought : A Praxis Perspective, edited by George L. Henderson and Marvin Waterstone, 55-71. Oxford: Routledge, 2009.


[1] Thomas Lindemann and Erik Ringmar, International Politics of Recognition, 1st edition (Boulder, CO: Routledge, 2011), 4.

[2] Dipesh Chakrabarty, 'History and the Politics of Recognition', in Manifestos for History ed. Sue Morgan,

Keith Jenkins, and Alun Munslow (Routledge, 2007).

[3] Chakrabarty, 77.

[4] Chakrabarty, 'History and the Politics of Recogni tion'.

[5] Chakrabarty.

[6] Chakrabarty.

[7] Chakrabarty.

[8] Chakrabarty.

[9] Quoted in Elizabeth Kiss, 'Democracy and the Politics of Recognition', in Democracy's Edges, ed. Casia no HackerCordón and Ian Shapiro, Contemporary Political Theory (Cambridge: Cambridge University Press, 1999), 200, https://doi.org/10.1017/CBO9780511586361.012.

[10] Iris Marion Young, 'Five Faces of Oppression', in Geographic Thought : A Praxis Perspective, ed. George L. Henderson and Marvin Waterstone (Oxford: Routledge, 2009), 37-60.

[11] Kiss, 'Democracy and the Politics of Recognition', 200.

[12] Samantha BalatonChrimes and Victoria Stead, 'Recognition, Power and Coloniality', Postcolonial Studies 20, no. 1 (2 January 2017): 1-17, https://doi.org/10.1080/13688790.2017.1355875.

[13] Glen Sean Coulthard, Red Skin, White Masks: Rejecting the Colonial Politics of Recognition (Minneap olis: Univ Of Minnesota Press, 2014), 26.

[14] Coulthard, 31-32.

[15] Coulthard, 34.

[16] Coulthard, 131.

[17] Volker Heins, 'Three Meanings of Equality: The "Arab Problem" in Israel', Res Publica 18, no. 1 (1 February 2012): 79-91, https://doi.org/10.1007/s1115801291871.

[18] BalatonChrimes and Stead, 'Recognition, Power and Coloniality'.

[19] Aníbal Quijano, 'Coloniality of Power and Eurocentrism in Latin America', International Sociolo gy 15, no. 2 (June 2000): 215-32, https://doi.org/10.1177/0268580900015002005.

[20] Mahmood Mamdani, 'The Politics of Naming: Genocide, Civil War, Insurgency', London Review of Books, 8 March 2007, https://www.lrb.co.uk/thepaper/v29/n05/mahmoodmamdani/thepoliticsofnaminggeno cidecivilwarinsurgency.

[21] Marisa Angell, 'Understanding the Aryan Theory', in Culture and Politics of Identity in Sri Lanka Edited by Mithran Tiruchelvam and Dattathreya C. S. (International Centre for Ethnic Studies, Colom bo, 1998).

[22] Pradeep Jeganathan, 'Authorizing History, Ordering Land: The Conquest of Anuradhapura', in Unmaking the Nation: The Politics of Identity & History in Modern Sri Lanka, Edited by Pradeep Jeganathan and Qadri Ismail (South Focus Press, 2009).

[23] Anton Balsingham, 'Our Theoretical Guide to the National Question', accessed 28 August 2024, https://antonbalasingham.com/archives/856.

[24] Robin M. Smith, 'State Responsibility and Genocidal Intent: A Three Test Approach', The Austra lian Year Book of International Law Online 34, no. 1 (1 January 2017): 87-125, https://doi.org/10.1163/2666022903401900000008.

[25] Simona Celik, 'State Responsibility for Genocide: ICJ Ruling in Bosnia and Herzegovina's Genocide Case', SSRN Scholarly Paper (Rochester, NY, 11 July 2014), https://doi.org/10.2139/ssrn.4196127.

[26] Mamdani, 'The Politics of Naming'.

*இன்று இலங்கை எதிர்நோக்கியுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. இது தற்செயலாக வெடித்த ஒன்றோ தற்காலிகமான ஒன்றோ அல்ல. இதன் வரலாற்று வேர்கள் ஆழமானவை, நீண்டவை. இந்நிலைமைக்கு நிதிநிர்வாகத்தவறுகளை மாத்திரம் காரணம் காட்டமுடியாது. அதனை விடவும், 1948 முதல் இதுவரை இலங்கையை ஆட்சிசெய்த செய்த அனைத்து தலைவர்களும் நடத்திய இனவாத அரசியலுக்கு நாடு கொடுத்த விலையே இதுவாகும். இதனை விளக்குவதாகவே இலங்கையின் 'இனவாத அரசியல் – ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடர் அமைகிறது. இதன்படி, 1915 க்கு முன்னர் இருந்து இன்றுவரை சிறுபான்மைத் தேசியங்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன வன்முறை தாக்குதல்களையும், அவற்றின் பின்னணியையும் வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் நேரடி அனுபவங்கள் ஊடாகவும், நூல்கள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆதாரங்கள் வழியாகவும் இந்தத் தொடர் ஆராய்கின்றது. இரு பகுதிகளாக அமையவுள்ள இந்தத் தொடரின் முதல் பகுதி, இலங்கையின் இனவாத அரசியலின் தோற்றம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் இரண்டாம் பகுதி இலங்கையின் அரசியல் நெருக்கடியிலும் பொருளாதார நெருக்கடியிலும் இனவாத அரசியலின் பாத்திரம் பற்றியும் ஆராய்கிறது.*



# காலனித்துவ உயரடுக்கு வர்க்கத்தின் (Elite) உருவாக்கம்


பி. ஏ. காதர்

பி. ஏ. காதர் அவர்கள் நுவரெலியா ராகலையைச் சேர்ந்த எழுத்தாளர். அத்துடன் ஆய்வாளராகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

பாவா அப்துல் காதர் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் முக்கியமானவையாக 'சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்', 'சுயம் நிர்ணயம் உரிமை' மற்றும் 'மேதின வரலாறும் படிப்பினைகளும்' போன்ற நூல்கள் அமைகின்றன.


இலங்கை அரசியலிலும் சமூக வாழ்க்கையிலும் புராதன காலம் தொட்டே சாதியம் பெரும் செல்வாக்குச் செலுத்தியது. இதற்கு இந்து மதத்தின் தெய்வீக வடிவம் வழங்கிய தாக்கமே காரணமானது. பௌத்த மதம் சாதியத்துக்கு எதிரான ஒரு சித்தாந்தமாகத்தான் உருவானது. இந்தியாவில் அம்பேத்கார் தலைமையில் சாதியத்துக்கு எதிரான வலுவான இயக்கமாக பௌத்த மதம் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இலங்கையில் அரசர்களும் பின்னர் காலனியவாதிகளும் - தங்கள் வர்க்க நலனையும் அதிகாரத்தையும் தக்கவைத்துக் கொள்வதற்கு சாதியம் வலுவான ஆயுதம் என்பதைப் புரிந்துகொண்டு - பௌத்தத்தில் சாதியத்தை உட்புகுத்தி அதனைப் பயன்படுத்திக் கொண்டனர்.

காலனித்துவத்துக்கு முன்னர் இலங்கைச் சிங்களவரிடையே அரசர் அல்லது சத்திரியர், பமுனு அல்லது உயர்குல மதகுருக்கள் - பிரதானிகள், வெலந்த அல்லது வணிகர் மற்றும் கொவிகம அல்லது வேளாளர் என நான்கு உயர் சாதியினர் இறங்கு வரிசையில் அதிகார உச்சியில் இருந்தனர். இன்று சிங்களவர் மத்தியில் கொவிகம சாதியினரும் இந்துக்கள் மத்தியில் வெள்ளாளரும் தங்களைச் சாதி அடுக்கில் உச்சத்தில் இருப்பதாகக் காட்டிக்கொண்டாலும் அவர்கள் அன்று அந்தளவுக்கு




**போர்த்துக்கேயரின் நிர்வாக முறைமை**

Image Source - defonseka.com

*மதிக்கப்படவில்லை. நிஸ்ஸங்க மல்ல மன்னனின் 12 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று 'கொவிகம சாதியினர் ஒருபோதும் உயர் பதவிக்கு ஆசைப்பட முடியாது என' எச்சரித்துள்ளது. 13 ஆம் நூற்றாண்டின் சிங்கள இலக்கியப் படைப்பான 'பூஜாவலிய' கொவிகம சாதியில் ஒரு புத்தர் பிறக்க மாட்டார் என்று கூறியது.*

*இந்த அத்தியாயத்தில், ஐரோப்பியக் காலனித்துவம் இலங்கையில் கால்பதித்து கோலோச்சத் தொடங்கிய (1505 - 1948) நீண்ட 440 வருட காலத்தில் காலனிய ஆட்சியாளர்களால் பழைய சாதிய அடுக்கு தங்கள் நலனுக்கு ஏற்ப எவ்வாறு வடிவமைக்கப்பட்டது என்பது பற்றியும்; அது சுயமாக இலங்கையில் உருவாகிவந்த ஆட்சி முறைமையையும் தலைமைகளையும் அழித்துவிட்டு தனது நலனுக்கு ஏற்றவகையில் புதிய சாதி உருவாக்கத்தையும், அதனடிப்படையில் புதிய காலனியில் உயரடுக்கு (Colonial elite) முறையையும் எவ்வாறு உருவாக்கியது என்பது பற்றியும் சுருக்கமாகப் பார்ப்போம்.*

## காலனித்துவ ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்ட பழைய சாதியமைப்பும் முதலியார் வகுப்பின் தோற்றமும்

போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி எடுத்து வைத்தபோது அவர்களுக்கு எதிரான போரில் சுதேச மன்னர்களும் பிரதானிகளும் வணிகர்களுமே (குறிப்பாக முஸ்லிம் வணிகர்கள்) தலைமை தாங்கினர். இவர்களில் முஸ்லிம் வணிகர்களைத் தவிர ஏனைய தலைவர்கள் குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தபடியால், அந்தச் சாதியைச் சேர்ந்தவர்களை தாம் கைப்பற்றிய கரையோரப் பகுதிகளில் பெரும் சிரமத்தோடு அழித்தொழித்தனர். இந்தியா பெரிய நாடாக இருந்தபடியால் தமக்கு விசுவாசமான



**சிங்கள முதலியார் குடும்பம் ஒன்று**

**Image Source - en.wikipedia.org**

மன்னர்களை பல பகுதிகளில் தேடிப்பிடித்து அவர்களின் சேவையைப் பெறமுடிந்தது. ஆனால் இலங்கை சிறிய நாடாக இருந்தபடியாலும் நீண்டகாலம் கண்டி இராச்சியம் காலனித்துவவாதிகளுக்கு எதிராக நிலைத்து நின்றதாலும் நிலைமை வித்தியாசமாக இருந்தது. சுதேசிகளை ஆள்வதற்கு தமக்கு நம்பிக்கையான ஒரு புதிய அணியினரை உருவாக்க வேண்டிய தேவை போர்த்துக்கேயருக்கு இருந்தது. தமது கிறிஸ்தவ மதத்தை பரப்புவதன் மூலம் அவ்வாறு விசுமான அணி ஒன்றினை உருவாக்கிக்கொள்ள அவர்கள் முயன்றனர்.

அது மாத்திரம் போதாது என்பதை விரைவில் உணர்ந்த அவர்கள் முதலியார் என்ற புதிய காலனி வகுப்பினரை உருவாக்கினர். அவர்கள் கடலோரப் பகுதிகளில் உள்ள பல்வேறு சாதிகளைச் சேர்ந்த பூர்வீக மக்களைப் பட்டியலிட்டு இலங்கையின் சாதிய முறையை தமக்கேற்ற விதத்தில் பயன்படுத்திக் கொண்டனர். டச்சுக்காரர்கள், போர்த்துக்கேயர்களின் இந்த நடைமுறையைத் தொடர்ந்தனர். இந்தப் புதிய வர்க்கம் ‘முதலி’ என்பதை ஒரு பரம்பரைப் பட்டமாகப் பயன்படுத்தியது. இருப்பினும், ஆங்கிலேயர்கள் முதலியார் வகுப்பை மற்றொரு அதிகார வர்க்கமாக வளர்த்தெடுத்தனர். முதலிப் பட்டம் என்பது உயர்மட்ட நியமனங்களாக மாற்றப்பட்டன. இந் நடைமுறை 1938 இல் இலங்கை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பூர்வீகத் துறை மூடப்படும்வரை மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்தது.

முதலியார் என்பது தென்னிந்தியத் தமிழில் 'செல்வத்தில் முதலாவது நபர்' என்பதைக் குறிக்கும் பட்டப்பெயரில் இருந்து உருவான சொல்லாகும் .

போர்த்துக்கேயர்களின் காலத்திலும் ஒல்லாந்தார் காலத்திலும் இவர்களுக்கு நிலம் மானியமாக வழங்கப்பட்டதுடன் உள்ளூர்வாசிகளின் உழைப்பை இலவசமாக - இராஜகாரிய வடிவத்தில் - பெறுகின்ற அதிகாரமும் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 18 ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரர் தமிழ் வேளாளர் சாதியிலிருந்து ஒரு சில முதலியார்களை நியமித்தனர். டச்சுக்காரர்களுக்குப் பின் வந்த ஆங்கிலேயர்கள் 19 ஆம் நூற்றாண்டில் பல சாதிகளைச் சேர்ந்த ஏராளமான முதலியார்களை நியமித்து, தமக்கு மிகுந்த விசுவாசத்துடன் சேவை செய்பவர்களாக மாற்றிக்கொண்டனர். அவர்களில் பெரும்பாலானோர் தங்களை சலாகம அல்லது கொவிகம சாதியைச் சேர்ந்தவர்கள் என பிரகடனப்படுத்திக் கொண்டனர். கண்டி இராச்சியம் 1815 இல் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்ட பின்னர் 1818 இல் வெடித்த வெல்லஸ்ஸ கலகத்தை அடுத்து அங்கும் பழைய உயர்சாதியினர் படுகொலை செய்யப்பட்டு அவர்களின் இடத்திற்கும் இவ்வாறே கொவிகம சாதியினர் நியமிக்கப்பட்டனர்.

## ஆங்கிலேயர் காலத்தில் நிலைபெற்ற கொவிகம வெள்ளாளர் சாதியினர்

ஆங்கிலேயர்கள் போர்க்குணமிக்க பாரம்பரிய உயரடுக்கிற்கு எதிராக தமக்கு அடிபணிந்து குற்றேவல் செய்யும் டி சேரம் குடும்பத்தை நம்பி வளர்த்தனர். டி சேரம் குடும்பத்திற்கு அதிக சலுகைகளும் முக்கிய நியமனங்களும் வழங்கப்பட்டன. அதனால் பிரிட்டிஷ் காலத்தில் மேலும் அது அதிகாரத்திலும் செல்வாக்கிலும் வளர்ந்தது. டச்சு - மலாய் வம்சாவளியைச் சேர்ந்த ஒரு 'டி சேரம்' குடும்பம் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெகுஜனங்களின் பிரதிநிதிகளாக தங்களைக் காட்டிக்கொண்டு அரசியல் செல்வாக்கு மிக்க குடும்பமாக வளர்ந்தது. பல உயர்மட்டக் குடும்பங்களை தன்னோடு இணைத்துக்கொண்டு அது தன்னை விரிவுபடுத்திக் கொண்டது. பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களை, தாம் சிங்கள மக்கள் தொகையில் பெரும் பிரிவினரான கொவிகம சாதியைச் சேர்ந்தவர்கள் என நம்பவைத்து தம்மைச் சிங்கள மயமாக்கிக் கொண்டனர். பரவலாகச் சிதறிக் கிடந்த கட்டமைக்கப்படாத



**பொன்னம்பலம் குமாரசுவாமி**

Image Source - ta.wikipedia.org

சிங்கள விவசாயச் சமூகத்தை இவர்கள் மூலம் நிர்வகிப்பது எளிது என்ற பிரமையை இதனால் தோற்றுவித்தனர். நாளடைவில் இந்தப் போலித் தோற்றமே யதார்த்தமாகிவிட்டது. இவர்களே கொவிகம சாதியை சிங்களச் சமூகத்தில் உயர் சாதியினராக அந்தஸ்தில் உயர்த்தினர்.

டி சேரம் குடும்பத்தின் முதலாவது குறிப்பிடத்தக்க மூதாதையர் 1731 – 1732 காலகட்டத்தில் கண்டிக்கு டச்சு தூதுக்குழுவோடு சென்ற ஒரு மொழிபெயர்ப்பாளர் ஆவார். இந்த ஆரம்பகால டி சேரம், தனது சமூக அந்தஸ்துக் காரணமாக பல்லக்கில் பயணம் செய்யத் தகுதியற்றிருந்ததால், 71 வயதாகிவிட்ட போதிலும், முழுப் பயணத்தையும் கால்நடையாகவே செய்து முடிக்க வேண்டியிருந்தது. மைட்லாண்ட் (1805 – 1811), கோர்டன் (1883 – 1890) ஆகிய ஆங்கில ஆள்பதிகளின் ஆட்சிக்காலத்தில், அவர்கள் தமது பிரித்தாளும் கொள்கையைத் திறம்படப் பயன்படுத்தி, சிங்கள உயரடுக்கினரிடையே நிலவிய சாதி விரோதத்தை ஆழப்படுத்தும் விதத்தில் 1897 இல் கொவிகம சாதியினருக்கு மாத்திரமே அனைத்துச் சுதேச தலைவர் நியமனங்களையும் மட்டுப்படுத்தினர். இதன் பின்னர் கொவிகம சாதியினரின் கரம் அரசியலில் ஓங்கத் தொடங்கியது. இவர்கள் திறமைசாலிகளாக இருப்பதை விடவும் ஆங்கிலேயர்களுக்கு விசுவாசிகளாகவும் பிடித்தமானவர்களாகவும் இருப்பது தகைமையாகக் கருதப்பட்டது.

**காலனித்துவத்துக்கு முன்னர் இலங்கைச் சிங்களவரிடையே அரசர் அல்லது சத்திரியர், பமுனு அல்லது உயர்குல மதகுருக்கள் – பிரதானிகள், வெலந்த அல்லது வணிகர் மற்றும் கொவிகம அல்லது வேளாளர் என நான்கு உயர் சாதியினர் இறங்கு வரிசையில் அதிகார உச்சியில் இருந்தனர்.**

உதாரணமாக, அன்றைய பிரபல நாளிதழான ‘தி எக்ஸாமினர்’ மார்ச் 30, 1870 அன்று வெளியிட்ட குறிப்பொன்றில், “சியான கோறளை மேற்கின் முஹந்திரமாக நியமிக்கப்பட்டவர் திறமையற்றவர். பிரிட்டிஷ் அரசாங்க அதிபரின் மனைவியான திருமதி லேயர்டிற்கு எட்டு ஆண்டுகள் வீட்டு வேலை செய்வதும், இறைச்சிக் கடையில் இருந்து அவருக்கு நல்ல இறைச்சி வாங்கி வருவதுமே அவருக்கிருக்கும் பணியாகும்.” எனக் குறிப்பிட்டிருந்தது.

19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் டி சேரம் குடும்பம் முதலியார்களாக வலுவான உறவினர்களின் வலையமைப்பைக் கொண்டிருந்தது. பின்னர், திருமண உறவுகளின் மூலம் இந்த வலையமைப்பு ஒபேசேகர, டயஸ், பண்டாரநாயக்க, இளங்ககோன், டி அல்விஸ், டி லிவேரா, பீரிஸ், சிறிவர்தன மற்றும் சேனநாயக்கா ஆகிய குடும்பங்களுக்கு விரிவடைந்தது. கொவிகம என்று அழைக்கப்படும் இந்த அங்கிலிக்கன் கிறிஸ்தவர்கள், சிங்களச் சமூகத்தின் பௌத்த கொவிகம பிரிவைச் சேர்ந்த முதலியார், கோறளை மற்றும் விதான (கிராம சேவகர்) ஆகிய பட்டங்களால் ஆங்கிலேயர்களால் பூர்வீகத் தலைவர்களாக நியமிக்கப்பட்டதன் மூலம், இவர்களது வலையமைப்பு மேலும் விரிவடைந்தது.

யாழ்ப்பாண இராச்சியத்தில் முன் – காலனித்துவ காலத்தில் இருந்தே முதலியார்கள் இருந்தனர். யாழ்ப்பாண இராச்சியம்

**யாழ்ப்பாண இராச்சியத்தில் முன் - காலனித்துவ காலத்தில் இருந்தே முதலியார்கள் இருந்தனர். யாழ்ப்பாண இராச்சியம் போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்ட பின்னர், முதலியார் பட்டம் பரம்பரைப் பெயராக நிலவியது.**

போர்த்துக்கேயர்களால் கைப்பற்றப்பட்ட பின்னர், முதலியார் பட்டம் பரம்பரைப் பெயராக நிலவியது. இலங்கையில் முக்கிய சிங்களக் குடும்பங்களைப் போலல்லாமல், தமிழ் முதலியார் குடும்பம் ஒருபோதும் கத்தோலிக்க மதம் அல்லது கிறிஸ்தவத்திற்கு மாறவில்லை. மாறாக இந்து - தமிழ் நிலைப்பாட்டைப் பின்பற்றியது. இதற்கு இவர்களுக்கிருந்த இந்தியப் பண்பாட்டுத் தொடர்பே காரணம்.

கொவிகம சாதியின் எழுச்சிக்கு டி சேரம் குடும்பம் காரணமாக இருந்ததைப் போலவே, 20 ஆம் நூற்றாண்டின் தமிழ் வெள்ளாள சாதியின் எழுச்சிக்கு பொன்னம்பலம் - குமாரசுவாமி குடும்பம் காரணமாக இருந்தது. பருத்தித்துறையில் மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்குவதற்காக ஆளுநர் நோர்த் தொடங்கிய செமினரியில் குமாரசுவாமி (1783-1836) சேர்ந்ததில் இருந்து பொன்னம்பலம் - குமாரசுவாமி குடும்பத்தின் எழுச்சி தொடங்குகிறது. குமாரசுவாமி 1805 தொடக்கம் தனது உடல்நிலை பாதிக்கப்படும் வரை மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றினார்.

26 வயதில் முதலியார் பதவியை பரிசாகப் பெற்ற இவர் அதியுயர் அரச நியமனம் பெற்ற யாழ்ப்பாணத் தமிழரானார். 1815 இல் கண்டிய மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் பிடிபட்டபோது ஒரு தமிழ் - ஆங்கில மொழிபெயர்ப்பாளராக முக்கிய பங்கு வகித்தார். அவர் வெள்ளாளர் சாதியைச் சேர்ந்தவர் அல்ல என்ற கருத்தும் உள்ளது.

அவரது மூன்று மகன்மார்களான பொன்னம்பலம் குமாரசுவாமி (1849 - 1905), பொன்னம்பலம் இராமநாதன் (1851 - 1930) மற்றும் பொன்னம்பலம் அருணாசலம் (1853 - 1926) ஆகியோர் இலங்கை அரசியலில் வகித்த பாத்திரத்தை இங்கு விளக்க வேண்டியதில்லை.

## உசாத்துணை


1. *De Silva, K. M.* **1981** *A History of Sri Lanka, Delhi: Oxford University Press.*
2. *Jayawardena, Kumari* **2001** *Nobodies to Somebod ies. The Rise of the Colonial Bourgeoisie in Sri Lanka, New Delhi: Leftword Book.*
3. *Jiggins, Janice* **1979** *Caste and Family in the Politics of the Sinhalese, Cambridge University Press.*
4. *JRASCB The Journal of the Royal Asiatic Society Ceylon Branch XXI* **1909** *No.* **62.**
5. *Malalgoda, Kitsiri* **1973** *"The BuddhistChristian Confrontation in Ceylon,"Social Compass* **20: 171-200.**
6. **6.** *Peebles Patrick* **1995** *Social Change in Nineteenth Century Ceylon.*
7. *Roberts, Michael* **1973** *"Elites and Elite Formation in Ceylon, c.* **1830-1930** *in History of Ceylon, Vol. III.*
8. *Roberts, Michael* **1982** *Caste Conflict and Elite Formation: The Rise of a Kar va Elite in Sri Lanka,* **1500-1931,** *Cambridge University Press.*
9. *Vythilingam M.* **1971** *The life of Sir Ponnambal am Ramanathan Volume I.*
10. *Twentieth Century Impressions of Ceylon: Its History, People, Commerce, Industries and Resourc es By A.W. Wright, Asian Educational Services,In dia; New Ed edition* **(15** *Dec* **2007).**

*2009 இல், போரின் முடிவில், போர் தந்த சிதைவுளுக்கு நாம் முகம் கொடுத்தோம். இதில் மிக முக்கியமானது போர் சிதைத்த எமது நிறுவன நினைவு வளம் (INSTITUTIONAL MEMORY) ஆகும். மனித இழப்புகளுக்கு அடுத்ததாக, எம்மால் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்வும், சிதைவும் பிடுங்கி எறியப்பட்ட பூசணிக் கொடிகள் போல எங்கும் பரவிக் கிடக்கிறது. நிறுவனங்களின் சிதைவுகளில் மிக முக்கியமானதும், மிகவும் பாதிக்கப்பட்டதுமாக அமைவது கூட்டுறவு இயக்கமாகும்; கூட்டுறவுத் துறையின் வெற்றிக்கு அச்சாணியாக இருந்த கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களும் அதனோடு இணைந்தே அழிவுக்குள்ளாகின. இச் சிதைவுகளைக் கண்டறிந்து மீள் உருவாக்கம் செய்ய வேண்டிய காலமிது. அதன் பொருட்டு, கூட்டுறவு இயக்கம் – கூட்டுறவின் கட்டமைப்புக்கள் மிக முக்கிய அசைவியக்கமாக மாற முடியுமா? போரின் பின்னரான மீள் கட்டுமானத் திட்டங்களுக்கும் நிலையான அபிவிருத்திக்கும் கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் யாது? எங்கிருந்து தொடங்குவது? போரின் பின்னரான சிதைவுகள், அதன் விளைவாக விளைந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு அதனால் உதவ முடியுமா? ஆகிய வினாக்களை இத் தொடர் முன்வைத்து ஆராய்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம் உட்பட, இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கூட்டுறவுத் துறையினால் ஒரு வலுவான மாற்றுப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு சிறப்பாக உதவ முடியும். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி சார் விடயங்களை மையமிட்டு காத்திரமான விடயங்களை தர்க்கத்துடன் கலந்துரையாடி, சிந்தனைக்கான முன்மொழிவுகளை தரும் இத் தொடர் 'கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் : போரின் பின்னரான மீள் கட்டுமானமும் அபிவிருத்தியும்' எனும் பெயரில் அமைகிறது.*

# உள்ளிருந்து உணர்தலும் சமகால நெருக்கடிகளும்: மட்டக்களப்பு மாவட்டத்தின் கூட்டுறவுக் கால்நடைப் பண்ணையாளர்களின் அனுபவங்கள்




● வை. ஜெயமுருகன்

சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக 'இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை' என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் 'M.A IN PEACE STUDY' ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (ROTARY PEACE FELLOW) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.


1977 இல் திறந்த பொருளாதாரம் அறிமுகமான போது பலர் 'சந்தைப் பொருளாதாரம்' தான் இலங்கையின் பிரகாசமான எதிர்காலத்திற்கான வழி எனக் கருதியதுண்டு. அப்போதைய நெருக்கடியில் அதற்கான ஒரு தேவை இருந்தது. திறந்த பொருளாதாரம் நன்மைகளைக் கொண்டு வந்தாலும் அது பல அதிர்வுகளையும் தந்தது. கூட்டுறவுத் துறை அதனால் மிகவும் நசுக்கப்பட்டது. அரசு கூட்டுறவுத் துறையை ஒரு விளிம்பு நிலைக்கு கொண்டுவந்தது. திறந்த பொருளாதார சுனாமி கூட்டுறவின் கட்டமைப்புகளை சிதைத்தது. ஆனால், இந்தியாவில், இதற்கு மாறாக நடந்தது. பி.வி. நரசிம்மராவ் 1991 இல் இந்தியாவின் பிரதமராக வந்து புதிய பொருளாதாரக் கதவுகளைத் திறக்கும் முன், கூட்டுறவின் பாதுகாப்புப் பற்றி அதிகம் யோசித்தார். கூட்டுறவின் நன்மை கருதி பல முன்னெடுப்புகளைச் செய்தார். கூட்டுறவின் கட்டடமைப்புகளை பலப்படுத்த நிதியீட்டினார். 1991 இற்குப் பிறகுதான் அமுல் நிறுவனம் நவீன வளர்ச்சி கண்டது.



கட்டுரையாளர், கால்நடைப் பண்ணையாளர்களைச் சந்தித்த போது

கூட்டுறவு மீதான தாக்கங்கள், அதன் தந்திரோபாய மூலோபாயத் திட்டங்கள் பற்றிய அக்கறையின்மை தான் 1980 களின் பின்பு இலங்கையில் கூட்டுறவுக் கலாசாரம் கரைந்து போக வழிவகுத்தன. காலச் சூழ்நிலைக்கு இசைவான உள்ளக யதார்த்தக் கணக்கெடுப்பு இன்மை, முனைப்பு மிக்க தயார் நிலை இன்மை ஆகியன கூட்டுறவுக்கு பாதகமாக அமைந்தன. போரின் பின்பான காலங்களில் வடக்கு - கிழக்கின் கூட்டுறவின் மந்த நிலைக்கு, தந்திரோபாய மூலோபாயத் திட்டங்கள் பற்றிய அக்கறையின்மை முக்கிய காரணமானது.

பின்வரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதில் கூட்டுறவு துறைசார் அமைப்புகளின் பங்கு தனித்துவமானது: 1. போருக்குப் பிந்தைய சூழ்நிலை மற்றும் புனரமைப்பு வேலைத்திட்டங்கள்; 2. சமூக, பொருளாதார மற்றும் நிதி ஆதாரங்களின் வீழ்ச்சி மற்றும் அது சார்ந்த சூழ்நிலை; 3. இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகள். கூட்டுறவுத் துறையானது ஒரு வலுவான, தவிர்க்க முடியாத ஒரு சமூகக் கட்டமைப்பு. மேலும் வேலைவாய்ப்புச் சவால்களுக்கு முகம் கொடுப்பதிலும் கூட்டுறவின் பங்கு முக்கியமானது.

கூட்டுறவு ஒரு வலுவான, சக்திமிக்க கட்டமைப்பாக துளிர முடியாமைக்கு பல காரணங்கள் உண்டு. கூட்டுறவு நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பொது உறுப்பினர்கள் மத்தியில் அவநம்பிக்கை நிலவுதல் அவற்றுள் மிக முக்கியமானது. தலைமைக்கும் பொது உறுப்பினர்களுக்கும் இடையே வெளிப்படைத்தன்மை இருப்பதில்லை. தலைமைத்துவம், நிர்வாக மற்றும் நிதி மேலாண்மை திறன்களின் பற்றாக்குறை தொடர்ந்து நீடிக்கிறது.

ஒரு வருடத்திற்கு முன் (மார்ச் - 2023) கூட்டுறவு வளவாளராக பல கூட்டுறவு பயில்வு அமர்வுகளில் பங்கு பற்றினேன். கூட்டுறவில் ஆர்வம் மிக்க இளம் கூட்டுறவாளர்களின் மத்தியில் ஆராய்ந்த தலைப்புகளுக்கு 100 பங்கேற்பாளர்கள் தந்த மதிப்பீடுகள், கருத்துக் கணிப்புகள் பின்வருமாறு: (*Source : Capacity Building Training on Promoting the Cooperative Culture, cooperative Business Models and Systems, FEDERATION OF INSTITUTIONS FOR RURAL MANAGEMENT, Vavuniya, February 2023*).

இது மிகவும் திட்டமிட்ட ஆய்வுக்குரிய முறைமைகள் பின்பற்றப்பட்ட கருத்துக்கணிப்பு இல்லை எனினும் இதில் வெளிப்படும் இளம் கூட்டுறவாளர்களின் மனநிலைகள் புறக்கணிக்க முடியாதவை. கூட்டுறவு உறுப்பினர்களிடையே பயனுள்ள தொடர்பு இல்லாமை, கூட்டுறவு வணிகத்தில் தொழில் முனைவு இல்லாமை என்பன இதில் முக்கியமாக அவதானிக்கக்கூடிய விடயங்கள் ஆகும்.

உள்ளூர் உயரடுக்கின் கட்டுப்பாடு பற்றியும் இங்கே சிந்திக்க வேண்டியுள்ளது. இவ் ஆய்வில் 90% பெண்கள் (43 மொத்தப் பங்காளர்கள்) உள்ளூர் உயரடுக்கின் கட்டுப்பாடு பற்றிய கரிசனை கொண்டவர்களாக இருந்தனர். தலைப்புகள், பெரும் புள்ளிகளின் அளவுகள் என்பன அண்ணளவானதாக இருந்தாலும், கூட்டுறவு அமைப்புகளின் வளர்ந்துவரும் உள்ளகப் பிரச்சினைகளின் ஒரு குறுக்குவெட்டை இங்கு படம் பிடிக்கலாம்.




*Research Conducted on **23** February **2023**, Sarvodaya Resource Centre, Ariyalai, Jaffna.*

## போரிற்கு முன்பும் பின்பும் : கூட்டுறவாளர்களின் காலத்துயர்கள்

2009 யுத்த நிறைவின் பின்னரான மீள் கட்டுமான பணிகள் இன்னமும்கூட முற்றிலுமாக நிறைவடையாத நிலையில் பல கூட்டுறவு அமைப்புகள் உள்ளன. போரின் பின்னரான காலம் கூட்டுறவின் துளிர்வுக்கு வித்திடும் என நம்பப்பட்ட போதும், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் கூட்டுறவுத்துறையின் தற்போதைய நிலை இன்னும் விளிம்பு நிலைக்குச் சென்றுள்ளது. பல கூட்டுறவுச் சங்கங்கள் மீளப் புதுப்பிக்கப்படவில்லை. குறிப்பாக கிழக்கு மாகாணங்களின் கூட்டுறவுத் துறை இன்னும் போரின் அதிர்வுகளிலிருந்து மீளவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் இன்றைய கைவிடப்பட்ட நிலை மிகவும் கரிசனைக்குரியது. 138 சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றிணைவுடன் ஆரம்பிக்கப்பட்ட சமாஜம் (1987 , ஜனவரி 27 , பதிவு இலக்கம் - 351) 32 நிரந்தரப் பணியாளர்களுடன் நடைபோட்டு பல கடனுதவித் திட்டங்களை மிகச் சிறப்பாக முன்னெடுத்தது. வீட்டுக் கடனுதவி, விவசாயக் கடனுதவி, சேமிப்பு மற்றும் நிலையான அபிவிருத்தி முன்னெடுப்புகளை அமுலாக்கி பலமான ஒரு அமைப்பாக விளங்கியது. இன்று அது, நிர்வாகக் கட்டமைப்புக் குலைந்து, வங்குரோத்து நிலைக்கு வந்துள்ளது. மிக அண்மையில் தான் மீட்சி அமைப்பும் 'CSNHA' உம் இணைந்து அதனை மீள ஆரம்பிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தற்போதைய கணக்கின்படி 40 கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கினாலும், 10 சங்கங்கள் தான் முறையாக இயங்குகின்றன. மிகவும் அதிர்ச்சியான விடயம் யாதெனில், 117 சங்கங்கள் போர்க் காலங்களில் முற்றாகக்

கரைந்து போயின. போர் முடிந்து 15 வருடங்கள் கடந்தும், 117 சங்கங்களின் மீள் கட்டமைப்பு கவனத்தில் எடுக்கப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதாரம், விவசாயம் மற்றும் மீன்பிடியை நம்பியே உள்ளது. இம் மாவட்டத்தில் 23,792 விவசாயக் குடும்பங்களும், சுமார் 22,860 மீனவக் குடும்பங்களும் உள்ளன. சுமார் 77,389.90 ஏக்கர் நெல் நிலமும், 5,600 ஏக்கர் நிலப்பரப்பும், தென்னைச் சாகுபடி உட்பட வீட்டுத் தோட்டங்களும் உள்ளன. இம் மாவட்டத்தின் கரையோரக் கிராமங்கள் வெங்காயம், மிளகாய், வெற்றிலை மற்றும் மரக்கறிப் பயிர்ச் செய்கைகளுக்குப் பெயர் பெற்றவை. குளங்கள், நீண்ட கடல் கடற்கரை, இடைவெளியில் பொருத்தமான விரிகுடாக்கள், ஆறுகள், முகத்துவாரங்கள் மற்றும் நீர்த் துளைகள் ஆகியவை மீன்பிடித் தொழிலுக்குப் போதுமான வாய்ப்பை வழங்குகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 13,907 கடல் மீனவர்களும், 11,551 நன்னீர் மீனவர்களும் காணப்படுகின்றனர். மாடுகள், ஆடுகள், எருமைகள், கோழிகள் உள்ளிட்ட விலங்குகளும் இம் மாவட்டத்தின் பொருளாதாரத்திற்கு முக்கியமானவை. இம் மாவட்டத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான பால் உற்பத்தி 5,342,695 லீற்றராக இருந்தது. நெசவு, அரிசி அரைத்தல், மட்பாண்டங்கள் செய்தல், பாய் நெசவு, தென்னை நார் மற்றும் செங்கல் உற்பத்தி ஆகியவை இம் மாவட்டத்தில் முன்னணி சிறு தொழில்கள் ஆகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல் நிலப்பிரச்சினை ஒரு எரியும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதன் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் கால்நடைக் கூட்டுறவாளர்களே. மேய்ச்சல் நிலப்பிரச்சினை காரணமாக கால்நடைகள் இறப்பது உள்ளூர்ப் பொருளாதாரத்தை சிதைக்கிறது. இது கால்நடைக் கூட்டுறவுச் சங்கங்களின் சிதைவும் ஆகும்.

## மட்டக்களப்பு கால்நடை பண்ணையாளர்கள்/ கூட்டுறவாளர்களின் பிரச்சினைகள்

மட்டக்களப்பு - பொலநறுவை எல்லைப் பகுதியான தமிழ் பேசும் மக்களுக்கு சொந்தமான மயிலந்தனைமடு, மாதந்தனை மேய்ச்சல் தரைப் பகுதிகள் சிங்கள மயப்படுத்தலுக்காக திட்டமிடப்பட்ட மாதுறு ஓயா வலதுகரை திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டு வருகிறது. வனவளத் திணைக்களம், மகாவலி அபிவிருத்திச் சபை போன்ற அனைத்து கட்டமைப்புகளும் இங்குள்ள மேய்ச்சல் தரைக் காணிகளை அபகரிப்பதற்கான நடவடிக்கையில் உறுதியாக உள்ளன.



மட்டக்களப்பு மேய்ச்சல் தரைப் பிரச்சினை குறித்த போராட்டம்
Image Source : english.theleader.lk

மட்டக்களப்பு கால்நடைக் கூட்டுறவுப் பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் நிலத்தில் வெளியாட்கள் அத்துமீறிச் செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இதனால் அவர்களின் மாடுகள் கொல்லப்பட்டன; நிலம் தீக்கிரையாக்கப்பட்டது. சுமார் 500,000 கால்நடைகள் மற்றும் எருமைகளை மேய்ச்சலுக்கு பாரம்பரியமாக பயன்படுத்திய நிலத்தை பிற மாவட்ட விவசாயிகள்



ஆக்கிரமித்துள்ளதாக பாற் பண்ணையாளர்கள் கூறுகின்றனர். இப்பகுதி மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ளதால் விவசாயிகள் தமது உரிமைகளுக்காக போராட்டம் நடத்துகின்றனர். பெரும்பாலான பாற் பண்ணையாளர்கள், தங்கள் கால்நடைகளின் நலனுக்காக போராடும் கூட்டுறவு அமைப்புகளின் போராட்டம் இம் மாவட்ட மக்களின் போராட்டமாக இன்று உருமாறியுள்ளது.

விளைநிலங்கள் அருகி வருவதல் காரணமாக இப்பகுதியில் மோதல் ஏற்படுகிறது. இது கால்நடையாளர்களுக்கும் பாரம்பரிய விவசாயிகளுக்கும் இடையே பதட்டத்தை அதிகரிக்க வழிவகுக்கிறது. கால்நடைப் பண்ணையாளர்கள், விளைநிலங்களை விரிவுபடுத்துவதற்குத் ஒரு தடையாகப் பார்க்கப்படுகின்றனர்.

பின்வருவன கூட்டுறவு விவசாயிகளின் கோரிக்கைகளாக அமைகின்றன:

1. கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்கள் மற்றும் நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.
2. அண்டை விவசாயிகளின் துன்புறுத்தல் மற்றும் வன்முறையில் இருந்து பாதுகாப்புக் கிடைக்க வேண்டும்.
3. காணித் தகராறுகளில் அரசியற் தலையீடு நீக்கப்பட வேண்டும்.
4. நிலையான விவசாய முறைகளுக்கு ஆதரவு கிடைக்க வேண்டும்.

காலநிலை மாற்றத்தால் நிகழும் பருவநிலை மாற்றத்தாலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கால்நடை வளர்ப்போர் பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ளனர். நீடித்த வறட்சி மற்றும் கணிக்க முடியாத மழைப் பொழிவு ஆகியவை கால்நடைகளுக்கு புதிய மேய்ச்சல் நிலங்கள் மற்றும் நீர் ஆதாரங்கள் கிடைப்பதைக் குறைத்துள்ளன. இதன் விளைவாக, கால்நடைகள் ஊட்டச்சத்து தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் சவால்களை எதிர்கொள்கின்றன. உணவுப் பற்றாக்குறையால் பால் உற்பத்தி குறைவதால், கூட்டுறவு கால்நடை வளர்ப்போர் அன்றாட வாழ்க்கையை வாழச் சிரமப்படுகின்றனர்.

கீழே தரப்படும் தரவுகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் கால்நடை வளர்ப்புத் தொடர்பான பிரச்சினைகளையும், அதன் வழியான பொருளாதார வீழ்ச்சியையும் தெளிவாகப் படமிடுகிறது.

| கால்நடைக் கூட்டுறவு அமைப்புகள் | மொத்தக் கால்நடைகள் | இறப்பு – பசுக்கள் | இறப்பு – எருமைகள் | பொருளாதாரப் பெறுமதி |
|---|---|---|---|---|
| கால்நடை விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம், இலுப்பையடி | 8,538 | 1674 | 525 | 904,000 |
| கால்நடைப் பண்ணையாளர்கள் கூட்டுறவுச் சங்கம், கொம்மாந்துறை | 9,744 | 3800 | 1170 | 99,400,000 |
| கால்நடைப் பண்ணையாளர்கள் கூட்டுறவுச் சங்கம், மயிலந்தனைமடு | 22,731 | 3721 | 781 | 90,040,000 |
| கால்நடைப் பண்ணையாளர்கள் கூட்டுறவுச் சங்கம், பன்சேனை | 10,961 | 1961 | 572 | 50,660,000 |
| கால்நடைப் பண்ணையாளர்கள் கூட்டுறவுச் சங்கம், ஏறாவூர் | 3,228 | 694 | 170 | 159,940,000 |
| மொத்தம் | **65,202** | **11850** | **3218** | **249,140,000** |

சுதந்திரத்தின் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதில் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்காற்றின. போருக்கு முந்தைய காலத்தில் உள்ளூர் உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் வேலை உருவாக்கம் ஆகியவற்றை கணிசமாக மேம்படுத்தின. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள கூட்டுறவுகள் பிராந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 45% இற்கும் அதிகமான பங்களிப்பை வழங்கின. இதில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பங்கு கணிசமானது.

போரின் விளைவாக, கோறளைப்பற்று வடக்கு (வாகரை), கோறளைப்பற்று தெற்கு (கிரான்) உட்பட மாவட்டத்தின் புவியியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் பின்தங்கிய பகுதிகளின் கூட்டுறவுச் சொத்துகள் பெருமளவு அழிந்தன. மக்களின் இடப்பெயர்வும் கூட்டுறவின் செயலிழப்பிற்குப் பங்காற்றியது. மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு மற்றும் பொரதீவுப்பற்று பகுதிகளில் கூட்டுறவின் அசைவியக்கம் முற்றாக முடங்கியது; தற்போதும் அதே நிலையே நீடிக்கிறது எனலாம்.

போர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, கூட்டுறவுத் துறையானது அதன் கடந்த காலத்தை புதுப்பித்து, நிகழ்காலத்தில் நேர்மறையான தாக்கத்தை கொண்டுவரலாம் என கருதப்பட்டாலும் நடைமுறையில் ஒரு அசைவற்ற போக்குத்தான் நீடிக்கிறது. சமத்துவம் மற்றும் கண்ணியத்துடன் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவும் துடிப்பான வலைப் பின்னல்களை உருவாக்கி கூட்டுறவுத் துறையை அபிவிருத்தி செய்யலாம் என்ற எண்ணப்பாடுகள் இருந்தாலும் தற்போதைய சூழ்நிலைகள் மிகவும் முடங்கிய தன்மையையே காட்டுகின்றன. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நிலப்பரப்பான மட்டக்களப்பு, அதன் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு கூட்டுறவுத் துறையை கணிசமாக நம்பியுள்ளது. எவ்வாறாயினும், கூட்டுறவுகள் தங்கள் முழுத் திறனை அடையவும், மாவட்டத்தின் பொருளாதாரத் திறனைக் கட்டவிழ்த்து விடவும் முறையான மற்றும் கவனமாகத் திட்டமிடப்பட்ட தலையீடுகள் அவசியம் தேவை. ஆனால், அதற்குரிய முன்னெடுப்புகள் பூச்சியமாகவே உள்ளன.

கூட்டுறவு அமைப்புகளின் கட்டமைப்புச் செயற்பாட்டுத் திறன் அபிவிருத்தி என்பது ஒரு சிக்கல் மிக்க, பல அக - புற சூழ்நிலைகளால் திரண்ட ஒரு கள நிலையில் கவனம் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இதற்காக, கூட்டுறவுத் துறையின் தற்போதைய நிலை பற்றிய முழுமையான ஒரு ஆய்வு தேவைப்படுகிறது. இம் முழுமையான

பார்வையானது தற்போதைய அரசியல், பொருளாதார கள நிலைகளையும் உள்ளடக்க வேண்டும். கூட்டுறவில் இளம் சந்ததியினரின் பங்களிப்பு முழுமையாக அமைதல் வேண்டும். அதற்கு நிறுவனங்கள் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும்.

கிழக்கு மாகாணத்தின் கூட்டுறவுத் துறை முற்றாகச் சிதைந்து போகும் நிலைக்குத் தள்ளப்படுள்ளது. இது ஒரு கவனிக்கப்படாத துயரம். கால்நடைப் பண்ணையாளர்கள் மீதான கவனம், கூட்டுறவுத் துறை பற்றிய கவனமாக இல்லை. இம் மாகாணத்தின் கூட்டுறவுப் பண்ணையாளர்களின் பிரச்சினை, நில இழப்பு என்னும் பார்வையிலிருந்து அகன்று செல்ல வேண்டிய தேவையுள்ளது.

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் கூட்டுறவு மீட்சிக்கு ஒரு நீண்ட கால 'மினி மார்ஷல்' தேவை. போர் எல்லாவற்றையும் கரைத்து, முடக்கி விட்டது. நிதி வழங்குவது, ஒரு சில பயிற்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது என்பன சில சங்கங்களின் தேவைகளுக்குத் தீனி போடலாம். ஆனால் அவை கூட்டுறவின் முழுமையான பலத்தைக் கொண்டுவராது. சமகால கள நெருக்கடிகள் உள்ளிருந்து உணரப்பட வேண்டும்; மாவட்ட ரீதியாகப் பார்க்கப்பட வேண்டும்; ஆய்வு ரீதியாக ஆராயப்பட வேண்டும். இம் முன்னெடுப்புகள் கூட்டுறவு அமைப்புகளின் கட்டமைப்புச் செயற்பாட்டுத் திறன் அபிவிருத்திக்கு உதவியாக அமையும்.

### உசாத்துணை


1. *Batticalao District Profile, 2020, Batticaloa District Planning Division.*
2. *Batticaloa Dairy Farmers Face Violence and Threats over Grazing Land, https://groundviews.org/2023/10/09/batticaloadairyfarmersfaceviolenceandthreatsovergrazingland/; accessed on 23 August 2024.*
3. *Cattle farmers' agitation continues in Batti, https://www.themorning.lk/articles/uJvwQ66Q8pfRzxbVQUcc, Accessed 23 August 2024.*
4. *Data from the Batticaloa District ACCD officer, Batticaloa 2024. Profile of Batticaloa Thrift and Credit Cooperative Societies Union; accessed on August 20024.*
5. *Eastern Province Thrift and Credit Coopertive Societies , Initial Assessment Report , 2023, Supported by CSNHA, Netherlands.*
6. *Farmers furry rages, Mailaththamadu dairy farmers want speedy solution to grazing land issue, https://www.dailymirror.lk/print/newsfeatures/Farmersfurryrages/131280491*
7. *Field Reports, Consultations with the Dairy farmers in Chenkalady.*
8. *Impact of Environmental Factors on Trend of Milk Production: A Study Based in Batticaloa District, Sri Lanka , Santhirakumar and Narmilan. Department of Economics and Statistics, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka . Department of Biosystems Technology, Faculty of Technology, South Eastern University of SriLanka. https://www.researchgate.net/publication/344283572_Impact_of_Environmental_Factors_on_Trend_of_Milk_Production_A_Study_Based_in_Batticaloa_District_Sri_Lanka.*
9. *Injunction order against dairy farmers in Batticaloa, Sunday Times, 7 October 2023, https://sundaytimes.lk/online/newsonline/Injunctionorderagainstdairyfarmersin Batticaloa/21143467.*
10. *Training Report, Capacity Building Training on Promoting the Cooperative Culture, cooperative Business Models and Systems, FEDERATION OF INSTITUTIONS FOR RURAL MANAGEMENT, Vavuniya, February 2023).*

ஈழநாடானது தமிழகத்திலிருந்து கடலால் பிரிக்கப்பட்ட நாடாக அமைகின்ற போதும், பண்டைக்காலந்தொட்டே தமிழர்களின் மரபுத் தொடர்ச்சியான பண்பாட்டுக் கூறுபாடுகளை உடைய மண்டலமாக காணப்பட்டு வருகிறது. தொல்காப்பியம் சுட்டும் பல இலக்கண விதிகள் இன்று தமிழகத்தில் வழக்கில் இல்லாத போதும் ஈழத்தில் அவை வழங்கப்பட்டு வருகின்றன. பண்பாட்டு வாழ்வியல்களின் அடிப்படையிலும் பண்டைத் தமிழரின் மரபுகள் பலவற்றை ஈழத்தில் காணவியலும். இந்நிலையின் தொடர்ச்சியாகவே பண்டைத் தமிழரின் சமயப் பண்பாட்டு மரபுகளையும் கருதலாம். அந்த வகையில், வடக்கே பருத்தித்துறைமுதல் தெற்கே தேவேந்திரமுனைவரை உள்ள தமிழ் மக்களிடமும், சிங்கள மக்களிடமும் காணப்படும் வழிபாட்டு முறைகளில் பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் வழிபாட்டு மரபுகளை ஆய்வுப் பரப்பாகக் கொண்டு பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் காணப்படும் வழிபாட்டு மரபுகளில் இலங்கையில் இன்றளவும் வழங்கி வருகின்ற மரபுத் தொடர்ச்சியினை ஆராய்வதே 'இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள்' எனும் இத் தொடரின் நோக்கமாகும். இத் தொடர், இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள் இன்றளவும் தொடர்கின்றன என்னும் கருதுகோளினை அடையும்.



# கண்ணகி வழிபாட்டின் பரவலாக்கம்




Image Source - bookstaa.com

ஜெகநாதன் அரங்கராஜ்

முனைவர் ஜெ. அரங்கராஜ் யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்தவர். இவர் பழந்தமிழ் இலக்கியத் துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். மேலும் தமிழ் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம் முதலான துறைகளில் தமது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். சிங்கப்பூர்த் தமிழ்ப் பாடநூற்கள் குறித்தும் பண்டைத் தமிழர்களின் அயலகத் தொடர்புகள் குறித்தும் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். 'செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கிய மேற்கோள் அடைவு' என்னும் இவரது நூல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் ஈழம், தமிழகம் என இரண்டு தலங்களிலும் ஆய்வு மேற்கொண்டுள்ள ஆய்வாளராக இவர் திகழ்கின்றார்.

சிலப்பதிகார காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே கண்ணகி வழிபாடானது தமிழுலகெங்கும் பரவி இருந்ததெனலாம். இதனை "ஒருமா முலை இழந்த திருமா உண்ணி" என்னும் நற்றிணைப் பாடலடிக் குறிப்பின் வழியும் உணரலாம். சிலப்பதிகாரத்தின் பல பகுதிகளில் இளங்கோவடிகள் கண்ணகி வழிபாடு பல்லாண்டுகளாக இருந்து வருகின்றமைக்கான சான்றுகளைக் குறிப்பாக வழங்கிச் சென்றுள்ளமையினைக் காணலாம். கண்ணகி வழிபாடானது உலகம் முழுமையும் பரவிய நிலையினை,

**அருஞ்சிறை நீங்கிய வாரிய மன்னரும்**
**பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னருங்**
**குடகக் கொங்கரு மாளுவ வேந்தருங்**
**கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்**

என்னும் அடிகளின் வழி சிலப்பதிகாரம் காட்டிச் செல்கின்றது. அவ்வகையில் கண்ணகி வழிபாடானது தமிழகத்திலும் ஈழத்திலும் எவ்வகையான பாங்குகளில் திகழ்கின்றது என்பதனைக் குறித்துக் காணலாம்.

## கொங்கு நாட்டில் கண்ணகி வழிபாடு

‘கொங்கச் செல்வி’ என சிலப்பதிகாரத்தில் கண்ணகி சுட்டப்படுகின்றமையினை நோக்குகின்றபோது பண்டுதொட்டே கொங்கில் கண்ணகி வழிபாடானது செல்லியம்மன் வழிபாடாகவே வழங்கி வரப்பெற்ற தெனலாம். இதற்கான சான்றுகள் பல இன்றளவும் கொங்கு நாட்டுப் பகுதிகளில் காணக்கிடைக்கின்றன. மூன்று மன்னர்களாலும் போற்றி நிறுவப்பட்ட கோயிலாக அமைவது மதுக்கரையில் அமைந்த செல்லியம்மன் கோயிலாகும். இம் மதுக்கரை எனும் தலம் சேர, சோழ, பாண்டிய நாடுகளுக்கு எல்லையாக அமைந்த பகுதி என்று கூறுவர். இதன்வழி கண்ணகி வழிபாடானது தமிழ் உலகு மூன்றினுக்கும் பொதுவாக எடுத்துச் செல்லப்பட்டமையினை அறியலாம். இதனது தல வரலாற்றில் இவ்வரலாறுகள் குறித்த தொன்மங்கள் இன்றும் காணக்கூடியதாக உள்ளன. மதுக்கரையில் உள்ள இச் செல்லியம்மன் கோவில் இன்று மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலென அழைக்கப்படுகின்றது. செல்லியம்மன் எனும் கண்ணகி வழிபாடு செல்லாண்டியம்மன் எனும் வழிபாடாக வழங்கி வருகின்றது. அத்தோடு கொங்கு மண்டல பெண் தெய்வக் கதைகளில் அப்பெண் தெய்வங்களின் கணவன்மார் கொல்லப்பட்டதான தொன்மங்களே இன்றளவும் கூறப்பட்டு வருகின்றமையினைக் காணவியலும். கொங்குக் குடிகளுக்குள் காணப்படும் சமூகப் பழக்கவழக்கங்கள் பலவற்றிலும் கண்ணகி வழிபாட்டின் எச்சங்களை இன்றளவும் காணவியலும். சான்றாக கொங்கு வெள்ளாளர்களின் வாழ்வியற் சடங்குகளில் ஒன்றாக அமைவது ‘எழுதிங்கள்’ என்னும் சடங்காகும். இச்சடங்கானது திருமணமான மங்கலப் பெண்டிர் தங்களது பெண் மகவு பருவமடைவதற்கு முன் மேற்கொள்கின்ற சடங்காக அமைகின்றது. இச்சடங்கிற்கும் கண்ணகி வழிபாட்டிற்குமான தொடர்புகள் ஒரே தன்மையானதாக இருப்பதைக் காணலாம்.




திருச்செங்கோடு கோவில்
Image Source - www.maalaimalar.com

இச்சடங்கினை மேற்கொள்ளும் பெண், பல வழிபாடுகளை மேற்கொண்டு ஒரு அச்சு வெல்லக்கட்டியினை இடித்த பச்சரிசி மாவினுள் வைத்து, அம் மாவினை இட்டலிப்பானை போன்ற பானையில் வைத்து அம் மாவு வேகும் மட்டும் பல மணி நேரம் அவிப்பாள். பிறகு அம் மாவினை எடுத்து வந்து வீட்டின் நிலையில் வைப்பாள். அப்போது எழுதிங்கள் நோன்பை மேற்கொள்ளும் பெண், அம் மாவுக்கட்டியை கோடாலியாற் பிளக்க, வெல்லம் கரையாமலும் உடையாமலும் இருந்தால், அவள் குடும்பம் தழைக்கும் என்றும், அவள் குலப்பெண்கள் கற்பில் சிறந்தோராக இருப்பர் என்றும் நம்புவது இன்றளவும் உள்ளது. இதனை அடியொற்றிப் பார்க்கின்றபோது இதனைக் கண்ணகி வழிபாட்டின் ஓர் எச்சமாகவே கொள்ள வேண்டும். கண்ணகி தன் கற்பு நிலையினைத் தன் சிலம்பினை உடைத்து மெய்ப்பித்தமை போல் இந்நிகழ்வும் அமைந்துள்ளது. நிலவு வணக்கமான திங்கள் வழிபாடு கண்ணகிக்கு உரியது. அவ் வகையில் ‘எழுதிங்கள்’ எனும் சடங்கின் பெயரும் மேற்கொள்ளப்படும் முறைமைகள் யாவும் அச்சடங்கில் கண்ணகி வழிபாட்டினை வலியுறுத்தும் விதமாகவே அமைவதைக் காணலாம்.

## திருச்செங்கோடு

கொங்கு மண்டலத்தில் கண்ணகி வழிபாட்டு மரபின் மையமாக திருச்செங்கோடு அமைந்திருந்த தெனலாம். மயிலை சீனி

வேங்கடசாமி அவர்கள் தமது கட்டுரை ஒன்றில் திருச்செங்கோட்டின் மலைமேல் உள்ள மங்கை பங்கன் கோயில் கண்ணகி கோயிலென்றும் அதனைப் பிறிதோரிடத்தில் விவரிப்பதாகவும் கூறியிருந்தார். ஆனால் பிறகு அவர் அது குறித்து எழுதியதாக அறியக் கூடுதலில்லை. மயிலை சீனியாரின் கூற்றுக்கொப்ப அக்கோயில் கண்ணகி கோயில் தான் என்பதினை மெய்ப்பிப்பதாக அதன் வழிபாட்டு முறைமைகளும் திருவிழாக்களும் அமைந்துள்ளமை எண்ணத் தகுந்ததாகும்.

திருக்கொடிமாடச் செங்குன்றூர் இவ்வூரின் பழைய பெயராகும். செங்கோடு என்பது இவ்வூரிலுள்ள குன்றின் பெயராகும். ஆனால் அரும்பத உரையாசிரியர் காலத்திலேயே குன்றின் பெயரான செங்கோடு ஊருக்கும் வழங்கப்படுவதாயிற்று. இக்குன்றின் மேல் உள்ள கோயிலின் அமைப்பினை நோக்குவோமெனில் மேற்கு பார்த்த நிலையில் கோயில் அமைந்துள்ளது. இதன் திசைமுகம் சேரநாட்டு கண்ணகி கோயிலை நோக்கியதாக அமைகின்றது. கோயிலின் மேற்கு வாயிலுக்கு இடதுபுறம் ஒரு கிணறு அமைக்கப்பட்டிருந்தது (இப்போது மூடிவிட்டனர்). கோயிலின் வடபுறம் ஒரு கிணறு அமைக்கப்பட்டிருந்தது (நடராசர் சந்நிதி அருகில்). கோயிலின் கீழ்ப் பக்கம் தீர்த்தக் குளம் அமைந்துள்ளது. கோயிலின் கிழக்கே மலைமேற் செல்கையில் அல்லிச் சுனை ஒன்றும் அமைந்திருக்கும். மூலவரின் சிலையின் பாதத்திலும் ஒரு நீரூற்று உண்டு. நீர் நிலை தொடர்பான இவ்வமைப்புகள் சேர செங்குட்டுவன் கட்டி, சோழர்களால் திருப்பணி செய்யப்பட்ட கண்ணகி கோயிலை ஒத்ததாகும். ஈழத்துக் கண்ணகி கோயிலோடும் பெரிதும் ஒப்புமை உடையனவாக அமைகின்றன. சிலப்பதிகாரக் காலத்திலேயே இக்கோயிலில் முருக வழிபாடும் கண்ணகி வழிபாடும் சிறப்புற்றிருந்ததெனலாம்.

ஞானசம்பந்தரின் காலத்திலேதான் இக்கோயில் மங்கை பங்கன் கோயிலாக மாற்றப்பட்டதெனலாம். இவ்விறைவனின் பெயர் ‘மங்கை பாகர்’ எனக் குறிப்பிட்ட போதும் மக்கள் வழக்கில் ‘செங்கோடு பாவாத்தா’ என்பதாகவே உள்ளது. கோயிலில் ஆராத்தி காட்டும் பூசாரிகளும் “செங்கோடு பாவாத்தா காணிக்கை போடுங்கோ” என்று தான் குறிப்பிடுவர். சில ஆண்டுகளுக்கு முன்புவரை இப்பகுதியில் பல பெண்களின் பெயர் ‘பாவாயி‘ (பாவை) என்பதாக உள்ளமை எண்ணத்தகும். பாவை (தென் தமிழ்ப் பாவை) என்பதும் கண்ணகிக்கு வழங்கும் ஒரு பெயராகும்.

இவ்வூர்த் திருவிழாவும் ஈழத்தில் கண்ணகி கோயிலான வற்றாப்பளை, ஆரையம்பதி முதலான கண்ணகி கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களும் வைகாசி மாதம் விசாக மீனினை அடிப்படையாகக் கொண்டு நிகழ்வதும் எண்ணத்தகும்.

‘வைகாசித் திங்கள் வருவேன்’ என கண்ணகி சிலப்பதிகாரத்தில் உரைத்தமைக் கேற்பதாகவே வைகாசித் திங்கள் திருமேனியை எழுந்தருளச் செய்து இவ்விழாக்கள் நிகழ்வதாகின்றது.

வைகாசி மாதம் விசாகத்திற்கு முன்வரும் கருவா (அமாவாசை) அன்று இவ்வூர் காளி கோயில் தேரோட்டத்தோடு தொடங்கும் விழாவின் பெரும்பாலான நிகழ்வுகள் கண்ணகி வழிபாட்டின் சடங்கியல்களாகவே அமைவதினைக் காணலாம். இறைத்திருமேனி தேரில் எழுந்தருளும் நாளாக வைகாசி விசாகம் அமைகின்றது. திருவிழாவின் நிறைவு நாளன்று பூசை செய்யும் பூசாரி பெண் வேடமிட்டு பூசை செய்வார். அன்றைய இரவு சத்தாவரம் எனும் நிகழ்ச்சி நடைபெறும். அந்நிகழ்வில் கடவுளர் அடியார்களுக்கு வேண்டும் வரங்களை வழங்குவர். அணிகலன்கள், மகப்பேறு, திருமணம், நோய் நீக்கம், மழை வளம், பயிர் வளம், பால்வளம் முதலானவை தொடர்பான வரங்களே பண்டு வழங்கப்பட்டமைக்கான பாடலொன்று பூசாரிகளால் முன்பு பாடப்பட்டன. இன்று இவ் இறை உரு ரூபங்கள் அர்த்தநாரீஸ்வரர் என வழங்கப்பட்ட போதிலும், இவ்விறைவருக்கு மங்கள அணியான தாலி மிகப் பெரிதாக ஏனைய கோயில்களில் இருந்து வேறுபட்டதாகச் சாத்தப்படுவது மங்கள

தேவியை நினைவுறுத்துவதாக அமைகின்றது. திருவிழாவின் நிறைவில் மலையேறியவுடன் படையலாக மிளகுச் சாறு கலந்த சோறு வழங்கப்படுதலும் பண்டைய மரபை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இப்பகுதியில் வழங்கும் வழக்காறுகள் சில இங்கு கண்ணகி வழிபாடு நிகழ்ந்தமைக்கான சான்றுகளாக அமைகின்றன. ஆடி மாதம் கோவலன் கொல்லப்பட்டான்; மதுரை எரியுண்டது; இதனை சிலம்பின் வழி அறியலாம். கோவலன் மதுரையின் வீதிகளில் உள்ள காட்சிகளைக் கண்டு வரும் வேளையில் வீசியகாற்று 'குடக்காற்றெறிந்து' எனும் அடிகளால் குடக்காற்றெனக் கொள்ளப்படுகிறது. இதனை இதற்கு உரைகூறும் அரும்பத உரையாசிரியர் "ஆடித்திங்களென்பது தோன்றக் குடக்காற்றுக் கூறினான்" எனக் கூறுகின்றமையினால் மேலும் உறுதிசெய்யலாம். அதற்கான மற்றுமொரு சான்றாக,

**ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்த**
**தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று**
**வெள்ளி வாரத் தொள்ளரி யுன்ன**
**உரைசான் மதுரையோ டரைசுகேடுறுமெனு**

**(கட்டுரைக்காதை 133 – 136)**

என்னும் இக் கட்டுரைக்காதை அடிகள் அமைகின்றன. ஆடி மாதம் என்பது ஆடவர்க்கு பாதிப்பு உண்டாக்கக்கூடிய மாதம் எனும் வழக்கம் உள்ளது. இம்மாதத்திலேயே காவல் தெய்வங்களுக்கான வழிபாடுகளும் சிறப்பானதாகத் திகழ்கின்றது. யாவற்றிலும் மேலானவொரு நிகழ்வானது ஆடி மாதம் முதல்நாள் நடைபெறுகின்றது. தலையாடி எனும் ஆடி முதல் நாளில் தேங்காய் சுடும் நோன்பி (நோன்பு) எனும் ஒரு விழா நடைபெறுகின்றது. வீட்டிலுள்ள சிறுவர்களின் கைகளில் மட்டை நீக்கிய தேங்காய் ஒன்றினை பெற்றோர் கொடுப்பர். சிறுவர்கள் தேங்காயின் மேற்புற ஓட்டுப் பகுதியை பாறையில் தேய்த்து மொழுமொழுப்பாக மாற்றுவர். பின்னர் அத் தேங்காயின் மூன்று கண்களில் பெரிய கண்ணில் ஓட்டையிட்டு தண்ணீரை ஒரு பாத்திரத்தில் எடுத்து பின்பு ஓட்டையின் வழியாக பொடியாக இடித்து வைத்துள்ள பச்சைப் பயறு, பச்சரிசி, பொட்டுக்கடலை, ஏலக்காய், நாட்டுச்சர்க்கரை முதலானவற்றை இட்டுத் தேங்காய்த் தண்ணீரினையும் ஊற்றிக் கிளறி நிரப்புவர். பின்னர் ஆறடி நீளமுள்ள அழிஞ்சில் குச்சிகளின் நுனிமுனையைச் செதுக்கி அதனைக் கொண்டு அத்தேங்காயின் கண்ணினை அடைத்துத் தேங்காய்க்கும் தடிக்கும் மஞ்சள் பூசி வைப்பார். இத் தேங்காய்களினை மாலை ஆறு மணி போல் சிறுவர்கள் கையில் எடுத்து வர, பெற்றோர் ஓரிடத்தில் தென்னை மட்டை, பனை ஓலை முதலானவற்றினை குவித்துத் தீமூட்டுவர் அத்தீயிலே சிறுவர் தேங்காயினைச் சுடுவர். சிறிது நேரம் சுட்டபின் தேங்காய் ஓடு வெடிக்கத் தொடங்கும். அப் பதத்திலே தேங்காய் சுடுவதினை நிறுத்திவிடுவர். அருகில் உள்ள பிள்ளையார் கோவிலுக்கோ வீட்டின் பூசை அறையிலோ வைத்து, அழிஞ்சில் குச்சியினைக் கழட்டிவிட்டு தேங்காயினை இரண்டாக உடைப்பர். தேங்காயுள்ளிருக்கும் பூரணம் சிறப்பாக வெந்திருந்தால் குடும்பத்திற்கு நல்லதென வணங்குவர். தலையாடி என வழங்கப்பெறும் ஆடி முதலாம் தேதி, இந்நிகழ்வானது திருச்செங்கோடு பகுதியில் மாத்திரம் நிகழ்கின்றது. இந்நிகழ்வு கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடையதாகவே அமைகின்றது. தேங்காயினுள் பூரணம் வைத்து அவித்துச் சோதித்தல் ஆனது தற்குறி கேட்டல் என்பதான பண்டைய வழிபாட்டுமுறை என்பதை வரந்தருகாதையிலும் நாம் அறியலாம்.

## கெரடிகம்பம் தொடுதல்

கொங்குநாட்டுக் கோயில்களிற் காணப்படும் தனிச் சிறப்புகளிலொன்றாக இக்கெரடி கம்பங்களைக் குறிப்பிடலாம். கெரடிகம்பம் என்பது வேறு கொடிக்கம்பம் என்பது வேறு. கொடிக்கம்பம் என்பது கோயிலின் பலிப் பீடத்தின் அருகில் அமைவது. கெரடிகம்பம் என்பது இராஜ கோபுரத்தின் வெளியே அமைவது; விளக்கேற்றப் பயன்படுவது. கோயிற்



மட்டக்களப்பு - தேற்றாத்தீவு பள்ளியங்கட்டு கண்ணகி அம்மன்
Image Source - www.thinakaran.lk

கோபுரத்திற்கு முன்பு காணப்படும் ஒற்றைக் கல்லாலான உச்சியில் விளக்கேற்றும் கற்தூண் அமைப்பே கெரடிகம்பம் எனப்படும். இக் கற்தூணின் மேல் திருவிழாக் காலங்களில் பெரிய விளக்கேற்றுதலினைக் காணலாம். தமிழகத்தில் காணப்படும் கெரடிகம்பங்களில் மிக உயர்ந்ததாக திருச்செங்கோட்டுக் கோயிலின் முன் உள்ள கெரடிகம்பத்தினைக் குறிப்பிடலாம். ஏறத்தாழ அறுபதடி உயரமுடைய இக் கெரடிகம்பத்தினை மண்ணுக்குள் பதிய நட்டு தூக்கி நிறுத்துதல் என்பது அத்தனை எளிதான செயலாக அன்றைய நாளில் இருக்கவில்லை. கற்புடைப் பெண்டிர் கை பட்டால் கெரடிகம்பத்தினை நிறுத்துதல் எளிது என்னும் நம்பிக்கை அக் காலத்தில் வலுவானதாக நிலவியது. இன்றும் கற்புடைப் பெண்களைக் குறிப்பிடும் போது ‘அவள் என்ன கெரடிகம்பமா பிடிக்கப் போறாள்’ என்பதான வழக்கு கொங்கு நாட்டுப் பகுதியில் உள்ளமையினைக் காணலாம்.

மிகப்பெரிதான இக்கெரடிகம்பத்தினை எவ்வகையில் யாருக்கும் சேதமில்லாமல் நிறுத்துவது என்ற எண்ணம் தச்சர்களுக்கு ஏற்பட்டபோது, அங்குள்ள மகளிரும் அறிஞர் பெருமக்களும் “அவ்வூரிலுள்ள பறைத்தெருவில் ‘வெள்ளச்சி’ என்ற கற்பிற் சிறந்த மங்கை வாழ்கின்றாள்; அவள் இக்கம்பத்தினைத் தொட்டுக் கொடுத்தால் நிறுத்துவது எளிதாகும்” எனக் கூறலாயினர். ஆதலால் அவ்வூரார் மேள தாளம் முதலான இசைக்கருவிகள் முழங்க வெள்ளச்சியின் இல்லம் சென்று அவளிடம் செய்தியினைக் கூறி அழைத்தனர். வெள்ளச்சியும் அவர்களுடன் வந்து கெரடிகம்பத்திற்குப் பூசைகள் செய்து அதனைத் தொட்டுத் தூக்க, தச்சர்கள் மிக எளிதாக கெரடிகம்பத்தினை நிறுவினர் என்னும் செய்தி திருச்செங்கோட்டில் உண்டு. இதன் வழியாகக் கற்புடைப் பெண்ணின் ஆற்றல் வெளிப்பாடானது வலியுறுத்தப்படுதலினைக் காணலாம். இவ்வாறான நிகழ்வுகள் கண்ணகி வழிபாட்டின் தொன்ம எச்சங்களாகும்.

## அறுபதாம்படி



யாழ்ப்பாணம் - வற்றாப்பளை கண்ணகி அம்மன்
Image Source - vanakkamlondon.com

கண்ணகி வாய்மையின் பாற்பட்ட தெய்வம். பொய்மையினை அழிக்கும் தெய்வம். அறங்காக்கும் தெய்வமாகக் கண்ணகி போற்றப்பட்டாள். அரசனேயாயினும் தன்னறம் பிழைத்தால் குற்றத்திற்குரியவனே என்பதே சிலப்பதிகாரம் கூறும் கண்ணகி வழிபாட்டு மரபாகும். திருச்செங்கோட்டு மலையில் ஏறி கண்ணகியினை வழிபடச் செல்லும் படிக்கட்டுகளில் 'அறுபதாம்படி' என்ற படிக்கட்டுத் தொகுப்பு உண்டு. இது அறுபது படிக்கட்டுகளை உடையதாகும். மலைக்குச் செல்லும் படிக்கட்டுப் பாதையில் இடைவழியில் உள்ளதாகும். மலையேறுவோர் இப்படிக்கட்டினை வணங்கியே செல்லுவர். இவ்வூரிலுள்ளோர் தங்களுக்குள் ஏற்படும் பிணக்குகளான பொருட் களவு, சொத்துச் சிக்கல்கள், உண்மையை உணர்த்துதல் என்பனவற்றினுக்கான தளமாக இவ்வறுபதாம் படியினை நம்பினர். மேள தாளத்துடன் அறுபதாம் படிக்கு வந்து, ஊர்ப் பெரியோர் முன் அறுபதாம்படி வழிபாடு செய்து அப்படியின் மேல் ஆணையிட்டுக் கூறும் கூற்றுக்கள் யாவும் உண்மையென அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும். ஆதலால் இதனை 'சத்தியப்படி' என்றும் அழைத்தனர். அறுபதாம்படியில் பொய் கூறியோர் குடும்பத்துடன் அழிவர் என நம்பினர். இவ்வாறான 'சத்தியப்படி' மரபு என்பது கண்ணகி வழிபாட்டுத் தொன்மத்துடன் தொடர்புடையதாகும்.

## வறடிக்கல்

இம்மலையின் செங்குத்தான சிகரப் பகுதியில் மகுடம் போல் அமைந்துள்ளது ஓர் பாறைக்கல் வறடிக்கல் எனப்படுகிறது. இக் கல்லினையொட்டி பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் கட்டப்பட்டதான பாண்டீச்சுவரர் கோயிலும் சிறிய கருவறையும் நடு மண்டபத்துடன் காணப்படுகின்றது. இப்பாறைக் கல்லின் வட பகுதியில் அதனைச் சுற்றுவதற்கான இடைவெளியாக ஓரடி அளவுள்ள பாதையே உள்ளது. இப் பாறையினையே வறடிகல் என அழைக்கின்றனர். வடமொழியில் இதனை வந்தியா பர்வதம் என இச் சிகரத்தோடு சேர்ந்து அழைப்பர். மகப்பேறில்லா பெண்கள் மகப்பேறு வேண்டி இச்சிகரத்திற்கு அருகிலுள்ள குமார சுனையில் குளித்துவிட்டு, இக்கல்லினை ஆபத்தான முறையில் சுற்றி வந்து வணங்கியுள்ளனர். ஆங்கிலேயர் காலத்தில் (டல்கவ்சி பிரபு), இக்கல்லினைச் சுற்றி வருவோர் பலர் கீழே விழுந்து உயிரிழந்ததால் அதற்குத் தடைவிதித்து சுற்றுச் சுவரையும் எழுப்பிவிட்டனர். இவை போன்றதான வரம் பெறும் வழிபாட்டு முறைகள் கண்ணகி வழிபாட்டின் தொன்மத்தினை நினைவுறுத்துவதாக அமையக் காணலாம். மழைவளம், மக்கட்பேறு முதலான வரங்களை வேண்டுவோர் திங்கட்கிழமைகளில் நோன்புடன் இம்மலை முழுவதையும் வலம்வரும் மரபும் காணப்படுகின்றது.

## ஈழத்தில் கண்ணகி வழிபாடு

கண்ணகி வழிபாட்டு மரபானது இன்றளவும் உயிர்ப்புடன் ஈழநாட்டில் விளங்கி வருகின்றது. நூற்றுக்கும் மேற்பட்ட கண்ணகி கோயில்கள்

ஈழநாட்டில் வழிபாட்டில் உள்ளன. பௌத்தம் இலங்கைக்கு வருமுன் ஈழத்தில் வழங்கிய வழிபாட்டு முறைகளாக கண்ணகி வழிபாடு, எழுமங்கையர் வழிபாடு, நாகனார் வழிபாடு முதலான வழிபாடுகள் அமைகின்றன. இதற்கான தொன்மங்களும் தொல்லியற் சான்றுகளும் பல உண்டு. ஈழத்திற்கும் தமிழகத்திற்கும் இடைப்பட்ட பகுதிகளில் காணப்படும் தீவுகள் ஈழத்திற்கும் தமிழகத்திற்குமான சமயப் பரிமாற்றங்களில் பெரும் பங்கு வகிப்பதாக அமைகின்றன. பண்டு மணிபல்லவம் என்று வழங்கிய நயினாதீவு பௌத்தத்தின் தலைமையிடமாகவும் அனலைதீவு ஆசிவகத்தின் தலைமையிடமாகவும் அமைந்தது. அதேபோல் காரைதீவில் கண்ணகி வழிபாடானது பண்டுதொட்டு இன்றளவும் சிறப்புடன் விளங்கிவருகின்றது. சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் எடுப்பித்த கண்ணகி கோட்டத் திருவிழாவில் இலங்கையின் மன்னனான கயவாகு கலந்து கொண்டான் என்பதினை,

> அருஞ்சிறை நீங்கிய வாரிய மன்னரும்
> பெருஞ்சிறைக்கோட்டம் பிரிந்த மன்னரும்
> குடகக் கொங்கரு மாளுவ வேந்தரும்
> கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்

என்ற அடிகளின் வழியறியலாம். இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கந்தரோடைக்கும் மாசியப்பட்டிக்கும் இடையிலுள்ள ஊர் 'அங்கணாமைக் கடவை' எனப்படும். இவ்வூரிலேயே முதன்முதலாக கயவாகு மன்னன் மிகப் பழமையான கண்ணகி அம்மன் கோயிலையும் அதன் எதிரே ஒரு தாமரைக் குளத்தையும் அமைத்தான். இவ்வூரின் பண்டைய பெயர் அங்கணாக்கடவை ஆகும். "இக்குளக்கரையில் கயவாகு மன்னனின் கற்சிலை ஒன்றிருந்தது. பின், அச்சிலை 1974 ஆம் ஆண்டு அநுராதபுரத்து அருங்காட்சியகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது" என செ. கிருஷ்ணராசா கூறுவார். 'அங்கன் அம்மை' என்பது கண்ணகியின் பெயராகும். அவ்வகையிலும் இன்று சிறு கோயிலாக உள்ள இக்கோயிலிலேயே இலங்கையில் கண்ணகி வழிபாடு தோன்றிய தெனலாம். இதற்கு மற்றுமொரு சான்றாக அமைவது 'ஊர் சுற்றுக் காவியம்' என்னும் உடுக்குச் சிந்துப் பாடல்களாகும். எழுபத்தி இரண்டு பாடல்களைக் கொண்ட இச்சிறு நூலானது வி.சி. கந்தையா அவர்களால் பதிப்பிக்கப்பட்டதாகும். இந்நூலின் இருபத்து மூன்றாம் பாடல் தொடங்கி எழுபத்திரண்டாம் பாடல்கள் வரையுள்ள பகுதி முழுவதும் கண்ணகி கோயில் கொண்டுள்ள ஊர்களின் சிறப்புகளையும் அங்கு உறையும் கண்ணகியின் அருளையும் விளக்குவதாக அமைகின்றது. அந்நூல் விளக்கும் முதற்தலமாக அமைவது அங்கணாவைக் கடவை என்பதனை,

> திங்கள்போ லுந்திரு நுதலையுடை யாளைச்
> செந்தா மரைமுகத் தாளைஒப் பாளைப்
> பொற்குபுக ழாலுயர்ந் தவபொதறி ருவைப்
> பொய்யென்ன மெய்யாக வந்துதித் தவளைத்
> தங்கள்பழி கொள்ளென்று பாண்டியன் முன்னே
> சத்துரு தனைமுடித் தயிர்மீள வந்து
> அங்கணாமைக்கடவை தன்னில் வாழ் கண்ணகையார்
> அடித்தாமரைப் பாதம் நாளும் மறவேனே
> (ஊர்சுற்று காவியம் – **23**)

எனும் இருபத்து மூன்றாம் பாடல்களின் வழி அறியலாம். இந்நூலின் வழி ஈழத்தில் கண்ணகி வழிபாடு பரவிய பழமையான தலங்களாக பாண்டிருப்பு, கல்முனை, பட்டிமேடு, வீரமுனை, தம்பிலுவில், கரேறு, காரைதீவு, எருவில், செட்டிபாளையம், வந்தாறு மூலை, கல்லாறு, மகிழூர், மண்முனை, மகிழடிச் சோலை, மதலைக்குடா, புதுக்குடி, கொக்கட்டிச்சோலை, சிற்றாண்டி, வற்றப்பாளை, ஆரையம்பதி போன்றவற்றைக் குறிப்பிட முடியும்.

மேற்கண்ட தலங்களின் வரிசை முறையினை நோக்கினால் தமிழரின் தாயகமெங்கும் கண்ணகி வழிபாடு பரவலாக்கம் பெற்றமையினை அறியலாம். கண்ணகி குறித்து பல இலக்கியங்கள் ஈழத்தில் எழுந்துள்ளன. கண்ணகையம்மன் தாலாட்டு, கண்ணகையம்மன் குளுவம், ஊர் சுற்று காவியம், கண்ணகி வழக்குரை என்பனவாக அவை பெருகும். கண்ணகி வழக்குரை எனும்

**கண்ணகி வாய்மையின் பாற்பட்ட தெய்வம். பொய்மையினை அழிக்கும் தெய்வம். அறங்காக்கும் தெய்வமாகக் கண்ணகி போற்றப்பட்டாள். அரசனேயாயினும் தன்னறம் பிழைத்தால் குற்றத்திற்குரியவனே என்பதே சிலப்பதிகாரம் கூறும் கண்ணகி வழிபாட்டு மரபாகும். திருச்செங்கோட்டு மலையில் ஏறி கண்ணகியினை வழிபடச் செல்லும் படிக்கட்டுகளில் அறுபதாம்படி என்ற படிக்கட்டுத் தொகுப்பு உண்டு. இது அறுபது படிக்கட்டுகளை உடையதாகும். மலைக்குச் செல்லும் படிக்கட்டுப் பாதையில் இடைவழியில் உள்ளதாகும். மலையேறுவோர் இப்படிக்கட்டினை வணங்கியே செல்லுவர். இவ்வூரிலுள்ளோர் தங்களுக்குள் ஏற்படும் பிணக்குகளான பொருட் களவு, சொத்துச் சிக்கல்கள், உண்மையை உணர்த்துதல் என்பனவற்றினுக்கான தளமாக இவ்வறுபதாம் படியினை நம்பினர்.**

இலக்கியம் காப்பிய நிலையில் வைத்துப் போற்றப்படுவதாகின்றது. கதைப்போக்கில் சிலப்பதிகாரத்திலிருந்து பல மாறுதல்களையும் கொண்டுள்ளது. நாட்டுப்புற இலக்கியக் கூறுபாடுகள் பலவற்றைக் கொண்டதாக அமைகின்றது. ஆடவரை ஐயன் என அழைத்தல் எவ்வாறு உயர்வுச் சிறப்பை அளிக்கக்கூடிய சொல்லாகின்றதோ அதனை ஒத்ததாகவே பெண்டிரைக் குறிக்கும் ஐயை எனும் சொல்லும் உள்ளது. கண்ணகியைத் தெய்வநிலை உயர்வுச்சிறப்பு நிலை கொடுத்தே 'கண்ணகை' என்று ஈழத்தில் வழங்குவர். மட்டக்களப்பில் உள்ள பல பெண்கள் இன்றளவும் பத்தினி, கண்ணகி போன்ற பெயர்களைக் கொண்டுள்ளமையினை காணலாம். கண்ணகையம்மன் கோயில்களில் ஆண்டிற்கு ஒரு முறை பத்து பதினைந்து நாட்கள் பெருந் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறும். 'வைகாசித் திங்கள் வருவேன்' என சிலப்பதிகாரத்தில் கண்ணகி கூறிய கூற்றினுக்கேற்ப, ஆண்டு தோறும் வைகாசி மாதம் மதிய நாளினைச் சிறப்பிப்பதாக இவ்விழா நடைபெறும். விழா நாளில் கண்ணகி வழிபாட்டுக்குரிய பல சடங்குகள் நிகழ்த்தப்பெறும். பண்டுதொட்டு கண்ணகி வழிபாட்டுச் சடங்கினைப் பத்தடியார் எனும் மரபினர் செய்வர். இம்மரபு முழுவதும் தமிழ் மரபாகவே உள்ளது. அண்மைக் காலத்தில் சில கோயில்களில் சிவாச்சாரியர்களைக் கொண்டும் பூசை செய்கின்றனர். இது ஏற்புடையதாக இல்லை. மட்டக்களப்பின் குடிகளான போடியர், முக்குவர் முதலானோரின் ஆளுகையில் பல கண்ணகிக் கோயில்கள் உள்ளன. கேரள மக்களை போல் இவர்கள் தாய்வழி குடிமுறையினை உடையோராவர். இக்குடிமுறையில் குறிப்பிட்ட சில குடியினரே கண்ணகி கோயில் பூசைக்கும் ஆளுகைக்கும் உரியோராகின்றனர். ஈழத்திலும் கேரளத்திலும் நிகழும் கண்ணகித் திருவிழாக்கள் வைகாசி மாதத்தை அடிப்படையாகக் கொண்டே நிகழ்கின்றன. ஈழத்து வற்றாப்பளையிலும், ஆனாயம்பதியிலும், கன்னங்குடாவிலும் உள்ள கண்ணகி கோயில்களில் நடைபெறும் பெரும் பொங்கல் நிகழ்வானது கேரளத்து ஆற்றுக்கால், ஆத்திங்கள் முதலாய இடங்களில் நடைபெறும் கண்ணகி (பகவதி) கோயில் பொங்கல் நிகழ்வோடு பெரிதும் ஒப்புமை உடையனவாக விளங்கக் காணலாம். ஈழத்திலும் கேரளத்திலும் வழிபடப்படும் சிலம்பின் வடிவமும் ஒத்த தன்மை உடையனவே. சிலப்பதிகாரம் சுட்டுவதற்கேற்றவாறே ஈழத்திலும் கேரளத்திலும் வரந்தரும் தெய்வமாகவே கண்ணகி விளங்குகிறாள். நோய் தீர்த்தல், மழை வளம் தருதல், மக்கட் செல்வம் வழங்கல், வேளாண் செல்வங்களைத் தருதல் முதலான வரங்களை நல்கக் கூடியவளாக கண்ணகி

வழிபடப்படுகின்றாள். ஒழுக்கமும், அறமும் உள்ளோரைக் காக்கும் தெய்வமாக கண்ணகி போற்றப்படுகிறாள். இவை அல்லாதோரை சினந்து தண்டிப்பாள் என அடியார்கள் அச்சம் கொள்வார். ஈழத்திலும் கேரளத்திலும் பொற்கொல்லரை உள்ளடக்கிய பிரிவினர் கண்ணகியை வழிபடுவதில்லை. 'வருடத்திற்கொரு பூசையும் வவ்வால் அடைந்த கோயிலும்' என இவர்கள் கண்ணகி கோயிலைப் பழிப்பதனை மட்டக்களப்பில் காணலாம். அனைத்து மக்களும் கண்ணகியை வழிபட இவர்கள் காளியை வழிபடுவோராகின்றனர். யாழ்ப்பாணத்தில் கண்ணகி வழிபாட்டுக்கு எதிராக ஆறுமுகநாவலர் செயற்பட்டார். மானுட செட்டிப் பெண்ணான கண்ணகியை வழிபடுதல் மடமையெனக் கண்டித்ததோடு பல கண்ணகி கோயில்களை ராஜராஜேஸ்வரி கோயிலாகவும், மனோன்மணி அம்மன் கோயிலாகவும் மாற்றினார். ஆயினும் இவரது முயற்சி முழு வெற்றி பெற்றதல்ல.

சிங்கள மக்கள் கண்ணகியைத் பத்தினித் தெய்யோ என வழிபட்டு வருகின்றனர். தமிழர்களின் வழிபாட்டில் உள்ள கண்ணகியின் திரு உருவச் சிற்ப அமைதிக்கும் சிங்களவர்கள் வழிபடும் கண்ணகியின் சிற்ப அமைதிக்கும் வேறுபாடு உண்டு. தமிழரின் வழிபாட்டில் கண்ணகி வலது கையில் அடைக்கல (அபய) முத்திரை காட்டி இடக்கையை இயற்கையாக உள்ளவாறு அமைத்தல் மரபு. சிங்களர் மரபில் கண்ணகியின் இரண்டு கைகளிலும் இரண்டு சிலம்பு உள்ளவாறும் அமைக்கப்பட்டிருக்கும். இலண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள கண்ணகி சிலை தமிழ் மரபில் வடிக்கப்பட்டதேயெனலாம். அனைத்து பௌத்த பள்ளியிலேயும் கண்ணகி வழிபாடு உண்டு. தனித்த கோயில்களிலேயும் சிங்களவர் கண்ணகியை வழிபடுவர். இலங்கையில் கண்ணகி வழிபாடு குறித்து கனநாத் ஒபய சேகர என்ற பேராசிரியர் 'The Cult of the Goddess Pattini' என்ற மிக விரிவான நூலினை எழுதியுள்ளார். தமிழர்களிடம் உள்ளது போலவே கண்ணகி கோயில்களில் நிகழும் தீபாய்தல் போன்ற சடங்குகள் சிங்களவர்களிடமும் உண்டு.

இலங்கையிலும் கேரளத்திலும் காணப்படும் கண்ணகி கோயில்கள் பல, ஒத்த தன்மையுடையனவாகவே காணப்படுகின்றன. சேரன் செங்குட்டுவன் எடுப்பித்த கண்ணகி கோட்டத்தில் தேவந்தி எனும் பெண்ணே பூசை செய்வோளாவாள். மட்டக்களப்பிலும் தொடக்கத்தில் பெண்களே பூசை செய்வோராக இருந்திருக்க வேண்டும். அம்மரபின் தொடர்ச்சியாகவே இன்று ஆண் பூசாரிகள் சேலை கட்டிப் பூசை செய்யும் மரபு உள்ளமையினைக் காணலாம்.

**அங்கணா மைக்கடலை காரேறு நகர் எருவில்**
**ஆனதம் பிலுவிலொடு வீரமுனை தன்னிலும்**
**பங்கசெர் பட்டிமேடு உயர்செட்டி பாளையம்**
**வந்தாறு மூலையொடு மற்றுமுள பதியும்**
**திங்கள்நேர் ஒத்தநுதல் எங்கும் திற்பெரிய**
**தெய்வீக மென்ன விளை யாடியெப் பொழுதும்**
**எங்குமாய் திற்குமொரு பங்கமா தின்பெருமை**
**எந்தனா விற்கனவில் என்றுமக லாதே**
**(உடுங்குச்சித்து – ஊற்றுக்காவியம் – 69)**
**பத்தியொடு தொழுவோர்கள் இடகல வருள்கொண்டு**
**பண்டுசெளி தம்பிலுவில் பட்டிமா நகரம்**
**மொய்த்தபுகழ் வீரமுனை கல்முனைகல் லாறு**
**மகிழூர்செட்டி பாளையப் எருவில்மண் முனைபூமும்**
**வைத்தமகி ழடிச்சோலை முதலைக்குடா**
**வளமைவரு புதக்குடி நகரமொடு வந்தாறுமூலை**
**இத்தனை தலங்களிலும் அங்கண மைக்கடலை**
**என வந்து காரைநகர் இனிதிருத் தவளே**
**– 70**
**பட்டிநகர் தம்பிலுவில் காரைநகர் வீரமுனை**
**பவிதபெறு கல்முனைக்கல் வாறுமகி மூரெரவில்**
**செட்டிபா ளையம்புதுக் குடியிரப்பு மண்முனை**
**செல்வமுத லைக்குடா கொக்கட்டிச் சோலை**
**அட்டதிக் கும்புகழ் வந்தாறு மூலை**
**அன்பான சிற்றாண்டி நகாதனில் உரையும்**
**வட்டவட் பூசங்குழல் மண்முனைக் கண்ணகையை**
**மனதினில் நினைக்க வினை மாறியோ டிகுமே.**
**– 71**

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதனை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.




சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSC, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.




# கறவை மாடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தல் : இலங்கையின் வடக்கு – கிழக்கு மாகாணங்களை முன்வைத்து

இலங்கையில் மொத்தமாக உள்ள 1.6 மில்லியன் கறவை மாடுகளில் 405,001 மாடுகள் வடக்கிலும்; 542,805 மாடுகள் கிழக்கிலும் உள்ளன. நாட்டில் மொத்தமாக உள்ள 476,050 எருமை மாடுகளில் 24,164 எருமைகள் வடக்கிலும்; 234,782 எருமைகள் கிழக்கிலும் உள்ளன (கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள புள்ளிவிபரம் - 2022). பெரும்பான்மையான மாடுகள் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் காணப்படுகின்ற போதும் அவற்றின் உற்பத்தித் திறன் குறைவாகவே காணப்படுகிறது (நாட்டில் மொத்தமாக வருடம் 326 மில்லியன் லீட்டர் பால் உற்பத்தியாகிறது. வடக்கிலிருந்து 41 மில்லியன் லீட்டரும் கிழக்கிலிருந்து 22.5 மில்லியன் லீட்டரும் கிடைக்கிறது). இதன் காரணமாக இங்குள்ள பாற் பண்ணையாளர்கள் போதிய உற்பத்தியையும் வருமானத்தையும் இழக்கின்ற நிலையை பரவலாக அவதானிக்க முடிகிறது. இரு மாகாணங்களும் பாலுற்பத்தியில் குறைந்தளவு பங்களிப்பையே செய்கின்றன.

இதற்குரிய காரணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும்:

1. மரபியல் காரணிகள்
2. உணவு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான காரணிகள்
3. நோய் நிலைமைகள்
4. ஒழுங்கமைக்கப்படாத இனப்பெருக்க முறைகள்
5. போதிய பண்ணைசார் உட்கட்டமைப்பு வசதியின்மை
6. பண்ணையாளர்களின் விடய அறிவு மற்றும் நவீன தொழில்நுட்பம் தொடர்பான அறிவு போதாமை

மேற்படி குறைபாடுகள் காரணமாக பல பண்ணையாளர்கள், குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர பாற் பண்ணையாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 90% மேற்படி பண்ணையாளர்களாகவே காணப்படுகின்றனர். இதன் கூட்டு விளைவு பாலுற்பத்தியில் கணிசமான வீழ்ச்சியை உருவாக்குகிறது. உணவுப் பாதுகாப்பிலும் குறைபாட்டை உருவாக்குகிறது. இந்த விடயத்தை பல பரிமாண ரீதியில் ஆராய வேண்டிய தேவை உள்ளது. இதற்கு அரச, தனியார் பண்ணையாளர்களின் ஒருங்கிணைவு அவசியமாகிறது. அது விஞ்ஞான பூர்வமாகவும், நடைமுறைச் சாத்தியமானதாகவும் காலத்திற்கேற்றதாகவும் அமைய வேண்டும். இந்தக் கட்டுரை அது தொடர்பானதே.

## சவால்கள்

### 1. குறைந்த உற்பத்தித் திறன் மற்றும் மரபியல் தன்மை

இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதியிலுள்ள கறவை மாடுகள் மிகக் குறைந்த உற்பத்தித் திறனையே (Productivity) கொண்டவை. இவை உள்ளூர் மற்றும் உள்ளூர் கலப்பு (Local and local crosses) வகையின. இவை உண்ணும் உணவுக்கு ஏற்ப இவற்றால் அதிக பாலுற்பத்தியைத் தர முடியாது. இது பண்ணைகளின் வருமானத்தைக் குறைக்கிறது.

### 2. உணவுப் பற்றாக்குறை மற்றும் தரமான உணவு இன்மை

தரமான ஊட்டச்சத்து மிக்க புற்கள், இலை - தழைகள் சூழலில் கிடைக்காத தன்மை காணப்படுவதோடு, வருடம் முழுதும் உணவு கிடைக்கும் தன்மை சீராகவும் இருப்பதில்லை. தண்ணீர்ப் பற்றாக்குறை, வறட்சியான இந்த வலயத்தில் மிகப் பெரும் சவாலாக அமைகிறது. சில மேம்பட்ட பண்ணையாளர்கள் நவீன ஊட்ட முறைகளான TMR, Silage எனும் ஊறுகாய் புல் தயாரித்தல் போன்றவற்றையும் அடர்வு தீவன உணவு ஊட்டத்தையும் செய்கின்ற போதும் பெரும்பாலான, குறிப்பாக



Image Source : www.sundaytimes.lk

சிறு, நடுத்தரப் பண்ணையாளர்கள் மற்றும் திறந்த வெளிப் பண்ணையாளர்கள், மேற்படி நவீன முறைகளைக் கைக்கொள்வதில்லை. திறந்த வெளிப் பண்ணையாளர்கள் மேய்ச்சல் வெளிகளை நம்பியே உள்ளனர். அண்மைக் காலத்தில் அருகி வரும் மேய்ச்சல் வெளிகளால் மேற்படி மாடுகள் உணவு கிடைக்காமல் ஊட்டச் சத்துக் குறைபாட்டுக்கு உள்ளாகின்றன. மேலும், அடர்வு தீவன விலையேற்றம் மற்றும் அவற்றின் தரக் குறைவு காரணமாக அவற்றின் பாவனையும் குறைந்துள்ளது. மேற்கூறிய சகல ஊட்டச் சத்துக் காரணிகள் காரணமாக மாடுகளின் பாலுற்பத்தி, வளர்ச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் தன்மை ஆகியன பாதிக்கப்படுகின்றன.

**3. சுகாதார முகாமைத்துக் குறைபாடு மற்றும் நோய்கள்**

ஒழுங்கமைக்கப்படாத முகாமைத்துவ முறைகள் (Management practice) மற்றும் நோய்த் தடுப்பு முறைகள் (Disease control and prevention) இல்லாமையாலும் கறவை மாடுகள் அடிக்கடி நோய்வாய்ப்படுகின்றன. இலங்கையின் கால்நடை வைத்திய அலுவலகங்களின் (Veteri nary surgeons office) ஆளணிப் பற்றாக்குறை காரணமாகவும், மருந்துகளின் விலை ஏற்றம் காரணமாகவும், நவீன சிகிச்சை முறைகளுக்குரிய (Modern treatment facilities) வசதிகள் இல்லாமையாலும், வாகன வசதிகள் இல்லாமையாலும் கறவை மாட்டுப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளுக்குரிய சரியான சிகிச்சையை பெறமுடியாது உள்ளனர். அத்துடன் விலங்குப் புலனாய்வுக் கட்டமைப்பு (Veterinary investigation Centers) நீண்டகாலமாக மேம்படுத்தப்படாமலும் நவீன ஆய்வு வசதியின்றியும் காணப்படுதல் நோய் நிலைகளின் துல்லியத் தன்மையை அறிவதில் சவாலை ஏற்படுத்துகின்றது.
அண்மைக்காலத்தில் கறவை மாடுகளுக்கு ஏற்பட்ட லம்பி தோல் நோய், கால் வாய்

நோய்களுக்குரிய தடுப்பூசிகள் போதியளவில் இல்லாமை காரணமாக ஆயிரக்கணக்கில் கறவை மாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன. மேற்படி தடுப்பூசிகள் உள்ளூரில் தயாரிக்கப்படுவது குறைவு என்பதுடன் வெளிநாடுகளில், குறிப்பாக இந்தியாவிலிருந்தே இறக்குமதியாகின்றன. மேலும் வடக்கு மாகாணம் இந்தியாவுக்கு அருகில் இருப்பதால் பல நோய்கள் அங்கிருந்து இலகுவாக இங்கு பரவலடைகின்றன (LSD, FMD நோய்க் கிளர்ச்சி).

**4. சரியான இனப்பெருக்க முறைகள் கடைப்பிடிக்கப்படாமை**

ஓரிரு இடங்களைத் தவிர, வடக்கு - கிழக்கு பகுதிகளில் கறவை மாடுகளுக்கு இயற்கை முறையான இனப்பெருக்க செயன்முறையே (*Natural Breeding*) பரவலாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. பல பண்ணையாளர்கள் செயற்கை முறைச் சினைப்படுத்தலை (*Artificial insemination*) விரும்புவதில்லை என்பதுடன் கணிசமான இடங்களில் செயற்கை முறைச் சினைப்படுத்துநர்களின் பற்றாக்குறையும் ஆற்றலின்மையும் (*Shortage and Unskilled*) காணப்படுகிறது. இதன் காரணமாக மாடுகளின் உற்பத்தி சார்ந்த மரபுரிமையில் பாரிய மாற்றம் (*Genetical improvement*) நிகழ்வதில்லை. மேலும் நெருங்கிய மாடுகளுக்கிடையில் தொடர்ச்சியாக இனப்பெருக்கம் நிகழ்வதால் விரும்பத்தகாத உள்முக இனக்கலப்பும் (*Inbreeding*) நிகழ்கிறது.



Image Source : www.nldb.gov.lk

**5. உட்கட்டமைப்பு வசதிகளின் குறைபாடு**

கறவை மாடுகளின் கொட்டகைகள் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படாத நிலையே பெரும்பாலும் அவதானிக்கப்படுகிறது. அத்துடன் நவீன கால்நடை வளர்ப்பு தொடர்பான கருவிகளை இந்தப் பிராந்தியப் பண்ணையாளர்கள் பாயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. உதாரணமாக வெப்ப அயர்ச்சியைத் தவிர்க்கும் நவீன கட்டுப்பாடான கொட்டகைகள் இன்மை, நவீன கறவை இயந்திரங்கள் இன்மை, நவீன புல் அறுக்கும் இயந்திரங்கள் இன்மை, சுகாதாரமான பாற் கலன்கள் (*Milk can*) இன்மை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**6. மட்டுப்படுத்தப்பட்ட மூலதன வசதிகள்**

பெரும்பாலான பண்ணையாளர்கள் சிறு மற்றும் நடுத்தர வகையினர் என்பதால் அவர்களின் வருமானமும் பாரியளவில் இருப்பதில்லை. அவர்களுக்குக் கிடைக்கும் வங்கிகள் மூலமான கடன் வசதிகளும் குறைவாகவே உள்ளது. திணைக்களங்களும் மட்டுப்படுத்தப்பட்ட மானிய உதவிகளையே செய்கின்றன.

**7. மட்டுப்படுத்தப்பட்ட விரிவாக்கலும் பண்ணையாளரின் தொழில்நுட்ப அறிவுக் குறைவும்**

இங்குள்ள கால்நடைப் பண்ணையாளர்கள் நவீன கால்நடை வளர்ப்புத் தொடர்பான தொழில்நுட்பங்களைக் கடைப்பிடிப்பது குறைவு. அவர்கள் பாரம்பரிய நடைமுறைகளைக் கடைப்பிடிக்கும் அதேவேளை நவீன முறைகளுக்கு மாற விரும்புவதும் கிடையாது. அத்துடன் கால்நடை வைத்தியர் அலுவலகங்களில் கால்நடை வைத்தியர் மற்றும் போதனாசிரியர் பற்றாக்குறை இருப்பதும் பண்ணையாளர்களுக்கான விரிவாக்கற் செயன்முறையைப் பாதிக்கிறது.



Image Source : archive.roar.media

## தீர்வுகள்

**1. குறைந்த உற்பத்தித் திறன், மரபியல் தன்மையை உயர்த்துதல் மற்றும் பொருத்தமான இனப்பெருக்க செயன்முறையை நடைமுறைப்படுத்துதல்**

அதிக உற்பத்தியுடையதானதும் காலநிலை வலயங்களுக்குப் பொருத்தமானதுமான கால்நடைகளை இறக்குமதி செய்தல் வேண்டும் (இந்தியாவின் தென் பகுதிகளிலுள்ள காலநிலை வடக்கு - கிழக்கை ஒத்திருப்பதால் பொருத்தமான மாடுகளை அங்கிருந்து இலங்கையின் நோய்க் கொள்கைகளுக்கு ஏற்ப இறக்குமதி செய்யலாம். ஏனெனில் இந்தியாவிலுள்ள சில நோய்கள் இலங்கையில் கிடையாது. அதனை சரிவர அவதானித்தே இறக்குமதி செய்ய வேண்டும்). அத்துடன் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் செயன்முறையை சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும். அதற்குரிய ஆளணி வசதிகளை மேம்படுத்த வேண்டும். செயற்கைமுறைச் சினைப்படுத்தலிலுள்ள நடைமுறைக் குறைபாடுகளை நீக்க குறித்தளவு பங்கை தனியாருக்கும் வழங்கலாம் (இஸ்ரேல் மாதிரி). சிறந்த உற்பத்தி இயல்புடைய காளைகளை இறக்குமதி செய்து பண்ணையாளருக்கு மானிய அடிப்படையில் வழங்க வேண்டும். சிறந்த இயல்புகளைக் கொண்ட காளைகளின் விந்தணுக்களை இறக்குமதி செய்து அவற்றை செயற்கைமுறைச் சினைப்படுத்தலில் பயன்படுத்த முடியும்.

**2. சமச்சீர் உணவு வழங்கலை உறுதிப்படுத்தல்**

எந்தக் காலத்திலும் சீராக உணவு கிடைக்கும் வகையிலும், அதிக உற்பத்தி தரவல்ல புல் வகைகளை பண்ணையாளர் உற்பத்தி செய்யும் வகையிலும் வசதிகளை ஏற்படுத்தல். மானியம் வழங்கல். புற்துண்டங்கள், புல் அறுக்கும் இயந்திரங்கள், நீர் இறைக்கும் மோட்டார், விசிறல் நீர்பாசன வசதிகள், சைலேஜ் செய்யும் வசதிகள் போன்றவற்றை வழங்கல். தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்கல். TMR போன்ற நவீன உணவூட்டல் முறைகளை ஊக்குவித்தல்.

வர்த்தக ரீதியான புல் வளர்ப்புத் துறையை விருத்தி செய்து, பண்ணையாளருக்கு இலகுவாக

குறைந்த விலையில் புற்கள் எப்போதும் கிடைக்குமாறு வகை செய்தல். வர்த்தக ரீதியில் அடர்வு தீவனங்களை உற்பத்தி செய்வோரை ஊக்குவித்தல். குறைந்த விலையில் மூலப் பொருட்களை இறக்குமதி செய்து கொடுத்தல். உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

மேய்ச்சலை நம்பிய கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரைகளைப் பெற்றுக் கொடுத்தல். விவசாய மீதிகளை உணவாகப் பயன்படுத்தத் தக்க வகையில் தொழில்நுட்பங்களை பயிற்சிகளின் மூலம் வழங்குதல். மனிதனின் நுகர்வுக்குப் போக எஞ்சிய அரிசி போன்றவற்றை கால்நடை உணவாகப் பயன்படுத்த வகை செய்தல்.

**3. கால்நடை சுகாதாரத்தை உறுதிப்படுத்தல்**

கால்நடைகளுக்கு சிகிச்சை வழங்கும் கால்நடை வைத்திய அலுவலகங்களை நவீனப்படுத்தல். ஆளணி வசதிகளை அதிகரித்தல். நவீன சிகிச்சை உபகரணங்களை வழங்கல். அதிக கால்நடை வைத்தியர்கள், போதனாசிரியர்கள், ஏனைய சிற்றூழியர்கள், சினைப்படுத்துநர்களை அதிகரித்தல் (Carder creation). இவற்றை நாடளாவிய ரீதியிலும் மாகாண அடிப்படையிலும் செய்யமுடியும். நோய்களைக் கண்டறியும் விதமாக விலங்குப் புலனாய்வுக் கட்டமைப்பை மேம்படுத்தல். நவீன ஆய்வு வசதிகளைத் தாபித்தல். மருந்துகளை மானிய அடிப்படையில் குறைந்த விலையிலும் இலவசமாகவும் வழங்குதல். மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை அதிகளவில் உள்நாட்டில் உற்பத்தி செய்யும் வகையில் வசதிகளை மேம்படுத்தல். தரமானவற்றை உற்பத்தி செய்வோரை ஊக்குவித்தல். தரமான மருந்துகளை, தடுப்பூசிகளை தட்டுப்பாடின்றி இறக்குமதி செய்ய வழி ஏற்படுத்தல். பண்ணைச் சுகாதார நடைமுறைகளை மேம்படுத்த தீவிரமாகப் பயிற்சிகளை வழங்குதல்.

**4. பண்ணை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்**

பண்ணையாளர்களுக்கு மாட்டுக் கொட்டில்களை புதிதாக அமைக்கவும் இருப்பவற்றை திருத்தி மேம்படுத்தவும் வழி செய்தல். Loose barn போன்ற முறைகளை அறிமுகப்படுத்தல். பாற் சேகரிப்பு நிலையங்களை அதிகளவில் உருவாக்குதலும் அவற்றின் சேமிப்பு வசதிகளை மேம்படுத்தலும் (குளிர்பதன வசதி). சுத்தமான பாற் சேகரிப்பை ஏற்படுத்த பாற் கொள்கலன்களையும் கறவை இயந்திரங்களையும் ஏனைய உபகரணங்களையும் வழங்குதல். இதற்கு அரச - அரச சார்பற்ற அமைப்புகள், புலம் பெயர்ந்தோர் இணைந்து ஒரு பொறிமுறையை ஏற்படுத்தலாம்.

**5. சிறப்பான விரிவாக்கற் செயன்முறை மூலம் பண்ணையாளர்களை தொழில்நுட்ப ரீதியாக தரமுயர்த்தல்**

தொடர்ச்சியான விரிவாக்கற் செயன்முறைகளான பயிற்சி வகுப்புகள், பண்ணைக் கள விஜயங்கள் மூலம் இதனைச் செய்ய முடியும். இதற்குரிய வளவாளர்களான கால்நடை வைத்தியர்கள் மற்றும் கால்நடை போதனாசிரியர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சிகளை வழங்குதல். தேவை ஏற்படின் மேம்பட்ட பண்ணைகள் உள்ள வெளிநாடுகளில் இதனைச் செய்யமுடியும். நவீன சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய ஊடகங்களின் துணையுடன் இந்த விரிவாக்கற் செயன்முறையைச் செய்ய முடியும். இதற்காக அரசு மட்டுமல்ல JICA, FAO போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களும் உதவிகளைச் செய்கின்றன. மேலும் செய்வதற்கு, அவர்களிடம் வேண்டுகோளை வைக்க முடியும்.

**6. மூலதன உதவி**

குறைந்த வட்டியிலான கடன்களை வழங்குதல். மானியம் வழங்குதல். மானிய அடிப்படையில் கால்நடைக் கொள்வனவு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைச் செய்தல். கால்நடைக் காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்தி கால்நடை இழப்புகளின் போது நட்டத்தைக் குறைத்தல் போன்றவற்றைச் சொல்லலாம்.

இப்படியாக தொடர்ச்சியாக பண்ணைகள், விலங்குகள் மற்றும் பண்ணையாளர்களை மேம்படுத்தி பண்ணைகளின் உற்பத்தித் திறனை உயர்த்திக் கொள்ள முடியும்.

ஒரு பிரதேசத்தின் பல்வேறு விடயங்களை கட்டமைப்பதில் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அம்சங்கள் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றன. குறிப்பாக ஒரு பிரதேசத்தின் காலநிலை சார்ந்த அம்சங்கள் அந்தப் பிரதேசத்தினுடைய இயற்கையையும் அந்த பிரதேசத்திற்குரிய பொருளாதார, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களையும் கட்டமைப்பதில் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றது. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தினுடைய பல்வேறு வகைப்பட்ட விடயங்களை தீர்மானித்ததில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை மிகப்பெரிய செல்வாக்கினை பெற்றிருக்கின்றது. வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை சார்ந்த பாரம்பரிய அறிவியல் விடயங்களையும் நவீன விஞ்ஞான ரீதியிலான ஆய்வு சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியதாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலைப் பண்புகளை முழுமைப்படுத்தி வெளியிடுவதாக ‘பிராந்திய காலநிலையியல் : வடக்குப் பிராந்தியம், இலங்கை‘ எனும் தொடர் அமைகின்றது.

# வடக்கு மாகாணத்தில் வறட்சி : ஓர் அவதானிப்பு




நாகமுத்து பிரதீபராஜா

கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். காலநிலையியலில் தனது கலாநிதி பட்டத்தினை பூர்த்தி செய்த பிரதீபராஜா காலநிலையியல் தொடர்பான பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை பற்றியும் பொதுவான காலநிலை அம்சங்கள் தொடர்பாகவும் 07 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 40 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளார். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, வடக்கு மாகாணத்தினுடைய வானிலை தொடர்பான இவரது எதிர்வு கூறல்களை பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## அறிமுகம்

இன்றைய மனித சமூகம் எதிர்கொள்ளுகின்ற மிக முக்கியமான இயற்கை அனர்த்தங்களுள் வறட்சியும் ஒன்றாகும். பூகோள ரீதியிலான காலநிலை மாற்றம் உலகளாவிய ரீதியில் வறட்சி அனர்த்தங்களின் நிகழ்வு எண்ணிக்கையையும் பாதிக்கும் தன்மையையும் அதிகரித்து வருகின்றது (Dananjaya et al., 2022). 2019 ஆம் ஆண்டின் ஐ.பி.சி.சி. யின் அறிக்கை, உலகளாவிய ரீதியில் ஆண்டுக்கு சராசரியாக 42 நாடுகள் வறட்சியினால் பாதிக்கப்படுவதாக குறிப்பிடுகின்றது (Abeysinghe & Rajapaksha, 2020). அத்தோடு எல் நினோ போன்ற காலநிலைப் பிறழ்வுச் செயற்பாடுகளினாலும் ஆண்டுதோறும் வறட்சி நிகழ்வுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் காண முடியும். அந்த அடிப்படையில் இலங்கையும் ஆண்டுதோறும் வறட்சியினால் பாதிப்படைந்து வருகின்றது. குறிப்பாக வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலப்பகுதிகளில் இலங்கையினுடைய வடமேற்குப் பகுதிகளும் தென்மேற்குப் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலப்பகுதிகளில் இலங்கையினுடைய வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களும் அதிக அளவு வறட்சியால் பாதிப்படைந்து வருவதை அவதானிக்க முடியும். அந்த அடிப்படையில் வறட்சிக்கான நிலமைகளும் அவற்றின் பாதிப்புகளும் இலங்கையினுடைய வடக்கு மாகாணத்தில் மிக உயர்வாகவே காணப்படுகின்றன. ஆண்டுதோறும் தென்மேற்கு பருவப் பெயர்ச்சிக் காற்று

காலப்பகுதிகளிலும் முதலாவது இடைப்பருவ காலங்களின் பிற்பகுதியிலும் இலங்கையினுடைய வடக்கு மாகாணம் வறட்சியினால் பாதிப்படைந்து வருகின்றது. அந்த அடிப்படையில் இந்தக் கட்டுரை வடக்கு மாகாணத்தின் வரட்சிக்கான வாய்ப்புகளையும் வடக்கு மாகாணத்தின் வறட்சி நிலைமைகளின் தன்மைகளையும் ஆராய்வதாக உள்ளது.




படம் 12.1 வடக்கு மாகாணத்தில் 1992 முதல் 2002 வரையான காலப்பகுதியில் நிகழ்ந்த வரட்சி நிகழ்வுகளின் எண்ணிக்கையின் இடம்சார்ந்த பரம்பல்




படம் 12.2 வடக்கு மாகாணத்தில் 2002 முதல் 2012 வரையான காலப்பகுதியில் நிகழ்ந்த வரட்சி நிகழ்வுகளின் எண்ணிக்கையின் இடம்சார்ந்த பரம்பல்




படம் 12.3 வடக்கு மாகாணத்தில் 2012 முதல் 2022 வரையான காலப்பகுதியில் நிகழ்ந்த வரட்சி நிகழ்வுகளின் எண்ணிக்கையின் இடம்சார்ந்த பரம்பல்

## வறட்சிக்கான காரணங்கள்

வடக்கு மாகாணத்தின் வறட்சிக்கு, நீண்ட நாட்களுக்கு மழையற்ற தன்மையும் பருவத்தில் கிடைக்க வேண்டிய மழையின் குறைவான கிடைப்பனவுமே பிரதானமான காரணிகளாகும். பொதுவாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை அமைப்பைப் பொறுத்தவரையில் வடக்கு மாகாணம் இரண்டாவது இடைப்பருவ காலத்திலும் வடகீழ் பருவக் காற்றுக் காலத்திலுமே மழையைப் பெறுகின்றது. தென்மேற்கு பருவக்காற்றுக் காலத்திலும் முதலாவது இடைப்பருவக் காலத்திலும் வெப்பச் சலனச் செயற்பாட்டினால் மாத்திரமே வடக்கு மாகாணம் குறைந்த அளவிலான மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது. மிக நீண்ட நாட்களுக்கு மழையற்ற வறண்ட வானிலை நிலவுவதன் காரணமாக வடக்கு மாகாணத்தினுடைய பல பகுதிகளும் வறட்சியை அல்லது நீர்ப் பற்றாக்குறையை எதிர்கொள்வதைக் காண முடிகின்றது. மழையினால் நிரப்பப்பட வேண்டிய தரைக்கீழ் மற்றும் தரை மேற்பரப்பு நீர் வளங்கள் முழுமையாக மீள் நிரப்பப்படாத காரணத்தினாலும் மீள்நிரப்புவதற்குத் தேவையான மழை வீழ்ச்சி இல்லாததன் காரணமாகவும் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளும் தென்மேற்கு மற்றும் முதலாவது இடைப்பருவ காலத்தில் வறட்சியை எதிர்கொள்கின்றன.

வறட்சிக்கான இரண்டாவது காரணமாக, அதிகரித்த பகல் பொழுது வெப்பநிலையைக் குறிப்பிடலாம். வடக்கு மாகாணத்தில் மார்ச் மாதத்தில் இருந்து செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் பகல் பொழுதின் அதிகூடிய வெப்பநிலை சராசரியாக 35 பாகை செல்சியஸ்க்கு கூடுதலாகவே காணப்படுவது வழமையாகும். குறிப்பாக மார்ச் மாதத்தின் பிற்பகுதிகளிலும் செப்டெம்பர் மாதத்தின் முற்பகுதிகளிலும் வடக்கு மாகாணத்தில் சூரியனுடைய உச்சம் கிட்டத்தட்ட 90 பாகையை அண்மித்த நிலைமையில் காணப்படுவதன் காரணமாக இந்தக் காலப்பகுதிகளில் வடக்கு மாகாணத்தின் பல

**வடக்கு மாகாணத்தின் அதிகரித்த வறட்சி நிலைமைகளுக்கான மற்றும் ஒரு பிரதானமான காரணியாக வெப்பநிலை உயர்வாக உள்ள காலப்பகுதிகளில் நிலவுகின்ற உயர்வான ஆவியாக்க ஆவியுயிர்ப்பு விகிதத்தினைக் குறிப்பிடலாம். அதிகரித்த வெப்பநிலை காரணமாகவும் இக்காலப் பகுதியில் வீசுகின்ற காற்றின் வேகம் காரணமாகவும் தரை மேற்பரப்பு நீர்நிலைகள் மிக வேகமாக ஆவியாகுவதுடன், அதிகரித்த வெப்பநிலை மற்றும் அதிகரித்த காற்றின் வேகத்தினை சமாளிப்பதற்காக தாவரங்கள் அதிக அளவிலான ஆவியுயிர்ப்பை மேற்கொள்ளுவதனையும் கவனிக்க முடிகின்றது.**

---

பகுதிகளும் அதிகளவு சூரிய ஒளியைப் பெறுவதோடு அதன் காரணமாக வளிமண்டல வெப்பநிலை மற்றும் மண் வெப்பநிலையினுடைய அதிகரிப்பும் உயர்வாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக பகல் பொழுதில் நிலவுகின்ற அதிகரித்த வெப்பநிலை காரணமாக இந்தப் பிரதேசங்களில் இந்தக் காலப்பகுதிகளில் வறட்சி அனர்த்தங்கள் அல்லது நீர்ப் பற்றாக்குறை நிலமைகள் அல்லது மிகவும் வெப்பநிலையுடன் கூடிய வானிலை நிலமைகளை அனுபவிக்கின்ற சூழலைக் காண முடிகின்றது.

வடக்கு மாகாணத்தின் அதிகரித்த வறட்சி நிலைமைகளுக்கான மற்றும் ஒரு பிரதானமான காரணியாக வெப்பநிலை உயர்வாக உள்ள காலப்பகுதிகளில் நிலவுகின்ற உயர்வான ஆவியாக்க ஆவியுயிர்ப்பு விகிதத்தினைக் குறிப்பிடலாம். அதிகரித்த வெப்பநிலை காரணமாகவும் இக்காலப் பகுதியில் வீசுகின்ற காற்றின் வேகம் காரணமாகவும் தரை மேற்பரப்பு நீர்நிலைகள் மிக வேகமாக ஆவியாகுவதுடன், அதிகரித்த வெப்பநிலை மற்றும் அதிகரித்த காற்றின் வேகத்தினை சமாளிப்பதற்காக தாவரங்கள் அதிக அளவிலான ஆவியுயிர்ப்பை மேற்கொள்ளுவதனையும் கவனிக்க முடிகின்றது. இதன் காரணமாக அதிகரித்த ஆவியாக்கம் மற்றும் ஆவியுயிர்ப்பு நிலமைகளினால் வறட்சிக்கான நிலமைகள் தூண்டப்படுகின்றன. பெரும்பாலான வடக்கினுடைய மேற்பரப்பு நீர் நிலைகள் மற்றும் சில பகுதிகளின் (மணற் பகுதிகள்) தரைக்கீழ் நீரும் அதிகளவான ஆவியாக்கத்திற்கு உட்படுவதன் காரணமாக இந்தப் பிரதேசங்களில் நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு வறட்சி நிலமைகள் தூண்டப்படுகின்றது. வடக்கினுடைய பெரும்பாலான நீர்த்தேக்கங்கள் அல்லது மிகப் பெரிய குளங்கள் திறந்த மேற்பரப்பைக் கொண்டு காணப்படுவதன் காரணமாக சூரிய ஒளி மேற்பரப்பு நீரோடு தொடர்புபட்டிருக்கின்றமையும், வளிமண்டல ஈரப்பதனில் ஏற்படுகின்ற மாற்றமும், காற்றின் வேகமும், அதிகரித்த வெப்பநிலையும் வடக்கு மாகாணத்தில் மே மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரையான காலப்பகுதிகளில் அதிக அளவிலான ஆவியாக்கத்தைத் தூண்டுவதன் காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகள் வறட்சி நிலமையை அனுபவிப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

வடக்கு மாகாணத்தினுடைய வறட்சிக்கான மற்றும் ஒரு பிரதானமான காரணியாக வடக்கு மாகாணத்தினுடைய மனித நடவடிக்கைகளை குறிப்பிட்டுக் கூறலாம். அந்த அடிப்படையில் பின்வரும் மனித நடவடிக்கைகள் வடக்கு மாகாணத்தின் வறட்சி அனர்த்த நிகழ்வுகளுக்கு அடிப்படையாக அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக தாவரப் போர்வைகளை மிக அதிக அளவு அகற்றுவதன் காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகள் வறட்சிக்கான நிலமையை அனுபவிப்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. குறிப்பாக பல்வேறு தேவைகளின் பொருட்டு காடுகள் மற்றும் தாவர விதானங்கள் அல்லது தாவரங்கள் அகற்றப்படுவதன் காரணமாக அந்தத் தாவரங்கள் மூலம் வளிமண்டலத்துக்கு வழங்கப்படுகின்ற ஈரப்பதன் அளவு

குறைக்கப்படுவதுடன் தொடர்ச்சியாக மழையற்றுப் போய் அதிகரித்த வெப்பநிலை நிலவுகின்றது. அதன் காரணமாக அந்தப் பிரதேசம் அதிக அளவிலான நீர்ப் பற்றாக்குறையை அல்லது மிக வெப்பமான வானிலையை அனுபவிப்பதோடு அது தொடர்ச்சியாக வறட்சி நிலமைக்கும் இட்டுச் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையினுடைய வடக்கு மாகாணத்தில் அதிகரித்த அளவிலான வறட்சி நிலமையை உருவாக்குவதில் மனிதனுடைய கட்டுமானம் சார்ந்த செயற்பாடுகளும் அதிக அளவுக்கு பங்களிப்புச் செய்கின்றன. 2009 ஆம் ஆண்டிற்கு பின்னரும் சமாதானம் நிலவிய காலப் பகுதியிலும் வடக்கு மாகாணத்தில் பல்வேறு தரப்பினராலும் பல்வேறு வகையான கட்டமைப்புச் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக பெருந்தெருக்கள் நிர்மாணம், கட்டிடங்கள் நிர்மாணம் மற்றும் பல கட்டமைப்புச் சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் காரணமாக அதிகளவான நீர் நுகர்வு தூண்டப்பட்டு வடக்கு மாகாணத்தில் வறட்சி நிலவக் காரணமாகின. குறிப்பாக இந்தக் கட்டுமானத் தேவைகளுக்காக, வடக்கு மாகாணத்தின் கோடை காலம் என்று அழைக்கப்படுகின்ற மார்ச் தொடக்கம் செப்டெம்பர் வரையான காலப்பகுதியில் நுகரப்படுகின்ற அதிகரித்த அளவிலான நீரின் காரணமாக, வடக்கு மாகாணத்தின் பல பகுதிகள் நீர்ப் பற்றாக்குறையை அல்லது வறட்சியை அனுபவிக்கின்றன. குறிப்பாக பெருந்தெருக்கள் மற்றும் பாலங்கள் போன்றவற்றின் நிர்மாணத்திற்காக அதிகளவிலான நீர் உள்ளெடுக்கப்படுகின்றது. இதன் காரணமாக இந்த அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக பல்வேறு தரப்பினராலும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற அதிகரித்த அளவிலான நீர் நுகர்வின் காரணமாக வடக்கு மாகாணத்தினுடைய தரைக்கீழ் மற்றும் தரை மேற்பரப்பு நீர்நிலைகள் நீர்மட்டங்களை இழப்பதோடு அதன் காரணமாக அந்தப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக வறட்சி நிலமைகளும் தூண்டப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தினுடைய வறட்சிக்கான காரணங்களில் ஒன்றாக வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களின் நீர்ப் பயன்பாடு குறிப்பிடத்தக்கதாக அமைகின்றது. வடக்கு மாகாண மக்கள் நீரை மிகவும் உத்தமமான அளவிற்குப் பயன்படுத்துவது கிடையாது. தேவைக்கு மேலதிகமான நீர்ப் பயன்பாடும் (Over use) துஸ்பிரயோகமான நீர்ப் பயன்பாடும் (Abuse) தவறான நீர்ப் பயன்பாடும் (Misuse) வடக்கு மாகாணத்தினுடைய நீர் வளங்களில் நீர் இழப்பை ஏற்படுத்துகின்றது. அதன் காரணமாக தொடர்ச்சியாக நீர்ப்பற்றாக்குறை அல்லது வறட்சி நிலமைகள் உருவாக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு மாகாணத்தில் வறட்சியைத் தூண்டுகின்ற மற்றொரு பிரதானமான காரணியாக திட்டமிடப்படாத அல்லது நீர் வினைத்திறன் குறைந்த விவசாய நடவடிக்கைகளை குறிப்பிட்டுச் சொல்லலாம். குறிப்பாக வடக்குப் பிராந்தியத்தில் உள்ள பல மாவட்டங்களின் பெரும்பாலான மக்கள், குறுகிய காலத்தில் அதிகளவிலான விளைச்சலை பெறவேண்டும் என்ற நோக்கில் விவசாய நடவடிக்கைகளையே மேற்கொள்வதனை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்ற பணப் பயிர்ச் செய்கைக்காக அதிகளவான நீர் நுகரப்படுகின்றது. குறிப்பாக கோடை காலங்களில், அதாவது மானாவாரியான பயிர்ச்செய்கை இல்லாத காலங்களிலும், நீர்ப்பாசனத்தை மட்டுமே நம்பி இருக்கின்ற முதலாவது இடைப் பருவக் காலங்களிலும் மற்றும் தென்மேற்கு பருவக் காற்றுக் காலங்களிலும் பல்வேறு வகைப்பட்ட பணப் பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மிளகாய், வெங்காயம், புகையிலை மற்றும் நிலக்கடலை போன்ற பல்வேறு வகையான பணப் பயிர்ச்செய்கைக்காக அதிகளவான தரை மேற்பரப்பு மற்றும் தரைக்கீழ் நீர் நுகர்வுகள்

மேற்கொள்ளப்படுகின்றன. யாழ்ப்பாண மாவட்டத்தில், ஓகஸ்ட் மாதத்தின் பிற்பகுதிகளிலிருந்து தரைக்கீழ் நீர்மட்டத்தின் அளவு மிகக் கணிசமான அளவு குறைந்து பல பிரதேசங்களில் நீர்ப் பற்றாக்குறை நிலவுவதற்கு, முற்பட்ட காலங்களில் இத்தகைய பயிர்ச் செய்கைக்காக மிக அதிக அளவில் நுகரப்பட்ட நீர்ப் பயன்பாடே காரணமாகும். பங்குனியில் இருந்து ஆவணி வரையான காலப்பகுதிகளில் பல்வேறு வகைப்பட்ட பயிர் நடவடிக்கைகளுக்காக அதிகளவான நீர் கிணற்றில் இருந்து இறைக்கப்படுகின்றது. இதன் காரணமாக தரைக்கீழ் நீர்மட்டம் குறைவடைவதுடன் பல பிரதேசங்களில் கடுமையான நீர்ப்பற்றாக்குறை அல்லது வறட்சி நிலைமை உருவாக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் வறட்சியைத் தூண்டுகின்ற மற்றொரு மானிடக் காரணியாக மனிதர்களின் வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட மாற்றத்தினைக் குறிப்பிடலாம். 2009 ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்னர், பல்வேறு வகைப்பட்ட கட்டுமானச் செயற்பாடுகள் வடக்கு மாகாணத்தில் பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. அந்த அடிப்படையில் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய தனிப்பட்ட அபிவிருத்திகளிலும் கணிசமான அளவு கவனம் செலுத்துபவர்களாக காணப்படுகின்றார்கள். பலரும் தங்களுடைய வீடுகளை நிரந்தரமான வீடுகளாக அமைப்பதற்காக மாடி வீடுகள் அமைக்கின்ற பொழுது, தங்களுடைய வீடு அமைந்திருக்கின்ற வளவின் நிலப்பகுதியை அழகுக்காகவும் தங்களுடைய சௌகரியத்திற்காகவும் கொழுவுகல் மற்றும் சீமெந்து கொண்டு மூடி விடுவதை நவநாகரீகமாகக் கருதுகின்றார்கள். இவ்வாறு நிலப்பகுதி நீர் உட்புகாதவாறு நிரப்புச் செய்யப்படுவதன் காணமாக நீர் உட்புகும் தன்மை தடுக்கப்பட்டு அல்லது குறைக்கப்பட்டு இயல்பாகவே வடக்கு மாகாணத்தின் தரைக்கீழ் நீர் வளத்துக்குச் சேர வேண்டிய நீரின் அளவு கணிசமான அளவு குறைக்கப்படுகின்றது. இதன் காரணமாக உரிய காலத்தில் மழைவீழ்ச்சி கிடைத்தாலும் கூட, போதுமான அளவு தரைக்கீழ் நீர் வளம் சேராமல் இருப்பதன் காரணமாக, நீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டு, வடக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களிலும் மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

வடக்கு மாகாணத்தின் வறட்சிக்கான மற்றொரு காரணமாக 2009 ஆம் ஆண்டின் பின்னர் மிக அதிகமாக வழங்கப்பட்ட அகழ்வுக்கான அனுமதிகளும் சட்டவிரோதமான அகழ்வுகளையும் குறிப்பிடலாம். வடக்கு மாகாணத்தில் 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னதாக 119 மணல் அகழ்வதற்கான இட அனுமதியும் 89 கிறவல் அகழ்வதற்கான அனுமதியும் 249 கல்லகழ்வு அனுமதியும் (சுண்ணாம்புக்கல் மற்றும் கருங்கல்) மிகப்பெரிய அளவில் வழங்கப்பட்டிருக்கின்றன. இவை மிகப்பெரிய அளவிலான அகழ்வு ஏற்பாடாக இருப்பதன் காரணமாக மிகப்பெரிய பள்ளங்கள் அல்லது குழிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இயல்பாகவே வடக்கு மாகாணத்தில், குறிப்பாக வன்னியினுடைய இயற்கையான வடிகால் பாங்குகள், இப்பிரதேசங்களில் மிகப்பெரிய அளவில் ஏற்படுத்தப்பட்டுள்ள நீர்ப்பாசனக் குளங்களுக்கு நீரைக் கொண்டு சேர்க்கின்றன.

**இலங்கையினுடைய வடக்கு மாகாணத்தில் அதிகரித்த அளவிலான வறட்சி நிலமையை உருவாக்குவதில் மனிதனுடைய கட்டுமானம் சார்ந்த செயற்பாடுகளும் அதிக அளவுக்கு பங்களிப்புச் செய்கின்றன. 2009 ஆம் ஆண்டிற்கு பின்னரும் சமாதானம் நிலவிய காலப் பகுதி யிலும் வடக்கு மாகாணத்தில் பல்வேறு தரப்பினராலும் பல்வேறு வகையான கட்டமைப்புச் சார்ந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.**

இந்த இயற்கையான வடிகால்களை குழப்பமடையச் செய்து அமைக்கப்படுகின்ற இந்த அகழ்வுச் செயற்பாடுகளின் காரணமாக இந்த நீர்நிலைகளுக்குச் சேர வேண்டிய நீர் தடுக்கப்படுகின்றது. அத்தோடு மிகப்பெரிய அளவிலான அகழ்வுச் செயற்பாடுகள் இடம்பெற்றிருப்பதன் காரணமாக அந்த அகழ்வுச் செயற்பாடுகளினால் ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரிய குளங்கள் போன்ற பள்ளங்களில் இந்த நீர் இயற்கையான வடிகால்களூடாக வந்து தேங்கி மனிதர்களுக்குப் பயன்படாமல் வீணாகிறது. உதாரணமாக முத்தையன்கட்டிற்குத் தெற்கே அமைக்கப்பட்டிருக்கின்ற தட்டாமலை, ஒட்டுசுட்டான், மதவாச்சி, ஒலுமடு, நெடுங்கேணி, கல்விளான், வெள்ளாங்குளம் ஓமந்தை மற்றும் வவுனியா போன்ற பிரதேசங்களில் இடம்பெறுகின்ற அதிக அளவிலான கல்லகழ்வுச் செயற்பாடுகளின் காரணமாகவும், கனகராயனாறு, பேராறு, பாலியாறு, பறங்கியாறு, சிப்பியாறு, நாயாறு மற்றும் அருவியாறு போன்ற ஆற்றங்கரையோரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற மணல் அகழ்வின் காரணமாகவும் தரைக்கீழ் அல்லது தரை மேற்பரப்பு நீர்நிலைகளுக்குச் சேர வேண்டிய நீர் தடுக்கப்பட்டு மேற்பரப்பு நீர் நிலைகள் பாதிக்கப்படுகின்றன. இதன் காரணமாக மேற்பரப்பு நீர் நிலைகள் தமது முழுக் கொள்ளளவைப் பெற முடியாமையின் காரணமாக முதலாவது இடைப்பருவ காலத்திலேயே நீரற்றுப் போய், சிறுபோகச் செய்கைக்கான நீரை வழங்க முடியாமல் உள்ளன.

வடக்கு மாகாணம் ஆண்டு தோறும் தென்மேற்குப் பருவக் காற்றுக் காலத்தில், குறிப்பாக ஜுலை, ஓகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் மிகப்பெரிய அளவில் வறட்சி நிலைமையை அல்லது நீர்ப் பற்றாக்குறை நிலமையை எதிர்கொண்டு வருகின்றது. மிக நீண்ட நாட்களாக மழையற்ற தன்மையும், அதிகரித்த வெப்பநிலையும், அதிக அளவிலான ஆவியாக்க ஆவியுயிர்ப்புச் செயற்பாடுகளும், முறையற்ற நீர்ப் பயன்பாடும், முறையற்ற நீர் முகாமைத்துவச் செயற்பாடுகளும் வடக்கு மாகாணத்தில் வறட்சி நிலமைகளைத் தூண்டுகின்றன. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தின் வறட்சி என்பது மிதமான வறட்சியாகவும் பெரும்பாலும் வளிமண்டல வறட்சியாகவுமே காணப்படுகின்றது. ஆனாலும் சில சந்தர்ப்பங்களில் வடக்கு மாகாணத்தினுடைய வறட்சியானது வளிமண்டல வறட்சியிலிருந்து நீரியல் வறட்சியாகவும், சில சந்தர்ப்பங்களில் விவசாய வறட்சியாகவும் உருமாறுகின்றது. எவ்வாறாயினும் மக்கள் இடம்பெயர்கின்ற அளவிற்கு மிக மோசமான வறட்சி நிலைமைகள் கடந்த மூன்று தசாப்தங்களாக வடக்கு மாகாணத்தில் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வடக்கு மாகாணத்தில் தென்மேற்குப் பருவக்காற்றுச் செயற்பாடுகள் உயர்வாக அல்லது உச்சமாக உள்ள காலப் பகுதிகளான ஜுலை, ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களிலேயே அதிக அளவிலான வறட்சி நிலமைகளை அல்லது நீர்ப் பற்றாக்குறை நிலமைகளை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக வடக்கு மாகாணத்தினுடைய சில பகுதிகள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக வறட்சி நிலமைகளை அல்லது நீர்ப் பற்றாக்குறை நிலமைகளை எதிர்கொள்கின்ற சூழ்நிலையை அவதானிக்க முடிகின்றது. இந்த வறட்சியின் காரணமாக மக்கள் நீரின்றி இருக்கின்ற அதேவேளை, பல பிரதேசங்களில் மக்கள் குடிநீரை அல்லது வீட்டுத் தேவைகளுக்கான நீரைப் பெறுவதற்காக நீண்ட தூரம் பயணம் செய்து பெறவேண்டிய சூழ்நிலையும் காணப்படுகின்றது. எனினும் அண்மித்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வடக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினுடைய ஏற்பாட்டில், தென்மேற்கு பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலப்பகுதிகளில் நீர் வழங்கல் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதன் காரணமாக, நீர்ப் பற்றாக்குறை என்பது ஒப்பீட்டு ரீதியாக குறைவான பாதிப்பை ஏற்படுத்துகின்ற நிலைமையே காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தின் சில பிரதேச செயலாளர்

பிரிவுகள், குறிப்பாக வடக்கு மாகாணத்தின் முசலி, நானாட்டான், மாந்தை மேற்கு, துணுக்காய், மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், செட்டிகுளம், வவுனியா வடக்கு, கரைச்சியின் மேற்குப்பகுதி, கண்டாவளையின் வடக்குப் பகுதிகள், வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, காரைநகர், வலிகாமம் கிழக்கின் சில பகுதிகள், மற்றும் வலிகாமம் மேற்கின் சில பகுதிகள் ஆண்டுதோறும் வறட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது (படம் 12.4). வடக்கு மாகாணத்தில் வறட்சியின் போது, அதிக அளவு ஆவியாதல் காரணமாக பெரும்பாலான குளங்கள், குட்டைகள் மற்றும் கிணறுகள் அவற்றின் நீரை இழக்கின்றன. குறிப்பாக குடிநீருக்காக மக்கள் தொலைதூர இடங்களுக்குச் செல்கின்ற நிலைமையை அவதானிக்கலாம். மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மக்கள் குடிநீரைப் பெறுவதற்கு 03 அல்லது 04 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது. வடக்கு பிராந்தியத்தில் ஆண்டுதோறும் 175,000 இற்கும் அதிகமான மக்கள் நேரடியாக வறட்சி காரணமாகப் பாதிக்கப்படுகின்றனர். தென்மேற்குப் பருவக்காற்றுக் காலத்தில் மூன்றாம்பிட்டி, தேவன்பிட்டி, இலுப்பைக்கடவை, நாச்சிக்குடா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 27% மக்கள், தங்கள் வீட்டு உபயோகத்திற்குத் தேவையான தண்ணீரைப் பெற ஒரு நாளைக்கு மூன்று மணி நேரத்திற்கும் மேலாகச் செலவழிக்கின்றனர்.

பொதுவாக வறட்சியினால் ஆண்டு தோறும் வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளே பாதிப்புக்கு உட்படுகின்றன. அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங்குளம், கல்மடு, மூன்றாம்பிட்டி, இலுப்பைக்கடவை, முதலியன்கமம், பாம்போட்டி, திகலை, முருங்கைப்பிட்டி, கரவெட்டியான் வேம்பு, குருந்தன்குளம், கன்னாட்டி, காத்தாடிவயல், கள்ளியடி, ஆத்திமோட்டை, சவிரிக்குளம், புதுக்குளம், கட்டாடிவயல், பெரியமடு, பரிகாரிகண்டல், சாலம்பன், வண்ணான்குளம், நெடுங்கண்டல், ஆட்காட்டிவெளி, அடம்பன், அகத்திக்குளம், அன்னம்மாகுளம், கொம்பன்சாய்ந்தகுளம், பெரியமுறிப்பு, ஆண்டாங்குளம், எலியங்குளம், நரிகலைச்சான், பாலையடிக்குளம், தம்பனைக்குளம், மடு,




படம் 12.4 கடந்த காலங்களில் வரட்சியின் இடம் சார்ந்த பாங்கு - நியமமாக்கப்பட்ட வீழ்ச்சியின் குறிகாட்டி அடிப்படையிலானது

சின்னப்பூவரசங்குளம், இரணை இலுப்பைக்குளம், மஞ்சளையங்குளம், ஊமத்திக்குளம், சின்னாமை, வல்லான்குளம், எருக்கலம்பிட்டி, கொல்லங்குளம், செட்டியார்கடல், நறுவிலிக்குளம் பகுதிகளும்; வவுனியா மாவட்டத்தில் நெடுங்குளம், கூமாங்குளம், தோணிக்கல், வைரவபுளியங்குளம், பண்டாரிக்குளம், நேரியகுளம், பறையனாலங்குளம், சூடுவேய்ந்தபுலவு, பூவரசங்குளம், பெரியதம்பனை, செக்கட்டிப்புலவு, நவ்வி, மூன்றுமுறிப்பு, குஞ்சுக்குளம், ஆண்டியார்புளியங்குளம், நெடுங்கேணி, செட்டிக்குளம் பகுதிகளும்; முல்லைத்தீவு மாவட்டத்தில் வன்னிவிளாங்குளம், அமைதிபுரம், ஆலங்குளம், பழைய முறிகண்டி, தென்னியங்குளம், தேராங்கண்டல், கிழவன்குளம், பனிக்கன்குளம், ஐயங்கன்குளம், புதுவெட்டுவான், செல்வபுரம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், பனங்காமம், சிராட்டிக்குளம், கிடாய்பிடிச்சகுளம், ஒட்டங்குளம், கறிப்பட்டமுறிப்பு, தச்சடம்பன் பகுதிகளும்; கிளிநொச்சி மாவட்டத்தில் தேக்கங்காடு, நல்லூர், ஆலங்கேணி, கல்லங்குறிச்சி, செட்டியக்குறிச்சி, ஞானிமடம், மட்டுவில்நாடு, பள்ளிக்குடா, பரமன்கிராய், பல்லவராயன்கட்டு, கரியாலை, நாகபடுவான், கிராஞ்சி, ஜெயபுரம், பொன்னாவெளி, ஆனைவிழுந்தான், நாவலடி, செம்பன்குண்டு, உமையாள்புரம், தட்டுவன்கொட்டி, பரந்தன் மற்றும் அக்கராயன் போன்ற பகுதிகளும் வறட்சியினால் அதிகளவு பாதிக்கப்படுகின்றன (படம் 12.4).

யாழ்ப்பாண மாவட்டத்தின் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்றுறை, காரைநகர் போன்ற பிரதேசங்களில் அதிக அளவிலான நீர்ப் பற்றாக்குறை அல்லது வறட்சி நிலமை காரணமாக கால்நடைகள் இறப்பதுடன் மக்கள் மிக நீண்ட தூரமும் மிக நீண்ட நேரமும் குடிநீருக்காகச் செலவிட வேண்டியும் இருக்கின்றது. வடக்கின் பல்வேறு பிரதேசங்களில் வரையறுக்கப்பட்ட குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவதன் காரணமாகவும் தென்மேற்குப் பருவக் காற்று நிலவும் ஓகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதக் காலப் பகுதியில் நிலவுகின்ற அதிக அளவிலான நீரின் தேவையும் பல்வேறு வகைப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்துவது அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

சில பகுதிகளில் விவசாயச் செயற்பாடுகளை இடை நடுவில் கைவிட வேண்டிய அளவிற்கு தரைக்கீழ் நீர் மட்டம் குறைவடைந்து, தரை மேல் நீரும் இல்லாத சூழ்நிலையில், மக்கள் குடிநீருக்காக பல்வேறு வகைப்பட்ட துன்பங்களை எதிர்கொள்ளுகின்றனர். எனினும் இலங்கையினுடைய ஏனைய பிரதேசங்களோடு ஒப்பிடுகின்ற பொழுது ஒப்பீட்டு ரீதியாக வறட்சியினால் மிகக் குறைவான பாதிப்பே வடக்கு மாகாணத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் எதிர்காலத்திலும் இத்தகைய நிலைமையே இருக்கும் என்பதை உறுதிப்படுத்த முடியாது.




படம். 12.5 வடக்கு மாகாணத்தின் வரட்சியின் நிகழ்வு எண்ணிக்கையின் அடிப்படையில் அதிகூடிய, நடுத்தர மற்றும் குறைந்த வரட்சி நிகழ்வுப் பிரதேசங்கள். மாகாணத்தின் மேற்குப் பகுதிகள் அதிகூடிய வரட்சியையும் கிழக்குப் பகுதிகள் குறைந்த வரட்சியையும் கொண்டிருக்கின்றன.

# இலங்கையில் தமிழ் கற்றல் கற்பித்தல் : நடைமுறைகளும் சவால்களும்



ஆனந்தமயில் நித்திலவர்ணன்

கலாநிதி ஆ. நித்திலவர்ணன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறையின் தலைவர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார். கல்விசார் ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் நூல்களை தொடர்ச்சியாக எழுதி வெளியிட்டு வருகிறார். ஜப்பான் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேச ஆய்வரங்குகளில் கலந்து கொண்டு தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். இவரது 'பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி' என்ற நூலுக்கு, வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சிறந்த நூலுக்கான பரிசு கிடைத்தது. கல்விசார் ஆளணியினரான கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள், ஆசிரிய கல்வியியலாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான வலுவூட்டல் செயலமர்வுகளில் வளவாளராகப் பணியாற்றி வருகிறார். அத்துடன் கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றிவருகிறார்.



Image Source - unhabitat.lk

## அறிமுகம்

இலங்கையில் தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களாக இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர். இவ்வினங்களின் தனித்துவத்தைப் பேணிக்கொள்வதற்கும் கலாசாரப் பாதுகாப்பிற்கும், தாய்மொழியான தமிழ்மொழியின் பாதுகாப்பு முக்கியமானதாகும். இருந்த போதிலும் உலகமயமாக்கல் மற்றும் மேற்கத்திய ஆதிக்கம் என்பவற்றினாலும், இலங்கையில் வரலாற்றுரீதியாக சிறுபான்மையினர் மொழிரீதியான பாகுபாடுகளிற்கு உட்பட்டு வருவதனாலும், தமிழ்மொழி நலிவடையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளது.

மேலும் இனமுரண்பாடு மற்றும் உள்நாட்டு யுத்தம் காரணமாக கணிசமானளவு தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வசித்து வருகின்றனர். இவர்களின் இரண்டாம் தலைமுறையினர் தமிழ்மொழியை

எழுத, வாசிக்க இடர்படுகின்றனர். அவர்களுக்கான தமிழ் கற்பிக்கும் வழிமுறைகளைக் கண்டறியும் பொறுப்பும் அவர்களின் தாயகம் என்ற வகையில் இலங்கைக்குண்டு. இப் பின்னணியில் இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மீள்பார்வைக்கு உட்படுத்தி, மேம்படுத்த வேண்டிய தேவை அவசியமாகவுள்ளது.

## இலங்கையில் தமிழ்மொழி அமுலாக்கமும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகளும்

இலங்கையில் 1956 ஆம் ஆண்டில் 'சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகருமமொழி' என்ற 33 ஆம் இலக்க தனிச் சிங்களச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இதனால் சிறுபான்மையினரின் மொழியுரிமை மறுக்கப்பட்டது. "இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்திற்கும் மொழியே அடிப்படைக் காரணம். இது ஓர் அடிப்படை மனித உரிமை. இவ்வாறான உரிமைகள் கிடைக்கப்பெறாத போதுதான் புரட்சிகள் தோன்றுகின்றன" என களனிப் பல்கலைக்கழக பேராசிரியர் ஜயந்த செனவிரத்தின அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பதின்மூன்றாவது அரசியல்யாப்பு சீர்திருத்தத்தின் அடிப்படையில், தமிழ் அரச கரும மொழியாக்கப்பட்டது. சிங்களமும் தமிழும் தேசிய மொழிகளாகவும் (உறுப்புரிமை 19), சட்டரீதியான மொழியில் தமிழ், சிங்களம் நடைமுறை மொழிகள் (உறுப்புரிமை 22) எனவும் இன்றைய அரசியலமைப்பில் மொழியுரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதிய சுற்றறிக்கையின்படி அரசமொழிக் கொள்கை உருவாக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டு 'தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு' உருவாக்கப்பட்டது. இந்த அமைச்சின் கீழுள்ள 'அரசகரும மொழிகள் ஆணைக்குழு' மொழிரீதியான பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தற்போது மும்மொழிக் கொள்கை அமுலில் உள்ளபோதும், பல்வேறு மொழி ரீதியான பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுகின்றன (ஜெயசூரியன், 2014).

- மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் மூன்றுவருடமாக மேற்கொள்ளப்பட்ட மொழியுரிமை ஆய்வில், 1788 முறைப்பாடுகள் ஜனாதிபதி செயலகம், மொழி அமைச்சு, மொழித்திணைக்களம் மற்றும் மொழி ஆணைக்குழு போன்ற அரச நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.
- மும்மொழிகளும் பிரயோகிக்கப்பட வேண்டிய புகையிரத நிலையம், பேரூந்து நிலையம் போன்ற பொதுவான இடங்களில் தனியொரு மொழியைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் பிரச்சினைகளைக்கூட அரசாங்கத்தினால் தீர்க்க முடியவில்லை.
- சுற்றுநிருபங்கள், கடிதங்கள் என அரச சேவை நிலையங்களிலிருந்து அனுப்பப்படும் ஆவணங்களில் சில, தனியொரு மொழியில் (சிங்கள மொழியில்) மாத்திரம் அனுப்பப்படுகின்றன.

## தற்காலத்தில், இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் நடைமுறைகள்

இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் புராதன காலந்தொட்டு நடைபெற்று வருகின்றது. ஆதிகாலத்தில் குருகுல முறை மூலம் தமிழ் கற்றல் - கற்பித்தல் இடம்பெற்றது. தற்காலத்தில் முறைசார் கல்வி நிறுவனங்களான முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் இவற்றுக்குப் புறம்பாக சமூக நிறுவனங்களினாலும் இப்பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புகளுக்கு தமிழ் கட்டாயப் பாடமாகவுள்ளது. கல்விப் பொதுத்தராதர சாதாரணதர வகுப்புகளில் (தரம் 10 மற்றும் தரம் 11) 'தமிழ் இலக்கிய நயம்' என்ற பாடமும், 'இரண்டாம் மொழி - தமிழ்' என்ற பாடமும் தெரிவுப் பாடங்களாக உள்ளன.



Image Source - sagapo.org

க.பொ.த சாதாரண தரத்தில் தமிழ்ப் பாடத்தில் திறமைச்சித்தி பெற்றுக்கொள்ளல், க.பொ.த உயர்தரம் பயில்வதற்கான அடிப்படைத் தகைமையாகவும் நடுத்தர மற்றும் உயர் அரச தொழில்களுக்கான அடிப்படைக் கல்வித் தகைமையாகவும் வேண்டப்படுகின்றது. கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பில் கலைப்பிரிவில் தமிழ் ஒரு பாடமாக உள்ளது.

யாழ்ப்பாணம், பேராதனை, கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பாடத்தை சிறப்புப் பாடமாகக் கொண்ட பட்டக் கற்கைநெறி உள்ளது. மேலும் தமிழில் முதுமாணி, முதுதத்துவமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களையும் இலங்கையிலுள்ள மேற்படி பல்கலைக்கழகங்கள் வழங்குகின்றன.

## பாடசாலைகளில் தமிழ்மொழி கற்பித்தல் நோக்கங்கள்

மனிதனின் சிந்தனை விருத்திக்கும் அறிகைப்புல விரிகைக்கும் மொழி இன்றியமையாததாகும். மனிதனுடைய ஆளுமை விருத்தியின் அடிப்படை அம்சமாகத் திகழ்வது மொழிக்கையாட்சியாகும். இவற்றின் அடிப்படையிலேயே பாடசாலைக் கல்வியில் மொழி கற்பித்தல் என்பது முதன்மை பெறுகின்றது. மொழித் திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றை விருத்தி செய்வதே மொழி கற்றல் - கற்பித்தலின் அடிப்படை நோக்கமாகும்.

இலங்கையின் கல்விப் பொதுத்தராதர சாதாரணதர வகுப்புகளில் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தை கற்பிப்பதன் நோக்கங்களாக பின்வருவன குறிப்பிடப்பட்டுளன.

- தமிழ்மொழியைத் தொடர்பாடற் கருவியாக காலத்துக்குப் பொருத்தமான முறையில் வினைத்திறனுடன் கையாளுதல்.
- இலக்கியங்களினூடாக சமூக, கலாசார விழுமியங்களை அறிந்து அவற்றைப் பேணும்

மனப்பாங்கை வெளிப்படுத்தல்.

- கலைகள், அறிவியல், தொழில்நுட்பத் துறைகள் என்பவற்றின் வளர்ச்சிக்கேற்ப மொழியைச் செம்மையாகப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
- மொழியினூடாக மாணவர் தம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளுதல்.
- தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க மொழியை சாதனமாகக் கொள்ளல்.

அழகியல் பாடங்களான சங்கீதம், நடனம், சித்திரம், நாடகம், சிங்கள இலக்கிய நயம் மற்றும் ஆங்கில இலக்கிய நயம் என்பவற்றுடன் தெரிவுப் பாடமாக 'தமிழ் இலக்கிய நயம்' என்ற பாடமும் உள்ளது. 2015 ஆம் ஆண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய 'தமிழ் இலக்கிய நயம்' பாடநூலின் நோக்கம் 'நீண்ட இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியத்தை கொண்டுள்ள தமிழ் இலக்கியப் பரப்பில் இடம்பெறும் செய்யுள்கள், பாடல்கள், நவீன கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், பத்தி எழுத்துகள், நாடகம் முதலான வடிவங்களை அறிமுகம் செய்தல்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது,

### இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தலினை வளப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் நல்ல அம்சங்கள் (Good Practices)

இலங்கையில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அவற்றிற்கு புறம்பாக செயற்படும் பல நிறுவனங்களாலும் தமிழ் கற்றல் - கற்பித்தல் தொடர்பான நல்ல அம்சங்கள் பல முன்னெடுக்கப்படுகின்றன.

- கல்வியமைச்சினால் அகில இலங்கை ரீதியாக, புாடசாலை மாணவர்களிடையே தமிழ் மொழித்திறன் திறனாய்வு விருத்திப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.
- கொழும்பு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் கல்முனை ஆகிய நகரங்களில் இயங்கும் தமிழ்ச் சங்கங்களினால் தமிழ் வளர்ச்சிக்கான காத்திரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அகில இலங்கை கம்பன் கழகத்தால் பல ஆண்டுகளாக தமிழ் வளர்க்கப்படுகின்றது.
- பல்கலைக்கழகங்களின் தமிழ்த் துறைகளினாலும், தமிழ் மாணவ மன்றங்களினாலும், பல்கலைக்கழக மற்றும் பாடசாலை மாணவர்களின் தமிழ் விருத்திக்காக பல்வேறு போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுகின்றன.
- 'பண்டிதர்' மற்றும் 'பால பண்டிதர்' வகுப்புகள் மற்றும் பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன. அறநெறிப் பாடசாலைகளில் சமயப் பாடத்துடன் தமிழ்ப் பாடமும் போதிக்கப்படுகின்றது.
- சைவ பரிபாலன சபையினால் பாடசாலை மாணவர்களுக்கு 'தமிழ்' பாடச் சோதனை நடாத்தப்பட்டு தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.
- பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தமிழ் அறிஞர்களின் சிலைகள் அமைத்து, அவர்களின் விழாக்கள் கொண்டாடப்படுகின்றது.

### பொதுப் பரீட்சைகளில் மாணவர்களின் தமிழ்ப் பாட அடைவுகள்

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தில் சராசரியாக 20 சதவீதத்தினர் சித்தி எய்தத் தவறுகின்றனர். தெரிவுப் பாடமாகிய 'தமிழ் இலக்கிய நயம்' பாடத்தில் 33 சதவீதத்தினர் சித்தியடைவதில்லை. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சராசரியாக 16 சதவீதத்தினர் தேசிய ரீதியில் 'தமிழ்' பாடத்தில் சித்தி எய்த தவறுகின்றனர்.

இரண்டாம் மொழியாக தமிழைப் பயின்று க. பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்றுபவர்களின் எண்ணிக்கையை விட இரண்டாம் மொழியாக சிங்களத்தைப் பயின்று பரீட்சைக்கு தோற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகமாகும். 'இரண்டாம் மொழி - தமிழ்' பாடத்தின் சராசரி



Image Source - www.worldbank.org

சித்தி வீதம் (73.74 சதவீதம்) 'இரண்டாம் மொழி சிங்களம்' பாடத்தின் சராசரி சித்தி வீதத்தினை விட (65.62 சதவீதம்) அதிகமாகும்.

## இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தலில் எதிர்கொள்ளும் சவால்கள்

இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தலில் கல்விக் கொள்கைகள், கலைத்திட்டம், மதிப்பீடு, கற்பித்தல் முறையியல், மற்றும் ஆசிரியர் பயிற்சி சார்பான சவால்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

- சில ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் முறையாகப் பயிற்றப்படாத ஆசிரியர்கள் தமிழ்ப் பாடத்தைக் கற்பித்தல் (ஏனைய பாட ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், ஆசிரிய உதவியாளர்கள்).

- கணிசமான எண்ணிக்கையான தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு நவீன தமிழ் கற்றல் - கற்பித்தல் முறைகள் பற்றிய பயிற்சிகளின்மை மற்றும் தற்காலத்திற் கேற்ற ஆசிரியர் கல்விக் கலைத்திட்டம், மற்றும் நவீன பயிற்சி முறைகள் என்பன ஆசிரியர் கல்வி நிறுவனங்களால் பின்பற்றப்படுவதில்லை.

- இலங்கையில் இடைநிலைப் பாடசாலைகளிலே தாய்மொழி மூலம் கல்வியூட்டும் கொள்கை பல ஆண்டுகளாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றபோதிலும் தாய்மொழியைக் கற்பிக்கும் முறையிலே ஆக்கபூர்வமான மாற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு புகுத்தப்படாமை பெருங்குறைபாடாக இருந்து வந்துள்ளது ('தமிழ்மொழி கற்பித்தல் முறைகள்', இலங்கை - தேசிய கல்வி நிறுவகம்).

- இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டக் காலப்பகுதியில் நிவாரணக் கிராமங்களில் இருந்த 85,000 மாணவர்களில் யுனிசெவ் மேற்கொண்ட ஆய்வில் 70,000 மாணவர்கள் 1.5 தொடக்கம் 3 வருடங்கள் வரையில் தமது கற்றல் செயற்பாடுகளை முற்றாக இழந்திருக்கின்றார்கள். பிற்காலப் பகுதியில் அவர்களுக்கான துரித கற்றல் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் அவர்கள் அடிப்படை மொழித்திறன் அறிவு குறைந்தவர்களாகக் காணப்படுகின்றனர் (குருகுலராஜா, 2014).

- ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியில் 'தமிழ்' பாடக் கலைத்திட்ட வடிவமைப்பு மற்றும் பாடநூலாக்கம் ஆகியவற்றில் குறைபாடுகள் காணப்படுகின்றன. இலங்கையின் அனைத்துப் பிரதேசத்தையும் பிரதிபலிக்கும் வகையில் பாட உள்ளடக்கம் மற்றும் பாடநூல் எழுத்தாளர்கள் தெரிவு செய்யப்படுவதில்லை. 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஆறாந் தரத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'தமிழ் மொழியும் இலக்கியமும்' புதிய பாடநூலில் பல தவறுகள் காணப்படுவதாக கோணேசபிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார்.

- இலங்கைப் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பாடத்தை சிறப்புப் பாடமாகத் தெரிவுசெய்து கற்கும் மாணவர் எண்ணிக்கை தற்காலத்தில் குறைவடைந்து செல்கின்றது. தொழில்வாய்ப்பை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள்

*சமூக விஞ்ஞானப் பாடங்களை தெரிவுசெய்து கற்குமளவிற்கு மானிடவியல் மற்றும் மொழியியல் பாடங்களை தெரிவு செய்வதில்லை. இது நீண்ட நாளைய நோக்கில் தமிழ் கற்பிப்பதற்கான ஆசிரியர்களுக்கான பற்றாக்குறையை ஏற்படுத்தும்.*

- *இலங்கையில் மொழிப் பிரச்சினைகளைத் தீர்க்கவென அமைச்சு ஒன்று இருந்தும்கூட மொழிரீதியான பிரச்சினைகள் நாளுக் குநாள் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளன. சட்டங்கள் பல இருப்பினும்கூட அவற்றை நடைமுறைப்படுத்த முடியாமை, அதிகாரம் போன்றன தீர்வுக்கான வழியைக் குழப்பின.*
- *2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டியில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது. எதிர்பார்க்கப்படும் வினாக்களின் தொகுப்பு தமிழ் மொழிப் பதிப்பில் இடம்பெற்றிருக்கவில்லை (ஞாயிறு தினக்குரல், 04 - 08 - 2014).*

## இலங்கையில் தமிழ் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் மேம்பாட்டுக்கான சிபாரிசுகள்

*இலங்கையில் தமிழ்ப் பாடம் கற்றல் - கற்பித்தலில் உள்ள சவால்களை வெற்றிகொள்ளத்தக்க வகையிலான பின்வரும் முன்னெடுப்புகளை, காலமாற்றத்திற்கேற்ப மேற்கொள்ள வேண்டும்.*

1. *தமிழ்மொழிமூலம் கற்றலுக்கான நிறுவனம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். இந்நிறுவனம் நாட்டின் சகல தமிழ் மொழியில் கற்பிக்கும் பாடசாலைகளிலும் ஆசிரியர்களுக்கான பயிற்சியை வழங்கல், பாடவிதானம் தயாரித்தல், அதற்கான நூல்கள், கற்பித்தல் முறை, தமிழ்மொழிமூலம் கற்றல் - கற்பித்தல் சம்மந்தமான நூல்களை வழங்குவதற்குப் பொறுப்பாக இருக்கும் (வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு - 2014).*
2. *இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து அவுஸ்ரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளான பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளிலும் பெருமளவு ஈழத் தமிழர்கள் வாழ்கின்றார்கள். இவ்வாறு புலம்பெயர்ந்து வாழுகின்ற ஈழத்தமிழ் உறவுகளின் இரண்டாம் தலைமுறைப் பிள்ளைகள் பலர் தமிழ் மொழியை எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்களின் தாயகத்தினர் என்ற வகையில் அவர்களுக்கான தமிழ் கற்றல் - கற்பித்தலுக்கான ஆக்கபூர்வமான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் (நித்திலவர்ணன் - 2014).*
3. *பாடசாலைகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான முன்மொழிவுகள் (ஆசிரியர் வழிகாட்டி, தரம் - 10, தமிழ் மொழியும் இலக்கியமும்).*
4. *மரபுவழி இலக்கணக் கருத்துகளோடு நவீன மொழியியல் கருத்துகளையும் இணைத்து மொழியைக் கற்பிக்க வேண்டும்.*
5. *தமது ஆக்கவியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைப் தேவையின்படி இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செயது கொள்வதோடு, புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ள வேண்டும்.*
6. *ஆசிரியர் வழிகாட்டியில் தேர்ச்சி மட்டங்களுக்குத் தரப்பட்டுள்ள பாட முன்னாயத்தங்களைப் பயன்படுத்தி, அதனடிப்படையில் ஏனைய விடய உள்ளடக்கங்களுக்கு பாட முன்னாயத்தங்களைத் தயார் செய்து வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும்.*
7. *தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தினைச் சிறப்பான முறையில் கற்பிப்பதற்கு பாடத் தலைப்புக்குப் பொருத்தாமன தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*
8. *மாணவர்களுடைய திறன்களை விருத்தி செய்யக்கூடிய கற்பித்தல் சாதனங்களை அவர்களது நிலைக்கேற்ப தயாரித்து, 'தமிழ் மொழியும் இலக்கியமும்' எனும்*

பாடத்தினைச் செம்மையாகக் கற்பிப்பதனூடாக, மாறிவரும் உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்க வேண்டும்.

## முடிவுரை

இலங்கையில் வாழும் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட இலங்கைத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மை இனத்தவர்களின் இனத்துவ அடையாளத்தினைப் பேணிக்கொள்வதற்கும், பண்பாட்டுப் பாதுகாப்பிற்கும் தமிழ்மொழி அழியாது பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக தமிழ்மொழி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள், காலமாற்றத்திற் கேற்றவாறு வினைத்திறனுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். தமிழ்மொழி கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிகொள்ளத்தக்க வகையிலான முன்னெடுப்புகளை, காலமாற்றத்திற்கேற்ப மேற்கொள்வதனூடாக செம்மொழியான தமிழ் மொழியை அழிவிலிருந்து பாதுகாக்க முடியும்.

## உசாத்துணைகள்


1. ஜெயசூரியன்,ஏ (2014), ”எட்டாக்கனியாக உள்ளது மொழி உரிமை, யாழ்.தினக்குரல், 21122014, ஏசியன் மீடியா பப்பிளிக்கேசன் (பிரைவேட்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

2. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, ‘தமிழ்’, தரம்13, தமிழ்மொழித்துறை, மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞானப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.

3. மதிப்பீட்டு அறிக்கை, க.பொ.த சாதாரணதரப் பரீட்சை – 2012, ஆய்வு அபிவிருத்திக் கிளை, தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, பரீட்சைத் திணைக்களம், இலங்கை.

4. ‘தமிழ் இலக்கிய நயம்’ பாடநூல், தரம் – 10 மற்றும் 11, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு, 2014.

5. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, ‘தமிழ் மொழியும் இலக்கியமும்’, தரம்6, தமிழ்மொழித்துறை, மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞானப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.

6. National Symposium on Reviewing of the perfor mance of School Candidates, G.C.E (O/L) Examina tion2011, Research & Development Branch, National Evaluation & Testing Service, Department of Examination, Sri Lanka.

7. Statistical Hand Book 20052007, Research & Development Branch, National Evaluation & Testing Service, Department of Examination, Sri Lanka.

8. தமிழ்மொழி கற்பித்தல் முறைகள், பகுதி 1, பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி, ஆசிரிய கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

9. Gurukularajah,T(2014), ”Vulnerability in Northern Education’, Discussion on ‘Democratising the North: A Dialogue on Governance, Development and Vulnerability’, Jaffna, 10012014.

10. கோணேசபிள்ளை,கோ (2014), ”ஆறாந்தர தமிழ் மொழியும் இலக்கியமும் புதிய பாடநூலில் காணப்படும் தவறுகள், யாழ்.தினக்குரல், 04,05122014, ஏசியன் மீடியா பப்பிளிக்கேசன் (பிரைவேட்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

11. ‘2014 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டியில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது – செய்தி, ”ஞாயிறு தினக்குரல், 04 – 08 – 2014, ஏசியன் மீடியா பப்பிளிக்கேசன் (பிரைவேட்) லிமிட்டெட், யாழ்ப்பாணம்.

12. வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு – 2014, வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு, வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு நெறிப்படுத்தும் குழு, வடக்கு மாகாணம், கல்வி அமைச்சு, யாழ்ப்பாணம்.

13. நித்திலவர்ணன்,ஆ (2014), வடமாகாணத்தின் பேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும், அவற்றை எதிர்கொள்வதற்கான கல்வி முறைகளைக் கண்டறிதலும், யாழ். கரவெட்டி, விக்னேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகரான இராசவாசல் முதலியார் உயர்திரு வீரவாகு சிற்றம்பலம் நினைவுப் பேருரை, 27092014.

14. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, ‘தமிழ் மொழியும் இலக்கியமும்’, தரம்6, தமிழ்மொழித்துறை, மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞானப் பீடம், தேசிய கல்வி நிறுவகம், இலங்கை.

திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை' என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (STARTUP COMPANIES) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (NUANCES) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.



# வணிகச் செயற்பாட்டில் விழுமியங்களின் வகிபாகம்


● கணபதிப்பிள்ளை ரூபன்

கணபதிப்பிள்ளை கந்தரூபன் (ரூபன்) அவர்கள் யாழ் மாவட்டத்தின் புலோலியைச் சேர்ந்தவர். போர் காரணமாக ஆபிரிக்காவுக்கு இடம்பெயர்ந்து பின் அங்கிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இயந்திரவியலில் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் பல புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல கோடி டொலருக்கு விற்றுள்ளார். மேலும் இவர் "ACCIDENTAL ENTREPENEUR BY RUBAN என்ற தலைப்பில் நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளை தன்னுடைய அனுபவங்களை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.


*"பிணியின்மை செல்வம்*
*விளைவின்பம் ஏமம்*
*அணியென்ப நாட்டிவ் வைந்து"*

**திருக்குறள் - 738**

**மு. வரதராசனார் விளக்கம்:**
*நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள், வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று கூறுவர்.*

நான் கடந்த மாதம் இலங்கைக்குச் சென்று இரண்டு வாரங்கள் எனது வயதான தாயருடன் ஒன்றாக இருந்துவிட்டு வந்தேன். அவருக்கு தொண்ணூற்று நான்கு வயது. எமது தந்தையார் 42 வருடங்களுக்கு முன்னர் சுகயீனம் காரணமாக மறைந்துவிட்டார். தந்தையார் அவரது தொழில் நுண்ணறிவு காரணமாக பல வகையான வியாபாரங்களையும், முதலீடுகளையும், தொழில்முனைவுகளையும் ஆரம்பித்திருந்தார். எனது தந்தையின் திடீர் மறைவின் பின், அந்த வியாபாரங்களை எனது சகோதரரின் உதவியுடன் எனது தாயார் தொடர்ந்து நடாத்தினார். அவர் தனது திறமையால் போர்க் காலத்திலும் வியாபாரத்தை நடாத்தி எமது ஊர் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை விற்பனை செய்து

வந்தார். அவர் இலாபத்தை மாத்திரம் நோக்கமாகக் கொள்ளாது சிறந்த விழுமியங்களையும் அவ் வியாபாரத்தில் கடைப்பிடித்தார். வியாபாரம் குறித்த அவரது அறிவுரைகள் இப்போதும் எனக்கு பல சந்தர்ப்பங்களில் உதவியாக அமைந்து வருகின்றன.

தமிழ்ப் பாரம்பரியத்தில் வணிகத்தில் பெண்களின் பங்களிப்பு மிக அதிகம். அதிலும் திரைக்குப்பின் இருந்து உதவும் பெண்களின் ஆளுமை மிக அதிகமாக உள்ளது. உலகளாவிய ரீதியிலும் பல தமிழ்ப் பெண்கள் வர்த்தகத்துறையில் சாதனை புரியத் தொடங்கியிருக்கிறார்கள். அப்படியான ஒருவர் தான் இந்தியாவின் சென்னை மாநகரத்தில் பிறந்து ஐக்கிய அமெரிக்காவிலும் உலக அளவிலும் பிரபலமான பெண்மணி இந்திரா நூஜி (Indra Nooyi). அவர் பெப்சி கோ (Pepsi Co) நிறுவனத்தின் தலைவராக இருந்தார். அவர் அந்த நிறுவனத்தில் சேர்ந்த போது, அந் நிறுவனம் சர்க்கரை அளவு கூடிய குளிர் பானங்களை உற்பத்தி செய்துகொண்டிருந்தது. இதனால், அவரது காலத்தில் பல விதமான ஆரோக்கியமான பானங்களையும் சிற்றுணவுகளையும் அவர் சந்தைக்கு அறிமுகப்படுத்தினார். அதன் மூலம் நிறுவனத்தின் வியாபாரத்தை பல மடங்காக உயர்த்தினார். பலர் பாராட்டும் விதமாக, ஆரோக்கியமான உணவுப் பொருட்கள் உலகளாவிய ரீதியில் விற்பனை செய்யப்பட வழி அமைத்துக் கொடுத்தார். அவரது தலைமைத்துவத்தால் அவர் உலகின் சக்தி வாய்ந்த பெண்மணிகளுள் ஒருவராக உயர்ந்தார். அவர் ஒரு தமிழ்ப் பெண்மணி என்பதில் எமக்கும் பெருமையே. இந்திரா நூஜி தான் கற்ற விடயங்களை பல கட்டுரைகளிலும் புத்தகங்களிலும் எழுதி வெளியிட்டார். அவற்றில் சில புள்ளிகளை இங்கு விபரிக்கலாமென்று இருக்கிறேன்.

### 1. வணிக விழுமியங்களும் இலக்குகளும் (Values And Business Goals):

வியாபாரத்தை அதிகரித்து பெருமளவு பணம் உழைப்பதுதான் வர்த்தக நிறுவனங்களின் ஒரே நோக்கம். வணிகத்தில் இலாபம் சம்பாதிப்பது முக்கியம் என்றாலும், அதனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்புரிவது பல எதிர்மறையான விளைவுகளை உருவாக்கும். இந்திரா நூஜி ஆரோக்கியமான பானங்களையும் அறிமுகப்படுத்தியதன் மூலம், பெப்சிகோவை இலாபத்தை மட்டுமே நோக்கமாக கொண்ட நிறுவனமாக அல்லாமல், நல்ல விழுமியங்களுள்ள நிறுவனமாகவும் உருவாக்கினார்.

இணையத் தொடர்புகளைப் பயன்படுத்தி தொலைபேசிக்கு சமிக்ஞைகளை அனுப்பும் செயற்பாட்டை (VOIP) எனது முதலாவது ஆரம்பத் தொழில்நுட்ப நிறுவனம் செய்து வந்தது. இணையத் தொடர்புகள் (Internet connections) அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருந்ததால் அதன் ஊடாக ஒலிகளை அனுப்ப அதிகமாக பண முதலீடு செய்யவேண்டி இருக்கவில்லை. ஒலியை மலிவாக அனுப்பியதன் மூலம் உலகின் எந்த மூலையில் இருந்தவர்களையும் பிறரோடு எம்மால் இணைக்க முடிந்தது. அதை நாங்கள் 25 வருடங்களுக்கு முன்பே செய்திருந்தோம். அதனால் இன்று எல்லோரும் சாதாரணமாக இதனைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கிறது.

### 2. பொறுப்புடன் புதுமைப்படுத்துதல் (Innovating Responsibly):

பலர் பணம் உழைப்பதை மட்டும் மனதில் கொண்டு புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குகிறார்கள். அதனால் அவர்களுக்கு குறுகியகால இலாபங்கள் கிடைக்கச் சந்தர்ப்பம் உண்டு.

ஆனால் நீண்டகால நோக்கத்துடன், இலாபத்தை மட்டுமே இலக்காகக் கொள்ளாமல் இயங்கும் நிறுவனங்கள், பெரிதாக வளர்ந்து உலகளாவிய ரீதியில் தலை உயர்ந்து நிற்கும். அதற்கு பொறுமையும், புத்தாக்கம் மிக்க பொருட்களை அறிமுகப்படுத்துவதும் அவசியம். இந்திரா நூஜி தனது தலைமைத்துவக் காலத்தில் கலோரிகள் குறைந்த பானங்களையும், எனர்ஜி பானங்களையும், விற்றமின் தண்ணீர் போன்ற பானங்களையும் அறிமுகப்படுத்தினார். அவை

அதிகமான சர்க்கரை அளவுள்ள பானங்களுக்கு மாற்றீடாக இருந்தன. அதனால் பெப்சிகோவின் வருமானம் அதிகரித்தது.

### 3. ஓர் நிலைபேறான மாதிரியை உருவாக்குதல் (Building a Sustainable Model):

இயற்கை வளம் வரையறைக்குட்பட்டது. அதனை கவனமாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துவதன் மூலம் அதனை நீண்ட காலத்திற்கு பயன்படுத்தக் கூடியதாக மாற்றவேண்டும். பொருட்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்திவிட்டு தூக்கியெறியாமல் மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் அதன் எதிர்மறை விளைவுகளைக் குறைக்க முடியும். இதனை மனதில் கொண்டு உங்களது நிறுவனத்தையும் அதன் விநியோகச் சங்கிலியையும் (Supply chain) உருவாக்குவதன் மூலம் எதிர்காலச் சந்ததியினரும் பூமியில் வாழ வழியேற்படுத்த முடியும். அது மட்டுமன்றி இதன் மூலம் நிறுவனத்தின் செலவுகளைக் குறைத்து இலாபத்தைக் கூட்ட முடியும்.

எமது தாயகத்தின் பனை, தென்னையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் பொருட்களை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். அவற்றால் ஆக்கப்பட்ட பொருட்களை உண்ண மட்டுமன்றி பல தேவைகளுக்கும் பயன்படுத்தினோம். இப்போது நாகரீகமென்ற பாவனையில் அழியாத குப்பைகளான பிளாஸ்ரிக் பொருட்களைப் பயன்படுத்துகிறோம். ஆரம்பத்திலேயே சிந்தித்திருந்தால் இப்படியான சூழலுக்குக் கேடான விடயங்களைத் தவிர்த்திருக்கலாம்.

### 4. மனிதநேயமிக்க கலாசாரத்தை உருவாக்குதல்:

பெரிய நிறுவனங்களை உலகளாவிய ரீதியில் உருவாக்கி நிர்வகிப்பது இலகுவானதல்ல. ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு கலாசாரத்தைக் கொண்டிருக்கும். அவர்களது வேலைமுறை, பழக்கவழக்கங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவையாக இருக்கும். ஆனால் இவற்றிற்கு எல்லாம் மேலே இருப்பது மனிதநேயம். நாம் மனிதநேயமிக்க கலாசாரத்தை உருவாக்க வேண்டும். மனிதநேயமிக்க கலாசாரமென்பது ஒருவர் தன்னை மற்றவரின் இடத்தில் வைத்துப் பார்த்து, அவர்களது சிரமங்களையும் யோசனைகளையும் அறிந்து அதற்கேற்ப அனுசரித்து நடப்பது. அதன் மூலம் ஒருவருக்கு ஒருவர் மீது நம்பிக்கை அதிகரிக்கும்; ஒற்றுமை ஏற்படும். இதனால் நிறுவனங்களின் வரவு பெருகி இலாபம் ஏற்படச் சந்தர்ப்பங்களும் அதிகரிக்கும்.

### 5. இலாபத்திற்கு அப்பாற்பட்ட தாக்கத்தை அளவிடுதல்:

நிறுவனங்களுக்கு நிதி அறிக்கைகள் முக்கியமானவை. நிதி அறிக்கைகளில் எண்கள் மட்டுமே தெரியும். நிறுவனத்தால் ஏற்படும் பிற விளைவுகள் நிதி அறிக்கைகளில் இருக்காது. ஆனால், இப்போதைய தலைமுறையினர் சமூக நன்மைகளை மனதில் கொண்டே தமது வாழ்க்கையை வகுத்துக் கொள்கிறார்கள். ஆகையால், நிறுவனத்தின் மதிப்பை சமூக மதிப்போடு ஒன்றுபடுத்துவதே இன்றைய காலத்தில் அதிக வாடிக்கையாளர்களைக் கைப்பற்றுவதற்கான ஒரே வழி. அதனை மனதில் கொண்டு இந்திரா நூஜி பல தொழில்நடைமுறைகளை அறிமுகப்படுத்தினார். அவை பெப்சிகோ மேலும் பெரிதாக வளர்ந்து, நிறுவனத்தின் மதிப்பை அதிகரிக்க உதவின.

ஒரு தொழில் நிறுவனத்தை ஆரம்பிக்கும் போது பெருநோக்கத்துடன் ஆரம்பிப்பது அவசியம். அதன் மூலம் மேலே திருக்குறளில் கூறியது போல் நோயில்லாதிருத்தல், செல்வம், விளைபொருள், வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் இந்த ஐந்தும் எமது வாடிக்கையாளர்களுக்கும், அதனால் எமது சமூகத்திற்கும் கிடைக்கும்.

இப்போது, எனது இலங்கைப் பயணத்தின் போது, எனது தாயார் கூறியது நினைவு வருகின்றது. அவர் “ஊருக்கும் மற்றவைக்கும் இயலுமானதைப் பார்த்துச் செய். அது உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் ஏதோ ஒரு விதமாக வந்து சேரும்.” என்றார். இலாபம் மட்டுமல்ல, சிறந்த விழுமியங்களும் வணிகத்திற்கு அவசியம்.


SpotOn
Money
SEND MONEY to
SRI LANKA
FIRST TRANSFER FEE FREE *
Immediate Payment to Any Account
Partnership with
CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT
Cash Pickup at any
Cargills food city
get 5% Discount *
on Purchases
0207 341 7300
www.spoton.money
Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)
* T & C Apply

வணக்கம் London
www.vanakkamlondon.com




## யாதும் ஊரே யாவரும் கேளிர்

## தமிழால் இணையும்
## தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்

vanakkamlondon.com /vanakkam.london /vanakkamlondon

/Vanakkam_London /TheVanakkamLondon

# Protection For You & Your Family



## Our services

- Life Insurance «
- Critical Illness Protection «
- Mortgage Protection «
- Travel/Super Visa Insurance «
- Dental & Medical Benefits «
- Disability Benefits «
- Long Term Care «
- Employee Benefits «
- RESP, RRSP & TFSA «

**Are You Getting Million Dollar Advice?**



Life100
INSURANCE & INVESTMENTS INC.

416-918-9771 | 416-321-2500
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

**Sritharan Thurairajah** CLU, CHS

*Simple Solution in a Critical Situation*

**Nimal Vinayagamoothy**, CPA, CGA
Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

WE PROVIDE THE CHEAPEST MINIVAN
& CAR SERVICE
ALL OF THE GTA & ONTARIO



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

Helping you harness the power around you
NEW DAWN
ENERGY SOLUTIONS

SOLAR POWER சூரிய சக்தி
SAFE CLEAN FREE பாதுகாப்பானது இலவசமானது சுத்தமானது
AUTOMATIC OPERATION | NO REFUELLING | POWER DIRECTLY TO YOUR HOME

**GRID-TIED SOLAR**
With this solar system you can earn up to $3850 annually for 20 years.

**NANO GRID SOLAR**
With this solar system you can cut your electricity bill to zero and you are never without electricity.

**ENERGY CONSERVATION**
With this solutions you can reduce your energy bill.

**OFF-GRID SOLAR**
With this solar system you can have electricity wherever you want.

**SOLAR POOL HEATER**
With this solar system you can cut your pool heating bill to zero.

HomeStars
Read Our Reviews
www.homestars.com

A+ Rating BBB ACCREDITED BUSINESS

500

info@NewDawn-ES.Com | www.NewDawn-ES.Com | 416-855-9377





# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX ELITE**

021 224 2855 | 0777 44 1113

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK


abc DRIVING SCHOOL
We offer a variety of courses for new and experienced drivers. We offer our students quality driver education and training at affordable rates. Our extremely knowledgeable driving instructors fluent in 7 languages with their many years of professional experience make learning especially easy.
CAR DRIVING LESSONS
Class 5 Driving License
Refresher Lessons
Knowledge Test Preparation
ENROLL NOW!
ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Ogilvy
528 avenue Ogilvy
Montréal QC
H3N 1M8
(514) 278-1824
abc.conduire@gmail.com
ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Jean-Talon
4294 rue Jean-Talon O
Montréal, QC
H4P 2T6
(514) 866-4777
abc.driving4295@gmail.com


SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**


உங்கள் வீட்டிற்கு தேவையான அனைத்து வகையான
மரக்கறி மற்றும் பலசரக்கு
பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றிட இன்றே நாடுங்கள்
MEGAA STORE
மெகா ஸ்டோர்ஸ்
- Fresh Meat
- Asian Groceries
- Fruits & Vegetable
- Frozen Foods
- Off Licence
OPENING HOURS
EVERYDAY
7AM - 11PM
020 8336 0061 | 074 9414 7547
Email: hellomegaastore@gmail.com
MEGAA STORE LTD - 99 Burlington Road, New Malden, KT3 4LR.

# மானுடம் நிறுவனம்
# maanudam foundation
www.maanudam.org




இலங்கையில் சமகாலத்தில் தமிழ் காட்டூன் துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் இவர் காட்டூன் ஓவியத்திற்காக சனாதிபதி விருது பெற்ற ஒரேயொரு முதல் இலங்கையராவார். இலங்கையின் மூத்த பத்திரிகையான வீரகேசரி பத்திரிகைக்கு தொடர்ச்சியாக அரசியல் காட்டூன்கள் வரைந்து வருவதுடன் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகைகளுக்கும் காட்டூன் வரைந்து வருகிறார். இவரது காட்டூன்களை உள்ளடக்கிய ஒரு தொகுப்பு நூலாக "செல்வனின் காலவரை காட்டூன்கள்" எனும் ஓவியநூல் வெளிவந்துள்ளது. இதனை எமது மாணவர்களிடமும், மக்களிடமும் சேர்க்கும் பணியில் மானுடம் நிறுவனம் இணைந்துள்ளது.




## எமது ஆளுமைகளின் படைப்புகளை எம்மவர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் உங்கள் கரங்களும் இணையட்டும்.



ஈழத்து மூத்த ஓவியக கலைஞர் அமரர் ஆசை இராசையா அவர்களது வாழ்கை வரலாறு, கலைப் படைப்புகள், ஓவியக்கலையுலகில் அவரது அனுபவங்கள் அனைத்தும் உள்ளடங்கிய நூலாக "விம்பம்" எனும் நூல் 2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலானது ஓவியக்கலை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்கள் அனைவருக்கும் மிகவும் பயனுள்ள நூலாகும். இதனை எமது மாணவர்களிடமும், மக்களிடமும் சேர்க்கும் பணியில் மானுடம் நிறுவனம் இணைந்துள்ளது.

## வாசிப்போம்! வளர்ப்போம்! நேசிப்போம்!!

**Books are being donated to the School libraries by Maanudam Foundation**


Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY